வரு.74 இல. 24 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2022 ஜூன் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

June 12 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-
















தரமானசேவை; திருப்திகரமான பணி;

## அரசாங்க சேவை தொடர்பில் முறையான ஆய்வு அவசியம்

**பொது நிர்வாக அமைச்சிடம் ஜனாதிபதி எடுத்துரைப்பு**



குறுகிய காலத்தில் தரமான அரச சேவையை வழங்குதல் மற்றும் ஊழியர்களின் திருப்தியை அதிகரிக்கும் நோக்கில் அரச சேவை தொடர்பில் முறையான ஆய்வை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி 04

வெள்ளை/பச்சை அரிசி வகை;

## அதிபட்ச விலைகளின் கசெட் வெளியானது



ஒரு கிலோ வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 210 ரூபாய், ஒரு கிலோ நாட்டரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 220 ரூபாய் என நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 04 வகையான அரிசிக்கு அதிகபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.சீனிக்கும் கட்டுப்பாட்டு விலையை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக 04

எரிபொருள் நெருக்கடி தீவிரமாகிறது;

## பாடசாலைகளை மூன்று தினங்களாக குறைக்கவும்


### இலங்கை ஆசிரியர் சங்கம் யோசனை முன்வைப்பு



எரிபொருள் நெருக்கடியுடன் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆசிரியர்களையும், மாணவர்களையும் இரண்டு பிரிவுகளாக பிரித்து, வாரத்துக்கு தலா மூன்று தினங்கள் பாடசாலைக்கு அழைக்க வேண்டுமென அதிபர் – ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியம் கல்வி அமைச்சிடம் யோசனை 04

## எரிபொருள் கிடைக்கும் இடங்களை அறிய WEB

**இரு மணி நேரத்துக்கு புதிய தகவல்கள் பதிவு**



எரிபொருள் கையிருப்பிலிருக்கும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை இலகுவாக அடையாளம் காண இணையத்தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ICTA ஆகியன இணைந்து இந்த இணையத்தளத்தை உருவாக்கியுள்ளன. எரிபொருளை பெற்றுக்கொள்ளும் இயலுமை மற்றும் 04

நான்கு எரிபொருள் கப்பல்களுக்கு செலுத்த 160 மில்.டொலர் தேவை;

# சவால்களை எதிர்கொள்ள மேலும் பணம் அச்சடிக்கும் நிலை

**இந்தியாவிடமிருந்து மேலும் 500 மில்.டொலர்களை பெற பேச்சுவார்த்தை**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கைக்கு வரவுள்ள 4 எரிபொருள் கப்பலுக்கான 160 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதில் பெரும் சவால்களை எதிர்நோக்கியுள்ளதாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்காக மேலும் பணத்தை அச்சடிக்க வேண்டி நேரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**எந்தளவு எரிபொருளை கொள்வனவு செய்தாலும் தேவையோ குறைந்தபாடில்லை எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு**

எந்தளவு எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டாலும் நாட்டின் தேவை குறைந்தபாடில்லை என தெரிவித்துள்ள எரிசக்தி மின்சக்தி அமைச்சர், இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் இறுதி எரிபொருள் கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதி நாட்டை வந்தடையும் என்றும் தெரிவித்துள்ளார். அதற்கு மேலதிகமாக மேலும் 500 மில்லியன் டொலர்களை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள மீன்பிடி துறைமுகங்களுக்கு தனியாக 04

## SLPP முக்கிய பதவிகளில் எதிர்வரும் நாட்களில் மாற்றம்

**பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவிப்பு**



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகள் எதிர்வரும் நாட்களில் மறுசீரமைக்கப்படுமென கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். அத்துடன் எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்ள தயாராகவுள்ளோ மென்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை 04

பொய்யான தகவலை வெளியிட்டதன் மூலம்

## 400 மில்லியன் டொலரை தவறவிட்டது இலங்கை



**நல்ல வாய்ப்பை இழந்ததாக தூதுவர் கவலை**

பொய்யான செய்திகளை பரப்பி மக்களை குழப்பியதன் மூலமாக இன்று நல்ல வாய்ப்புகளை இலங்கை இழந்துள்ளதென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்."எம்.சி.சி உடன்படிக்கை மூலமாக 400 மில்லியன் 04

## எங்கள் கருத்து...

### முகக்கவசங்கள் அணிவதை கைவிட்டுவிட வேண்டாம்

சுகாதார அமைச்சு கடந்த ஒன்பதாம் திகதி மிக முக்கியமான ஒரு அறிவிப்பை விடுத்தது. முகக் கவசம் அணிவது இனி கட்டாயமில்லை. பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை நோய்த் தடுப்பு முன் முயற்சியாக மேற்கொள்ளத் தேவையில்லை என்பதுதான் அந்த அறிவிப்பு.

2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி கொவிட் 19 பெருந்தொற்று நாடெங்கும் பரவிவிடக்கூடாதென்பதற்காக, நாடே முழு அடைப்பு செய்யப்பட்டது. அதன் பின்னர் முகக் கவசம், அன்டிஜன், பி.சி.ஆர், சடலங்கள் எரிப்பு, கொவிட்19 மரணம் கடுமையான விதிமுறைகளின் கீழ் நடத்தப்படுவது, வீட்டிலிருந்தே வேலை செய்தல் போன்ற புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கூடவே வேலையிழப்பு, சம்பளக் குறைப்பு, இருப்பதைக் கொண்டு வாழப் பழகுதல் போன்றவற்றையும் மக்கள் எதிர்கொண்டனர். வீடுகளில் உறவினர்கள் ஒன்றுகூடல் மற்றும், விழாக்கள், திரையரங்குகள், திருமணங்கள் என்பனவும் நிறுத்தப்பட்டன. மக்கள் முற்றிலும் ஒரு புதிய வாழ்க்கையை வாழ வேண்டியதாயிற்று. நாம் அனுபவித்த அத்தனை அனுபவங்களையும் உலக நாடுகளும் எதிர்கொள்ள வேண்டியிருந்ததென்பது உலக வரலாற்றிலேயே முதல் தடவை என்பதும் ஒரு புதிய விடயம் தான்.

உலகம் பல பேரழிவு தொற்று நோய்களை சந்தித்திருக்கிறது. பல கோடிபேர் மரணித்துள்ளனர். 04

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக

## அறிவிப்புகள் தமிழ் மொழியிலும் வேண்டும்

**மனுஷவிடம் அங்கஜன் எம்.பி கோரிக்கை**



**சாவகச்சேரி விஷேட நிருபர்**

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக அறிவிப்புக்களை தமிழ் மொழியிலும் வெளியிட வேண்டுமென யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் 04

நாட்டில் மருந்துக்கான தட்டுப்பாடு உச்ச நிலையில்;

## வாள்வெட்டு, வீதி விபத்துக்களை முடிந்தவரை தவிர்க்க கோரிக்கை

**மன்னார் வைத்தியர் த.வினோதன் மக்களிடம் உருக்கம்**



**மன்னார் குறூப் நிருபர்**

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார, நிதி நெருக்கடி காரணமாக மருத்துவத் துறையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் பல முக்கியமான மருந்து வகைகள் கையிருப்பில் இல்லை.இதனால் தேவையில்லாமல் வாள்வெட்டு சம்பவங்கள், வீதி விபத்தில் காயமடைதல் 04

## தேசியப் பட்டியல் எம்.பியாகிறார் தம்மிக்க பெரேரா



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக தம்மிக்க பெரேராவை நியமித்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியானது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இந்த விசேட 04

## மக்களின் அதிகாரத்தை பாராளுமன்றுக்கு வெளியில் உருவாக்குவதே சிறப்பானது

### இது தொடர்பில் சிந்திக்க யாழில் குரல் கொடுத்த குமார் குணரட்ணம்



**பருத்தித்துறை விசேட நிருபர்**

மக்களின் அதிகாரத்தை பாராளுமன்றத்துக்கு வெளியில் உருவாக்குவது தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டுமென முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரட்ணம் தெரிவித்தார். 04

எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு;

## தனியார் பஸ் சேவைகள் முற்றாக முடங்கும் நிலை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த வாரத்தில் தனியார் பஸ் சேவையை முழுமையாக முடக்க நேரிடுமென தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். அரசாங்கம் தட்டுப்பாடின்றி எரிபொருளை தனியார் 04

## டெங்கு நோயினால் யாழ். நகரில் இளம் குடும்பஸ்தர் மரணம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் டெங்கு காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டையை சேர்ந்த இ.ஜெகதீசன் (வயது47) என்பவரே இவ்வாறு டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந் நபருக்கு கடந்த 04









வத்தூகாமம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேகம் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பா தாச சாம்பசிவ சிவாச்சாரியார், நித்தியானந்த சிவாச்சாரியார், சாம்பசிவ மணிக்குருக்கள் மற்றும் சிவாச்சாரியர்கள் தலைமையில் நடைபெற்றபோது பக்தர்கள் எண்ணைக்காப்பு சாத்துவதையும் மஹாகும்ப ஊர்வலத்தினையும் விமான கும்பாபிஷேகம் நடைபெறுவதையும் ஏனைய பூஜைகளையும் படத்தில் காணலாம்.








இலங்கைத் திருநாட்டின் புகழ்பூத்த இரண்டு மாபெரும் கல்லூரிகளான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரிகளின் சமுகங்கள் இணைந்து உலகப் புகழ்பெற்ற தமிழறிஞரும், ஆன்மீகப் பேச்சாளருமான தமிழருவி தம்பிராசா சிவகுமாரனுக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நேற்று முன்தினம் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவித்தன.





புதிதாக பதவி ஏற்றுக்கொண்ட இலங்கை இராணுவ தளபதி இலங்கை விமானப்படை தளபதியைச் சந்தித்தார். புதிதாக பதவி ஏற்றுக்கொண்ட இலங்கை இராணுவ தளபதி லெப்டினல் ஜெனரல் விக்கும் லியானகே தான் பதவியேற்ற பின் முதல் முறையாக உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு 2022 ஜுன் 19ம் திகதி இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவை இலங்கை விமானப்படைத் தலைமை காரியாலயத்தில் சந்தித்தார். புதிய இராணுவ தளபதியை கொழும்பு விமானப்படை கட்டளை அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் தில்சன் வாசகேயின் தலைமையில் இராணுவ அணி வகுப்பு மரியாதை வழங்கி வரவேற்றார். இதன்போது விமானப்படைத் தளபதி தனது வாழ்த்துக்களை புதிய இராணுவ தளபதிக்கு தெரிவித்தார். இந்த சந்திப்பை நினைவூட்டும் வகையில் நினைவு சின்னங்களும் பரிமாறப்பட்டன.




மலையக கவிஞரும் எழுத்தாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான (1947 _1952 ) சி. வி. வேலுப்பிள்ளை 64 வருடங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும் என்ற நூலின் முதல் பிரதியை தொகுப்பாசிரியர் எச் எச் விக்கிரமசிங்க முன்னாள் இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சரும், சமூக நிலைமாற்று மன்றத்தின் தலைவரும் கோபியோ அமைப்பின் ஸ்தாபக தலைவருமான பி. பி. தேவராஜிடம் வழங்கிய போது எடுத்த படம். லண்டனில் நேற்று நடைபெற்ற மலையக இலக்கிய மாநாட்டில் பிரதான நிகழ்வாக இந்நூல் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.




யாழ். கரவெட்டி தெற்கு அரச தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் சுமார் 69 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் மதிய உணவுக்கான அரிசி பருப்பு என்பனவும் நேற்று வழங்கப்பட்டன. கனடாவிலுள்ள மல்ரி மீடியா தொழில் ஸ்தாபனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் பங்களிப்பில் யாழ். மாநகரசபை உறுப்பினரும் பூமணியம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான தலைவருமான லயன் கலாநிதி நா.தனேந்திரனின் ஏற்பாட்டில் மேற்படி பாடசாலைக்கு இவை வழங்கப்பட்டன. சுமார் 50,000 ரூபா பெறுமதியான பொருட்களே வழங்கப்பட்டன. நிகழ்வில் வடமராட்சி கோட்டக்கல்வி ஆசிரிய ஆலோசகரும் கலந்து சிறப்பித்தார். படங்கள்: வேலணை குறூப் நிருபர்

# அகதியின் நாட்குறிப்பு நூல் வெளியீட்டு விழா




பூவரசி பதிப்பகம் நடத்தும் குடத்தனை உதயனின் அகதியின் நாட்குறிப்பு (நாவல்) நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை (18.06.2022) பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விரிவுரையாளர் வேல் நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வாழ்த்துரையை எழுத்தாளர் பரணிதரன் மற்றும் கலாசார உத்தியோகத்தர் சே.சுகுணா ஆகியோர் வழங்குகின்றனர்.

வரவேற்புரையை ஊடகவியலாளர் க.வரோதயனும், வெளியீட்டுரையை கவிஞர் ஈழவாணியும் நிகழ்த்தவுள்ளதுடன், விமர்சன உரையை கவிஞர் தீபச்செல்வனும், ஆய்வுரையை எழுத்தாளர் சர்மிளா வினோதினியும் நிகழ்த்துகின்றனர்.

"அகதியின் நாட்குறிப்பு" நாவலை எழுத்தாளர் பா.ரகுவரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) வெளியிடவுள்ளார். முதல் பிரதியை நெல்லியடி சாருஜன் மோட்டார்ஸ் உரிமையாளர் கிருஷாந்த் சிவகுமாரும், இலங்கை மின்சார சபையின் (வட மாகாணம்) பிரதம பொறியிலாளர் (பரிபரா) யே.அமலேந்திரனும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை நெடுந்தீவு சபேசன் மேற்கொள்வதுடன், ஏற்புரையை எழுத்தாளர் குடத்தனை உதயன் நிகழ்த்தவுள்ளார். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# திருமண பந்தத்தில் இணைந்த நயன்தாரா – விக்னேஷ் சிவன்






# இன்றைய பொருளாதார நெருக்கடியை சரியாக புரிந்து கொண்டாலேயே அதற்கான தீர்வைக் காண முடியும்!

## அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் சந்திப்பு

**பொதுநிதியின் நோக்கம் முழுமைப்படுத்தப்பட வேண்டும் என ஊடக, பெருந்தெருக்கள் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார். தற்பொழுது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முழுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து அவர் எம்முடன் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஒரு பொருளாதார நிபுணர் என்ற ரீதியில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு என்ன வழி இருப்பதாகக் கருதுகின்றீர்கள்?**

பதில்: இந்த நெருக்கடியை சரியாகப் புரிந்து கொண்டால், அதற்குத் தீர்வு காண முடியும். எனவே, நெருக்கடியை சரியாக ஆய்வு செய்யாமல் அதற்கான தீர்வுகளை நாம் பரிந்துரைக்க முடியாது. இல்லையெனில், அது வெறும் மிகைப்படுத்தலாக மாறிவிடும். சுதந்திரத்திற்குப் பிறகு, இலங்கையில் உருவான மிகப் பெரிய நெருக்கடி இதுவாகும். கொவிட்19 தொற்றுநோயால் உலகப் பொருளாதாரங்கள் வீழ்ச்சியடைந்த போது, இலங்கைப் பொருளாதாரம் 3.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

அவ்வாறான சூழ்நிலையில் பொதுநிதி விவகாரம் உச்சக்கட்டத்தை எட்டியது. பொதுநிதி நெருக்கடி நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளது.

வரவுசெலவுத் திட்டம் தொடர்ச்சியாகப் பற்றாக்குறையைப் பதிவு செய்திருந்ததுடன், கடனைத் தீர்த்து வட்டியைச் செலுத்த முடியாத நிலைமையை உருவாக்கி, இந்தப் பற்றாக்குறையைக் குறைக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களைத் தாங்க முடியாத அளவுக்கு உயர்த்தியுள்ளது. நாம் சந்தித்த நெருக்கடிகளில் இதுவும் ஒன்று. இரண்டாவது நெருக்கடி என்னவென்றால், பற்றாக்குறையின் காரணமாக பொருளாதாரத்தின் அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்திகள் இல்லை, இது இறக்குமதியின் அதிகரிப்புக்கு வழிகோலியது.

இருப்பினும், இறக்குமதிச் செலவுகளை ஈடுகட்டுவதற்குப் போதுமான அளவு ஏற்றுமதி அதிகரிக்கப்படவில்லை. இது பாரிய பணச் சமநிலை நெருக்கடிக்கு வழி வகுத்ததுடன், அந்நிய செலாவணியிலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இறுதியாக, இந்தக் காரணிகள் அனைத்தும் நாட்டில் பாரிய அந்நிய கையிருப்பு நெருக்கடிக்கு வழிவகுத்தன. தற்போது, வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக தொடர் செலவினங்களைச் செலுத்துவதற்கும், அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும் கூட எங்களிடம் போதுமான பணம் இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருள் மற்றும் உரங்களை இறக்குமதி செய்ய எங்களிடம் அந்நிய செலாவணி இல்லை. இதுதான் இன்று உருவாகியுள்ள நெருக்கடி.



**கே: எவ்வாறாயினும், 1989 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதி என்ற வகையில், இந்த வளர்ந்து வரும் நெருக்கடியை உங்களால் அடையாளம் காண முடியவில்லையா?**

பதில்: 1989 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் எனது கன்னி உரையை ஆற்றியதிலிருந்து, பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இது பற்றி தொடர்ச்சியாகப் பேசி வருகிறேன். வரவுசெலவுத் திட்டத்தில் பாராளுமன்றம் எவ்வாறு தவறாக வழிநடத்தப்படுகிறது என்பது குறித்து சபாநாயகர்களிடம் நான் முறைப்பாடு செய்துள்ளேன். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் கடந்த காலத்தில் நான் 12 புத்தகங்களை எழுதியுள்ளேன். துரதிர்ஷ்டவசமாக, நான் தனிமைப்படுத்தப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். நாடாளுமன்றம் மற்றும் ஊடகங்களில் இருந்து எனக்கு போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. எனக்கு அவமானங்களும் சங்கடங்களும் தான் எஞ்சின.

> **"வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக தொடர் செலவினங்களைச் செலுத்துவதற்கும், அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும் கூட அரசிடம் போதுமான பணம் இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள், எரிபொருள் மற்றும் உரங்களை இறக்குமதி செய்ய எங்களிடம் அந்நிய செலாவணி இல்லை. இதுதான் இன்று உருவாகியுள்ள நெருக்கடி**

**கே: இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர் என்ற வகையில் அரச தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்கு முயற்சிக்கவில்லையா?**

பதில்: இந்த நிலைமையை அறிந்து கொள்ள அமைச்சரவையிலும் வெளியிலும் நான் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். இருப்பினும், 2000 ஆம் ஆண்டுக்குப் பிறகு என்னால் ஒரு வெற்றிகரமான முயற்சியை மேற்கொள்ள முடிந்தது. கிராமப்புற தொழில்துறை அமைச்சராகவும், பிரதி நிதியமைச்சராகவும் இருந்த போது, இந்த நிலைமை ஏற்படாமல் இருக்க, 2003ஆம் ஆண்டு நிதி முகாமைத்துவப் பொறுப்புச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினேன். இதன் ஊடாக மூன்று சட்டங்கள் விதிக்கப்பட்டன. வரவுசெலவுப் பற்றாக்குறையை 2006 இற்குள் 5 சதவீதமாகக் குறைத்து, அதன் பிறகு 5 சதவீதத்துக்கும் குறைவாகப் பராமரிக்க வேண்டும். இரண்டாவது அந்த வரம்பை மீறாமல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 60 சதவீதம் வரையிலான அரசாங்கத்தின் செலுத்தப்படாத கடன்களின் மொத்தத் தொகையின் சதவீதத்தை குறைக்க பரிந்துரைக்கப்பட்டது. அது 2013 இற்குள் செய்யப்பட வேண்டும். மூன்றாவதாக, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கடன் 4.5 சதவீதமாகக் குறைக்கப்பட வேண்டும். அந்த மூன்று காரணிகளும் நிறைவேற்றப்பட்டு, திறைசேரி மற்றும் நிதி அமைச்சினால் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தியிருந்தால், இந்தப் பொருளாதார நெருக்கடி தோன்றியிருக்காது. தற்போது, வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை 10 சதவீதத்தைத் தாண்டியுள்ளது மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச கடன் 119 சதவீதமாக உள்ளது.




**கே: உங்கள் கருத்துப்படி, 2003ஆம் ஆண்டு நிதி முகாமைத்துவப் பொறுப்புச் சட்டமூலத்தை அமுல்படுத்தாமைக்கு யார் பொறுப்பு?**

பதில்: அந்தப் பொறுப்பை அரச தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் பொருளாதாரத்தைக் கையாள அனுமதிக்காமல் பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தும் சில உயர்மட்ட அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும். உயர்மட்ட அதிகாரிகளால் இந்தச் சட்டமூலம் மூன்று முறை அதிகாரிகளால் திருத்தப்பட்டமையால் இலக்கை அடைய முடியவில்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடியில், இந்தச் சட்டமூலத்தை மீண்டும் ஒருமுறை திருத்த வேண்டும். எவ்வாறாயினும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக எந்த முறைப்பாடும் செய்யப்படவில்லை, ஆனால் இந்த விடயத்தில் போதிய புரிதல் இல்லாத அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது எப்போதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை வரலாற்றில் ஜே.ஆர்.ஜெயவர்தன மற்றும் கலாநிதி என்.எம்.பெரேரா ஆகிய இருவரே நிதியமைச்சர்களாக இருந்தனர். ஏனைய நிதியமைச்சர்கள் பிறரால் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் மற்றும் வழிமுறைகளை அரச தலைவர்கள், ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் முன்வைத்தனர். இது ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டி ஆளும் தரப்பு எதிர்த்தரப்பு எம்.பி களுக்கிடையில் பிளவை ஏற்படுத்த வழிவகுத்தது.

> **"பொது நிதியின் நோக்கம் முழுமைப்படுத்தப்பட வேண்டும்!**

**கே: வற் வரி உள்ளிட்ட பல்வேறு வரிகளை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்தினால் மக்கள் கடும் இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இதனால் நுகர்வுப் பொருட்களுக்கான விலைகள் அதிகரித்துள்ளன? இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: உண்மையில், மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்வதைத் தடுக்க இது செய்யப்பட வேண்டும். பணப் பரிமாற்றம், பணம் அச்சிடுதல் மற்றும் பொதுநிதி ஆகியவை ஒரு பாடம். நிதி விடயத்தில் உரிய புரிதல் இல்லாதவர்கள் நடவடிக்கை எடுக்கும் போது நாடு மேலும் வீழ்ச்சியடையும். நான் முன்பே குறிப்பிட்டது போல் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைக்க வேண்டும். பொருட்களின் விலை உயர்வதை தடுக்க பட்ஜெட் பற்றாக்குறை குறைக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் இரண்டு உண்மைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒன்று அரசின் வருவாயை அதிகரிப்பது மற்றும் அதன் செலவைக் குறைப்பது. அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ, எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் இதைக் கண்டிப்பாக செய்ய வேண்டும். அரசின் வருவாயில் 85 சதவீதம் வரி மூலம் பெறப்படுகிறது.


எனவே, வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை குறைக்கும் வகையில் வரிகளை அதிகரிப்பதும், அரசின் செலவினங்களைக் குறைப்பதும் நோக்கமாகும்.

அத்தகைய நடவடிக்கையின் மூலம், வாழ்க்கைச் செலவு நெருக்கடிக்கு அரசாங்கம் நடுத்தர மற்றும் நீண்ட கால தீர்வைக் காண முடியும். 2019 இல் வரிகளைக் குறைத்து நீக்குவது என அப்போதைய பிரதமரும் நிதியமைச்சரும் எடுத்த முடிவிற்கு அப்போதைய எதிர்க்கட்சிகள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தன. அப்போதைய எதிர்க்கட்சிகள் தங்கள் நண்பர்களுக்கு சலுகைகளை வழங்குவதற்காக வரி குறைக்கப்பட்டதாகக் கூறின.

> **மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்வதைத் தடுக்க வழி செய்யப்பட வேண்டும். பணப் பரிமாற்றம், பணம் அச்சிடுதல் மற்றும் பொதுநிதி ஆகியவை ஒரு பாடம். நிதி விடயத்தில் உரிய புரிதல் இல்லாதவர்கள் நடவடிக்கை எடுக்கும் போது நாடு மேலும் வீழ்ச்சியடையும்**

(15ஆம் பக்கம் பார்க்க)

# இன்னுமே மாற்ற முடியாதிருக்கும் சிலரின் அடிப்படைவாதக் கருத்துகள்!




காபுல் நகரத்துக்கு 130 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்த உலகப் பிரசித்தி பெற்ற பாமியன் புத்தர் சிலையை அழித்த தலிபான்கள், ஆப்கானிஸ்தானின் காபூல் நகரை மீண்டும் உலகத்தின் கவனத்துக்கு திருப்பியுள்ளார்கள். அவர்கள் காபூல் சர்வதேச விமான நிலையத்தின் நடவடிக்கைகளை தனியார்மயப் படுத்துவதற்கு தீர்மானித்துள்ளார்கள்.

தலிபான்கள் சிலையை அழிப்பதற்கு காரணமாக அமைந்த விடயங்களில் வறுமையும் ஒரு காரணமாகும். மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டு இருந்த வேளையில், உலக சமூகம் பாமியன் புத்தர் சிலை பராமரிப்பு மற்றும் புனர்நிர்மாணம் செய்வதற்கு பெருமளவு உதவிகளை வழங்கியதை பொறுக்க மாட்டாத தலிபான் பயங்கரவாதிகள் சிலையை அழிப்பதற்காக தாக்குதல் நடத்தினார்கள். அச்சம்பவத்துக்கு இரண்டு தசாப்தத்திற்கு பின்னர் தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் ஆட்சியைக் கைப்பற்றினார்கள்.

இருபது வருட காலமாக அமெரிக்கா மற்றும் நேட்டோ படையினருடன் யுத்தம் நடத்திய ஆப்கானிஸ்தான் தலிபான்கள் இறுதியில் அந்நிய நாட்டுப் படைகள் வெளியேறும் வரை காத்திருந்து தற்போது பொருளாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை முன்வைத்துள்ளனர். காபுல் உள்ளிட்ட மூன்று விமான நிலையங்களின் நடவடிக்கைகளை ஐக்கிய அரபு இராச்சியத்திற்குச் சொந்தமான நிறுவனத்துக்கு வழங்குவதற்காக ஒப்பந்தங்களை அவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர். அந்த ஒப்பந்தங்களின்படி விமானநிலைய இறங்குதுறையின் அனைத்து நடவடிக்கைகளும் முற்றாக அமீர் இராச்சிய நிறுவனத்திற்கே உரியதாகும். உலகின் பிரபலமான விமான சேவைகளை ஆப்கானிஸ்தானுக்கு வரவழைப்பதோடு உலகின் அனைத்து நாடுகளுடனும் தொடர்புகளை ஆரம்பிக்க தயார் என அதன் மூலம் சமிக்ஞை அளிக்கப்படுகின்றது. முதலீட்டுக்காகவும் சுற்றுலாவுக்கான சந்தர்ப்பங்களுக்கும் இடமுண்டு என்பதை ஆப்கானின் புதிய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடுமையான பயங்கரவாத போராட்டத்துக்கு இரையாகியிருந்த இலங்கை மூன்று தசாப்த காலத்துக்குப் பின்னர் அதிலிருந்து விடுபட்டதோடு இன்று மோசமான சமூக பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியுள்ளது. பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்த இலங்கை சமாதானத்தின் சவால்களின் தன்மையை சரிவர புரிந்து கொள்ளவில்லை. சமூகம் குழப்பம் அடைந்ததோடு பிரிந்து, மோதல்களை ஏற்படுத்தும் அடிப்படைவாதத்தினை நோக்கி பயணித்துள்ளது. இங்கே பாதிப்பை ஏற்படுத்துவது பொறுப்பற்ற எமது நடத்தை என்பது மிகவும் தெளிவாகிறது. ஆப்கானிஸ்தானை விட பொல்லாத சமூகம் என சர்வதேசத்தின் முன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகம் இதுவரை ஆப்கான் ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பயங்கரவாதம் போன்ற விடயங்கள் தொடர்பாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. சவுதி அரேபியாவுடன் உத்தியோகபூர்வ தொடர்பில்லை எனக் கூறும் ஆப்கான் ஆட்சியாளர்கள் இது வர்த்தக சந்தர்ப்பம் மாத்திரமே என அறிவித்துள்ளார்கள். ஜனநாயக சமூக முறைக்குள் நுழையும் பயங்கரவாத அணி தனியார் மயப்படுத்தலின் பெறுமதியை அறிந்திருந்தாலும், ஜனநாயகத்தின் பண்புகள் தொடர்பாக ஆசிய பிராந்தியத்தில் நீண்ட சரித்திரத்தைக் கொண்ட இலங்கை தனியார் முதலீடுகள் பற்றி சிந்திப்பது பயங்கரவாத நடையிலாகும். மிகவும் மோசமான முடிவை நோக்கி பயணப்படுவது தெளிவாக தெரியும் சந்தர்ப்பத்தில் கூட பொருளாதார சீர்திருத்தத்திற்கு தயாரில்லை.

கட்டுநாயக்க, ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்மலானை விமான நிலையங்களை தனியார்மயப்படுத்த முடியும். ஸ்ரீலங்கன் விமான சேவையை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவது சிறந்த முதலீடாகும். இதனால் கிடைக்கும் நிதியை சமூக நன்மைக்காக பயன்படுத்த முடியும். விமான நிலையம் மற்றும் விமான சேவைகளை நடத்துவதற்கு செய்யும் செலவு குறைவதோடு, மேலதிக வரி வருமானமும் நாட்டிற்கு கிடைக்கும். இந்த புதிய முதலீடுகளை தனிமைப்படுத்தல் சம்பவமாக கருத வேண்டியதில்லை. அவ்வாறு திறந்த முறைகளின் பின் முதலீட்டு சந்தர்ப்பங்கள் பற்றிய நம்பிக்கை சர்வதேச சமூகத்திற்கு கிடைக்கும். துறைகளில் மாற்றங்கள் ஏற்படுவதோடு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய திட்டங்கள் உருவாகும். சர்வதேச விமான சேவை நிறுவனத்துடன் இணைந்த பின்னர் சுற்றுலாத் துறையும் வளர்ச்சி அடையும். சுற்றுலாக் கைத்தொழிலும் விரைவில் அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ளக் கூடிய பிரிவாகும்.

உலகில் ஏனைய நாடுகள் அதாவது அமெரிக்கா, பிரித்தானியா, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் பின்பற்றும் முறைகள் பற்றி இதுவரை கவனம் செலுத்தி வந்த இலங்கைக்கு ஆப்கானிஸ்தானிலிருந்து பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது கவலைக்குரிய விடயமாகும். துரதிர்ஷ்டம் அதுவல்ல. ஆப்கானிஸ்தானில் தலிபான் போராட்டக்காரர்கள் மனம் மாறினாலும் இலங்கையில் சிலரின் அடிப்படைவாத கருத்துகளை மாற்ற முடியாது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# முகக்கவசங்கள் அணிவதை கைவிட்டுவிட வேண்டாம் ...

ஆனால் இவ்வாறு ஒரு பெருந்தொற்று உலகெங்கும் ஒரே நேரத்தில் பரவி உலக பொருளாதாரத்தை முடக்கியது இதுவே முதல் தடவை. அத்தகைய பெருந்தொற்றிலிருந்து படிப்படியாக பல நாடுகள் தம்மை விடுத்துக் கொண்டுள்ளன. இலங்கையும் தன்னை பெருந்தொற்றிலிருந்து விடுவித்துக் கொண்டிருக்கிறதென்ற மகிழ்ச்சிகரமான செய்தியாகவே சுகாதார அமைச்சின் இந்த அறிவிப்பை நாம் புரிந்து கொள்கிறோம்.

மற்றொரு மகிழ்ச்சிகரமான விடயம் என்றால், முகக்கவசம் அணிவது கட்டாயமல்ல என்ற அறிவிப்பு வெளிவந்த பின்னரும் மக்கள் இன்றைக்கும் பொது இடங்களில் முகக்கவசம் அணிவதை தொடர்கின்றனர் என்பதுதான், முகக்கவசம் அணிவதை நாம் உடனடியாகக் கைவிட்டுவிடக்கூடாது. ஏனெனில் கொவிட்19 அச்சுறுத்தலிலிருந்து விடுபடுவது வேறு எமது தனிப்பட்ட சுகாதார நலன்களை தொடர்ந்து பேணுவது வேறு என்பதை மக்கள் புரிந்து வைத்துள்ளார்களென்பது நிறைவு தருகிறது.

முகக்கவசம் அணிவதால் கொவிட்19 தொற்றிலிருந்து நம்மையும் பிறரையும் காப்பாற்ற முடிந்ததென்பது நிரூபணமான ஒரு உண்மை. அடிக்கடி தடிமன், சளிச்சுரம், இருமல் என்பனவற்றால் இலட்சக்கணக்கான மக்கள் பீடிக்கப்படுவதும் அவர்கள் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுவதும் வழமையான ஒன்றுதான். பெருமளவு பணத்தை அரசு இதற்காக வருடா வருடம் செலவு செய்து வந்துள்ளது. முகக்கவசம் அணியத் தொடங்கிய பின்னர் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவுகளில் பெருமளவு சனக் கூட்டம் குறைந்ததை அவதானிக்க முடிந்தது. ஆஸ்பத்திரி சென்றால் கொவிட்19 என்று பெயர் சூட்டி விடுவார்களோ என்ற அச்சமும் பல நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவைத் தவிர்த்தமைக்கான மற்றொரு காரணம்.

முகக்கவசம் அணிதல், கைகளைக் கழுவுதல் என்பன அடிக்கடி எம்மைப் பீடிக்கக் கூடிய சுவாசத் தொகுதி மற்றும் வயிறு தொடர்பான நோய்களிலிருந்து எம்மைக் காக்கும் என்பது தற்போது தெளிவாகி இருக்கிறது. எனவே நாம் இப்பொது சுகாதார பழக்க வழக்கங்களை தொடர்ந்தும், எமது சுகாதாரமான வாழ்க்கைக்காக கைகொள்ள வேண்டும். கொவிட்19 பெருந்தொற்று அபாயம் நீங்கி விட்டதென்பதால் இந்த எளிமையான சுகாதார வழிமுறைகளை கைவிட்டுவிடக் கூடாது.

நோயை நீக்குவதென்பது நோய்க்கான காரணத்தை நீக்குவதன் மூலமே சாத்தியமென்பது பழந்தமிழர் வாக்கு, அதைச் செய்ததாலும், தடுப்பூசிகளைத் தவறாமல் ஏற்றிக் கொண்டதாலும் தான் எம்மால் பெருந்தொற்றிலிருந்து மட்டுமல்ல, பல நோய்களையும் தவிர்த்துக் கொள்ள முடிந்தது. பெருந்தொற்றின் போதும் தமிழ்ப் பேசும் சமூகம் முகக்கவசம் அணிதல், கைகளை கழுதவுதல் என்பனவற்றில் சிங்கள சமூகத்தின் அளவுக்கு அக்கறை கொண்டிருக்கவில்லையென்பதையும் இங்கே சொல்லி வைக்க விரும்புகிறோம். எனவே தமது சொந்த ஆரோக்கியத்தின் பேரில் இந்த எளிமையான சுகாதார நடைமுறைகளை தமிழ்பேசும் சமூகம் கைவிட்டுவிடக்கூடாது.

# பகயிலிருந்த வந்த பெண் சடலமாக மீட்பு

## வவுனியாவில் சோக சம்பவம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவில் கிணற்றில் இருந்து இளம் குடும்ப பெண்ணின் சடலம் ஒன்று நேற்று முன்தினம் இரவு (10) 7.45 மணியளவில் மீட்கப்பட்டுளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண்ணின் கணவரும், இரு பிள்ளைகளும் லண்டனில் வசித்து வரும் நிலையில் கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் லண்டனில் இருந்து வருகை தந்து வவுனியா, தோணிக்கல், ஆலடி வீதியில் வசித்து வந்த நிலையிலேயே அவரது சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்த குறித்த பெண்ணை காணவில்லை என உறவினர்கள் தேடிய போது கிணற்றில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அப்பகுதி இளைஞர்கள், பொது மக்களின் உதவியுடன் சடலம் மீட்கப்பட்டதுடன், சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

30 வயதுடைய இந்துஜா என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். அவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# எதிர்வரும் வாரங்களில் 05 எரிபொருள் கப்பல்கள்

## நீண்ட வரிசைகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

ஐந்து எரிபொருள் கப்பல்கள் எதிர்வரும் வாரங்களில் நாட்டை வந்தடையவுள்ளதாக எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை 12 நாட்களுக்குள் இவ்வாறு எரிபொருள் கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். நேற்று மற்றும் இன்று பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய இரு கப்பல்கள் நாட்டை வந்தடைந்தன. அத்துடன் எதிர்வரும் 16 ஆம் திகதி இந்திய கடன் திட்டத்தின் இறுதி டீசல் கப்பல் நாட்டை வந்தடையவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் போராளி வெற்றிச்செல்வியிடம் CID விசாரணை

முன்னாள் போராளியும் எழுத்தாளரும் சமூக சேவகியுமான வெற்றிச்செல்வி சந்திரகலா புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப் பட்ட அவரை பொலிசார் ஐந்தரை மணி நேரம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து விசேடமாக வருகை தந்த புலனாய்வு பொலிஸாரே தன்னை விசாரணை செய்ததாக வெற்றிச்செல்வி கூறினார்.

அவரால் வெளியிடப்பட்ட 'பங்கர்' என்ற நூலைப்பற்றியும், மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பைப் பற்றியும் இந்த நீண்ட விசாரணை அமைந்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

போர்க்காலத்தில் எறிகணை தாக்குதல்கள் மற்றும் வான்வழி தாக்குதல்களிலிருந்து உயிர் தப்புவதற்காக வன்னிப்பிரதேச மக்கள் 'பங்கர்கள்' பதுங்கு குழிகளிலேயே அபயம் தேடியிருந்தனர். அந்த பங்கர் வாழ்க்கை மிக மோசமானது. துயரமானது. மறக்க முடியாதது. பங்கர்களில் பதுங்கியிருந்து தமது உயிருக்காகப் போரடிய பலரும் அந்த அனுபவங்களை ஒரு வாழ்க்கைப் பதிவாக 'பங்கர்' நூலில் எழுதியுள்ளனர். இருபதுக்கும் மேற்பட்டவர்களுடைய அந்தப் பதிவுகளை 'பங்கர்' என்ற நூலில் வெற்றிச்செல்வி தொகுத்து வெளியிட்டிருந்தார். இந்த நூல் 2021 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பு மாற்றுத்திறனாளிகளுக்காக மாற்றுத்திறனாளிகளினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அரச பதிவு பெற்றுள்ள இந்த நிறுவனம் கடந்த பல வருடங்களாக மன்னார் மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்துக்கும் வாழ்க்கை நலனுக்காகவும் செயற்பட்டு வருகின்றது. இந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளராக வெற்றிச்செல்வி சந்திரகலா செயற்பட்டு வருகின்றார்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் வெற்றிச்செல்வி விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட அதேவேளை, மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவரையும் பொலிசார் அடம்பனில் வைத்து விசாரணை செய்துள்ளனர். இந்த அமைப்பின் செயற்பாடுகள், அதற்கான நிதி என்று பல கோணங்களில் இந்த விசாரணை நடைபெற்றதாக அந்த அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

# கோழி இறைச்சியின் விலை 1,200 ரூபாவானது

## முட்டையின் விலை ரூபா.50 ஆனது

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாக அகில இலங்கை கோழி வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோழிகளுக்குத் தேவையான தீனிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிரமம் இந்த நிலைக்கு காரணமென அதன் தலைவர் அஜித் குணசேக்கர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது சந்தையில் முட்டையொன்றின் விற்பனை விலை சுமார 50 ரூபாவுக்கும் ஒரு கிலோ கோழி இறைச்சி சுமார் 1,200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## தனியார் பஸ் சேவைகள் ...

பஸ்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். தற்போது இலங்கை போக்குவரத்து சபையினால் பெற்றுக் கொடுக்கப்படும் எரிபொருள் பற்றாக்குறையாக உள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், எரிபொருள் இல்லாத காரணத்தினால் பெருமளவு தனியார் பஸ்கள் தற்போது சேவையிலிருந்து விலகிக் கொண்டுள்ளன என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த வாரமும் தொடர்ந்து இந்த நிலை நீடிக்குமானால் தனியார் பஸ் போக்குவரத்து சேவையை முழுமையாக முடக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேநேரம் இந்த வாரத்தில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்போது எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் காரணத்தினால் பாடசாலைகளை போக்குவரத்து சேவைகளை நிறுத்த வேண்டி வருமென பாடசாலை போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் நிமல் ஸ்ரீ சில்வா தெரிவித்துள்ளார். இப்போதும் பலர் அந்த சேவையிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

## டெங்கு நோயினால் யாழ்....

07ஆம் திகதி நடுக்கத்துடன் காய்ச்சல் ஏற்பட்டிருந்ததையடுத்து 08ம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் தொடர்ந்து 02 நாட்கள் சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எரிபொருள் கிடைக்கும் இடங்களை...

அதனுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை தினமும் காலை 09 மணிக்கு இணையத்தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இந்த இணையத்தளம் காலை 09 மணிக்கு புதுப்பிக்கப்படும் என்பதுடன் இரண்டு மணி நேரத்துக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பெற்றோல் உட்பட எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கருகில் எரிபொருளை கொள்வனவு செய்ய மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்கின்றனர். இதனை கவனத்தில் கொண்டு இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத் தளத்தில் நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலுள்ள எரிபொருட்களின் இருப்பு தொடர்பாக அறிந்து கொள்ளலாம்.

இதன் மூலம் எரிபொருள் பதுக்கல் தடுக்கப்படுமென்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இணையத்தளத்தை பார்வையிடுவதற்கு https://fuel.gov.lk/ கிளிக் செய்யவும்.

## 400 மில்லியன் டொலரை...

அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக இலங்கைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பொய்யான செய்திகளை பரப்பி மக்களை குழப்பியதன் மூலமாக இன்று நல்ல வாய்ப்புகளை இலங்கை இழந்துள்ளது. இது கிடைத்திருந்தால் இன்று நாட்டு மக்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருக்குமென்று அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு அமையும் பட்சத்தில் எமது அரசாங்கத்தின் உதவி மட்டுமல்ல பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புகள் கிடைக்குமென்றும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்க சேவை தொடர்பில்...

கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வகிபாகம் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட வீட்டுத்தோட்டம் தொடர்பில் (10) கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஒரே சேவையை வழங்குகின்ற அரச நிறுவனங்களை ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். தலைநகரிலுள்ள முக்கிய அரச நிறுவனங்களை மாகாணங்களுக்கு பரவலாக்குவதன் மூலம் கொழும்புக்கு வருகை தரும் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியுமென ஜனாதிபதி தெரிவித்தார். அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் நிலவுகின்ற ஒழுக்காற்று விசாரணைகளை துரிதப்படுத்தவும் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து உயர் சேவையைப் பெறுவதற்கான திட்டங்களை வகுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

பொது நிர்வாகம் மற்றும் விவசாய அமைச்சுக்கள் ஒற்றிணைந்து "இணைந்து பயிரிடுவோம் நாட்டை வெற்றியடையச் செய்வோம்" தேசிய உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் பயிரிடுவதற்குப் பொருத்தமானப் பயிர்களை மிகச் சரியாக கண்டறிய வேண்டியதன் அவசியத்தையும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

## அதிபட்ச விலைகளின்...

வர்த்தக மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச சந்தையின் விலைகளுடன் ஒப்பிடுகையில், ஏற்றுக் கொள்ள முடியாத வகையில் உள்ளூர் சந்தையில் சீனியின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளது. அத்தோடு ஒரு கிலோ சம்பா அரிசியின் அதிகபட்ச சில்லறை விலை 230 ரூபாயாகவும் ஒரு கிலோ கீரி சம்பாவின் அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளை மூன்று...

முன்வைத்துள்ளது. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும், அதிபர் – ஆசிரியர் தொழிற்சங்க ஒன்றியத்துக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதேநேரம், தூரப் பிரதேசங்களிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை, அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இணைப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை, நடைமுறை சாத்தியமாக பயன்படுத்துவதற்கான முறைமை தயாரிக்கப்பட வேண்டுமென்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

## SLPP முக்கிய பதவிகளில்...

பிரச்சினைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வை முன்வைக்கவில்லையென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ, பாராளுமன்ற பதவியை இராஜினாமா செய்தமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## இலங்கை அரசியலில்... (06ஆம் பக்கத் தொடர்)

நாடு பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்த நிலையில், நிதி அமைச்சர் என்ற ரீதியில் பாராளுமன்றத்திற்கு வருகை தந்து இவர் எவ்விதமான கருத்துக்களையும் முன்வைக்கவில்லையென எதிர்க்கட்சிகள் கடும் குற்றஞ்சாட்டின. இந்த நிலையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்ட பின்னர் அனைத்து அமைச்சர்களும் பதவி விலகிய போது பசில் ராஜபக்ஷவும் பதவி விலகினார். இதன் தொடர்ச்சியாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். இவருடைய வெற்றிடத்துக்கு பிரபல தொழிலதிபர் தம்மிக பெரேரா நியமிக்கப் படவுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினாலும் தீவிர அரசியலிலிருந்து தான் விலகப் போவதில்லையென்றும், நாடு தற்பொழுது எதிர் கொண்டுள்ள சூழ்நிலைக்கு தம்மைத் தெரிவு செய்தவர்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கூறியிருந்தார்.

## வாள்வெட்டு, வீதி விபத்துக்களை...

குளங்களில் மூழ்குதல் போன்ற அவசியமற்ற விடயங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜா வினோதன் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

தேவையில்லாமல் வாள்வெட்டு சம்பவங்கள், வீதி விபத்தில் காயமடைதல், அவசியமின்றி குளங்களில் நீராடச் சென்று நீரில் மூழ்குதல் போன்ற அவசியமற்ற விடயங்களில் தேவையில்லாமல் காயமடைந்து வருபவர்களுக்கு சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளும் போது உண்மையான தேவையுடைய நோயாளிகளுக்கு மருத்துவச் சேவை செய்ய முடியாமல் போகிறது.

அத்துடன் சுப்பர் பெட்ரோல் இல்லாத காரணத்தால் மன்னார் மாவட்டத்தில் 05 அம்பியூலன்ஸ்களுக்கு மேல் இயங்காமல் இருக்கிறது. வீதி விபத்துக்கள், வாள் வெட்டு காயங்கள் போன்ற பலவிதமான அவசர மருத்துவ சேவைக்கு வருபவர்கள் காத்திருக்க வேண்டியுள்ளதுடன் உயிரிழப்புகள் ஏற்படவும் வாய்ப்பிருக்கிறது

அண்மைய நொச்சிக்குளம் சம்பவம் கூட மிகவும் கவலைக்குரிய விடயமே.

எனவே தற்போதைய நாட்டினதும் ஒவ்வொரு குடும்பத்தின் நெருக்கடியான சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு களியாட்டங்கள், வாள்வெட்டு சம்பவங்கள், வீதி விபத்துக்கள் போன்ற மனித குலத்திற்கு தேவையில்லாத செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டுமென மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தர்மராஜா வினோதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தேசியப் பட்டியல் எம்.பியாகிறார்...

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி வர்த்தகரான தம்மிக்க பெரேராவின் பெயர் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கான விண்ணப்பம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசமினால் கையளிக்கப்பட்டது.

நாட்டில் வர்த்தக வலையமைப்பு ஒன்றின் தலைவராக செயற்படும் தம்மிக்க பெரேரா, அப்பதவியிலிருந்து விலகவுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காக தம்மிக்க பெரேரா தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பிரவேசிக்கிறார். பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றதன் பின்னர் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இதுவரை அது தொடர்பான இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் அவருக்கு பொருளாதார முகாமைத்துவம் அல்லது கைத்தொழில் அபிவிருத்தி சார்ந்த விடயதானம் பொருத்தமானதாக இருக்கலாமெனவும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## அறிவிப்புகள் தமிழ்...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் திட்டங்களின் முன்னேற்ற நிலை தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின் போதே அவர் இக் கோரிக்கையை அமைச்சரிடம் முன்வைத்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்;

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக திட்டங்கள்,பதிவுகள் ஆகியன பெரும்பாலும் சிங்கள மொழியில் இருப்பதால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் இளைஞர்,யுவதிகள் பாதிப்படைகின்றனர்.

ஆரம்ப காலத்தில் ஐரோப்பிய நாடுகளை நாடிய எமது இளைஞர்கள் இன்று தென்கொரியா, ஜப்பான்,இஸ்ரேல்,ருமேனியா போன்ற நாடுகளிலுள்ள வேலைவாய்ப்பு சந்தர்ப்பத்தை பயன்படுத்த தயாராக உள்ளனர். எனவே வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக செயற்பாடுகள் வடக்கு,கிழக்கு தமிழ் பேசும் இளைஞர்,யுவதிகளையும் சென்றடையும் வகையில் பணியகத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

அதேவேளையில் யாழ். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக நடமாடும் சேவை முகாம் ஒன்றை நடத்தி பதிவுகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினரின் கோரிக்கையை ஏற்ற அமைச்சர் மனுஷ நாணயக்கார வேலைவாய்ப்பு பணியகத்தின் சேவை முகாம் ஒன்றை வடமாகாணத்தில் முன்னெடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜனிடம் உறுதியளித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களின் அதிகாரத்தை பாராளுமன்றுக்கு...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே குமார் குணரட்னம் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் அதிகாரத்தை அரசாங்கத்துக்கு வழங்கிவிட்டு இருப்பதனாலேயே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர். கடந்த 74 வருடங்களாக இதே நிலைமையே காணப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவோ ஐக்கிய தேசிய கட்சியோ ஐக்கிய மக்கள் சக்தியோ ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கு பதிலாக மக்கள் தமது அதிகாரத்தை உருவாக்குவது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். மக்கள் வாக்களித்து விட்டதுடன் கடமை முடிந்துவிட்டதாக தற்போது நிலைமை காணப்படுகின்றது.

கிராம மட்டத்திலிருந்து மாவட்ட மட்டமென தேசிய ரீதியில் ஜனநாயக அடிப்படையில் தேசிய பேரவை உருவாக்க வேண்டும். அது கடினமான விடயம்.

தற்போது இடம்பெறுகின்ற போராட்டங்கள் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்ட விடயங்களல்ல. அதற்கும் மேலாக அதற்கு வெளியால் இடம்பெறுகின்ற விடயங்களே ஆகும். அந்தப் போராட்டத்தின் நோக்கம் தற்போது வரை எட்டப்படவில்லை. இருந்தாலும் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன. மஹிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோர் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

சுயாதீனமான மக்கள் போராட்டங்களிளாலேயே இது உருவானது. கஷ்டமான விடயமாக இருந்தாலும் இதுவே வழி. 74 வருடங்களாக தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டனர்.

இதனாலேயே மக்கள் அதிகாரத்தை உருவாக்க வேண்டும்.

மக்கள் அதிகாரம் உருவாகும் போது அரசாங்கங்கள் இருக்கும். ஆனாலும் அரசாங்கங்கள் தாங்கள் நினைத்ததை போன்று நடக்க முடியாது. மக்கள் அதிகாரத்துடன் பேசியே செயற்பட முடியும்.

தற்போதைய மக்கள் அதிகாரம் காணப்படுகிறது. ஆனால் அதுவொரு அமைப்பாக உருவாக வேண்டும்.யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் அதிகாரத்துடன் பேசியே செயற்பட வேண்டும்.

நிறைவேற்றதிகார முறை இல்லாமல் செய்யப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பை மக்கள் மத்தியில் நடத்தி புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். அது வெளியிலிருந்து பெறப்பட வேண்டும்.தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேசியபோதும் இதற்கு உடன்பட்டனர். நிறைவேற்று அதிகார முறையை இல்லாமல் செய்து தேசிய பிரச்சினைக்கு இறுதி தீர்வு காணப்பட வேண்டும்.

இனவாதம், இன ஒடுக்குமுறைக்கு எதிரான சட்டங்களை கொண்டு வரவேண்டும். அரசியல் மாற்றம் ஏற்பட்டாலே பொருளாதார ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.சாதாரண மக்களிடம் அறவிடப்படும் வரியே 88 சதவீதமாக காணப்படுகின்றது. இந்த முறை மாற்றப்பட்டு செல்வந்தர்களிடமும் முதலாளிகளிடம் வரியை அறவிட வேண்டும் என்றார்.

## சவால்களை எதிர்கொள்ள...

எரிபொருளை கொள்வனவு செய்து கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக எரிசக்தி மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடற்தொழில் அமைச்சு விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க அரசாங்கம் அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க நாடளாவிய ரீதியில் உள்ள 22 மீன்பிடி துறைமுகங்கள் ஊடாகவும் மீனவர்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீன்பிடி துறைமுகங்களின் நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான டொலரை பெற்றுக்கொள்வதற்காக நாட்டில் மேலும் பணம் அச்சடிக்க நேரும் என அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு நிதியைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக மத்திய வங்கியின் ஆளுநர் ஒருதொகை டொலரை ஒதுக்கி இருந்தாலும் டொலரை கொள்வனவு செய்வதற்காக பணம் பெற்றுக் கொள்வதற்கான ஒரே தீர்வு பணம் அச்சடிப்பதே என்றும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டுக்கு வரவுள்ள எரிபொருள் கப்பல்களுக்கு வழங்குவதற்காக தேவையான 160 மில்லியன் டொலர்களை தேடுவது இந்நாட்களில் எதிர் நோக்கியுள்ள பெரிய சவாலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தேவையான 530 மில்லியன் டொலர் தேவையை நாட்டில் தற்போதுள்ள பணத்தின் மூலம் முகாமைத்துவம் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர்,30 மில்லியன் டொலருக்கான கடன் கேள்வி பத்திரத்தை விநியோகிக்க முடியாத காரணத்தினால் கடந்த 20 தினங்களாக மசகு எண்ணெய்க் கப்பல் ஒன்று விடுவிக்கப்படாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டுக்காக முழு அளவில் எல்லோரும் ஒன்றுபடுவதே இன்றைய தேவை

## அல்லது கூட்டு அழிவையே சந்திக்க நேரும்




நாட்டில் இரண்டு விடயங்கள் தொடர்பான உரையாடல்கள் தீவிரமாக நடக்கின்றன. ஒன்று மக்கள் தரப்பில் நிகழ்வது. இது முற்று முழுதாகவே பொருளாதார நெருக்கடிகளைச் சார்ந்தது. அதாவது வாழ்க்கைப் பிரச்சினையைப் பற்றியது. உயிர்வாழ் தலைப் பற்றியது.

மற்றது அரசியல் தரப்பில் நிகழ்வது. இது அரசியலமைப் புத் திருத்தம் (21 ஆவது திருத்தம்) மற்றும் எந்தப் புதிதும் இல்லாத, பயன் குறைந்த வழமையான எதிரெதிர் மனப்பாங் குடன் விவாதங்களை நடத்துவது, சலிப்பூட்டும் வகையில் வக்கிரம் நிறைந்த ஆளை ஆள் குற்றம் சாட்டுதல் எனத் தொடர்வது.

மக்கள் தினமும் – ஒவ்வொரு நொடியிலும் – பலவகை யான நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நாளாந்த வாழ்க்கை முற்று முழுதாகவே கேள்விக்குள்ளாகியுள்ளது. எரிபொருளுக்காக மணிக்கணக் காக – நாட்கணக்காகக் கூடத் தெருவிலே நிற்க வேண்டிய நிலை. உணவுப் பொருட்களுக்காக க்யூவில் நிற்க வேண்டும். எரிவாயுவைத் தேடித்திரிவது. மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, விவசாய உள்ளீடுகளைப் பெறுவதில் சிரமம் என முடிவற்ற அலைச்சலில் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதை விட நொடிக்கு நொடி ஏறிக் கொண்டிருக்கும் விலை உயர்வு. இதை ஈடுகட்டக் கூடிய அளவுக்கு வருவாயில்லை. இப்படிப் பல தொடர் பிரச்சினைகள்.

இந்த நிலையில் அடுத்து வரும் நாட்களை, மாதங்களை எப்படிக் கடப்பது என்று தெரியாமல் எல்லோரும் திகைத் துப்போயிருக்கிறார்கள். பசியும் பஞ்சமும் பட்டினியும் தலை விரிக்கத் தொடங்கியுள்ளன. பட்டினிச் சாவுகளும் பசியினால் தற்கொலை முயற்சிகளும் நிகழ்கின்றன என்று செய்திகள் வரத் தொடங்கியுள்ளன.

ஆனால், இதைப்பற்றி, இந்த நிலைமை தீவிரமடைந்து வருவதைப் பற்றிய எந்தப் பிரக்ஞையுமின்றி அரசியற் தரப் பினர் உள்ளனர், செயற்படுகின்றனர். இதில் எந்தத் தரப்பும் விதிவிலக்கல்ல. அரசாங்கம் இன்னும் முறையாகவும் முழு மையாகவும் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சியில் இறங்கவில்லை. அப்படி இறங்கியிருந்தால் அது இப்பொ ழுது அதற்கான ஏற்பாடுகளைச் செய்து பொறிமுறைகளை உருவாக்கியிருக்கும். இப்பொழுது நடந்து கொண்டிருப் பதெல்லாம் உடனடியாக எதையாவது செய்ய வேண்டும் என்ற அளவில் மேற்கொள்ளப்படும் கடன் பெறுதல், உதவி கோருதல் போன்றவையே. இது அவசியமே. கடன் மூலமும் உதவிகளின் வழியாகவும்தான் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். ஆனால், இப்படியே இதைத் தொடர முடியாது.

ஆனால் நிதியமைச்சர் என்ற வகையிலும் ஆட்சிப் பொறுப் பில் உள்ள பிரதமர் என்ற வகையிலும் தன்னால் முடிந்த அளவுக்கு நிதி நெருக்கடியைத் தணிப்பதிலும் பொருளாதா ரப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் முயற்சிகளை எடுப்பேன் என்று உறுதியளித்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இதற்கு அவர் ஒரு படிமுறைத்திட்டத்தையும் அறிவித்திருக்கிறார். அவருடைய அறிவிப்பின்படி அடுத்த ஆண்டு சற்று முன் னேற்றமும் 2025 இல் சமநிலையடையக் கூடிய அளவிலான பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும் என்று உறுதியளிக்கப்பட் டுள்ளது.

இதைச் சாத்தியப்படுத்தக் கூடிய அரசியற் சூழல் உள் நாட்டிலும் வெளியிலும் நிலவுமா என்பது கேள்வியே. மட் டுமல்ல, தற்போதுள்ள அரசாங்கம் கூட அந்தளவு காலத் துக்குத் தாக்குப்பிடிக்குமா என்பதும் சந்தேகமே. இதையும் பிரதமர் உள்ளுணர்ந்திருக்கிறார். ஆட்சி மாறினாலும் அதிரடி யாக இந்தப் பொருளாதாரத் திட்டத்தை மாற்றாமல் தொடர வேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருப்பதிலிருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், இதையும் கடந்தே அரசும் நாட்டின் அரசியற் சக்திகளும் சிந் திக்க வேண்டும். செயற்பட வேண்டும். அதையே இன்றைய நிலை எதிர்பார்த்து நிற்கிறது. இல்லையெனில் எதிர்காலம் மிகப் பாழடைந்து விடும். அபாயக்கு ழியில் வீழ்ந்து விடும். அதற்குப் பின் இந்த அரசியலை யாராலும் தொடரவும் முடியாது. தாக்குப் பிடிக்கவும் முடியாது. நாடே தன்னுடைய இறைமையை இழந்து பிறர் தயவில், பிறர் ஆளுகைக்குள் சிக்குண்டு விடும்.

இதொன்றும் அதீதமான கற்பனையோ அளவுக்கு மிஞ்சிய எச்சரிக்கையோ இல்லை. நடைமுறையில் உருவாகப்போகும் யதார்த்தம் உண்மை. இப்போதைய பொருளாதார நெருக் கடி என்பது பிறரை வெளியாரை முற்று முழுதாகவே நம் பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். எந்தப் பொருளும் கையிருப்பில் இல்லை. உணவுப் பொருட்களும் சரி, எரிபொருள், எரிவாயு, மருந்துப் பொருட்கள், விவசாய உள்ளீடுகள் அனைத்தும் அனைத்துமே. ஆகவே அத்தனையும் இறக்குமதி செய்யப் பட்ட நிலையிலேயே அந்தந்த இடங்களுக்கு – நேரடி விநி யோகத்துக்குச் செல்கின்றன. இதை விடக் கவனிக்க வேண் டியது, எதையும் இறக்குமதி செய்வதற்கான பணம் இல்லை என்பது. டொலர் இல்லாத காரணத்தினால் துறைமுகத்துக்கு வெளியே கப்பல்கள் தரித்து நிற்கின்றன. வெளியாரின் உதவி கள் மூலமாகத்தான் நாளாந்தம் ஏதோ போய்க் கொண்டிருக் கிறது. இப்படியே எத்தனை நாளைக்கு இந்த நிலைமையில் தொடர முடியும்?

அப்படியென்றால், மாற்றுப் பொருளாதாரப் பொறிமு றைகள் சமாந்தரமாக உருவாக்கப்பட வேண்டும். அந்த மாற்றுப் பொருளாதாரப் பொறிமுறைகளைத் தனியே அர சாங்கம் மட்டும் உருவாக்க முடியாது. அதில் எதிர்க்கட்சி தொடக்கம் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற அத்தனை தரப்புகளும் பங்கேற்பது அவசியம். இப்படிச் சொல்லும்போது "இதற்காகத்தானே தேசிய அரசாங்கத்தை அமைக்கச் சொன்னோம். அதற்கு ஜனாதிபதி இணங்கவில் லையே!" என்று யாரும் பதிலளிக்கக் கூடும். இதொன்றும் புதிய சேதியுமல்ல. புதிய உண்மையுமல்ல. இலங்கை அரசி யற் பாரம்பரியமே இப்படித்தான் உள்ளது. எந்த நெருக்கடி யைத் தணிப்பதற்கும் – தீர்ப்பதற்கும் ஏற்ற வகையில் தேசிய ஒருமைப்பாட்டை எட்டுவதைப்பற்றி எவரும் சிந்திப்பதே இல்லை. பதிலாக எரிகின்ற வீட்டில் பிடுங்குவது மிச்சம். பிணத்திலே கழற்றுவது லாபம் என்றே ஒவ்வொரு தரப்பும் சிந்திப்பதுண்டு. இப்பொழுதும் இதுவே நடக்கிறது.

ஜனாதிபதி தேசிய அரசாங்கம் ஒன்றைப் பற்றி இன்னும் சிந்திக்கவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். அது தவறாகவும் இருக்கலாம். இருக்கலாம் என்று சொல்வதை விட அது தவறு? என்றே எடுத்துக் கொள்வோம்.

அதற்காக நாட்டையும் மக்களையும் இப்படியே அழிவில் விட்டு விடலாமா?

விரும்பியோ விரும்பாமலோ ஜனாதிபதி அமைத்துள்ள அமைச்சரவையை ஏற்றுக் கொண்டுதானே பாராளுமன்றம் இயங்குகின்றது. நாடு முழுவதிலும் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அப்படியிருக்கும்போது இதை விட்டு விலகி நின்று கொண்டு தனியே வழமையைப்போல அரசியல் எதிர்ப்பைக் காட்டிக் கொள்ளாமல் இணைந்த பொருளாதாரக் கொள்கை ஒன்றைப் பற்றி பேசவும் விவா திக்கவும் அதன் விளைவாகத் திட்டமொன்றை உருவாக் கவும் வேண்டும். சில வேளை அரசாங்கத்தின் தரப்பில் போதாமைகளும் தவறுகளும் பலவீனங்களும் இருப்பின் அதற்குப் பதிலாக மாற்றுத் திட்டங்களையும் தீர்வுகளையும் எதிர்க்கட்சிகள் முன்வைக்கலாம். இதில் எதிர்க்கட்சிகள் தனித்தும் செயற்பட முடியும். சேர்ந்தும் செயற்பட முடியும். சிலவேளை அரசாங்கத்தினால் செய்ய முடியாத –அதனால் உருவாக்க முடியாத ஒரு திட்டத்தை எதிர்த்தரப்பில் உள்ள எவராவது செய்யவும் கூடும்.

அப்படி உருவாக்கப்படும் பொருளாதாரத் திட்டத்தை அர சிடம் சமர்ப்பித்து அதை நடைமுறைப்படுத்தக் கோரலாம். இப்பொழுது தேவை அவசர நடவடிக்கையே. இந்த அவசர நடவடிக்கையில் அனைவருடைய பங்களிப்புமே.

இதற்கான அரசியல் ஒழுங்கொன்றைப் புதிதாக நாம் உரு வாக்க வேண்டும். சுய விருப்பு –வெறுப்புகளை விட்டு மக்கள் நலனை முதன்மையாகக் கொண்டு செயற்பட வேண்டிய ஒழுக்கம் ஒன்று தேவை. இந்த ஒழுக்கம் ஒரு செழுமையான அரசியற் பண்பாடாக வளர்ச்சியடையுமாக இருந்தால் இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மட்டுமல்ல, எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகவுள்ள நெருக்கடிகளைத்தீர்ப்பதற்கும் அது உதவும். அதோடு நீண்ட காலமாகவே தீர்க்கப்படாதிருக்கும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இது பயன்படும். ஆனால், துரதிருஷ்டவசமாக இதுவரையில் எந்த அரசியற் தரப்பும் எந்த ஒரு பொருளா தாரத் திட்டத்தையும் தயாரிக்கவும் இல்லை. அதைப்பற்றிச் சிந்திக்கவும் இல்லை. பதிலாக எளிமையான முறையில் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுவதிலேயே குறியாக உள்ளன. இதனால் என்ன பயன்? ஆகவே மக்களுடைய தேவைகள், நலன்கள், விருப்பங்களுக்கு வெளியே – அவற்றுக்கு மாறாகவே இந்த அரசியற் தரப்புகள் உள்ளன. அரசாங்கமோ அமைச்சரவையை நீட்டிக்கொண்டு போகிறது. இதை விட 30 வரையான இராஜாங்க அமைச்சர்களை நியமிக்கவுள்ளதா கவும் கூறப்படுகிறது. ஒரு பக்கத்தில் அரசுப் பணியாளர்க ளையே குறைப்புச் செய்வதைப்பற்றிச் சிந்திக்கும் அரசாங்கம் அமைச்சரவையில் ஏன் அளவுக்கு அதிகமான ஆட்களின் நிய மனம்? என்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது. நாடு இன் றிருக்கின்ற நிலையில் செலவீனங்களைக் குறைத்து வளங் களைப் பெருக்க வேண்டும். எல்லோரும் முழு அளவில் நாட்டுக்காக ஒன்று பட்டு உழைக்க வேண்டும். இல்லை யேல் கூட்டு நெருக்கடியை அனைவரும் சந்திக்க வேண்டும். சில வேளை கூட்டு அழிவையும் கூட.

கருணாகரன்

---

# "யாழில் பங்கீட்டு அட்டைக்கு எரிவாயு விநியோகம்" ஏனைய பிரதேசங்களிலும் இதை பின்பற்றலாமே

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பல அத்தியாவசிய பொருட்க ளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின் றது. குறிப்பாக எரிவாயுவுக்கான தட்டுப்பாடு பெருமளவில் காணப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் எரிவாயுக்காக மக்கள் நீண்ட வரி சைகளில் காத்திருக்கின்றனர். நீண்ட வரிசையில் காத்திருந் தும் எரிவாயு கிடைக்காத நிலையில் விரக்தியில் வீதிகளை மறித்து ஆங்காங்கே போராட்டங்களையும் முன்னெடுத்த னர்.

எரிவாயுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் எரிவாயுவுக்கான கேள்வி குறையவில்லை. அதேவேளை விலையை அதிகரித்த நிறுவனங்களும் மக்க ளின் தேவைக்கு ஏற்ப எரிவாயுவை விநியோகிக்க முடியாத நிலையில் உள்ளன.

நாடளாவிய ரீதியில் எரிவாயுவுக்கான பிரச்சினை காணப் படுகின்ற போதிலும் யாழ்ப்பாணத்திலும் கடந்த சில வாரங் களாக அதுபெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஏற்கனவே பொருட்களின் விலையேற்றங்களால் மக்கள் நெருக்கடியில் காணப்படுவதனால், விரக்தி நிலையில் உள் ளனர். அதனால் காத்திருப்பு, வரிசை, ஏமாற்றம் என்பவற் றால் நொந்து போயுள்ளனர். கடந்த காலங்களை விட கடந்த வாரமே யாழ்ப்பாண மக்கள் கோபத்தின் உச்சிக்கு சென்று வீதி மாறியல்களில் ஈடுபட்டனர். பொலிஸார் மக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு மக்களை சமரசப்படுத்தி வந்தனர்.

மக்களின் கோபம், பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் இவற்றினை சமாளிக்கும் முகமாக யாழ்ப்பாண மாவட்ட



செயலர் க. மகேசன் விரைந்து நடவடிக்கை எடுத்து, எரி பொருள் பிரச்னைக்கு தீர்வு காணுவதற்கான கலந்துடையா டல்களை, பிரதேச செயலர்கள், அதிகாரிகள் மட்டத்தில் நடாத்தி வரும் நிலையில், எரிவாயு பிரச்சினையயை தீர்க் கும் வகையில் பங்கீட்டு அட்டைக்கு எரிவாயு வழங்கும் நடைமுறையை அமுல் படுத்தியுள்ளார்.

**பங்கீட்டு அட்டைக்கு எரிவாயு வழங்கும் நடைமுறை அமுல்**

அது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் கணபதிப் பிள்ளை மகேசன் அறிவித்துள்ளதாவது, தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமையில் மக் களது கேள்விக்கு குறைவான சிலிண் டர்களே எமக்கு கிடைக்கப்பெறுவத னால் சிலிண்டர்களை சீரான முறையில் மற்றும் நியாயமான விலையில் மக்கள் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக பின் வரும் பொறிமுறை ஊடாக எரிவாயு சிலிண்டர்களை எதிர்வரும் காலங்க ளில் பகிர்ந்தளிப்பதற்கு முடிவெடுக்கப் பட்டுள்ளது.



1. பொதுமக்களுக்கான வீட்டுப்பா வனை மக்களுக்கு விநியோகிக்கும் முறை:

கிராம அலுவலர் பிரிவுகளுக்கென ஒதுக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடம், உரிய கிராம மக்கள் தமது எரிவாயு சிலிண்டருக்கான பதி வுகளை மேற்கொள்ள வேண்டும். விநியோகஸ்தர்களும் மேற்படி விபரங்கள் தொடர்பான பதிவேடு ஒன்றினை பேணுதல் வேண்டும்

விநியோகஸ்தர்களிடம், ஒரு வீட்டுக்கு ஒரு சிலிண்டர் என்ற முன்னுரிமை அடிப்படையில் பதிவு மேற்கொள்ளப்ப டுவதனை கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். விநியோகஸ்தர்களுக்கு சிலிண்டர்கள் கிடைக்கப்பெற்றதும் பதிவு அடிப்படையில் அவர்களுக்கான விநியோகம் நடை பெறும். குறித்த நேரத்தில் பதிவு மேற்கொண்டோர் சமூக மளிக்காவிடின் பதிவு அடிப்படையில் அடுத்துள்ள பயனா ளிக்கு விநியோகிக்கப்படும். விநியோகிக்கப்பட்ட விபரம் பிரதேச செயலக மேற்பார்வையில் குடும்ப பங்கீட்டு அட்டையில் திகதி குறிப்பிடப்பட்டு பதிவு செய்தல் கட் டாயமானது. சிலிண்டரை பெறவருப வர் உரிய கிராம அலுவலர் பிரிவு, பங் கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டையுடன் பங்கீட்டு அட்டையில் பெயருடைய அங்கத்தவராக இருத் தல் கட்டாயமானது.

**விநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்கும் முறை:**

1. தமக்கு கிடைக்கப்பெறும் சிலிண்டர்களது எண்ணிக்கை அர சாங்க அதிபர் மற்றும் பிரதேச செய லாளர்களுக்கு லிட்ரோ பிராந்திய முகாமையாளரால் வழங்கப்படும். கிடைக்கப்பெற்ற எரிவாயு சிலிண்டர் களது எண்ணிக்கைக்கு அமைவாக விநியோகஸ்தர்களுக்கு விநியோகிக்க வேண்டிய சிலிண்டர்களது எண்ணிக்கை பிரதேச செயலாளர்களால் விநியோக நிறுவனத்திற்கு அறி விக்கப்படும்.

அதன் அடிப்படையில் விநியோக நிறுவனத்தினர் முக வர்களுக்கு சிலிண்டர்களை விநியோகிப்பர். 2. கைத்தொ ழில் நிலையங்கள், உணவுச்சாலைகள், வைத்தியசாலை கள் மற்றும் நலன்புரிச் சேவை நிறுவனங்கள் (சிறுவர் / முதியோர் இல்லம்) ஆகியவற்றுக்கு வழமைபோல் விநி யோகஸ்தர்களால் நேரடியாக விநியோகிக்கப்படும் என அறி வித்துள்ளார்.

**யாழ்ப்பாணத்திற்கு ஒரு இலட்சம் சிலிண்டர் தேவை**

யாழ்ப்பாணத்தில் ஒரு இலட்சத்து 10ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் பாவ னையில் உள்ளன எனவும், மாதாந் தம் சுமார் 60 ஆயிரம் சிலிண்டர்கள் மீள் நிரப்பி விநியோகிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.



ஆனால், யாழ்ப்பாணத்திற்கு தற்போது சுமார் 25 ஆயிரத்திற்கும் குறைவான சிலிண்டர்களிலேயே எரிவாயு மீள் நிரப்பப்பட்டு வருகின் றது. அதனாலேயே யாழில் பெரும ளவில் எரிவாயு தட்டுப்பாடு காணப் படுகின்றன. யாழுக்கு வரும் மிக குறைந்தளவான எரிவாயு சிலிண்டர்களையும் முன்னுரிமை அடிப்படையில் உணவகங்கள், ஹோட்டல்கள், வைத்திய சாலைகள், உணவு உற்பத்தி நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள் என்பவற்றுக்கு வழங்கப்படுவதனால் மக் களுக்கு சீரான முறையில் எரிவாயுவை வழங்க முடியாத நிலைமை காணப்படுகிறது. நாட்டில் பொருளாதார ஸ்திர தன்மை ஏற்பட்டு, உற்பத்திகள் ஏற்றுமதிகள் அதிகரிப்பட்டு, நாட்டுக்கு வருமானம் அதிகளவில் வரும் பட்சத்திலேயே மக்களுக்கு சீரான முறையில் எரிவாயுவை விநியோகிக்க முடியும். அது வரையில் எரிவாயு தட்டுப்பாடு நிலவும் என யாழ்ப்பாண மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார்.

**உணவகத்தை மூட முடியாத நிலை.**

அதேவேளை எரிவாயு தட்டுப்பாடு காரணமாக உணவகத் தில் உணவைத் தயாரித்து வழங்க முடியாத நிலையில் தான் காணப்படுகின்ற போதிலும் உணவகத்தினை மூட முடியாத நிலையில் உள்ளதாக உணவக உரிமையாளர் ஒருவர் கவலை யுடன் தெரிவித்தார். எரிவாயு இல்லாததன் காரணமாக தான் உணவு தயாரிக்க முடியாததால், ஒரு நாள் உணவகத்தினை மூடி விட்டு வீட்டில் இருந்த போது, எனக்கு கடன் தந்தவர் கள், வங்கி கடன் பணம் வசூலிப்பவர்கள் என்னைத் தொலை பேசியில் தொடர்பு கொண்டு எங்கே என வினாவி வீடு வரை வந்து நேரில் பார்த்து விட்டு சென்றனர். அவர்களிடம் என் மேல் அவ்வளவு அக்கறையா? என கேட்ட போது, இல்லை உங்கள் உணவகம் மூடி இருந்தது, நாங்கள் நினைத்தோம் உணவகத்தினை மூடி விட்டு நீங்கள் தலைமறைவாகி விட் டீர்களோ என, அதனால் தான் சந்தேகப்பட்டு உங்களை பார்க்க வந்தோம் என்றார்கள். அவர்கள் அவ்வாறு சொன்ன பின்னர் அன்றைய தினம் மாலையே நான் உணவகத்தினை திறந்தேன். உணவகத்திற்கு வருவோரிடம் உணவு இல்லை என கூறி என் சோகத்தையும் கூறி வருகிறேன் என்றார் யாழில் உள்ள உணவாக உரிமையாளர் ஒருவர்.

**கறுப்பு சந்தையில் 20 ஆயிரம் ரூபாய்.**

இதேவேளை கறுப்பு சந்தைகளில் எரிவாயு சுமார் 15ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. சில எரிவாயு விற்பனை முகவர்கள், தமது வாடிக்கையாளர்களிடம் வெற்று எரிவாயு சிலிண் டர்களையும் பணத்தினையும் பெற்றுக்கொண்டு எரிவாயு சிலிண்டர்களின் ஒழுங்கின் அடிப்படையில் தருவதாக வாக் குறுதி வழங்குகின்றனர். அவற்றினை நம்பி வாடிக்கையாளர்கள் அவர்களிடம் வெற்று சிலிண்டர்களை கொடுப்பதுடன், அதற்கான பணத்தினையும் வழங்குகின் றார்கள். வாடிக்கையாளர்களிடம் வெற்று சிலிண்டர்களை பெற்றுக்கொள்ளும் முகவர்கள் அவற்றை கொண்டு மீள் நிரப் பட்ட சிலிண்டர்களை விநியோகஸ்தர்க ளிடம் இருந்து பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் அதனை வாடிக்கையார்களிடம் கொடுக்காது கறுப்பு சந்தையில் இரண்டு, மூன்று மடங்கு விலையில் விற்கின்றனர்.

வெற்று சிலிண்டர்களை கொடுத்த வாடிக்கையாளர்கள் தமக்கான சிலிண்டர் களை கேட்கும் போது, தமக்கு இன்ன மும் சிலிண்டர் வரவில்லை. வந்ததும் தருகின்றோம் என அவர்களை ஏமாற்றி வருகின்றனர். இந்நிலையில் யாழ். மாவட்ட செயலக ஏற்பாட்டில் இனிவரும் காலங்களில் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவையாளரின் கண் காணிப்பின் கீழ் பங்கீட்டு அட்டைக்கு எரிவாயு சிலிண்டர் விநியோகம் நடைபெறவுள்ளது. அதனால் முகவர்களிடம் வெற்று சிலிண்டர்களை கொடுத்து வைத்திருப்பவர்களை அவற்றினை மீள பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட் டுள்ளது.

**யுத்த காலத்தை விட நெருக்கடியான நிலையில் மக்கள்.**

யுத்தத்தினால் 30 வருடங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்ட மக்கள் யுத்தம் முடிவடைந்த பின்னர் மெல்ல மெல்ல மீண்டு வந்தனர். தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக் கடி மீண்டும் அந்த மக்களை யுத்த கால பாதிப்பை விட மோசமான பாதிப்புக்கு கொண்டு சென்றுள்ளது. நாட்டில் ஒரு பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டு பொருட்களுக் கான தட்டுப்பாடு நீங்கும் பட்சத்திலையே மக்களின் வரிசை யுகம் இல்லாமல் போகும். அதன் பின்னரே மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியும். அதற்கான ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படுகின்றதா எனக் காத்திருக்கின்றனர்.

மயூரப்பிரியன்



# இலங்கை அரசியலில் 17 வருடங்களாக தவிர்க்க முடியாத மாபெரும் பாத்திரம்!

## இலங்கையின் நெருக்கடியான சூழ்நிலையில், பரபரப்பை ஏற்படுத்தியுள்ள பசில் ராஜபக்ஷவின் பதவிதுறப்பு!

இலங்கை அரசியலில் கடந்த சில நாட்களாகப் பரபரப்பான மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கிய உறுப்பினரும், பிரபலமான அரசியல்வாதியுமான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருந் தார். இது அரசியல் அரங்கத்தில் ஏதிர்பாராத ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பொருளாதார அமைச்சராக மிகவும் பலம் பொருந்திய அரசியல்வாதியாக இருந்த பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வின் ஆட்சிக் காலத்தில் தேசியப் பட்டியல் பாரா ளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். ஏறத்தாழ ஒரு வருட காலத்துக்குள்ளேயே அவர் தனது பதவியை இராஜினாமா செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கப் பிரஜாவுரிமை உட்பட இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்ட பசில் ராஜபக்ஷ, 2005ஆம் ஆண்டு காலப் பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னரே இலங்கை திரும்பியிருந்தார். இதற்கு முன்னர் பல ஆண்டு களுக்கு முன்னதாக ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து பணியாற்றியிருந்ததுடன், அதன் பின்னர் சுதந்திரக் கட்சியுடனும் இணைந்து செயற் பட்டிருந்தார்.

இவ்வாறான பின்னணியில் மஹிந்த ராஜ பக்ஷ ஜனாதிபதியானதும் நாடு திரும்பிய அவர், ஜனாதிபதியின் ஆலோசகராகச் செயற்பட்டதுடன் 2007ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் பாராளு மன்ற உறுப்பினராக முதன் முதலில் சபைக்குச் சென்றார்.

அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்ற பலம் மிக்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. இவர் பொருளாதார அமைச்சராக இருக் கும் போதே திவிநெகும சட்டம் போன்றவை கொண்டு வரப்பட்டன.

இவ்வாறான நிலையில் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந் ததும் பசில் ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். மஹிந்தவின் தோல்விக்கு பசில் ராஜபக்ஷவின் செயற்பாடுகள் காரணம் என்ற விமர் சனங்கள் வலுப்பெற்றிருந்தன.

இதன் தொடர்ச்சியாக அவர் நாட் டுக்கு மீண்டும் திரும்பி வந்து மஹிந் தவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவரும் முயற்சியைத் திரை மறைவிலிருந்து ஒருங்கிணைத்தார். இதன் ஒரு அங்கமாக 'ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன' என்ற கட்சியை உருவாக்கி குறுகிய காலத்துக்குள் அதனை பலம் பொருந்திய கட்சி யாகக் கட்டியெழுப்பினார். பொதுஜன பெரமுன முதன் முதலில் களமிறங்கிய உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெரும்பா லான சபைகளைக் கைப்பற்றி அமோக வெற்றி பெற்றது. இந்த வெற்றிப் பயணம் தொடர்ந்ததுடன், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலி லும் அக்கட்சி தனது பலத்தை நிரூபித்தது.

**2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன' என்ற புதிய கட்சியை கட்சியைக் கட்டியெழுப்பி, அதனை வெற்றிவாகை சூட வைத்து, நாட்டின் ஆட்சி யையே கைப்பற்றிக் கொண்டதில் பசில் ராஜ பக்ஷவின் தனிப்பட்ட ஆளுமைத் திறனே காரணமென்பதை எவரும் மறுக்க முடியாது!**

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெர முனவின் வேட்பாளராகக் களமிறங்கிய கோட்டா பய ராஜபக்ஷவை 69 இலட்சம் வாக்காளர்கள் தெரிவு செய்திருந்தனர். அதன் பின்னர் நடை பெற்ற பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெறக் கூடிய வகையில் பொதுஜன பெரமுன பலமாக இருந்தது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது அரசியலமைப் புத் திருத்தம் காரணமாக இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாத நிலைமை காணப்பட்டது. இது பசில் ராஜபக்ஷவுக்கும் நேரடி அர சியலுக்குத் தடையை ஏற்படுத்தியி ருந்தது. எனவே கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன வுக்குக் கிடைத்த பெரும்பான்மை யைப் பயன்படுத்தி 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து அதில் இரட்டைப் பிரஜாவுரிமை விடயம் நீக்கப்பட்டது. இதன் பின் னணியில் பசில் ராஜபக்ஷ முழு மையாகச் செயற்பட்டிருந்தார்.

அது மாத்திரமன்றி, பொதுத் தேர்தலின் பின்னர் கூடிய பாரா ளுமன்றத்தில் பொதுஜன பெர முனவின் உறுப்பினர்கள், குறிப் பாக முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பலரும் பசில் ராஜ பக்ஷ பாராளுமன்றத்துக்கு வர வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். அதாவது பசில் ராஜ பக்ஷவின் தேவைப்பாடு காணப்படுகிறது என்ற தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது.

அத்துடன், நாட்டைப் பொருளாதார ரீதியில் கட் டியெழுப்புவதற்கு பசில் ராஜபக்ஷ நிதி அமைச் சராக நியமிக்கப்பட வேண்டும் என்ற அழுத்தம் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. ஏழு மூளையைக் கொண்ட பசில் ராஜபக்ஷ நிதி அமைச்சராக்கப் பட வேண்டும் என ஒரு சில பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் பகிரங்கமாக் கூறியிருந்தனர். பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்காவிட்டாலும் ஜனாதிபதி நிய மித்த பொருளாதார செயலணியின் தலைவராக அவர் செயற்பட்டிருந்தார்.

இந்த அரசியல் பின்னணியில் கடந்த வரும் ஜூலை மாதம் பசில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பசில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்குத் தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பி னர் பதவியை ஜயந்த கட்டகொட இராஜினாமா செய்தார். தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமானம் செய்வதற்கு முன்னரே நிதி அமைச்சராக பசில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். பசில் ராஜபக்ஷ பொருளா தார செயலணியின் தலைவராக இருந்த எடுத்த முடிவுகளில் ஒன்றுதான் வரிகளைக் குறைப்பது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

இதன் பின்னர் இவர் நிதி அமைச்சராக நியமிக் கப்பட்டு, 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். இதுவும் கடுமையான விமர்சனங்களை உருவாக்கியிருந்தது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

---

# இந்தியாவின் அர்ப்பணிப்புகளை களங்கப்படுத்தும் குற்றச்சாட்டு!

## கச்சதீவை மீட்டுக் கொள்வதற்கு பாரதம் முற்படுவதாக வெளியிடப்படுகின்ற ஆதாரமற்ற புரளிகள்!

**கச்சதீவு விவகாரமானது இதுவரை காலமும் தமிழ்நாட்டிலேயே அதிக பேசுபொருளாக இருந்து வந்தது. இலங்கையிடமிருந்து கச்சதீவை எவ்வாறாவது மீட்டெடுக்க வேண்டுமென தமிழக அரசியல்வாதிகளும், மீனவர்களும் அடிக்கடி குரலெழுப்பி வருகின்றனர். இலங்கைக்கே சொந்தமான ஒரு தீவுதான் கச்சதீவு என்பதை தமிழ்நாட்டின் அரசியல்வாதிகள் பலரும், அங்குள்ள மீனவர் சங்கங்களும் இன்னுமே மனதளவில் ஏற்றுக் கொள்வதாக இல்லை.**



ஆனால் இன்று கச்சதீவு விவகார மானது இலங்கையிலும் பேசுபொ ருளான விவகாரமாகி விட்டது. தென்னிலங்கை அரசியல் களத்தில் மாத்திரமன்றி, வடக்கு அரசியல்வா திகள் மற்றும் அங்குள்ள மீனவர் சங்கங்கள் மத்தியிலும் இன்று கச்ச தீவு விவகாரம் பரபரப்புக்குரிய விட யமாகி விட்டது. தென்னிலங்கை பெரும்பான்மை அரசியல்வாதிகள், கச்சதீவு விவகாரத்தைப் பயன்படுத்தி தமிழ்நாட்டையும் இந்தியாவையும் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர்.

அதேநேரம் வடக்கிலுள்ள மீனவர் சங்கங்களோ கச்சதீவில் 'கைவைக்க' வேண்டாமென தமிழ்நாட்டு அர சாங்கத்துக்கும் தமிழக மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்து வருகின் றன. வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரான சீ. வி. கே. சிவஞானமும் சில தினங்களுக்கு முன்னர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இதேவிதமான வேண்டுகோளொன்றை முன்வைத் திருந்தார்.

"உலகத் தமிழ் மக்களின் தலை வராக நீங்கள்தான் கருதப்படுகின் றீர்கள். உங்களைப் பொறுத்தவரை இலங்கைத் தமிழர்களும், இந்தி யத் தமிழர்களும் வேறானவர்கள் அல்லர். இருநாட்டுத் தமிழர்களும் உங்களால் ஒரேவிதமாகவே நோக் கப்பட வேண்டியவர்களாவர். எனவே வடபகுதித் தமிழர்களை யும், தமிழக மக்களையும் சமமா கவே கருதி கச்சதீவை மீளக் கோரும் எண்ணத்தைக் கைவிட்டு விடுங் கள்" என்று முதலமைச்சர் ஸ்டாலி னிடம் வேண்டுகோள் முன்வைத் துள்ளார் சீ.வி.கே. சிவஞானம்.

ஆனால் இத்தனைக்கும் கச்சதீவு விவகாரம் குறித்து இந்திய மத்திய அரசு இதுவரை எந்தவொரு அறி விப்பையுமே வெளியிடவில்லை என்பதுதான் விந்தையான விடயம்! கச்சதீவை இந்தியா மீளப்பெற வேண்டுமென்ற கருத்தை பிர தமர் நரேந்திர மோடியின் அர சாங்கம் இதுவரை ஒருபோதுமே கூறியதில்லை. அதேசமயம் அது சம்பந்தமான மறைமுக அழுத்தத் தையும் கூட இந்தியா ஒருபோ தும் இலங்கை மீது பிரயோகித்த தில்லை.







**"இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடியை தணிப்பதற்கும், மக்களின் துன்பத்தைப் போக்குவதற்கும் அர்ப்பணிப்பான உதவிகளை வழங்கி வருகின்ற அயல்தேசம் மீது வீணான கண்டனக் கணைகள்!**

அவ்வாறிருக்கையில், கச்சதீவை மீட்டெடுத்துக் கொள்வதற்கு இந்தியா முற்படுவதாக தென்னி லங்கை அரசியல் சக்திகள் சமீப காலமாக உரத்துக் குரலெழுப்பி வருகின்றன. தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் மீதுதான் தென்னிலங்கை அரசியல்வாதிகள் இது சம்பந்தமாக அதிகம் கண்டனங்கள் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை மக்களுக்கு உணவு நிவாரணங்களை வழங்கி விட்டு, கச் சதீவைக் கைப்பற்றிக் கொள்வதற்கு முதலமைச்சர் ஸ்டாலின் முற்படுவ தாக மக்கள் விடுதலை முன்னணி யின் முக்கியஸ்தர் ஒருவர் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் வைத்து மக்கள் சந்திப்பொன்றில் கண்டனம் வெளி யிட்டிருந்தார். அரசியலுக்காகவே அவர் அக்கருத்தைத் தெரிவித்திருக் கக் கூடும்.

உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடபகுதியில் மக்கள் ஆதரவைத் திரட்டுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி கடுமையான பிரயத்தனம் மேற்கொண்டு வருகின் றது. வடபகுதி மீனவர் சங்கங்களின் ஆதரவைப் பெறுவதற்காக கச்சதீவு விவகாரத்தை மக்கள் விடுதலை முன்னணி கருவியாகப் பயன்படுத்து வதாகவே எண்ணத் தோன்றுகிறது.

அதேவேளை கச்சதீவு தொடர் பாக வடபகுதி மீனவர்களுக்கு ஏற்கனவே கவலையொன்று உள்ள தையும் இவ்விடத்தில் சுட்டிக் காட் டுவது பொருத்தமாகும். கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமாக இருக் கும் போதே தமிழக மீனவர்கள் கச்சதீவையும் தாண்டி இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிர வேசித்து மீன்பிடித்து வருகின்றனர். அவ்வாறிருக்கையில், கச்சதீவை இந்தியா மீளப்பெற்றுக் கொள்ளும் நிலைமையொன்று ஏற்படுமானால் தமிழக மீனவர்கள் வடபகுதி கடல் பரப்பை முற்றாகவே ஆக்கிரமித்து விடுவார்கள் என்பதே வடக்கு மீன வர்களின் கவலையாகும்.

ஆனால் கச்சதீவு சம்பந்தமாக தற்போது உருவாகியிருக்கின்ற பரப ரப்புகளை நன்றாக ஆராய்ந்து பார்க் கின்ற போது, ஒன்று மட்டும் தெளி வாகத் தெரிகின்றது. கச்சதீவை மீட்க வேண்டுமென்பது இந்திய மத்திய அரசின் நிலைப்பாடு அல்ல. அது சம்பந்தமாக இந்தியா நேரடி யாகவோ அல்லது மறைமுகமா கவோ கருத்து எதையும் தெரிவித் ததுமில்லை. தென்னிலங்கையில் அரசியலுக்காகவே இவ்விவகாரம் அரசியல்வாதிகளால் பெரிதுபடுத் தப்படுகின்றது என்பது மட்டும் தெளிவாகப் புலப்படுகின்றது.



தமிழ்நாட்டில் கச்சதீவு விவகா ரம் பொருட்படுத்தப்படுவது புதிய விடயமல்ல. அக்காலம் தொடக்கம் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கச் சதீவு விவகாரத்தை தங்களது அரசி யலுக்காக அவ்வப்போது முன்னி லைப்படுத்தியே வருகின்றனர்.

கச்சதீவை இந்தியா எவ்வாறா யினும் மீண்டும் தனக்குச் சொந் தமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் தமிழக அரசியல்வா திகளின் கோரிக்கையாக இருக்கின் றது. கச்சதீவை இந்தியா தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுமானால் தமிழக மீனவர்கள் தங்குதடை யின்றி இலங்கைக் கடல் எல்லைக் குள் பிரவேசித்து சுதந்திரமாக மீன்பிடித்துக் கொள்ளலாமென் பதுதான் தமிழக அரசியல்வாதிக ளின் எண்ணமாகும்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் வைத்து தமிழக மீனவர்கள் இலங் கைக் கடற்படையினரால் கைது செய்யப்படுகின்ற ஒவ்வொரு தட வையும் தமிழகத்தில் கச்சதீவு விவ காரம் சூடு பிடித்துக் கொள்கின்றது. கச்சதீவை இந்தியா மீட்டெடுத்துக் கொண்டால் மட்டுமே தமிழக மீன வர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க வழி யேற்படுமென்று தமிழக அரசியல் வாதிகளாலும், அங்குள்ள மீனவர் அமைப்புகளாலும் வலியுறுத்தப் பட்டு வருகின்றது.

ஆனால் தமிழகத்தின் குரல் களை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த இந்தியா வின் முடிவைத் தீர்மானித்து விட முடியாது. தமிழக கோரிக்கைகளுக் கும் இந்திய மத்திய அரசின் எண் ணங்களுக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா தனிப்பெரும் தேசமா கும். இந்திய தேசத்தின் நலன்களை அடிப்படையாக வைத்தே அதன் வெளிநாட்டுக் கொள்கைகளும் அமைவதுண்டு. கச்சதீவு விவகாரத் திலும் இந்தியாவின் கொள்கை அவ் வாறானதுதான்.

(15ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

# கடினம் நிறைந்த மூன்று வாரங்கள்!

**நாடு எதிர்கொண்டுள்ள மோசமான பொருளாதார நிலைமைகள் குறித்து அவ்வப்போது உயர்மட்டத்திலிருந்து எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டு மக்களுக்கு உண்மை தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சிலர் மிகுந்த அக்கறையாக உள்ளனர். நாட்டின் பொருளாதார நிலைமையின் ஆபத்தை அவர்கள் அடிக்கடி கூறிவருகின்றனர்..**

இந்நிலையில், எரிபொருள் மற்றும் எரிவாயுவை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பிரதமர் பாராளுமன்றத்தில் ஓரிரு தினங்களுக்கு முன்னர்

## நிலைமையின் விபரீதத்தை நாட்டுக்கு தெளிவுபடுத்திய பிரதமர் ரணில்



வலியுறுத்தியிருந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்துப் பாராளுமன்றத்துக்கு விளக்கமளித்திருந்தார்.

அடுத்து வருகின்ற மூன்று வாரங்கள் மிகவும் சிக்கல் நிறைந்தவையாக இருக்கப் போகின்றன என்றும், எரிபொருள் மற்றும் எரிவாயுவை சிக்கனமாகப் பயன்படுத்துவதுடன் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் பிரதமர் கோரியிருந்தார். இதற்கும் அப்பால் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்குரிய அபாயமான சாத்தியக்கூறு பற்றியும் அவர் விளக்கியிருந்தார்.

பிரதமர் தெரிவித்திருக்கும் இந்தக் கருத்துத் தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் தீவிர கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியம். எரிவாயு மற்றும் எரிபொருளுக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் நீண்ட நாட்களாக கியூ வரிசைகளில் காத்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்குத் தேவையான டொலரோ அல்லது டொலரைக் கொள்வனவு செய்வதற்குப் போதுமான இலங்கை ரூபாயோ எரிபொருள் கூட்டுத் தாபனம் மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகியவற்றிடம் இல்லை.

எனவே, ஒவ்வொரு முறையும் எரிபொருள் கப்பல் மற்றும் எரிவாயு கப்பலிலிருந்து அவற்றை கரைக்குக் கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சும் அதிகாரிகளும் உரிய நாணயத்தைத் திரட்டுவதற்குக் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர். குறிப்பாக மாதமொன்றுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திரட்டி வேண்டியிருப்பதாக மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் பிரதமர் பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் 'மாதத்திற்கு 500 மில்லியன் டொலர்களை எரிபொருளுக்காக நாடு செலவிடுகிறது. தற்போதைய நெருக்கடியால் எரிபொருள் விலை உயரும் அபாயம் உள்ளது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

## இன்னும் சில மாதங்களில் உணவுப் பொருட்களைப் பெறுவதிலும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். உணவுப் பொருட்கள் இறக்குமதிக்காக மாதாந்தம் 150 மில். டொலர் தேவை

இந்த ஆண்டு இறுதிக்குள் உலக மசகு எண்ணெய் விலை 40 வீதம் வரை உயரும் என்று சிலர் மதிப்பிட்டுள்ளனர். இந்த நிலையில் எரிபொருளுக்கான கூப்பன் முறையை அறிமுகப்படுத்தும் யோசனையை நிராகரிக்க முடியாது. எப்படியாவது அடுத்த ஆறு மாதங்களுக்கு 3300 மில்லியன் டொலர் பெறுமதியான எரிபொருளைத் தேடிக் கொள்ள வேண்டும்.

எரிவாயு இறக்குமதி செய்ய ஒரு மாதத்திற்கு 40 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும். நாங்கள் தற்போது எரிவாயு இறக்குமதி செய்ய பலதரப்பு உதவி, உள்ளூர் நாணயம் மற்றும் இந்திய கடன்களைப் பயன்படுத்துகிறோம். அடுத்த ஆறு மாதங்களுக்கு எரிவாயுவிற்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது.

மேலும், அடுத்த மூன்று வாரங்கள் எரிபொருளுக்கு கடினமான காலமாக இருக்கும். நாம் அனைவரும் எரிபொருள் மற்றும் எரிவாயுவை முடிந்தவரை கவனமாக உபயோகப்படுத்த வேண்டிய நேரம் இது. பயணங்களை முடிந்தவரை மட்டுப்படுத்த வேண்டும். எனவே, இந்தக் காலகட்டத்தில் தேவையில்லாமல் சிந்திப்பதையும், தேவையில்லாமல் எரிபொருள் மற்றும் எரிவாயுவை பதுக்குவதையும் தவிர்க்குமாறு அனைத்து குடிமக்களையும் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கடினமான மூன்று வாரங்களுக்குப் பிறகு, எரிபொருள் மற்றும் உணவை சிரமமின்றி வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. அந்த கடினமான மூன்று வாரங்களுக்குப் பிறகு, எரிபொருள் மற்றும் எரிவாயுவை தட்டுப்பாடு இல்லாமல் வழங்க நாங்கள் முயற்சி செய்கிறோம். இந்த கடினமான மூன்று வாரங்களை பொறுமையாக எதிர்கொள்வோம்' எனக் கூறியிருந்தார்.



அது மாத்திரமன்றி உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படக் கூடிய சாத்தியம் தொடர்பில் கடந்த சில நாட்களாக அரசியல்வாதிகள் எச்சரித்து வருகின்றனர். மக்கள் அனைவரும் தமது வீடுகளில் இயன்றளவு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான கோரிக்கைகளை அலட்சியம் செய்வதற்கான காலம் இல்லை என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

'எங்கள் அறுவடை குறைந்துள்ளது. இவ்வாறான நிலைமையை சிறுபோகத்தில் எதிர்கொள்ள வேண்டியுள்ளதுடன், அடுத்த பெரும்போகத்தை வெற்றியடையச் செய்வதற்கு இப்போதிருந்தே நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

ஆனால் அந்த அறுவடை பெப்ரவரி 2023 இறுதியில்தான் கிடைக்கும். அரிசியைப் பற்றி பார்க்குமிடத்து, நம் நாட்டின் வருடம் ஒன்றிற்கான அரிசியின் தேவை 2.5 மில்லியன் மெட்ரிக் தொன் ஆகும். ஆனால் எங்களிடம் 1.6 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி மட்டுமே கையிருப்பில் உள்ளது.

இந்த நிலை நெல் மற்றும் பல பயிர்களுக்கும் பொதுவானது. அதனால், சில மாதங்களில் உணவு விடயத்தில் கடும் சிரமங்களை சந்திக்க வேண்டியிருக்கும். நமது அன்றாட உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும்.

ஒரு மாதத்திற்கு 150 மில்லியன் டொலர் அளவில் செலவாகும்' என்ற புள்ளி விபரங்களையும் பிரதமர் பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

## ஆறு மாதங்களுக்கு ஆபத்தைத் தவிர்க்க வேண்டுமானால் 5 பில்லியன் டொலரைத் திரட்டுவதற்கான வழிவகைகளில் இறங்க வேண்டும்!



எனவே, பயிர்ச்செய்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படுவது மாத்திரமன்றி, விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கு தேவையான உரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை குறித்தும் பிரதமர் பிரஸ்தாபித்திருந்தார். அது மாத்திரமன்றி மருந்துப் பொருட்களின் தேவை மற்றும் பற்றாக்குறையான மருந்துகளை வெளிநாடுகளின் உதவியுடன் பெற்றுக் கொள்ள எடுக்கும் முயற்சிகள் பற்றியும் அவர் விளக்கிக் கூறியிருந்தார்.

அடுத்த ஆறு மாதங்களில் நம் வாழ்க்கையை சாதாரணமாக வைத்திருக்க 5 பில்லியன் டொலர்கள் தேவை என்றும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இணையாக ரூபாயை வலுப்படுத்த இன்னும் 5 பில்லியன் டொலர் தேவை. அதாவது அடுத்த ஆறு மாதங்களுக்கு நாட்டை மிதக்க வைக்க 6 பில்லியன் டொலர்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்றும் பிரதமர் கூறியிருந்தார்.

நாட்டை சாதாரண நிலைமையில் வைத்துக் கொள்வதற்கு இந்தளவு தொகை நிதி தேவைப்படும் பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அது மாத்திரமன்றி இலங்கையின் நட்பு நாடுகளிடமிருந்தும் உதவிகள் கோரப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஜப்பான், இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் பங்களிப்புடன் இலங்கைக்கு உதவி செய்வதற்கான மாநாடொன்று நடத்தப்படவுள்ளது. இதற்கான இணக்கத்தை உரிய நாடுகள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான பின்னணியில், நாட்டில் அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையொன்றை ஏற்படுத்த வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் முக்கிய பொறுப்பாக உள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மையானது பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுப்பது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மிகவும் அவசியமானதாகும்.

இதன் ஒரு கட்டமாகவே பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தக் கூடிய வகையில் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கான கோரிக்கை வலுத்துள்ளது.

இருந்தபோதும் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் அரசியல்வாதிகள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுவதாகவே அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக ஆளும் பொதுஜன பெரமுன கட்சிக்குள்ளேயே முரண்பாடான நிலைப்பாடு காணப்படுவதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் அரசியல் மற்றும் உயர் பதவிகளில் வருவதற்குத் தடையை ஏற்படுத்துவது குறித்த சரத்துக்கு பசில் ராஜபக்ஷவும் அவருக்கு ஆதரவானவர்களும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. 21 ஆவது திருத்தத்துக்கு தான் எதிர்ப்பு என்பதை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகிய பின்னர் பசில் ராஜபக்ஷ பகிரங்கமாக ஊடகங்களில் கூறியிருந்தார். எனவே, கட்சியின் முக்கிய பொறுப்பில் இருக்கக் கூடிய அவர், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதே பலருடைய எதிர்பார்ப்பாகவுள்ளது.

## மக்களின் துன்பத்தைத் தணிப்பதற்கு அரசு தீவிர பிரயத்தனம். பொறுமை காப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை!



மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் அரசியல்வாதிகள் தமது சொந்த விருப்பு வெறுப்புக்களைக் களைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இக்கட்டான சூழ்நிலையில் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி நாட்டையும், எதிர்கால சந்ததியையும் மீட்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதுதான் இன்றைய நிலையில் பிரதானம்.

## உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரித்தாலேயே உணவு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்! ஒட்டுமொத்த தேசமும் இன்றைய சிக்கலை புரிந்து பசுமைப் புரட்சியில் இறங்குவது அவசியம்

# பெருந்தோட்ட தரிசு காணிகளை விவசாயத்துக்கு பயன்படுத்தல்: தோட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா?

**‘ பெருந்தோட்ட மக்களை வருமானம் குறைந்தோர் பட்டியலில் சேர்ப்பதற்கான முயற்சிகள் அவசியம். இ.தொ.காவும், த.மு.கூட்டணியும் இதில் முனைப்புடன் ஈடுபடுவது முக்கியம். சில இனவாத சக்திகள் ஸ்டாலின் உணவுப் பொருட்களை கொடுத்துவிட்டு கச்சத்தீவை கேட்பதாக பேசிவருகின்றனர். மனிதாபிமானம் வேறு. அரசியல் வேறு. இரண்டையும் போட்டு குழப்புவது நல்லதல்ல' 'ஏற்கனவே கைவிடப்பட்ட காணிகளை தோட்ட இளைஞர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட உதவ வேண்டுமென்று கோரிக்கைகள் எழுந்தன. ஆனால் இனவாத கண்ணோட்டத்துடன் இதனை நோக்கும் அரசியல்வாதிகளின் குறுக்கீடு காரணமாக இதுவரை எதுவுமே ஆகவில்லை ’**

கடந்த வார இறுதியில் மூன்று முக்கிய விடயங்கள் எமது பதிவுக்குள்ளாயின. அவை மூன்றும் பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரை கவனத்துக்குரியவை. ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை.

தமிழ்நாடு அரசு வழங்கிய உணவுப் பொருட்கள் பங்கீடு, பிரதமர் ரணிலின் அபாய அறிவிப்பு, அதனையொட்டியதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு விடுத்துள்ள உத்தரவு என்பனதான் அந்த அவதானத்துக்குரிய சங்கதிகள்.

தமிழ்நாடு அரசு நல்லெண்ண மனப்பான்மையுடன் இங்கு வறுமைக் கோட்டிற்கு கீழ் வழும் குடும்பங்களுக்கு விநியோகிக்கவென அரிசி, பால்மா, மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது.

அவர் கூறியபடியே பொருட்களும் வந்து சேர்ந்துள்ளன. இனி வரவும் போகின்றன. இந்நிவாரணப் பொருட்களை கிராம அதிகாரிகளுக்கூடாக வழங்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இதில் இப்போது பிரச்சினை எழுந்துள்ளது. இது எழுதப்படும் வரை கிராம அதிகாரிகள் சங்கம் இந்த விநியோக நடவடிக்கையிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்தது. அவ்வாறே செய்துள்ளது. பொருட்கள் விநியோகத்தில் அரசியல் தலையீடு ஏற்பட்டுள்ளது. ஜீவன் தொண்டமான் அச்சுறுத்துவது போல பேசுகிறார் என்று காரணம் கூறி கைநழுவிக் கொண்டுள்ளது கிராம அதிகாரிகள் சங்கம்.

ஜீவன் தொண்டமான் தலையீடு செய்தது உண்மைதான். ஆனால் அது நியாயமான தலையீடு. பெருந்தோட்டத் துறையில் வாழும் சகலரும் குறைந்த வருமானம் பெறுபவர்களே என்பதில் ஐயமில்லை. எனினும் தொழில்சார் ரீதியில் இதில் 80 சதவீதமான குடும்பங்கள் வருமானம் குறைந்தோர் பட்டியலில் உள்ளடக்கப்படுவது இல்லை. ஓய்வூதியம் பெற்றோர், வேலையற்றோர் என்று 20சத வீதமானோர் மட்டுமே வருமானம் குறைந்தவர்களாக கணிக்கப்படுகின்றனர்.

இந்த அடிப்படையிலேயே தமிழ் நாடு அரசு அனுப்பிவைத்துள்ள உணவுப் பொருட்கள் விநியோகத்துக்கு தகுதியுடையவர்கள் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. இதைத்தான் ஜீவன் தொண்டமான் எதிர்த்தார். தோட்ட மக்கள் அனைவருக்கும் நிவாரணப் பொருட்கள் வழங்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தி இருந்தார். இது சம்பந்தமாக விளக்கமொன்றை இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் ஊடகங்கள் மூலம் தந்திருந்தார். எனினும் கிராம அதிகாரிகள் சங்கம் விநியோகத்திலிருந்து விலகிக் கொண்டுள்ளது. தற்போது பிரதேச செயலகங்கள் மூலம் மேற்படி விநியோகம் இடம் பெறுகிறது.

பெருந்தோட்ட மக்களை வருமானம் குறைந்தோர் பட்டியலில் சேர்ப்பதற்கான முயற்சிகள் அவசியம். இ.தொ.காவும், த.மு.கூட்டணியும் இதில் முனைப்புடன் ஈடுபடுவது முக்கியம். இதே போது சில இனவாத சக்திகள் ஸ்டாலின் உணவுப் பொருட்களை கொடுத்துவிட்டு கச்சத்தீவை கேட்பதாக பேசிவருகின்றனர். மனிதாபிமானம் வேறு. அரசியல் வேறு. இரண்டையும் போட்டு குழப்புவது நல்லதல்ல.

இனி பிரதமர் ரணில் விக்ரமசிங்க அபாய அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளமையைப் பார்ப்போம். எதிர்வரும் நாட்களில் மக்கள் தினம் ஒன்றுக்கு இருவேளை உணவு மட்டுமே சாப்பிட நேரிடலாம் என்கிறார் பிரதமர் ரணில். அவர்தான் நிதியமைச்சரும் கூட. மக்கள் பட்டினிக் கிடக்கப் போவதை பகிரங்கமாக பிரதமரே எச்சரிக்கை விடுக்கிறார். இப்பொழுதே இருவேளை சாப்பாட்டினை முழுமையாக சாப்பிட முடியாத படி மக்கள் பரிதவிக்கிறார்கள். உணவு நெருக்கடி பெருந்தோட்ட மக்களைப் பாடாய் படுத்திக் கொண்டிருக்கின்றது. 1000 ரூபா அடிப்படை சம்பளம் பெற இன்னும் முடியாதுள்ளது. எரிபொருள் பிரச்சினையால் பெருந்தோட்டத் தொழிற்சாலைகள் சீராக இயங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் தோட்ட மக்களின் வேலை வாய்ப்பினை பெரிதும் பாதித்துள்ளது. இதேவேளை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ புதிய உத்தரவு ஒன்றை அதிகாரிகளுக்கு பிறப்பித்துள்ளார். அதாவது பெருந்தோட்டப் பிரதேசங்களில் பயன்படுத்தப்படாத தரிசு காணிகளைக் கண்டறிந்து உனவுப் பொருட்களைப் பயிரிட பகிர்ந்தளிக்குமாறு பணிப்புரை வழங்கியுள்ளார் அவர்.

23 கம்பனிகள் வசம் பெருந்தோட்டங்கள் உள்ளன. எனினும் முறையான பராமரிப்பின்றி பெரும்பாலான காணிகள் கைவிடப்பட்டுள்ளன. இன்னும் சொல்லப் போனால் 30சதவீதத்திற்கும் அதிகமான காணிகள் இவ்வாறு காடாக்கப்பட்டுக் கிடக்கின்றன என்பது அவதானிகளின் பதிவு. ஏலவே இவ்வாறான காணிகளை தனியார் மற்றும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது அல்லது குத்தகைக்கு விடுவது என்பதிலேயே கம்பனி தரப்பு கவனம் செலுத்தி வந்துள்ளது. தவிர தோட்டக் காணிகளில் அத்துமீறிய வெளியார் குடியேற்றங்கள் இடம் பெறுவதாக தகவல்கள் உள்ளன.

## மலையக அரசியல் கட்சிகள் இவ்விடயத்தில் ஏனோதானோ போக்கை கடைப்பிடித்து கோட்டை விட்டு விடக்கூடாது!

ஏற்கனவே கைவிடப்பட்ட காணிகளை தோட்ட இளைஞர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட உதவ வேண்டுமென்று கோரிக்கைகள் எழுந்தன. ஆனால் இனவாத கண்ணோட்டத்துடன் இதனை நோக்கும் அரசியல்வாதிகளின் குறுக்கீடு காரணமாக இதுவரை எதுவுமே ஆகவில்லை.

விவசாயம் செய்வதற்கும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் இக்காணிகள் தோட்ட இளைஞர்களுக்கு வழங்கப்பட்டிருக்குமாயின் இன்று பெருந்தோட்டப் பிரதேசங்களில் வேலைவாய்ப்பின்மைக்கு வடிகால் தேடியிருக்கலாம். வருமானத்துக்கு வழி செய்திருக்கலாம்.

தற்போது ஜனாதிபதியின் உத்தரவின் பிரகாரம் பெருந்தோட்ட தரிசு நிலங்களில் உணவுப்பொருட்களைப் பயிரிடுவதற்க்கான வேலைத் திட்டங்கள் உருவாக்கம் பெறப் போகின்றன. ஏறக்குறைய 9000 ஹெக்டேயர் தரிசு காணிகள் இங்கு காணப்படுவதாக ஆய்வுகள் சுட்டுகின்றன. இக்காணிகளில் பயிரிடுவதற்கு ஏற்ற பயிர்கள் இனம் காணப்பட உள்ளன. தவிர இக்காணிகளில் விவசாயம் செய்வோருக்கு எரிபொருள், பசளை விநியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்னும் உறுதியையும் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

காணியை யார் யாருக்கு வழங்குவது என்பதை அதிகாரிகளே முடிவு செய்யப் போகிறார்கள். இப்போதுள்ள சிக்கல் என்னவெனில் முன்னுரிமை யாருக்கு கிடைக்கப் போகிறது என்பதுதான். அரச அதிகாரிகள் சிலர் பெருந்தோட்ட விவகாரங்களைக் கையாளும் சந்தர்ப்பத்தில் எல்லாம் இனவாத கண்ணோட்டத்துடனேயே செயற்படுவதை வழக்கமாக கொண்டுள்ளார்கள். ஆக பெருந்தோட்ட தரிசு நிலங்கள் பகிர்ந்தளிக்கும் நிலையில் தோட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்னும் ஐயம் எழுவது இயல்பே.

ஜனாதிபதியின் தரிசு நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் பணிப்புரை காலத்தின் தேவையை கருத்தில் கொண்டது தான். எனினும் அதில் பயன்பெற வேண்டிய சமூகம் பற்றியும் அவர் கவனம் செலுத்துவதே உசிதமானது. இதற்கான உத்தரவை அதிகாரிகளுக்கு பிறப்பிப்பாரா ஜனாதிபதி!.

இதில் த.மு. கூட்டணியும், இ.தொ.காவும் உடனடியாக கவனம் செலுத்தியாக வேண்டும். தமிழக அரசு வழங்கியுள்ள உணவுப்பொருள் விநியோகத்தில் தோட்ட மக்களுக்கு உரிமை கோருவதைப் போல இக்காணி விவகாரமும் முக்கியமானது. பகிர்ந்தளிக்கப்பட போகும் தரிசு காணிகள் தற்காலிக தேவைக்கா அல்லது நிரந்தர உரிமைக்கா என்பது தெளிவுப்படுத்தப் படவில்லை. எதுவாயினும் பெருந்தோட்ட மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தரிசு நிலங்களைப் பகிர்ந்தளித்து இளைஞர்களை ஊக்குவிப்பது மிகமிக அவசியம்.

**பன். பாலா ...**

# மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்

லண்டலில் வெளியிடப்படும் இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்களின் எழுச்சிமிகு போராட்டங்களையும், போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்களைப் பற்றி விவரிக்கும் நூலாக ‘மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்’ என்கிற தலைப்பில் சி.வி.வேலுப்பிள்ளை எழுதி, மு.நித்யானந்தனும் எச்.எச். விக்கிரமசிங்கவும் தொகுத்த நூலுக்கு தாய் பதிப்பக உரிமையாளரான போராடியதற்கான சூழலும் இதில் பதிவாகியிருப்பது முக்கியமானது. இன்றைய இளைய தலைமுறையினருக்கு தங்கள் மலையக மண்ணில் நடந்த ஒடுக்குமுறையையும், மக்கள் எழுச்சியையும் ஒருசேரச் சொல்லும் இந்த நூலில் மலையகத்து மண் ஒட்டியிருக்கிறது.

இந்த நூலைப் பதிப்பித்தவர்களில் ஒருவரான மு.நித்தியானந்தன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராகப் பணியாற்றிய ஏற்கெனவே சி.வி. வேலுப்பிள்ளையின் ‘வீடற்றவன்’, ‘நாடற்றவர் கதை’ ஆகிய நூல்களைப் பதிப்பித்தவர். அவருடைய பதிப்பில் சி.வி.யின் நூல் பதிப்புப் பெறுவது சிறப்புமிக்கது.

இதன் தொகுப்பாசியர்களில் ஒருவரான எனது அன்புக்குரிய நண்பர் திரு. எச்.எச். விக்கிரமசிங்க இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். வெளிநாடு வாழ் இந்திய மக்களின் நலனில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

மலையக எழுத்தாளர் மன்றப் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். மலையக மக்களுக்காகவே உழைத்த தொழிற்சங்கத் தலைவர்கள், மலையக எழுத்தாளர்கள், கலைஞர்களைப் பற்றித்

**மலையகத்தில் நிகழ்ந்த ஒடுக்குமுறைகளையும் எழுச்சிப் போராட்டங்களையும் ஒருசேர சொல்லும் நூல்**




முனைவர் குமார் ராஜேந்திரன்

முனைவர் குமார் ராஜேந்திரன் எழுதியுள்ள முன்னுரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்காக உழைத்து, 1947இல் இலங்கை பாராளுமன்றம் சென்று குரல் கொடுத்த சி.வி. வேலுப்பிள்ளை தன்னுடைய சமகாலத்திய தொழிலாளர்களுக்கான தலைவர்களைப் பற்றி 1958 /59களில் இலங்கையிலிருந்து வெளிவரும் தினகரன் நாளிதழில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

இதில் மலையகத் தலைவர்கள் 13 பேர்களைப் பற்றியும், மலையகத் தளபதிகள் 13 பேரைப் பற்றியும் அவருக்கே உரித்தான பாணியில் எழுதியிருக்கிறார்.

இலங்கை வாழ் மலையகத் தமிழர்களின் நலனுக்காகக் குரல் கொடுத்த கோ. நடேச ஐயர் முதல், தமிழ் தெரியாத நிலையிலும், மலையகத் தமிழர்களின் துயர் துடைக்க முனைந்தவரான அப்துல் அசீஸ் வரையும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக இலங்கை அரசியல் களத்தில் தவிர்க்க முடியாத தலைவராக விளங்கிய சௌமியமூர்த்தி தொண்டமான், ஜோர்ஜ் ஆர்.மோத்தா, பெரி சுந்தரம், கே.ராஜலிங்கம், ஐ.எக்ஸ் பெரேரா, எஸ்.பி வைத்தியலிங்கம், குஞ்சுபெரி சண்முகம், ஏ.எஸ். ஜோன், சாரநாதன், சி.எஸ்.சிவனடியான் என்று பல தலைவர்களைப் பற்றி அரிய செய்திகளும் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

தளபதிகள் என்ற வரிசையில் எஸ்.சோமசுந்தரம், எஸ்.எம்.சுப்பையா, எஸ்.செல்லையா, கே. குமாரவேல் தொடங்கி இன்றும் வாழும் முதுபெரும் அறிஞர் பி.பி. தேவராஜ் வரை பலரைப் பற்றிய செய்திகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

மலையக மக்களின் போராட்டமும், அவர்கள் கல்விப் புலத்திலிருந்து வருபவர். சென்னையில் க்ரியா அகராதித் திட்டத்தில் செயற்பட்டவர்.

லண்டனில் பொருளாதார சாஸ்திரத்தில் ஆசிரியராகவும் ஐரோப்பிய தீபம் தொலைக்காட்சியின் செய்திப் பிரிவின் தலைவராகவும் பணியாற்றிய அனுபவங்கள் கொண்டவர்.

‘கூலித்தமிழ்’ என்ற இவரது ஆராய்ச்சி நூல் மலையகத்தின் எழுத்து இலக்கிய முயற்சிகளின் தோற்றத்தை ஆராயும் முன்னோடி நூலாகும். இந்நூல் தமிழக அறிஞர்களின் பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறது. மலையக இலக்கியங்களைப் பேணுவதில் அக்கறை கொண்டவர்.

தொடர்ந்து இலங்கைப் பத்திரிகைகளில் வாராவாரம் எழுதி வருகின்றவர்.

இவர்கள் இருவரும் இணைந்து தான் இந்தத் தொகுப்பு நூலை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்த அரிய பணிக்காக மு. நித்தியானந்தனையும், எச்.எச்.விக்ரமசிங்கவையும் உளமாற வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த இந்தியாவின் ஒரு பகுதியான தமிழகத்தில் இருந்து தொழிலுக்காக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மலையகத் தமிழர்களில் இன்றைய தலைமுறையினர் இந்த நூலை உருவாக்கி அதை இலண்டனில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இந்நூலைத் தாய் வெளியீடாக வெளிக்கொண்டு வருவதற்காக அதன் பதிப்பாளர் என்ற முறையில் பெருமைப்படுகிறேன்.

# இது உள்ளூர் சிறு உற்பத்தி மற்றும் தயாரிப்பாளர்களை ஊக்குவிக்க வேண்டிய காலம்

நுவரெலியா கண்டிவீதியில் இரசாயன பதார்த்தங்கள் அடங்காத சேதன பூச்சி கொல்லி மருந்துகளை இருவர் நடைபாதையோரமாக விற்பனை செய்து கொண்டிருந்தனர். பதுளை ஹாலிஎலவைச் சேர்ந்த ஒரு தயாரிப்பாளர் இந்த இயற்கை இரசாயன பதார்த்தங்களைப் பயன்படுத்தி விவசாய பூச்சிக் கொல்லி மருந்துகளை தயாரித்து வருகிறார். இவை நாட்டின் விவசாய மாவட்டங்களில் இரசாயன பூச்சி மருந்துகளைவிடக் குறைந்த விலையில் விற்பனையாகி வருகின்றன. நுவரெலியாவில் இராகலை, கந்தபொல, உடபுசல்லாவ மற்றும் நுவரெலியாநகர் ஆகிய பகுதிகளில் உள்ள உரக்கடைகளில் இவை விற்பனையாகி வருகின்றன.

இந்த இரசாயனமற்ற, குறைந்த விலை கொண்ட மற்றும் நல்ல பலன் தரக்கூடிய பொருட்களை ஏன் நடைபாதையில் விற்பனை செய்ய வேண்டும்?

இக் கேள்வியை அந்த இருவரிடமும் பின்னர்தான் கேட்டோம். நாம் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன் அவ்விருவரையும் போலி விவசாய மருந்துகளை விற்பவர்கள் என்ற பெயரில் நுவரெலிய பொலிஸார் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றுவிட்டனர்.

இரசாயன மற்ற இயற்கை உரங்கள், பூச்சி மற்றும் களை நாசினிகள் என்பனவற்றையே உபயோகிக்க வேண்டும் என்ற ஒரு நடைமுறை சாத்தியமற்றதும் விவசாய அழிவை ஏற்படுத்தக் கூடியதுமான ஒரு விவசாய கொள்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியதும் அதன் படுதோல்வியால் ஏற்பட்டிருக்கும் விபரீதங்களையும் நாம் நன்கறிவோம். ஆனாலும் இயற்பை பசளை உற்பத்தி மற்றும் பூச்சிக் கொல்லிகளின் பாவனையை இது பெருமளவில் ஊக்குவித்தது என்பதும் உண்மை. நாட்டின் ஆங்காங்கே சிறு உற்பத்தியாளர்கள் இயற்கை வழிகளைப் பயன்படுத்தி சேதன பசளைகளையும் பூச்சிக் கொல்லிகளையும் உற்பத்தி செய்து விவசாய திணைக்களத்தில் அனுமதியையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த உற்பத்திகள் தரமானவையாகக் காணப்பட்டாலும் விவசாயத்தில் ஈடுபட்டிருப்போரை அவை சென்றடைய வேண்டாமா? அதற்கு விளம்பரம் அவசியம். விளம்பரங்களின் மூலமே வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் முடியும் நம்பவைக்கவும் முடியும். ஆனால் விளம்பரம் என்பது அதிக செலவை இழுத்து வைக்கும். இதனால் இந்த சிறு உற்பத்தியாளர்கள் தமக்குக் கட்டுப்படியாகக் கூடிய வகையிலேயே விளம்பரம் செய்கிறார்கள். அதில் ஒன்றுதான் தெருவோரமாக பதாதைகள் வைத்தும், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் தமது பசளைகளையும் பூச்சி மருந்துகளையும் வாடிக்கையாளர்களிடம் நேரடியாக எடுத்துச் சொல்லியும் மேற்கொள்வதே பாதையோர விளம்பர உத்தி.

இவ்வாறு கண்டி வீதியில் இருவர் விளம்பர முயற்சியொன்றில் ஈடுபட்டிருந்தபோது நுவரெலிய பொலிஸ் நிலையத்துக்கு ஒரு அநாமதேய தொலைபேசி அழைப்பு வந்திருக்கிறது. மேற்படி இரு இளைஞர்களும் போலி மருந்துகள் விற்கும் மோசடிக்காரர்கள் என்றும் போலி மருந்துகளை விற்பனை செய்கிறார்கள் என்றும் அந்த அழைப்பில் புகார் தெரிவிக்கப்பட்டதையடுத்து பொலிசார் அந்த இடத்துக்குச் சென்றனர்.

அவ்விருவரையும் அவர்கள் வைத்திருந்த வற்றையும் அள்ளிச் சென்றனர், பொலிஸ் நிலையத்துக்கு. அவை போலியானவை அல்லவென்றும்; இதே மருந்துகள் பசளைக் கடைகளில் விற்கப்படுவதாகவும் இளைஞர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பொலிஸார் அக்கூற்றுகளை நம்பவில்லை. அதற்குக் காரணமும் இருக்கிறது. ஏனெனில் அவை சட்ட ரீதியாக அனுமதிபெற்றவை என்பதை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் இளைஞர்கள் வசம் இருக்கவில்லை.

## அவர்களை நசுக்க முயற்சிக்க வேண்டாம்!

பின்னர் அவர்களில் ஒருவர் வெளியே சென்று தம்மிடமிருந்த விவசாய திணைக்கள அனுமதி சான்றிதழ், தனிநபர் வியாபார பதிவு சான்றிதழ், நுகர்வோர் அதிகாரசபையின் சான்றிதழ் என்பனவற்றின் பிரதிகளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று பொலிஸாரின் பார்வைக்காக முன்வைத்தார். அதன் பின்னரேயே உண்மையை அறிந்து கொண்ட பொலிஸார் தாம் கைப்பற்றிய பொருட்களை அவர்களிடம் ஒப்படைத்து இருவரையும் விடுத்தனர். இது உள்ளூர் சிறு உற்பத்தி நாட்டின் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். 1977 இன் பின்னர் இறக்குமதி பொருட்களுக்கே முதலிடம் வழங்கப்படும் ஒரு வர்த்தகக் கலாசாரம் இந்நாட்டில் வேரூன்றியதில் ஏற்கனவே இயங்கிவந்த உள்ளூர் தயாரிப்புகள் மற்றும் தொழில் முயற்சிகள் முடங்கிப்போயின. உள்ளூர் உற்பத்திகள் தரம் கொண்டவையாக மாறுவதற்கும், உயர் தொழில்நுட்பங்கள் புகுத்தப்படுவதற்குமான வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டிருக்குமானால் உறுதியான ஒரு உள்நாட்டுப் பொருளாதாரம் இந்நாட்டில் கட்டி எழுப்பப்பட்டிருக்கும்.

இப்போது நுவரெலிய இளைஞர்களுக்கு நடந்ததைப் பாருங்கள். நல்ல எதிர் காலம் கொண்ட தொழில் முயற்சி ஒன்று அநாமதேய அழைப்பொன்றினால் நசுக்கப்படவிருந்தது. (15ஆம் பக்கத் தொடர்)


**நூரளையூரான் ...**




# ஆசைகளைச்சுருக்கும் அரசியலமைப்பு திருத்தங்கள்..!

"நாட்பட்டுப்னோல் எதுவும் நாற்றமெடுக்கும் என்பார்கள்", முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன அறிமுகம் செய்த அரசியலமைப்புக்கும் இந்த நிலைமைதான் நெருங்குகிறதோ தெரியாது. நாற்பது வருடங்களையும் கடந்துள்ள இவரது அரசியலமைப்பு 20 தடவைகள் திருத்தப்பட்டு, இப்போது 21ஆவது திருத்தத்துக்கு தயாராகிறது. அதிகாரத்தின் உச்ச எல்லையில் ஒருவரைக் கொண்டு வைக்கிறது இதிலுள்ள நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை. சட்டமியற்றும் அதிகாரமுள்ள பாராளுமன்றத்துக்குக்கூட கட்டுப்படாதளவுக்கு ஜனாதிபதியை சுதந்திர புருஷராக்கியுள்ளதும் இந்த அதிகாரமே. அதிகார மோதல், நிர்வாக இழுபறி, குடும்பச் செல்வாக்கு, சொத்துக் குவிப்பு இன்னும் எத்தனையோ ஏற்பாடுகளுக்கு வழிவிட்ட இவ்வதிகாரம், இன்று மக்களது எதிர்ப்புக்கு உள்ளாகி வருகிறது. கடைசியாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் இந்த அதிகாரம்தான் காரணமெனக் கூறப்படுவதால், இதை ஒழிக்குமாறு ஆர்ப்பாட்டங்கள் தலையெடுத்துள்ளன.

இதிலுள்ள புதுமை என்னவெனில், இந்த அதிகாரத்திலிருப்பவரின் மனநிலையிருந்துதான் இதன் ஆழ, அகலங்கள் அறியப்படுகின்றன. ஏற்கனவே இருந்தவர்கள் சிலரிடமிருந்து சிறுபான்மை சமூகங்கள் சிலதைப் பெற்றிருக்கின்றன. இதனால், இந்த அதிகாரத்தை ஒழிப்பதா? இல்லையா? என்பதில் இச்சமூகங்களின் தலைவர்களிடையே தடுமாற்றம் இருக்கிறது. அமைச்சரவை, பாராளுமன்றம், வாக்கெடுப்பு என்றில்லாமல், ஜனாதிபதியுடனுள்ள நெருக்கத்தை வைத்து சிறுபான்மை தலைவர்கள் சிலர் ஏற்கனவே தங்கள் சமூகங்களுக்குத் தேவையானதை பெற்றுக்கொண்டனர். மலையக மக்களுக்கான வாக்குரிமை, பாராளுமன்ற பிரவேசத்துக்கான வெட்டுப்புள்ளியை ஐந்தாக குறைத்தமை, தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான இலங்கை, இந்திய உடன்படிக்கை இன்னும் தமிழை அரசமொழியாக்கியமை எல்லாம் நிறைவேற்று அதிகாரத்தால் சிறுபான்மையினர் அடைந்த ஆதாயங்கள்தான்.




இவ்வாறு இலகுவாகப் பெறுவதை இல்லாமல் செய்வதா? என்ற தடுமாற்றம் சிறுபான்மையினருக்கு இருப்பதை நியாயப்படுத்தும் சாதனைகள்தான் இவை. இப்பதவிக்கு வருபவர், எதையும் பொருட்படுத்தாது நடந்து

சுஐப்எம்.காசிம்...

கொண்டால்தான், இந்த அதிகாரத்தில் சிறுபான்மையினருக்கு ஆத்திரம் வருகிறது. ஆனால், இப்போது சிலருக்கு வந்துள்ள ஆத்திரம் எங்கிருந்து வந்தது? இவ்விளைஞர்கள் எதனை எதிர்பார்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்?என்ற சந்தேகங்கள்தான் நிலைமைகளை இழுபறியாக்கின்றன. உண்மையில், பொதுமக்கள் இவ்விடயத்தில் ஒரே மனநிலையிலே உள்ளனர். ஆனால், அரசியல்வாதிகள் குறிப்பாக இந்த கதிரையில் அமரும் ஆசை எவருக்கும் இல்லாமலா விடும்? அமர்வதற்கு அதிக சந்தர்ப்பம் உள்ளவர்கள்தான் இது ஒழிக்கப்படக் கூடாதென்று விரும்புகின்றனர். தடுமாறும் அல்லது அடிக்கடி நிலைமாறும் இவர்களது அறிக்கைகளிலிருந்து இதை ஊகிக்க முடிகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை, அரசியலுக்குள் முடிச்சுப்போட முடியும் சில சக்திகள், திறமையான நிர்வாகத்தால் எதையும் நிவர்த்திக்கலாம் என்கின்றன. அதிகாரத்திலல்ல குறைபாடு, நிர்வாகத்திலேயே எனக்காட்ட முனைவதும் ஒருவகை அரசியல்தானே!

இதனால்தான், சிலர், 21ஆவது திருத்தத்தில் நிறைவேற்றதிகாரம் குறி வைக்கப்படுவதை விடவும், இரட்டைப்பிரஜாவுரிமையை இல்லாமல் செய்வதில் குறியாக உள்ளனர்.

தொடர் 21ஆம் பக்கம்...

---

ஐக்கிய தேசிய கட்சியை, முஸ்லிம் அரசியல் புலத்திலிருந்து விலக்கி வைக்கும் அஷ்ரஹ்பின் தாரக மந்திரம் வலுவிழக்கும் நிலைக்குச்செல்கிறதா?

"ஐக்கிய தேசிய கட்சியின் சாரதியாக (தலைவர்) ரணில் இருக்கும் வரை, முஸ்லிம்கள் அந்த வாகனத்தில் ஏறக்கூடாது". இதுதான், அஷ்ரஹ்பின் தாரகமந்திரம்.

1994 முதல் 2000 ம் ஆண்டு வரைக்கும், அதாவது அவர் மரணிக்கும் வரைக்கும் இதைத்தூக்கிப் பிடித்தது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.



இன்றுள்ள தலைமைகளால் முடியவுமில்லை. அவ்வாறு முடிந்தாலும், இதற்கான அங்கீகாரங்களை போட்டி அரசியல் போர்த்திவிடுகிறது. எனினும், அஷ்ரஹ்பின் தாரகமந்திரம் அவரது மரண காலத்திலேயே மலினப்படுத்தப்பட்டதாகவும் சிலர் கூறுவதுண்டு. 2001 முதல் 2004 வரையான பிரதமர் ரணிலின் ஆட்சியில், அதாவது, அஷ்ரஹ்ப் மரணித்த அடுத்த ஆண்டில் அமைக்கப்பட்ட அரசாங்கத்தில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைமை இரண்டறக்கலந்ததால்தான் இக்கருத்து, நிலவுகிறது. இது, முஸ்லிம்களுக்குள் தெற்குத்

# காலவோட்டங்களால் கைவிடப்படும் அரசியல் சித்தாந்தங்கள்

அஷ்ரஹ்புக்குப் பின்னர், இது போன்ற உணர்ச்சிக்கோஷம் ஒன்றை எந்த முஸ்லிம் தலைமையாலும் தூக்கி நிறுத்த முடியவில்லை.

இன்றளவும், இத்தாரக மந்திரம் முஸ்லிம் அரசியற் பரப்பில் சிலாகிக்கப்படுகிறதென்றால்,இதன் கனதியை கணிப்பிட முடிகிறது. கிழக்கில், அதிலும், எல்லைக் கிராமங்களில், இது நல்ல வருவாயைத் தந்தது.

ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துக்காட்டி, முஸ்லிம் தனித்துவ அரசியலின் அவசியத்தை உணர்த்தும் வியூகமே இந்தத்தாரக மந்திரம்.வடக்கு, கிழக்கு இணைப்பு,வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றம், பள்ளிவாசல் படுகொலைகள், இனச்சுத்திகரிப்பு இன்னும் இஸ்ரேலிய தூதரகம் திறக்கப்பட்டமை போன்ற அனைத்தும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியில் இடம்பெற்றதால்தான், இந்த தாரக மந்திரத்தை பாவித்து முஸ்லிம்களை உசுப்பேற்றினார் அஷ்ரஹ்ப்.

இத்தனைக்கும் இப்போதைய பிரதமரான ரணில்,இந்த அசம்பாவிதங்கள் நடந்த காலத்தில் பிரதமரும் இல்லை, ஐக்கிய தேசிய கட்சி தலைவரும் இல்லை. ஆனால், சந்திரிக்கா அரசுக்கு சவால் விடுக்கும் வகையில் சக்திமிக்க எதிர்க்கட்சி தலைவராக ரணிலிருந்தார்.இதனால்தான், இந்த தாரக மந்திரத்தை அஷ்ரஹ்ப் பாவித்தார்.

இதை, இன்னுமொருபடி மேலேங்கச் செய்வதற்கு, அந்தக்காலத்தில் (1994 _2000) அவருக்கிருந்த அரசியல் மவுசும் கை கொடுத்தது. ஐக்கிய தேசிய கட்சியின் 1997 முதல் 1994 வரையான ஆட்சியை தோற்கடித்த சந்திரிகா அரசில், அஷ்ரஹ்புக்கிருந்த மவுசு,எதைச் சொன்னாலும் முஸ்லிம் அரசியல் களத்தில் எடுபடும் நிலையிலிருந்தது. புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் அல்லது வேலைவாய்ப்புக்களை வழங்கி விட்டு நடாத்தப்படும் பொதுக் கூட்டங்களிலே, இந்த தாரகமந்திரம் தூக்கிப் பிடிக்கப்பட்டது. இரண்டு தசாப்பதத்துக்காவது, ஆட்சியின் பக்கம் ஐக்கிய தேசிய கட்சியை கொண்டு வரக் கூடாதென் பது அவருக்குள்ளிருந்த கனவு.

ஏ,ஜீ,எம்,தௌபீக்...

கிழக்கில், முப்பது வருடங்களாக ஐக்கிய தேசிய கட்சியின் மோகத்திலிருந்த முஸ்லிம்களை, நிதானம் கலைக்க இந்த மந்திரத்தை தவிர வேறு வியூகம் அவருக்கு இருக்கவில்லை. இன்னும், ஐக்கிய தேசிய கட்சியின் அன்றைய முஸ்லிம் பிரதிநிதிகள் எதற்கும் லாயக்கற்றவர்கள் என்பதை காட்டும் மறைமுக அளவீடும் இதில் ஒளிந்திருந்தது.

இதைவிட, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தவிசாளரான ஷேகு இஸ்ஸடீனுக்கு தேசியப்பட்டியலை ரணில்விக்ரமசிங்க வழங்கியதுதான், இத்தாரக மந்திரத்தின் மூலமந்திரமாக இருந்தது. இப்படியொரு தாகரக மந்திரத்தை உச்சரித்து முஸ்லிம்களின் அரசியலுக்கு தனித்துவம் கொடுக்க தலைமை, கிழக்குத் தலைமை என்ற பிரதேசவாதம் உள்ளூர வேர்விட,வித்திட்டது. இதிலுள்ள யதார்த்தங்கள் அன்றே புரிய வைக்கப்பட்டிருந்தால், முஸ்லிம் அரசியலில் போட்டிச் சிந்தனைகள் ஏற்பட்டிருக்காது. அஷ்ரஹ்பின் தாரகமந்திரத்திலுள்ள காலச்சூழல் தாற்பரியங்களைப் புரியவைப்பதில், கட்சியின் தலைமையைப் பாரமேற்ற தரப்பு,வெற்றி பெற்றதா? முஸ்லிம் சமூகத்துக்குள் குடையப்படும் கேள்விதானிது.

எதையுமே, புதிய அரசியல் கருத்தாக முன்வைக்க இயலாதுள்ள முஸ்லிம் தலைமைகள், அஷ்ரஹ்பின் அடியொற்றிகளெனக் காட்டியாவது, கட்சியை நிலைப்படுத்த இயலாதிருக்கின்றன. காரணம், தாரகமந்திரம் காலாவதியானதுதான். போராட்ட களமே இல்லாத நிலையில்,ஆயுதங்கள் வழங்கியமை அல்லது அழித்தமை பற்றிப் பேசி முஸ்லிம் சமூகத்தை உசுப்பேற்ற முடியாதே! ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் தலைவர்களின் காலத்தில் நடந்தவற்றுக்காக,இன்றைய தலைவரை (ரணில்) ஏற்காமலிருப்பது காலவோட்டத்துக்கேற்ற கருத்தும் இல்லையே! அதலபாதாளத்துக்குச் சென்றுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான அரசாங்கமிது. பிரதமர் ரணிலை எதிர்ப்பது, நாட்டில் பஞ்சத்தை உருவாக்கும் என்ற கருதுகோளையே ஏற்படுத்துகிறது. எனவே, காலாவதியான அரசியல் சிந்தனைகளில் பயணிப்பது யதார்த்த அரசியலுமாகாது.

---

SLIIT ACADEMY
Curtin University

GET ON THE FAST-TRACK FROM O/Ls TO YOUR DREAM CAREER WITH CURTIN UNIVERSITY - SLIIT ACADEMY FOUNDATION PROGRAMS

Designed for students who have completed their O/Ls, the Curtin University - SLIIT Academy Foundation programs provide a supportive pre-university pathway to Curtin University's bachelor degrees in IT, Business, Engineering & Health Sciences.

FOUNDATION PROGRAMS IN
INFORMATION TECHNOLOGY
BUSINESS
ENGINEERING
HEALTH AND LIFE SCIENCES

2022 JULY INTAKE NOW OPEN

APTITUDE TEST
18th June 2022
10.00am - 11.00am
Test Medium
English | Sinhala | Tamil

FOR MORE DETAILS
077 355 0 660
Duration 1 year

Entry requirements:
- IT/ Business - minimum of six (6) passes including credit passes for Mathematics & English obtained at one and the same sitting.
- Engineering / Health & Life Sciences - minimum of six (6) passes including credit passes for Mathematics, English & Science obtained at one and the same sitting.

SLIIT Academy, 13th Floor, BOC Merchant Tower, 20 St Michaels Rd, Colombo 03



ABOUT CURTIN
Curtin University is an innovative, global university known for its high impact research, strong industry partnerships, and commitment to producing career-ready graduates who aspire to make tomorrow better.


1% Top one per cent of universities in the world
(Academic Ranking of World Universities 2021)

TOP 100 Top 100 in civil and construction engineering
(QS World University Rankings by Subject 2021)

A global university
(Opportunity to transfer to Curtin campuses in Australia, Dubai, Malaysia, Singapore or Mauritius, when international travel resumes)

CRICOS PROVIDER CODE 00301J

sliitacademy@sliit.lk www.sliitacademy.lk




## மேஷம்

உங்கள் ராசிக்கு 10,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வைகாசி 11 ம் திகதி (25/05/2022) முதல் மகரத்தில் வக்ரம் பெற்றுள்ளது அவ்வளவு நல்லதல்ல. தொழில் வளர்ச்சியில் தடைகள் ஏற்படலாம். மேலதிகாரிகளை அனுசரித்து செல்லுங்கள். திட்டமிட்ட பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. வாகனங்களால் தொல்லை உண்டு. வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் குறுக்கீடு வரலாம். அதிஷ்ட நிறம் ஊதா.

## ரிஷபம்

உங்கள் ராசிக்கு 9,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வைகாசி 11ம் திகதி (25/05/2022) முதல் மகரத்தில் வக்ரம் பெற்றுள்ளது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர்வழி பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். பாகப்பிரிவினை முடிவுக்கு வராது. எதை செய்தாலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்யுங்கள். அதிஷ்ட நிறம் இளம் சிவப்பு.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வைகாசி 11ம் திகதி (25/05/2022) முதல் மகரத்தில் வக்ரம் பெற்றுள்ள இக்காலகட்டத்தில் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். வருமானம் இருந்தாலும் செலவு இரட்டிப்பாகும். பெற்றோர் வழி உறவில் விரிசல் ஏற்படலாம். பூர்வீக சொத்து சம்பந்தமாக எடுத்த முயற்சி தடைப்படும். எதை செய்தாலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்ய வேண்டிய நேரம் இது. அதிர்ஷ்ட நிறம் பச்சை.

## கடகம்

உங்கள் ராசிக்கு 9,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வைகாசி 11ம் திகதி (25/05/2022) முதல் மகரத்தில் வக்ரம் பெற்றுள்ள இக்காலகட்டத்தில் உங்களுக்கு ஓரளவு நன்மைகள் கிடைக்கும். இருப்பினும் குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படத்தான்செய்யும். கூட்டுத்தொழில் புரிவோர் கணக்கு வழக்குகளில் கவனமாக இருங்கள். உத்தியோகத்தில் வீண்பழி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வாகன பழுது வாட்டம் தரும். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். அதிர்ஷ்ட நிறம் செம்மஞ்சல்.

## சிம்மம்

உங்கள் ராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனிபகவான். சப்தமாதிபதி வக்ரம் பெற்றுள்ளது அவ்வளவு நல்லதல்ல. உத்தியோகத்தில் சக ஊழியர்களோடு பிரச்சினை தலைதூக்கும். ஒரு கடனை அடைக்க மற்றுமொரு கடனை வாங்குவீர்கள். வெளிநாட்டு பயணம் தாமதப்படும். ஆதரவு தருவதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். 6க்கு அதிபதியாகவும் சனி இருப்பதால் உடல் நலம் சீராகும். அதிஷ்ட நிறம் நீலம்.

## கன்னி

உங்கள் ராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் வைகாசி 11ஆம் திகதி (25/05/2022) முதல் மகரத்தில் வக்ரம் பெற்றுள்ள இந்த நேரம் பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவிழப்பதால் எதிலும் கவனம் தேவை. சொத்துக்களாலும் சொந்தங்களும் சில பிரச்சினை ஏற்படலாம். விரயங்களை சுப விரயமாக மாற்றுங்கள். உத்தியோகத்தில் சில சர்ச்சைகள் உருவாகும். உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது. அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

## துலாம்

உங்கள் ராசிக்கு சுக ஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி பகவான் வைகாசி 11 ஆம் திகதி வக்கிரம் பெற்றுள்ள பெற்றுள்ளார். அது அவ்வளவு நல்லதல்ல சுகக்கேடு அதிகரிக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் குறையும். இதுபோன்ற காலங்களில் முறையான வழிபாடு அவசியம். வீண் விரயங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டி நிலவும். உத்யோகத்தில் உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைக்காது. அதிஷ்ட நிறம் பச்சை.

## விருச்சிகம்

வைகாசி 11ஆம் திகதி (25/05/2022) மகரத்தில் இருக்கும் சனிபகவான் வக்கிரம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 3,4 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்ரம் பெறும்போது ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்பட்டு அகலும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. வீடு மாற்றம் இடமாற்றம் அமையலாம். உயர் பதவியில் உள்ளவர்களை அனுசரித்து செல்லுங்கள். அதிஷ்ட நிறம் பச்சை.

## தனுசு

வைகாசி 11ஆம் திகதி (25/05/2022) உங்கள் ராசிக்கு தன மற்றும் சகாய ஸ்தானத்திற்கு அதிபதியான சனி வக்ரம் பெற்றுள்ளது அவ்வளவு நல்லதல்ல. பணப்புழக்கத்தில் தடை ஏற்படும். தொழில் மூலதனத்திற்கு செய்த ஏற்பாடு தாமதப்படும். மனக்கலக்கம் அதிகரிக்க. பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரிப்பு குறையும். கடன்கள் வசூலாவதும் அரிது. திட்டமிட்ட காரியங்கள் திசை மாறிச் செல்லும். வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்ப முடியாத அளவுக்கு பிரச்சினைகள் வரலாம். அதிஷ்ட நிறம் கருநீலம்.

## மகரம்

உங்கள் ராசிக்கு அதிபதியாகவும் தனாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான் வைகாசி 11ஆம் திகதி (25/05/2022) வக்கிரம் பெற்றுள்ளார். அது அவ்வளவு நல்லதல்ல. உடல்நலத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும். தடைகளை வென்று முன்னோக்கிச் செல்லும் நேரம் இது. குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தலை தூக்கும். உத்தியோகத்தில் பணிநீக்கம் ஏற்படலாம். மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகி பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். அதிஷ்ட நிறம் வெளிர் நீலம்.

## கும்பம்

வைகாசி 11ஆம் திகதி(25/05/2022) மகரத்தில் சனி வக்கிரம் பெற்றுள்ளார். என்றாலும் கூட ராசிநாதனாகவும் சனி இருப்பதால் ஆரோக்கியத்தை அதிகரிக்கும். அலைச்சலுக்கு ஏற்ற ஆதாயம் கிடைக்காது. பொருளாதார பற்றாக்குறை அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது அனுபவஸ்தர்களை ஆலோசித்து செய்வது நல்லது. உறவினர்களுக்கு உதவி செய்யப் போய் அது உபத்திரவமாக முடியலாம். பணிபுரியும் இடத்தில் பக்குவமாய் நடந்துகொள்வது நல்லது. நண்பர்களை நம்பி எதையும் செய்ய இயலாது. தடைப்பட்ட நோய் மீண்டும் தலை தூக்கும். அதிர்ஷ்ட நிறம் இளஞ்சிவப்பு.

## மீனம்

வைகாசி 11ஆம் திகதி (25/05/2022) உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் உள்ள சனி பகவான் வக்கிரம் பெற்றுள்ளதால் பொருளாதாரத்தில் ஏற்ற இறக்க நிலை உருவாகும். எதிர்பார்த்த தகவல் தாமதப்படலாம். லாபத்தை கொடுத்து வந்த பங்குதாரர்கள் திடீரென விலகிச் செல்வதாக சொல்வர். வீடு மனை வாங்க போட்ட திட்டம் நிறைவேறும். பணிபுரியும் இடத்தில் பணத்தை கையாளும் பொழுது கவனம் தேவை. திடீரென இடமாற்றம், ஊர்மாற்றம் ஏற்படலாம். அதிஷ்ட திகதி ஜூன் 9, அதிஷ்ட நிறம் வெளிர் நீலம். அதிஷ்ட நிறம் பொன்னிற மஞ்சள். ஜூன் 12ம் திகதி முதல் ஜூன் 18ம் திகதி வரை

# கவிதை இயற்றுவதில் தமிழர்கள் மேல்நாட்டவரைப் பின்பற்றவில்லை

**சி.வி.வேலுப்பிள்ளையுடன் அமரர் பொன். பூலோகசிங்கம், டாக்டர். கனக சுகுமார் (லண்டன்) ஆகியோர் 'சிரித்திரன்' சஞ்சிகைக்காக எடுத்த பேட்டி 'தேன்பொழுது' (1985) என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளது. சி.வி.வேலுப்பிள்ளை 1950 களின் இறுதியில் எழுதிய 26 கட்டுரைகளை மு. நித்தியானந்தன், எச். எச். விக்கிரமசிங்க ஆகியோர் தொகுத்து மலையக அரசியல் தலைமைகளும் தளபதிகளும் என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளனர். இதன் வெளியீட்டு விழா ஜூன் மாதம் 11ம் திகதி லண்டனில் நடைபெறுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் சி.வியுடனான அந்த அரிய பேட்டி இங்கு மீள் பிரசுரமாகிறது.**

மலையகம் தந்த எழுத்தாளர் ஆங்கில கவிஞர் அரசியல் பிரமுகர் சி. வி. வேலுப்பிள்ளை.

மலையகம் பெற்றெடுத்து ஈழத்தின் இலக்கிய உலகிற்கும் அரசியல் உலகிற்கும் உவந்தளித்த பெருமகன் சி. வி. வேலுப்பிள்ளையாகும். தேயிலைத் தோட்டங்களால் சூழப்பெற்ற அவரது பாட்டனாரின் வட்டகொடை இல்லத்தில் அவர் சிறு பராயத்தில் வளர்க்கப்பட்டமையால் அவரது படைப்பு இலக்கியத்திற்கு அந்த சூழலும் மலையக மக்களது வாழ்க்கை போராட்டங்களும் கருப்பொருளாகின என்றே கூறவேண்டும். இவர் தனது ஆரம்பக் கல்வியை நுவரெலியா, புனித திரித்துவக் கல்லூரியிலும் உயர்கல்வியை கொழும்பு, நாலந்தா கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார்.

1947ஆம் ஆண்டு இவர் இலங்கை இந்திய காங்கிரசின் சார்பில் தலவாக்கலை பகுதி தொகுதியிலிருந்து மக்கள் பிரதிநிதியாக தெரிவு பெற்று பாராளுமன்ற உறுப்பினரானார். மலையக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய முன்னோடி இலக்கிய கர்த்தாவான சி. வி.வேலுப்பிள்ளை ஆங்கிலத்திலும் தமிழிலும் படைத்தளித்த கவிதைகளாயினும் சரி உரைநடை இலக்கியங்களாயினும் சரி காத்திரமான படைப்புகளாக மிளிர்கின்றன!

**கே : இலக்கிய உலகில் உங்களுடைய பங்களிப்பு பற்றி எமக்கு எடுத்துக் கூற முடியுமா?**

**ப:** என்னை ஒரு முதல்வரிசை எழுத்தாளன் என்று சொல்லமுடியாது. எனக்கு முன்னால் மலைநாட்டில் கவிதைகள் கட்டுரைகள் எழுதியவர்கள் உண்டு. 1935ஆம் ஆண்டு முதல் நான் இலக்கிய, சமூக சரித்திர சம்பந்தமான கட்டுரைகள், கவிதைகள், நடைச்சித்திரங்கள், சிறுகதைகள், நாவல்கள் எழுதியுள்ளேன். நான் எழுதிய முக்கியமான ஆங்கில கவிதைகள் வழிப்போக்கன் (Way farer) இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே (In Ceylon's Tea Garden) நூறாவது நாள் (Hundred days) இத்தோடு இலங்கை இந்திய ஆங்கில சஞ்சிகைகளுக்கு சில கவிதைகள் எழுதியுள்ளேன். உழைக்கப் பிறந்தவர்கள் (Way farer) மலை நாட்டு மக்களின் வாழ்க்கை பற்றிய நடைச்சித்திரம். நான் எழுதிய நாவல்கள் 'வாழ்வற்ற வாழ்வு', வீடற்றவன், பார்வதி, இனி பாடமாட்டேன் என்பனவாகும். இவற்றைவிட மலையக மக்களுடைய நாட்டுப் பாடல்களைத் தொகுத்து நூலாக (மாமன் மகளே) வெளியிட்டுள்ளேன்.

**கே :ஆங்கில இலக்கியத்திற்கு அன்றும் இன்றும் இலங்கையில் பணிபுரிந்த இலக்கிய கர்த்தாக்களைப் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

**ப :** ஆங்கில இலக்கியத்திற்குப் பணிபுரிந்த இலங்கையர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களில் அதிமுக்கியமானவர்களாகப் பின்வருபவர்களைக் குறிப்பிடலாம். கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, லோரன்ஸ், சி.எம்.பெர்னாண்டேர், கலாநிதி ஆர்.எஸ்.ஸ்பிட்டில், டாக்டர் லூசியன், டீ சில்வர் ஜே. விஜயதுங்கர் தம்பிமுத்து, ஐசக் தம்பையா, அழகு சுப்பிரமணியம், புண்ணியகாந்தி விஜய நாயகர் ஆர்.ஆர். குரொசொட் தம்பையர் ஜேம்ஸ் குணவர்த்தனா, ரெவரன் எதிரிசிங்கர் டி.பி. தனபால் ஜே. பி. பொன்சேகர் எஸ், ஜி. கே. கிரவ்தர், ஹரிசன் பீரிஸ், வீரசூரிய ஆகியோரைக் குறிப்பிடலாம்.


சி.வி.வேலுப்பிள்ளை


பொன். பூலோகசிங்கம்


டாக்டர். கனக சுகுமார்

**கே: ஆங்கில புதுக்கவிதைக்கும் தமிழ் புதுக்கவிதைக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை எடுத்துரைக்க முடியுமா?**

**ப :** ஆங்கில புதுக்கவிதைகளும் தமிழ் புதுக்கவிதைகளும் வெவ்வேறு நாகரீகத்தைச் சேர்ந்தவைகள். எனினும் ஆங்கில மொழியில் பல கீழ்நாட்டவர்கள் கவிதை எழுதுகிறார்கள். இந்தக் கவிதைகள் ஆங்கில கவிஞர்கள் எழுதும் கவிதைகளைப் போலல்லாமல் மொழி அமைப்பிலும் உட்கருத்திலும் வேற்றுமையாகத் தோன்றுகின்றன. எனவே இந்தியர் எழுதும் ஆங்கில கவிதைகளுக்கு Indo – Anglican poetry என்று பெயரிடப்பட்டிருக்கிறது என்ற போதிலும் தமிழில் எப்போது முதன் முதலாக புதுக்கவிதை தோன்றியது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பாரதிதாசன், புதுமைப்பித்தன் போன்றவர்கள் எழுதிய புதுக்கவிதைகளை நான் வாசித்திருக்கிறேன். அக்கவிதைகளிலே ஆங்கில மணம் இல்லை. இப்போது தினகரன், வீரகேசரி, தினபதி ஆகிய வார சஞ்சிகைகளில் வெளிவரும் புதுக்கவிதைககளில் அநேகமாக நவீன ஆங்கில கவிதைகளின் சாயல் இருக்கிறது.

**கே : இன்றைய பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் புதுக்கவிதைகள் பெருமளவில் ஆக்கிரமித்துள்ளன. இந்த நிலையில் சிறுகதைகள் சற்று ஒதுங்கி நின்று புதுக்கவிதைகளுக்கு வழிவிடுவது போலவும் ஒரு பிரமை ஏற்படுகிறது. இதுகுறித்து உங்களுடைய அபிப்பிராயம் என்ன?**

**ப :** புதுக்கவிதைகளுக்கு வாரஇதழ்களில் போதியளவு இடம் ஒதுக்கப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால் சிறுகதை வேறு. கவிதை வேறு. எந்த நாட்டிலும் கவிதை வாசிக்கிறவர்கள் குறைவு. அத்தோடு வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக் கதைபோல் கவிதையில் சொல்ல முடியாது. சிறுகதை முற்றிலும் வேறுபட்டது. அதற்கு இலக்கியத்தில் தனிஇடம் உண்டு. எனவே சிறுகதை மங்கிப்போய்விடும் என்று சொல்வதற்கில்லை.

**கே : கவிதை இயற்றுவதில் தமிழர்கள் மேல்நாட்டவர்களைப் பின்பற்றவில்லை. கவிதை இலக்கியத்தைப் பொறுத்தவரை எமக்கென ஓர் தனியான பாரம்பரியம் உண்டு. ஆனால் சிறுகதை, நாவல் போன்ற ஆக்க இலக்கியங்களில் மேல்நாட்டவர்களைப் பின்பற்றியிருக்கிறோமே. இதற்கு காரணம் எதுவாக இருக்கலாம் என எண்ணுகிறீர்கள்?**

**ப :** கவிதைகள் எழுதுவதில் தமிழர்கள் மேல் நாட்டைப் பின்பற்றவில்லை. காரணம் தமிழ்மொழியில் கவிதைகள் மிகமிகப் பழமையானவை. நமது அறிஞர்களின் சிந்தனைகள் எல்லாம் கவிதை வடிவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆங்கில இலக்கியத்தின் தாக்கம் தமிழ் இலக்கியத்துள் ஏற்பட்ட பின்னர் தான்; சிறுகதை, நாவல் போன்றவற்றைப் படைக்கத் தொடங்கினோம். எனினும் பஞ்சத்தந்திரக் கதைகள், விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை, ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணிக் கதை போன்றவைகளே என்றோ ஏற்பட்டவை அல்லவா

**கே : முன்பு நீங்கள் 'கதை' என்னும் ஓர் தரமான சிறுகதைச் சஞ்சிகையைப் பிரசுரித்தீர்கள். அதற்குச் சிறந்த முறையில் ஓவியர் சக்தி பாலையாவும் படங்கள் வரைந்திருந்தார்கள். அப்படியொரு தரம் மிக்க சஞ்சிகையை நீங்கள் தொடர்ந்தும் பிரசுரிக்காமல் போனமைக்கு காரணம் என்ன?**

**ப :** 'கதை' என்ற அந்தச் சஞ்சிகையை நடத்தமுடியாமல் போனமைக்கு பொருளாதார நெருக்கடியே காரணமாகும்.

**கே: நீங்கள் மதிக்கும் மலையகம் தந்த இலக்கிய வாதிகள் யார் யார் எனக்கூறமுடியுமா?**

**ப :** சக்தி பாலையா, தலாத்து ஓயா கே. கணேஷ் போன்றவர்கள் என்னுடைய சகாக்கள், சிருஷ்டி இலக்கியம், மொழி பெயர்ப்பு ஆகிய துறைகளில் பெரிதும் வெற்றி கண்டவர்கள் இவர்கள்.

**கே: இலக்கியம் தான் எமது மூச்சு என்றிருந்த எத்தனையோ இலங்கையர்கள் வறுமையைத்தான் தழுவிக் கொண்டார்கள். மேல்நாட்டவர்களைப் போல் செல்வச் செழிப்பைக் காணவில்லையே. இந்த நிலைக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

**ப :** நமது நாட்டிலும் இலக்கியத்தை தொழிலாகக் கொண்டு வாழ்வது சிரமமான காரியமாகும். உடலைக் காக்க ஒரு தொழிலும் அதன் மூலம் இலக்கியத்தை வளர்க்க உள்ளமும் தேவை. காலஞ்சென்ற லியஸ் மெக்னீஸ், அகிலன், முல்க்ராஜ் ஆனந்த் போன்ற பல எழுத்தாளர்களானாலும் எழுத்தை நம்பி வாழவில்லை. இலக்கியக் கர்த்தாக்கள் சுயமரியாதையோடு வாழவேண்டும் என்ற ஆசையுள்ளவர்கள். எனவே தமது வாழ்க்கை முறையை நன்றாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற அவர்களது போராட்டத்தில் அவர்களது இலக்கிய உணர்வு மங்கிப்போய்விடுகிறது.

**கே : நீங்கள் இலக்கியவாதியாகவிருக்கின்ற அதே சமயத்தில் ஓர் அரசியல்வாதியாகவும் இருக்கிறீர்கள். உலகில் சமாதானம் நிலவ எழுத்தாளர்களின் பங்களிப்பு எத்தகையது என நினைக்கிறீர்கள்?**

**ப :** உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டுமானால் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துச் சொல்ல வேண்டும். இதை அவசரப்பட்டோ அல்லது பதட்டப்பட்டோ சொல்லக்கூடாது. அநீதியைத் தாங்குவதற்கு வச்சிரம் போன்ற உள்ளம் தேவை. சுழல் துப்பாக்கியிலிருந்து வெளிப்படும் தோட்டக்கள் போன்ற வார்த்தைகள் வேண்டும். பிரான்ஸ் தேசத்து லூயி அரகன், ரஷ்ய நாட்டு மக்கியாவஸ்கி, பிலிப்பைன்ஸ் தேசத்து ஜோஸ்ரிசால், சில்லி நாட்டைச்சேர்ந்த பப்லோ நிருடா போன்றோரின் எழுத்துக்கள் உலக மனச்சாட்சியைத் தொட்டன. புதுமைப் பித்தனின் கதைகள், பாரதியார் பாடல்கள் சமூகத்திலுள்ள அநீதிகளை தீர்க்கும் சஞ்சீவிகள் அல்லவா!

**கே : சிங்கள மக்களுடைய இலக்கிய ஈடுபாடு மிகவும் பிரத்தியட்சமாகக் காணப்படும் அதே நேரத்தில் தமிழ் மக்களுக்கு அத்தகைய அளவில் ஆர்வம் காணப்படாதுள்ளமைக்கான காரணம் என்ன என நினைக்கிறீர்கள்;?**

**ப :** சிங்கள மக்கள் மத்தியில் பணப்புழக்கம் இருக்கிறது. எனவே ஒருவர் ஆகக் குறைந்தது ஒரு பத்திரிகையாவது வாங்கி வாசிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. புதிதாக வெளிவரும் பிரசுரங்களையும் வாங்கிப் படிக்கிறார்கள். அவர்கள் மத்தியில் தரமான சிறுகதை, நாவல் எழுதும் எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு சிங்களத் தேசிய பத்திரிகைகளும் உற்சாகமளிக்கின்றன. ஜனநாயகத்தில் முதலிடமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலப்பத்திரிகைகளும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கின்றன. எம்மைப் பொறுத்தவரை ஆர்வம் இருக்கிறது. எமது உள்ளத்தில் எழும் குமுறல்களை அறிந்து அவற்றை மக்களுக்கு எடுத்துக் கூறக்கூடிய ஆற்றல் மிக்க எழுத்தளார்களும் இருக்கிறார்கள். இன்று நமது இளைஞர்களின் சிந்தனைகளை அரசியல் காரணிகளாலும் வெளிச்சக்திகளின் காரணமாகவும் சிதறிக்கிடக்கின்றன. ஒரு புது இலக்கியம் வளர்வதற்கு இந்நிலை சாதகமானது என்றே நான் கருதுகின்றேன். இந்த நிலையை நமது இளைஞர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**கே : தமிழ்ச் சினிமாவும் தமிழ்ச் சஞ்சிகைகளும் மலையக மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி எடுத்துக் கூறமுடியுமா?**

**ப:** இன்று மலைநாட்டில் காணப்படும் மாற்றங்களுக்குப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் திரைப்பாடல்களும் காரணம் என்று கூறமுடியும் என்றே நான் கருதுகின்றேன்.

தொகுப்பு:
எச். எச். விக்கிரமசிங்க ...

# 3 ஆண்டுகளின் பின்னர் களைகட்டும் கோடி அற்புதரின் பெருவிழா



கொச்சிக்கடை அந்தோனியார் திருவிழா என்றாலே, அப்பகுதியெங்கும் களைக் கட்டத் தொடங்கிவிடும். கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை, ஜிந்துப்பிட்டி, விவேகானந்தமேடு,செட்டியார் தெரு என சுற்று வட்டார பகுதியெங்கும் திருவிழாக்கோலம் பூண்டிருக்கும். எங்கும் கொடிகளுடன் விளக்கொளியில் வீதிகள் ஜொலிக்கும். நாட்டின் நாலா பக்கங்களிலிருந்தும் அலை அலையாய் மக்கள் திரண்டுவருவார்கள். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் புனித அந்தோனியார் கம்பீரமாக வட்டாரமெங்கும் பவனி வருவார். ஆனால் கடந்த மூன்று வருடங்களாக புனித அந்தோனியாரின் ஆடம்பரமற்ற எளிமையான திருவிழா கொண்டாடங்களையே காணக்கிடைத்தது. ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதல், கொவிட் 19 தொற்று என திருவிழா கொண்டாடங்கள் மட்டுப் படுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில் இம்முறை பெரும் எதிர்பார்ப்புடன் மக்கள் புனித அந்தோனியாருக்கு விழா எடுக்கவுள்ளனர்.



இலங்கையில் எத்தனையோ இடங்களில் புனித அந்தோனியார் ஆலயங்கள் இருப்பினும், கொழும்பு, கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், இன, மத வேறுபாடு இன்றி அனைவரும் வந்து வழிப்படும் புனித ஸ்தலமாகவுள்ளது. செவ்வாய்க்கிழமை தோறும் பல்வேறு நன்மைகள் தேடிவந்து சேரும் கூட்டங்களில் பல மதத்தவர்களும் அடங்குவர். ஓடி வரும் அடியாரை புனித அந்தோனியார் எப்போதும் வெறுங்கையோடு அனுப்புவதில்லை என்பது அவரது பக்தர்களின் அசையா நம்பிக்கை. உலகெங்கும் திருமறையோரும் ஏனையோரும் பாதுவா நகர் அந்தோனியாரை அண்டி அவரிடம் மன்றாடி, அவர் வழியாய் இறைவனிடம் எண்ணிலடங்கா ஆன்ம, உடல் நலன்களை பெற்று வருகின்றார்கள்.

புனித அந்தோனியார், தாம் வாழ்ந்த காலத்திலும் இறப்பிற்குப் பின்னும் கடவுள் அளித்த கொடையினால் அநேக புதுமைகளை செய்தார். இதனால் கோடி அற்புதர் என அவர் அழைக்கப்பட்டார். புனித அந்தோனியார் போரத்துக்கல் நகரான பாதுவாவில் தனது கடைசிக் காலத்தைக் கழித்தார். 1195ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி லிஸ்பன் நகரில் பிறந்தார். எனவே தான் போர்த்துகேயர் கைப்பற்றிய நாடுகளில் புனித அந்தோனியார் வழிபாடு பிரபல்யம் அடைந்தது. அந்தவகையில் போர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றி ஆட்சிசெய்ய தொடங்கியதுடன் இலங்கையிலும் புனித அந்தோனியார் வழிபாடுகளும், ஆலயங்களும் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. எனினும் ஒல்லாந்தர்களின் வருகையோடு கத்தோலிக்க மதத்தை பரவுவதிலும் வழிபாடுவதிலும் தடைஏற்பட்டது. ஒல்லாந்தர்கள் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். எனவே கத்தோலிக்க மதத்துக்கு எதிராக கடுமையான கொள்கைகளை அவர்கள் கையாண்டனர்.

அவர்களிடமிருந்து தப்பிய பல கத்தோலிக்கர்கள் இரண்டாம் இராஜசிங்கன் (1635_ 1687)ஆட்சி செய்த கண்டி இராச்சியத்தில் தஞ்சம் புகுந்தனர். மாத்தளை வாகோட்டே என்கிற இடத்தில் புனித அந்தோனியாருக்கு ஒரு சிறிய சிலையை வைத்து வணங்கினார்கள். இன்றும் வாகொட்டேயில் அந்த அந்தோனியார் தேவாலயம் இருக்கிறது. கண்டி மன்னன் இரண்டாம் விமலதர்மசூரியன் பாதிரியார் ஜோசப் வாஸுக்கு (Joseph Vaz) அந்தோனியார் வழிபாட்டுக்கு பூரண சுதந்திரம் வழங்கினார். கண்டியில் அந்தோனியாருக்காக பாதிரியார் ஜோசப் வாஸ் எந்த கெடுபிடியுமின்றி திருவிழா நடத்தினார். அதன் பின்னர் திறைசேரியில் களவு போயிருந்தவேளை மன்னர் ஸ்ரீ வீர நரேந்திர சிங்கனும் புனித அந்தோனியாரை வழிபட்டதாக வரலாற்று பதிவுகளில் சொல்லப்படுகின்றன. இக்காலப்பகுதியில் தான் கொச்சினிலிருந்து அந்தோணி (Friar Antonio) என்ற கத்தோலிக்க மத போதகர் கொழும்புக்கு வந்தார். எனினும் துன்புறுத்தல் காரணமாக அவரால் பாதிரியாராக செயற்பட முடியவில்லை. அதனால், வியாபாரி போல் மாறுவேடமிட்டு, பகலில் (இன்றைய மாலிபன் தெருவில் உள்ள) கடையில் மீன் விற்றார். இரவில் அவர் கத்தோலிக்கர்களை இனம் கண்டு வழிபாடுகளை நடாத்தினார். சிறிதுகாலத்தில் இதை அறிந்த ஒல்லாந்தர்கள் அந்தோனியை தேடினர். மீனவ சமூகத்தினர் அதிகமாக வாழ்ந்த முஹுதுபொடவத்தை என்ற பகுதிக்கு அவர் சென்றபோது கடல் அரிப்பால் தாம் பாதிக்கப்படுவது பற்றி மீனவர்கள் அவரிடம் முறையிட்டனர். கடல் அரிப்பைத் தடுக்க பிரார்த்தனை செய்யுமாறு அவர்கள் அவரிடம் கோரினார்கள். அந்தோணி அவ்வாறு செய்தால் டச்சு வீரர்களிடமிருந்து அவரைப் பாதுகாப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தனர். அந்தோணி மணலில் ஒரு சிலுவையை நட்டு, மண்டியிட்டு மூன்று நாட்களாக உண்ணா நோன்பிருந்து பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, கடல் பின்வாங்கத் தொடங்கி, அரிப்பைத் தடுக்கும் மணல் அணையை உருவானது. டச்சு வீரர்களும் இதைக் கண்டு பின்வாங்க வேண்டியிருந்தது. அதைக்கண்டு வியப்படைந்த மீனவர்கள் அந்தோனியைச் சுற்றித் திரண்டனர். அவர்கள் கத்தோலிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். அந்த இடம் தான் இன்றைய கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் அமைந்திருக்கும் இடம்.

"அந்தோனியின் அதிசயம்" பலராலும் அப்போது பேசப்பட்டது. டச்சு ஆளுநர் வில்லெம் மௌரிட்ஸ் ப்ரூய்னின்க் (Willem Maurits Bruyninck 1739 _1742) அந்தோணியின் பிரார்த்தனையின் சக்தியை அறிந்தார். அந்த அதிசயம் நிகழ்ந்த நிலத்தை அந்தோணிக்கு வழங்கினார். அங்கே அவர் சிறு தொழிலையும் சமய பணியையும் மேற்கொள்வதற்கு ஆளுநரால் அனுமதி வழங்கப்பட்டது.

**பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நாளை திருவிழாவைக் கொண்டாடத் திரளும் மக்கள்**

அந்தோணி முதலில் அந்த நிலத்தில் ஒரு சிறு கடையை ஆரம்பித்தார். அது "கடே" என்றே அழைக்கப்பட்டது. கொச்சினில் இருந்து வந்தவரின் கடை என்பதால் "கொச்சியாகே கடே" காலப்போக்கில் "கொச்சிக்கடை" என அழைக்கப்பட்டது. இந்த நிலம் அதிகாரபூர்வமாக டச்சு கிழக்கிந்திய கம்பனியால் ஜனவரி 20, 1790 அன்று, தேவாலயத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. இதில் கிழக்கிந்திய கம்பனியின் உத்தியோகபூர்வ இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது. பின்னர் அந்தோணி இறந்தபோது அவரின் உடலும் இந்த ஆலயத்தினுள் தான் அடக்கம் செய்யப்பட்டது. இன்று நாம் காணும் புனித அந்தோனியாரின் சிறிய பீடம்தான் கடலரிப்பு அற்புதத்தின் போது மரச்சிலுவை நாட்டப்பட்ட இடம். தற்போது தேவாலயத்தில் மீண்டும் வைக்கப்பட்டுள்ள புனித அந்தோனியின் புனிதச் சிலை 1822 ஆம் ஆண்டு கோவாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். 1806 ஆம் ஆண்டு அடித்தளம் இடப்பட்டு 1834ஆம் ஆண்டு புதிய தேவாலயம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அந்த ஆண்டைத்தான் ஆலயத்தின் தொடக்க நாளாக இன்றுவரை கணிக்கப்பட்டுவருகிறது.

வசந்தா அருள்ரட்ணம்


1934இல் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. 1938 ஆம் ஆண்டு ஆலயம் பெருப்பிக்கப்பட்டது. இன்று இலங்கையில் புனித அந்தோனியார் ஆலயம் மிகப்பெரிய புனித தேவாலயமாக மாறியுள்ளது.

பாதுவா நகரிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித அந்தோனியாரின் நாக்கின் ஒரு சிறிய பகுதி இங்கே விசேடமாக வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. 1912 ஆம் ஆண்டு கவர்னர் சேர் ஹென்றி மெக்கலம் கொழும்பு துறைமுகத்திற்காக இந்த நிலத்தை கையகப்படுத்த முயற்சித்தபோது ரோமன் கத்தோலிக்க மக்களின் வழிபாட்டுத் தலமெனக் கூறி அவரின் ஆலோசகர்கள் பலர் அதனை எதிர்த்தமையால் அவரது முயற்சி கைவிடப்பட்டது. லலித் அத்துலத்முதலி துறைமுக அமைச்சராக இருந்த காலத்தில் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதியை அந்தோனியார் தேவாலய விஸ்தரிப்புக்கு வழங்கினார். பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் அந்தோனியார் ஆலயத்தை கொழும்பு உயர் மறை மாவட்டப் பங்காக ஆக்கும்படி விடுத்த கோரிக்கை ஆயரால் ஏற்றுகொள்ளப் படாமையால் ஆலய நிர்வாகம் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியது. முதற் தடவையாக மூன்று மாதங்கள் ஆலயம் மூடப்பட்டது. இறுதியில் 15.08.1990 அன்றிலிருந்து சுதந்திர ஆலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதுவரை கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலய நிர்வாகத்தின் கீழ் தான் புனித அந்தோனியார் ஆலயம் இயங்கிவந்தது. அந்தோனியார் தேவாலயத்தின் வரலாற்றைக் கூறும் சிறு நூதனசாலையொன்று 2013 ஜனவரி 13 இலிருந்து இயங்கி வருகிறது.

இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் பக்தர்களாலும் இராணுவத்தினரின் பங்களிப்புடனும் புது பொலிவுடன் காட்சி தந்த புனித அந்தோனியார் ஆலயம் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலில் குண்டுகளால் துளைக்கப்பட்டது.

தொடர் 21ஆம் பக்கம்...

பின்னவெலைக்கு அருகில்
கொழும்பு கண்டி வீதி, மொலகொட



213 பேர்ச் காணியுடன் புதிய 4 மாடி ஹோட்டல்
19,000 $ft^2$ x 4
070 122 4383
077 541 7481
Can be bought to continue with bank installments



# மஞ்சரி விளையாட்டு



## விராட் கோலியின் சாதனையை முறியடித்த பாபர் அசாம்

ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 2 முறை ஹெட்ரிக் சதங்களை அடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையை பாபர் அசாம் படைத்துள்ளார்.

இதுவரை 87 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள பாபர் அசாம் 17 சதங்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய அணி, பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. அதில் முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று முல்தானில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 305 ஓட்டங்கள் எடுத்தது. 306 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி 49.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 306 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணியின் கேப்டன் பாபர் அசாம் பொறுப்புடன் ஆடி 103 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இந்தப் போட்டியில் சதம் அடித்ததன் மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் 2 முறை ஹெட்ரிக் சதங்களை அடித்த முதல் வீரர் என்ற உலக சாதனையை பாபர் அசாம் படைத்துள்ளார். கடந்த 2016ம் ஆண்டு மேற்கிந்திய தொடரில் பாபர் அசாம் தொடர்ச்சியாக 3 சதங்கள் அடித்து இருந்தார். இதைத்தவிர ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தலைவராக அதிவேகமாக 1000 ஓட்டங்களை கடந்தவர் என்ற பெருமையையும் பாபர் அசாம் பெற்றுள்ளார். இந்த சாதனையை பாபர் அசாம் 13 போட்டிகளில் படைத்துள்ளார். இதற்கு முன் இந்திய தலைவராக இருந்த விராட் கோலி 17 போட்டிகளில் 1000 ஓட்டங்களை கடந்ததே சாதனையாக இருந்தது. இதுவரை 87 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள பாபர் அசாம் 17 சதங்கள் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆஸியுடனான 3 ஆவது 20க்கு20 ஆட்டத்தில் இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி

தசுன் சானக்கவின் அபார ஆட்டத்துடன் இலங்கை அணி ஒரு பந்து மீதமிருக்க 4 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்று தொடரை 2-1 என இழந்தது.

177 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என பதிலெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக தனுஷ்க குணதிலக்க மற்றும் பெத்தும் நிசங்க ஆகியோர் களமிறங்கினர்.நன்றாக ஆடிய தனுஷ்க குணதிலக்க 15 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார்.பின்னர் நிசங்கவுடன் இணைந்தார் சரித் அசலங்க இருவரும் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடிய சரித் அசலங்க 26 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை ஆட்டமிழந்து சென்றார். பின்னர் நிசங்கவுடன் இணைந்தார் பானுக்க ராஜபக்ஷ.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய பெத்தும் நிசங்க நிதானமாக ஆடி ஓட்டங்கள் குவித்த நிலையில் 27 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.பானுக்கவுடன் இணைந்தார் விக்கெட் காப்பாளர் குசல் மென்டிஸ். பானுக்க ராஜபக்ஷ இலங்கை அணிக்கு நம்பிக்கை தரும் வகையில் ஆடிய வேளை 17 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் மென்டிஸுன் இணைந்தார் அணியின் தலைவர் தசுன் சானக்க. மென்டிஸ் 7 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.இலங்கை அணியின் மத்திய வரிசை வீரர்கள் துடுப்பாட்டத்தில் சிறப்பாக ஆட தவறியமை இங்கு குறிப்பிடத்தக்கது.அத்துடன் சானக்கவுடன் இணைந்தார் வனிந்து ஹசரங்க.வனிந்து ஹசரங்க 8 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து சென்றார். பின்னர் அணியின் தலைவருடன் இணைந்தார்.சாமிக்க கருணாரத்ன .தசுன் சானக்க 54 ஓட்டங்களையும் சாமிக்க கருணாரத்ன 14 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற இலங்கை அணி 19.5 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்று பெற்றி பெற்றது.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஹேசல் வூட்,ஸ்ரொய்ன்ஸ் தலா இரு விக்கெட்டுக்களை யும் ஜேய் றிச்சர்ட்சன்,அஸ்டன் அகார் தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இரு அணிகளும் மோதிய மூன்றாவதும் இறுதியுமான 20க்கு 20 போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ஆரோன் பின்ஞ்ச் டேவிட் வோர்னர் ஆகியோர் களமிறங்கினர்.இருவரும் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடி அணியின் தலைவர் பின்ஞ் 29 ஓட்டங்கள் எடுத்திருந்த போது தீக்ஷன வின் பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் வோர்னருடன் இணைந்தார் கிளேன் மெக்ஷ்வெல் இருவரும் நன்றாக ஆடிய வேளை மெக்ஷ்வெல் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின்னர் ஆரம்பத்துப்பாட்ட வீரராக சிறப்பாக ஆடிய டேவிட் வோனர் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின்னர் இன்றைய ஆட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட ஜோஸ் இங்லிஸ் ஓட்டம் எதுவும் பெறாமல் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் இணைந்தார்கள் ஸ்டிவ் ஸ்மித் மற்றும் மார்கஸ் ஸ்ரொன்ஸ்.மார்கஸ் ஸ்ரொன்ஸ் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த போது 38 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து சென்றார்.பின்னர் ஸ்மித்துடன் இணைந்தார் விக்கெட் காப்பாளர் மெத்திவ் வாட் 13ஓட்டங்களையும் ஸ்மித் 37 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.









பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக மஹீஷ் தீக்ஷன இரண்டு விக்கெட்டையும் ஹசரங்க,பிரவீன் ஜயவிக்ரம தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை பெற்று இலங்கைக்கு சவாலான ஓட்ட இலக்கை நிர்ணயித்தது.

அத்துடன் நுவான் துஷாரவுக்கு பதிலாக இலங்கை அணி சார்பாக பிரவீன் ஜயவிக்ரம அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக அவ்வணியின் சகல துறைவீரர் மிச்சல் மாஷ் காயம் காரணமாக ஆடமாட்டார் என அறிவித்துள்ள அதேநேரம் அவர் 5 ஒரு நாள் சர்வதேச போட்டிகளிலும் பங்கேற்க மாட்டார் என அறிவித்துள்ளது.ஆனால் அவர் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்பார் என அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.அத்துடன் அவருக்கு பதிலாக ஜோஷ் இங்லிங்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

**இலங்கை:** 1 பெத்தும் நிஸ்ஸங்க, 2 தனுஷ்க குணதிலக, 3 சரித் அசலங்க, 4 குசால் மெண்டிஸ் (விக்கெட் காப்பாளர்), 5 பானுக ராஜபக்ஷ, 6 தசுன் ஷனக (தலைவர்), 7 வனிந்து ஹசரங்க, 8 சாமிக கருணாரத்ன, 9 துஷ்மந்த சமீர, 10 மஹேஷ் தீக்ஷன, 11 பிரவீன் ஜயவிக்ரம

**அவுஸ்திரேலியா:** 1 ஆரோன் ஃபின்ச் (தலைவர்), 2 டேவிட் வோர்னர், 3 ஜோஷ் இங்லிஸ், 4 கிளென் மேக்ஸ்வெல், 5 ஸ்டீவன் ஸ்மித், 6 மார்கஸ் ஸ்டோய்னிஸ், 7 மேத்யூ வேட் (விக்கெட் காப்பாளர்), 8 அஷ்டன் அகர், 9 ஜே ரிச்சர்ட்சன், 10 கேன் ரிச்சர்ட்சன், 11 ஜோஷ் ஹேசில்வுட் இரு அணிகளும் மோதும் முதலாவது ஒரு நாள் போட்டி 14ம் திகதி இதே மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

போட்டியின் நாயகனாக அணியின் தலைவர் தசுன் சானக்க தெரிவானார்.

இலங்கை-அவுதிரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர்

## இணை அனுசரணையாளராக CDB இணைவு





இலங்கை அவுதிரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டித் தொடர் 2022 இன் இணை அனுசரணையாளராக சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி கைகோர்த்துள்ளது. எதிர்பார்ப்புகளுக்கு வலுச்சேர்க்கும் முன்னேற்றகரமான நிறுவனம் எனும் வகையில், முழுப் போட்டித் தொடருக்கும் அனுசரணை வழங்குவதற்கு CDB முன்வந்துள்ளதுடன், தேசத்தின் விளையாட்டுச் சிறப்புக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது. மேர்கன்டைல் கிரிக்கட் சம்மேளனத்தின் உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளுக்கு பல வருட காலமாக அனுசரணை வழங்கும் நிலையில், கிரிக்கெட் விளையாட்டுடன் நீண்ட காலமாக பேணி வரும் தனது தொடர்புகளை பேணி வருகின்றது. மேலும் 2021 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கைக்கு மேற்கொண்டிருந்த சுற்றுப் பயணத்தின் போதும் போட்டித் தொடருக்கு அனுசரணை வழங்கியிருந்தது.

2022 ஜூன் 7 ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை இலங்கையில் அவுஸ்திரேலிய அணி சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கு பின்னர் இடம்பெறும் முழுமையான போட்டித் தொடராக அமைந்துள்ளது. உலகின் முதல் தரப்படுத்தலில் காணப்படும் டெஸ்ட் கிரிக்கட் அணி, இலங்கையுடன் இரு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. மூன்று ரி 20 சர்வதேச போட்டிகளும், ஐந்து சர்வதேச ஒருநாள் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

CDB இன் சந்தைப்படுத்தல் பிரிவின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் தர்ஷன ஜயசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையர்கள் மத்தியில் கிரிக்கட் எப்போதும் மிகவும் பிரபல்யம் பெற்ற விளையாட்டாக அமைந்துள்ளது. அவுஸ்திரேலிய அணியின் சுற்றுப் பயணத்தின் போது, இலங்கை அணியின் வெற்றிக்கும், பொது மக்களுக்கும் வலுச் சேர்க்க முன்வந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையின் உண்மையான நண்பராக அவுஸ்திரேலிய கிரிக்கட் அமைந்திருப்பதுடன், நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் இந்த போட்டித் தொடரின் இணை அனுசரணையாளராக கைகோர்த்துள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம்." என்றார்.

கொழும்பு, காலி மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் விளையாடப்படும் போட்டிகளில் இரு அணிகளும் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முதலாவது ரி 20 போட்டி ஜூன் 7 ஆம் திகதி ஆரம்பமாவதுடன், இரண்டாம் போட்டியும் கொழும்பில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மூன்றாவது ரி20 போட்டி 11 ஆம் திகதி மற்றும் முதல் இரு ஒரு நாள் போட்டிகள் முறையே 14 மற்றும் 16 ஆம் திகதிகளில் கண்டியில் இடம்பெறும். எஞ்சிய மூன்று ஒரு நாள் போட்டிகளும் கொழும்பில் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளன. காலியில் இரு டெஸ்ட் போட்டிகளும் ஜூன் 29 முதல் ஜூலை 3 வரையும், ஜூலை 8 முதல் ஜூலை 12 வரையும் இடம்பெறவுள்ளன.

ஜயசிங்க மேலும் தெரிவிக்கையில், "இலங்கைக்கான அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் மிகவும் முக்கியமான தருணத்தில் இடம்பெறுகின்றதால் அதிகளவு முக்கியத்துவம் பெறுகின்றது.

எவ்வேளையிலும் மக்களுடன் இணைந்திருந்த நிறுவனம் எனும் வகையில், அவுஸ்திரேலிய அணிக்கு எமது புகழ்பெற்ற விருந்தோம்பலுடனான வரவேற்பை வழங்க இணையுமாறு CDB அனைத்து இலங்கையர்களிடமும் கோருகின்றது. கிரிக்கட் விளையாட்டின் வெற்றியை இரசித்து மகிழுமாறும் அழைக்கின்றது." என்றார்.

## சாதனையை மீண்டும் தவறவிட்ட புவிதரன்



கொழும்பு சுகததாச அரங்கில் நடைபெற்ற கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் மூன்றாவது நாளான கடந்த (08) நடைபெற்ற 23 வயதின்கீழ் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் பங்குபற்றிய யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் வீரர் அருந்தவராசா புவிதரன், 5.00 மீற்றர் உயரம் தாவி புதிய கனிஷ்ட தேசிய சாதனை நிலைநாட்டினார்.

இந்தப் போட்டியின் முதல் முயற்சியில் 4.70 மீற்றர் உயரத்தை பாய்ந்த புவிதரன், அதன்பிறகு 4.80, 4.90, 5.00 மீற்றர் உயரங்களை முதல் முயற்சியிலேயே தாவி அசத்தினார்.

இஷார சந்தருவன் 2017ஆம் ஆண்டு 5.11 மீற்றர் உயரத்தை பாய்ந்து நிலைநாட்டிய இலங்கை சாதனையை முறியடிப்பதற்கான முயற்சியில் புவிதரன் களமிறங்கினார். எனினும், தனக்கு கிடைத்த மூன்று முயற்சியிலும் 5.11 மீற்றர் உயரத்தைத் தாவுகின்ற வாய்ப்பை அவர் நூழிலையில் தவறவிட்டார்.

இறுதியில் 5.00 மீற்றர் உயரம் பாய்ந்து புவிதரன் தங்கப் பதக்கத்துடன் ஆறுதல் அடைந்தார்.

2015ஆம் ஆண்டு இஷார சந்தருவன் 4.70 மீற்றர் உயரம் தாவி நிலைநாட்டிய 23 வயதின்கீழ் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் நிகழ்ச்சிக்கான கனிஷ்ட சாதனையை 6 ஆண்டுகளுக்குப் பிறகு முறியடித்த அவர் புதிய கனிஷ்ட தேசிய சாதனை படைத்தார்.

இறுதியாக கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவுக்கான 2ஆவது தகுதிகாண் போட்டியில் 5.10 மீற்றர் உயரத்தைத் தாவி முதலிடத்தைப் பிடித்த அவர், இலங்கை சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை 0.1 மீற்றரினால் துரதிஷ்டவசமாக தவறவிட்டார்.

தங்கப் பதக்கம் வென்ற புவிதரன், தற்போது இலங்கை இராணுவ விளையாட்டுக் கழகத்தில் இணைந்து கொண்டாலும், யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பயிற்சியாளர் கணாதீபன் அவருக்கு தொடர்ந்து பயிற்சி அளித்துவருகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

4.40 மீற்றர் உயரங்களைத் தாவிய யாழ். அளவெட்டி அருணோதயா கல்லூரியின் சுகுமார் திஷாந்த் வெள்ளிப் பதக்கத்தினையும், யாழ். மகாஜனா கல்லூரியின் முன்னாள் வீரரான சுரேஷ்குமார் சுகிகேரதன் வெண்கலப் பதக்கத்தினையும் வெற்றிகொண்டனர்.

20 வயதின்கீழ் ஆண்களுக்கான சம்மெட்டி எறிதலில் யாழ். பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரியைச் சேர்ந்த எஸ். மிதுன்ராஜ் புதிய கனிஷ்ட தேசிய சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

குண்டு எறிதல், ஈட்டி எறிதல், சம்மெட்டி எறிதல் மற்றும் தட்டெறிதல் என நான்கு வகையான மைதான நிகழ்ச்சிகளில் அண்மைக் காலமாக தொடர்ந்து ஜொலித்து வருகின்ற 19 வயதான மிதுன்ராஜ், 40.45 மீற்றர் தூரம் எறிந்து, அதே பாடசாலையின் முன்னாள் வீரரான எஸ். பிரகாஷ்ராஜினால் கடந்த 2018ஆம் ஆண்டு நிலைநாட்டிய கனிஷ்ட தேசிய சாதனையை (39.73 மீற்றர்) அவர் இவ்வாறு முறியடித்து கனிஷ்ட பிரிவில் இலங்கை சாதனைக்கு சொந்தக்காரராக மாறியுள்ளார். முன்னதாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயதின்கீழ் ஆண்களுக்கான குண்டு எறிதலில் பங்குகொண்ட எஸ். மிதுன்ராஜ் 15.13 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார்.

23 வயதின்கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். மெய்வல்லுநர் சங்கம் சார்பில் பங்குகொண்ட என். டக்சிதா தங்கப் பதக்கம் வென்றார். குறித்த போட்டியில் அவர் 3.40 மீற்றர் உயரத்தை பதிவு செய்தார்.

அவருடன் போட்டியிட்ட யாழ். மகாஜனா கல்லூரியின் சி. ஹெரினா, 2.80 மீற்றர் உயரம் தாவி வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்தார்.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்

# 'பஞ்சம்' என்ற எச்சரிக்கை மட்டும் சோறு போடாது



## அதை எதிர்நோக்கும் திறன் உருவாக்கப்பட வேண்டும்

**'ஐக்கிய நாடுகளின் இலங்கை அலுவலகக் கணிப்பீட்டின்படி சுமார் நாற்பத்தொன்பது இலட்சம் பேருக்கு அதாவது மொத்த சனத்தொகையில் இருபத்தி இரண்டு சதவீதமானோருக்கு உணவு உதவி தேவைப்படுகிறது'**

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியை சமாளிப்பது எப்படி என்பதே இப்போதுள்ள மில்லியன் டொலர் கேள்வியாகும். பொது மக்களைப் பொறுத்தவரையில் கறிச்சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த நிலை. ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவையேனும் பெறமுடியாத நிலை பல குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தனது குழந்தைகளுக்கு உணவளிக்க முடியாமல் தாயொருவர் அரளி விதைகளை உண்டு தற்கொலைக்கு முயன்ற சம்பவமும் பட்டினிச்சாவு சம்பவமொன்றும் ஊடகங்களில் பதிவாகின. இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறியுள்ளது. ஐக்கிய நாடுகளின் இலங்கை அலுவலகக் கணிப்பீட்டின்படி சுமார் நாற்பத்தொன்பது இலட்சம் பேருக்கு அதாவது மொத்த சனத்தொகையில் இருபத்தி இரண்டு சதவீதமானோருக்கு உணவு உதவி தேவைப்படுகிறது.

பாடசாலை செல்லும் சிறார்கள் மத்தியில் மந்த போசணை அதிகரித்துள்ளது. காலை உணவின்றி பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கர்ப்பிணித்தாய்மாருக்கு வழங்கப்பட்டுவந்த திரிபோஷ உணவு, அதன் முக்கிய உள்ளீடான சோளம் கிடைக்காமை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளது. இது அடுத்து வரும் தலைமுறையின் ஆரோக்கியம் பற்றிய முக்கியமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கான உணவை வழங்குவதிலும் பிரச்சனைகள் உருவாகியுள்ளன. அதேபோல சாதாரண ஒரு குடிமகனின் நிறை உணவுத் தேவையைப் பெற்றுக் கொள்வதிலும் சிக்கல் உருவாகியுள்ளது. மீன், இறைச்சி, முட்டை போன்ற மிருகப்புரத உணவுகளின் விலைகள் மிகமோசமான அதிகரிப்பைச் சந்தித்துள்ளன.

இன்று உதாரணமாக கோழி முட்டை ஒன்றின் விலை 18 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக அதிகரித்துள்ளது. தாவரப்புரத உணவுகளான பருப்பு, சோயா, பாசிப்பயறு, கௌப்பி என்பவற்றின் விலைகளும் வானைத் தொடுகின்றன. இறைச்சி வகைகளின் விலைகள் சாதாரண பொதுமக்கள் அணுக முடியா தளவுக்கு உயர்ந்துள்ளன.

பெரும்பாலான மரக்கறி வகைகளின் விலைகள் இருமடங்காக அதிகரித்துள்ளன. பல குடும்பங்கள் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவை மாத்திரம் உட்கொள்கின்றனர். நகர்ப்புறங்களிலும் பெருந்தோட்டத்துறையிலும் இப்பிரச்சினை தீவிரமானதாக மாறியுள்ளது. இவ்வாறு உணவுப்பாதுகாப்பு நலிவடைந்து வரும் நிலையில் உடனடியாக உதவி வழங்கும் நிலையில் அரசாங்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

கொழும்பு நகரின் சில இடங்களில் சமூக சமையலறைகள் (community kitchens) உருவாக்கப்பட்டு பசியோடிருப்போருக்கு இலவசமாக உணவு வழங்கும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றுக்கு சமூக ஆரவலர்களிடமிருந்து உதவியும் கோரப்பட்டுள்ளது.

இப்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பணம் படைத்த தனவந்தர்கள் குறைந்தபட்சம் தத்தம் பிரதேசங்களில் உள்ள உதவி தேவைப்படும் மக்களுக்கு இதுபோன்ற அன்னதானம் வழங்கும் திட்டங்களை ஆரம்பிக்கலாம்.

குறிப்பாக, விஹாரைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் இதில் முன்னின்று செயற்படலாம் அதன் மூலம் தமது பிரதேசத்தில் பட்டினியையும் பட்டினிச் சாவுகளையும் தடுக்கலாம். மக்கள் கைவிடப்பட்ட நிலைக்கு உள்ளாகும்போது சமூக நிறுவனங்களே முன்னின்று செயற்பட வேண்டியிருக்கும். புலம்பெயர் சமூகமும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது உதவிகளை வழங்க முன்வரவேண்டும். அரசு சாரா நிறுவனங்களும் தத்தமது நடவடிக்கைப் பிரதேசங்களில் தம்மால் முடிந்தளவு மக்களது உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முன்வரவேண்டும்.

அரசாங்கத் தரப்பிலிருந்து பயிர்ச்செய்கையை அதிகரிக்குமாறு ஆலோசனை சொல்லப்படுகிறதே தவிர பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் அவசர நிவாரணங்களை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கையில் ஸ்ரீமா அரசு பதவிவகித்த 1970 1977 காலப்பகுதியில் ஒரு உணவுப் பற்றாக்குறை நெருக்கடி ஏற்பட்ட போதும் அது இவ்வளவு தீவிரமானதாக இருக்கவில்லை. அக்காலப் பகுதியில் இலங்கையர் அனைவருக்குமான உணவுப் பங்கீட்டுத்திட்டம் நடைமுறையில் இருந்தமையால் அந்த அரசாங்கத்தினால் மக்களுக்கு உணவ வழங்கும் தமது பொறுப்பிலிருந்து இலகுவாக விடுபட முடியவில்லை. அதேவேளை குறைந்தபட்சம் ஒரு வேளையேனும் மக்கள் உணவைப் பெற அத்திட்டம் உதவியாக இருந்தது. இலங்கையில் சமுர்த்தித் திட்டம் நடைமுறையில் உள்ளபோதும் அதில் உள்ளடக்கப்படாத வலுவிழந்த குழுவினரும் உள்ளனர்.

இது தவிர முன்னர் வறியவர்களாகக் கருதப்படாத பெரும் எண்ணிக்கையிலானோர் வருமான வீழ்ச்சி மற்றும் பணவீக்கம் காரணமாக வறியவர்களாக மாறியுள்ளனர். எனவே இலங்கையின் சனத் தொகையில் கணிசமானோருக்கு வாழ்வாதார உதவிகள் தற்காலிகமாகவேனும் தேவைப்படுகின்றன. வரி செலுத்தும் வருமானம் உழைக்கும் தனிநபர்களிலும் கணிசமான எண்ணிக்கையினர் கடனாளிகளாக மாறியுள்ளனர். எனவே இப்போது அமுலுக்கு வந்துள்ள வரி அதிகரிப்புகள் இவர்களின் வாழ்க்கைச் செலவுகளிலும் கணிசமான பாதிப்புகளை ஏற்படுத்தும். ருவர் பெறும் வருமானத்தில் பெற்ற கடனை மீளச் செலுத்தல் தொகைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்படுவதில்லை. அதனால்தான் பெற்றகடனை மீளச் செலுத்தும் தொகைக்கும் சேர்த்து வருமான வரி செலுத்துவதால் வாழ்க்கைச் செலவைக் கொண்டு நடத்துவது மிகக் கடினமாதாக இருக்கும். இலங்கையர்களின் வருமானத்தில் உணவுக்கு கணிசமானளவு சதவீதம் செலவிடப்படுகிறது. இதனால் உணவு விலை உயரும்போது உணவுப்பாதுகாப்பு மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகும்.

கடந்த பெரும்போகத்தில் இலங்கையின் முக்கிய உணவுத் தானியமான நெல் உற்பத்தி நாற்பது தொடக்கம் ஐம்பது சதவீதம் வரையிலும் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் நெல்விளையும் முக்கியமான மாவட்டங்களில் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வீழ்ச்சி எழுபது சதவீதமாக இருந்ததாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2021 ஏப்ரல் மாதத்தில் அறிவிக்கப்பட்ட பசுமை விவசாயக் கொள்கை காரணமாக விவசாய இரசாயன வளமாக்கிகள் கிடைக்காமையே இந்த வீழ்ச்சிக்கான காரணமாகும். இப்போது இரசாயன வளமாக்கித் தடை நீக்கப்பட்டுள்ள போதிலும் இப்போது செய்கை பண்ணப்பட்டுள்ள காணிகளுக்குத் தேவையான வளமாக்கிகளை உரிய காலத்தில் இறக்குமதி செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

ஒருபுறம் உலக சந்தையில் இரசாயன வளமாக்கிகளின் விலைகள் அதிகரித்துள்ளன. மறுபுறம் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி 203 ரூபாவிலிருந்து 365ஆக 80வீதம் தேய்வடைந்துள்ளபடியால் இறக்குமதி விலைகள் மேலும் அதிகரித்துள்ளன. அந்த அதிகரித்த விலையிலும் வளமாக்கிகளை இறக்குமதி செய்யப் போதுமான டொலர் கையிருப்புகள் இலங்கையில் இல்லை. முன்னர் 30 ரூபா மானிய விலையில் கிடைத்த ஒரு கிலோ உரம் இப்போது 400 ரூபாவாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்திய கடனுதவியின் கீழ் வளமாக்கிகள் பெறப்பட்ட போதிலும் அவை உரிய காலத்தில் வந்துசேரவில்லை. இதனால் நெல் விவசாயிகள் பலர் தமது நிலங்களைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தவில்லை. அதுமட்டுமன்றி ஏனைய விவசாய உள்ளீடுகளின் விலைகளும் பெருமளவில் அதிகரித்துள்ளன. பெற்றோலியப் பொருட்களின் விலை அதிகரிப்பும் அவற்றின் தட்டுப்பாடும் விவசாய நடவடிக்கைகளை மோசமாகப் பாதித்துள்ளன.

எனவே இப்போது நடைபெற்று வரும் போகத்தில் பாசிப்பயற்றை அதிகளவில் பயிரிடுமாறு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. எவ்வாறாயினும் சிறு போக அறுவடை மிக மோசமானதாக இருக்கப்போகிறது. எனவே தான் இலங்கையில் உணவு நெருக்கடி மேலும் தீவிரமடையும் என எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

உணவுப்பற்றாக்குறை வரும் என அதிகாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுப்பதுடன் தமது கடன் முடிவடைந்து விட்டதாக நினைக்கின்றனர். அதனை எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் அரசாங்கம் இருக்கவேண்டும். மக்களைப் பட்டினிபோடாமல் காப்பது ஒரு அரசாங்கத்தின் தலையாய கடமை. பஞ்சம் வருகிறது என்று மக்களை எச்சரிக்க அரசாங்கம் தேவையில்லை. அது மக்களுக்கே தெரியும். அதிலிருந்து மக்களைக் காப்பாற்ற அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதையே அரசாங்கம் சொல்ல வேண்டும்.

# கொரிய நாடுகளுக்கு இடையே போரை ஊக்குவிக்கிறதா அமெரிக்கா



கலாநிதி
கே. ரீ. கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

கொரியக் குடாவில் 1942 முதல் ஏற்பட்ட கொதிநிலை அரசியலானது தற்போதுவரைநீடிக்கிறது. வட, தென் கொரியர்களது அரசியலை மையப்படுத்தி உலக வல்லரசுகள் அப்பிராந்தியத்தில் தமது ஆதிக்கப் போட்டியை மேற்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் முன்னாள் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமான போட்டி தற்போது சீனா மற்றும் ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்காவின் அணுகுமுறையாக காணமுடிகிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் வடகொரியாவுடனான சமாதான முயற்சிகள் தோல்வியடைந்தமையும் அதனைஅடுத்து ஜோ பைடன் நிர்வாகம் மீளவும் வடகொரியாவுடன் முரண்பாடுடைய கொள்கையுடன் செயல்பட முனைவதுவும் பிராந்தியத்தில் போர்ப் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனையை அடுத்து தென் கொரியாவுடன் அமெரிக்கா இணைந்து கொண்டு எட்டு ஏவுகணைகளை பரிசீலித்துள்ளது. இக்கட்டுரையும் வடதென் கொரியர்களது ஏவுகணைப் பரிசோதனைகள் பிராந்திய ரீதியில் ஏற்படுத்தவுள்ள விளைவுகளை தேடுவதாக உள்ளது.

குவாட் நாடுகளின் 25,26.05.2022 நடைபெற்ற உச்சிமகாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட ஜோ பைடன் முதலில் ஆசிய நாடான தென்கொரியாவுக்கே வருகை தந்திருந்தார். அமெரிக்க ஜனாதிபதியின் முதல் ஆசிய விஜயம் தென் கொரியா மற்றும் ஜப்பானை நோக்கியதாக அமைந்திருந்ததுடன் ஆசிய பசுபிக் நாடுகளுடனான பொருளாதார உரையாடல் ஒன்றையும் முதன்மைப்படுத்தியிருந்தது. ஜனாதிபதி பைடனின் நகர்வு அமெரிக்காவின் அரசியல் பொருளாதார, இராணுவம்சார் வெளியுறவுக் கொள்கையினை கோடிட்டுக் காட்டுவதாக தெரிகிறது. அதாவது வளர்ச்சிக்கான இந்தோ, பசுபிக் பொருளாதாரக் கட்டமைப்பினை (IPEF) (23ஆம் திகதி) ஜோ பைடன் ஜப்பானியத் தலைநகரான டோக்கியோவில் தொடக்கி வைத்தார். இப்பொருளாதார அமைப்பில் 13 ஆசிய, பசுபிக் நாடுகள் கலந்து கொண்டன. இந்த நாடுகளுடனான உறவை பலப்படுத்தும் விதத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் நடவடிக்கை அமைந்திருந்தது.பொருளாதார கட்டமைப்பின் பிரதான நோக்கம் அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான வர்த்தக உறவை பலப்படுத்துதல் டிஜிற்றல் வர்த்தகத்தை மேம்படுத்துதல், விநியோக உறவை பலப்படுத்துதல், புதுப்பிக்கதக்க சக்திவளத்தை பெருக்குதல் மற்றும் கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பனவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

அப்போது தென்கொரிய அமெரிக்க நெருக்கத்தை பலப்படுத்தும் விதத்தில் பல உடன்பாடுகள் இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் எட்டப்பட்டது. தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக்யோலும் அமெரிக்க ஜனாதிபதி பைடனும் பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பொருளாதா தொடர்புகளை பேணுவதற்கான உடன்படிக்கைகளில் கையொப்பமிட்டனர். அதாவது இரு நாடுகளும் மூலோபாய போட்டியாளர்களுக்கான ஒத்துழைப்பு என்ற தொனிப் பொருளில் அவ்வுடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இரு நாட்டுக்குமான உறவு பலமானதாகவும் தசாப்தங்களைக் கடந்த நீண்ட வரலாற்றைக் கொண்ட நண்பர்கள் எனவும் அங்கு உரையாற்றும் போது பைடன் குறிப்பிட்டார். இரு நாடுகளுக்கும் இடையில் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார விடயங்களில் நெருக்கத்தை அதிகரிக்க உடன்பாடுகள் எட்டப்பட்டன. பரஸ்பரம் முதலீடுகளை ஊக்குவிப்பது தென் கொரியர்களுக்கான வேலை வாய்ப்பினை அதிகரிப்பது போன்ற விடயங்களில் இரு நாட்டுத் தலைவர்களும் உரையாடியனர். பாதுகாப்பைப் பொறுத்து இரு நாடுகளும் தொடர்ச்சியாக போர்ப் பயிற்சிகளை நிகழ்த்துவதென்றும் போர் ஒத்திகைகள் மேற்கொள்வதென்றும் முடிவாகியது.

அதனடிப்படையிலேயே 06.06.2022 அன்று அதிகாலை அடுத்தடுத்து தென் கொரியாவின் கிழக்கு கடற்கரைப் பிரதேசத்தில் 8 ஏவுகணைகளை ஏவி பரிசோதனையை அமெரிக்க தென் கொரியக் கூட்டு



மேற்கொண்டது. அதே நேரம் 05.06 2022 அன்று வடகொரியா அமெரிக்க தென்கொரிய கூட்டுப் பயிற்சி நிகழ்ந்து கொண்டிருந்த போது ஜப்பானியக் கடல் பகுதியை அண்டிய பிரதேசத்தில் எட்டு குறுந்தூர ஏவுகணைப் பரிசோதனையை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனைக்கு பதிலடியாகவே தாம் எட்டு ஏவுகணைகளை பரிசோதித்ததாக தென் கொரிய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு வடதென் கொரியா ஏவுகணைப் பரிசோதனைப் போட்டியானது கொரியக் குடாவின் அமைதியை பாதிப்பதுடன் போர் ஒன்றுக்கான நகர்வுகளைத் தூண்டுவதாகவே தெரிகிறது. அதனை விரிவாக நோக்குவது அவசியமானது.

முதலாவது, தற்போதைய தென் கொரியாவின் ஜனாதிபதி தீவிர போக்குடையவராகவும் மேற்குலகுடனான உறவைக் அதிகம் விரும்புபவராகவும் காணப்படுகின்றார். குறிப்பாக வடகொரியாவுக்கு எதிராக தென் கொரியாவின் இராணுவ பலத்தை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை அதிகம் கொண்டுள்ளவர் என்பது கவனத்திற்குரியதாகும். அதனால் தென் கொரியாவின் இராணுவபலம் அதிகரிக்கும் முயற்சியில் அவரது நடவடிக்கைகள் அனைத்தும் குவிந்துள்ளது. இது வட கொரியாவுடனான போரை தீவிரப்படுத்துவதுடன் கொரியக் குடாவில் மீளவும் ஒரு போருக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க கூடியதாக அமையும். ஏற்கனவே வடகொரிய ஜனாதிபதியின் அணுகுமுறைகள் தீவிர நோக்கமுடையதாக அமைந்திருப்பது போருக்கான வாய்ப்பினை அதிகப்படுத்தும்.

இரண்டாவது, வடகொரியாவின் அணுவாயுதப் பலத்தை எதிர்கொள்ளும் விதத்தில் தென் கொரியாவும் அணுவாயுதத்தை உருவாக்க முயலுமாக அமையுமாயின் போர் என்பது ஆபத்தானதாகவே மாறுவதற்குரிய சூழலை கொண்டிருக்கும். இரண்டாம் உலக போருக்கு பின்பு அணுவாயுதத்தில் பாரிய தாக்குதல்கள் இல்லாத நிலையில் மீளவும் அதற்கான வாய்ப்பினை இப்பிராந்தியத்தில் ஏற்படுத்தக் கூடியதாக தென் கொரிய அமெரிக்க நெருக்கமும் இராணுவ ரீதியான மூலோபாயமும் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

மூன்றாவது, வடகொரியாவால் அதிகம் பாதிக்கப்படும் நாடுகளில் ஒன்றான ஜப்பான் காணப்படுகிறது. ஆனால் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் காலத்தில் ஜப்பானிய அரசியலமைப்பில் இராணுவம் தொடர்பில் பின்பற்றிய தடைகளை நீக்கியுள்ளது. ஏறக்குறைய ஜப்பான் இராணுவ அமைப்புக்களையும் ஆயுத தளபாடங்களையும் தனது பாதுகாப்புக்கு வைத்திருக்கவும் ஆயுத தளபாடங்களை உற்பத்தி செய்யவும் கொள்வனவு செய்யவும் காணப்பட்ட தடை தகர்ந்துள்ளது. இரண்டாம் உலக போருக்குள் ஓரங்கமாக விளங்கிய ஜப்பானை கட்டுப்படுத்த அமெரிக்கா மேற்கொண்ட உத்திகளை நீக்கியிருப்பதென்பது அப்பிராந்தியத்தில் இராணுவ மயமாக்கத்திற்கான வாய்ப்பினை அதிகரிக்க வழியமைத்துள்ளது. அதாவது ஜப்பானையும் தென்கொரியாவையும் இராணுவ மயப்படுத்துவதன் மூலம் வடகொரியா மட்டுமல்ல சீனா மற்றும் இப்பிராந்தியத்தின் அமைதியை பலவீனப்படுத்தி கொதிநிலையை ஏற்படுத்த அமெரிக்க முயல்வதனையே அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நான்காவது, கடந்த காலங்களில் மேற்காசியாவை துடைத்தழித்த அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் இந்தோ, பசுபிக் அல்லது ஆசிய, பசுபிக் என்ற கட்டமைப்பின் மூலம் கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளை நோக்கி அத்தகைய துடைத்தழிப்பை ஆரம்பித்துள்ளன. இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் ஒக்கினாவா மற்றும் குவாம் தீவுகளில் தரையிறக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் தளங்களை பாதுகாப்பதற்கும் ஏனைய பசுபிக் தீவுகளில் உள்ள அமெரிக்க நலன்களைப் பாதுகாப்பதற்குமான நகர்வாகவே அமெரிக்க நடவடிக்கைகள் காணப்படுகின்றன. வடகொரியா, சீனா, ரஷ்யாவின் எழுச்சியால் இப்பிராந்தியத்தில் அமெரிக்க நலன்கள் பாதிப்படைவதுடன் இப்பிராந்தியம் வலுவான பொருளாதாரக் கட்டுமானத்தை உடைய பிராந்தியமாக உள்ளது. எனவே அதனை கையாளுவதும் அமெரிக்காவுக்கு ஏப்ப பயன்படுத்துவதுமே அமெரிக்க நிர்வாகத்தின் நோக்கமாகவுள்ளது.

ஐந்தாவது, தென் கொரியா,அமெரிக்க உறவினை மையப்படுத்தி வடகொரியாவை நெருக்கடிக்கு உள்ளாக்குவது மட்டுமன்றி தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்குள் முழுமையான போர் ஒன்றினை உருவாக்குவதன் மூலம் சினா மற்றும் ரஷ்யாவின் இருப்பினை பலவீனப்படுத்தி அமெரிக்காவும் மேற்குலகமும் தமது இருப்பினை தக்கவைக்க முனைவதாகவே தெரிகிறது. தென்கொரிய வடகொரிய போர் ஒன்று சாத்தியப்படுமாயின் அமெரிக்காவின் தென் சீனக்கடல் மீதான நலன்கள் இலகுவில் பாதுகாக்கப்படும். ஏனெனில் வடகொரியபதென் கொரியப் போர் சீனாவின் பிரசின்னத்தை மட்டுமல்ல பிராந்திய பொருளாதார வளர்ச்சியை பாதிக்கச் செய்துவிடும். இது சினாவின் பொருளாதாரத்தை பாரியளவில் பாதிக்கும். இது அமெரிக்காவுக்காக தென் கொரியா போரிடும் நிலையை உருவாக்க வழிவகுக்கும். இது இன்னோர் உக்ரைனாக தென் கொரியாவை மாற்றுவதாகவே அமையும். சீன ரஷ்ய நட்பு நாடான வடகொரியாவை போருக்குள் இழுப்பதென்பது அந்நாடுகளது ஏனைய நகர்வுகளை தகர்ப்பதற்கு அடிப்படையாக அமைந்துவிடும் என அமெரிக்கா கருதுகிறது. எனவே ரஷ்ய உக்ரையின் போர் அமெரிக்காவுக்கு வாய்ப்பான சூழலை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யாவை உக்ரையின் வீழ்த்திவிடும் என்ற நிலையில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் செயல்பட்டவருகின்றனர். அவ்வாறே சீனாவுக்கும் ஒரு நெருக்கடியான போரை உருவாக்குவது அமெரிக்காவுக்கும் மேற்குக்கும் அவசியமானதாக உள்ளது. சீனா தைவான் போரைத் தவிர்த்தாலும் வடகொரிய – தென்கொரியப் போரை ஊக்குவிப்பதன் மூலம் சீனாவின் போருக்கான நுழைவை உறுதிப்படுத்தலாம் என்பதே தென்கொரியாவுடனான அமெரிக்க போர் ஒத்திகையும் ஏவுகணைப் பரிசோதனைகளும் உணர்த்துகிறது. எதுவாயினும் அமெரிக்காவுக்கு இன்னோர் டீபை போர் ஆசியாவுக்குள் தேவையாக உள்ளது. தற்போது ஆசியாவின் தென் மற்றும் தென் கிழக்குப் பிராந்தியம் அமெரிக்காவின் போர்க் கொள்கை வலையமாக மாறியுள்ளது.




## நீயே என் காதல்...

**வன்னித் தமிழ் மறவன்..**

விடத்தோடு உறவுகொள்ளும்
என் காதலே
நீ விடியலை நோக்கி புறப்படு
உன் காதலுக்காய் காத்திருந்து
காற்றிலே கரைந்து போகும்
வெண்பஞ்சின் பிரதியடி
என் இதயம்...

காலத்தின் கோலத்தால்
காதலும் உருவெடுத்து
என் மூச்சு காற்றிலே கலந்ததடி
என் காதலை காலடியில் போட்டு
கண்முன்னே கலங்கடித்தாய்
கலங்கிடும் என் விழிகண்டு
நகைப்புடனே புன்னகைத்தாய்

என் இதையத்தை பிடுங்கி
இருட்டறையில் சமாதி செய்தாய்
இன்பங்கள் யாவையும்
வையகத்தில் அழித்துவிட்டாய்
கண்ணீர் கடலிலே வள்ளமோட்ட
காதலெனும் துடுப்பு தந்தாய்

உன் வருகைக்காய் தனிமையாய் காத்திருக்கும்
பாலைவன கள்ளிச்செடி நானடி
காதல் வரிகளை கவிகளாக்கி
காற்றிலே அலைய விட்டேன்
உன் செவிகளின் தடைபட்டு
காதலால் உடைபட்ட என் இதயத்தை
நீ மறுகவாய் கொடுப்பாய் என்று...





## உச்சிமலையில் ஓர் ஒளிக்கதிர்...!

**ஷெல்லிதாசன்
திருகோணமலை...**

நூற்றாண்டு பலகடந்து சென்ற போதும்
லயன்கள் தானே எங்கள் குடியிருப்பு
ஈரைஞ்சு அடியகல மாளி கைகள் எமக்கு
இங்கிலீசுத் துரைமாரின் நன்கொடைகள்...!

சமையலு மங்கே சாப்பாடும் அங்கே
சமைஞ்ச பொண்ணும் அங்கேதான்
பள்ளிப் படிப்பும் பள்ளி யறையும்
பிள்ளை வளாப்பும் அங்கேதான்

ஏன்தான் நாங்கள் பிறவி எடுத்தோம்
எமக்கு எதுவும் புரிய வில்லை
கூன்விழுந்து மாஞ்சு இறக்கும் வரைக்கும்
கூலிக்கு கையேந்தும் நிலைதானா

எங்கள் உழைப்பே இந்த நாட்டின்
முதுகெலும்பாக இருந்தாலும் நாம்
திங்கக் குடிக்க வகையறியாது
தினந்தினம் வாடிச் சாகின்றோம்

பச்சை மலைவாசிகள் நாங்கள்
பட்ட மரங்களைப் போலானோம் தினம்
அட்டைக் கடியிலும் அயராப்பணி செய்தும்
பிச்சை கேட்கிறோம் துரைமாரை

உழைக்கும் உழைபிற்கு ஏற்ற ஊதியம்
என்றுதான் கிடைக்கும் எங்களுக்கு
லயன்களில் வசிக்கும் வாழ்விலே நாமும்
மாற்றத்தை காண்பது எப்போது?

உச்சி மலையில் ஒளிக்கதிரொன்று
உதயமாகி எழ வேண்டும் நாம்
பட்ட துயரிருள் பனித்துளி யாக
அகன்றோர் விடியலும் வரவேண்டும்!

## அவளை விரும்பிய பறவை

**எம்.எம்.எம். நகீபு
சாய்ந்தமருது**

உனது
தொலைபேசி அழைப்பு வந்தால்
என்னுடைய
பீ குறுப் குறுதி
ஏ குறுப்பாகவே மாறிவிடுகின்றது

என்னைக் கண்டு
ஓடி ஒழிப்பவளே
உனது அடுப்படி
புகையின் அலைவரிசையில்
என் வீட்டு தொலைக்காட்சியின்
அன்டனாவின் வயர்கள் தொடர்பு கொண்டு
உன் முகத்தை
எப்போது காட்டும்?
உனது
நினைவுகளின்
வெப்பத்தளத்தில் நான்
உன்னைப் பற்றிய தகவல்களை சேகரிப்பதே
எனது பொழுதுபோக்குகளாகிவிட்டது

இசை ஞானிகளிடம்தான்
உனது வார்த்தைகளை
அள்ளிக் கொண்டு போய் கொடுக்கின்றேன்
அதன்
இனிமையின் சுரங்களை அறிவதற்கு

நீயும் நானும்
நேரடியாகச்சந்திக்காத – அந்த
கவலை மருத்துவர்கள்
என் மனதையல்லவா
அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தியுள்ளார்கள்

இப்பொழுதாவது உன்
மனக் கூண்டை திறந்துவை
நான் ஒரு பறவையாக
பறந்து வந்து
நிரந்தரமாக அடைத்துவிடுகின்றேன்



**ரதிதேவி, மானிப்பாய்**

## ஆயிரம் கதவுகள்

இலையின் நுனியில் பனித்துளியாய்
அவள் விழியின் முனையில்
என் இதயம்

தாய்போல் கருணை கொண்டாலும்
எனைக் கொல்லும் துணிவும் கொண்டாள்
பகவதி
அஸ்திரம் எதற்கடி
அடைந்தேன் உன் திருவடி

குருவாகி மிளிரும் ஒளிச்சுடரே
எனைக் கருவாய் ஏற்ற கனகதமே

நறுமண மலர்கள் மீது
வண்டின் பாதங்கள்
தடங்களை விட்டுச் செல்வதில்லை

ஆழ்ந்த உறக்கத்தில் நீ வந்தாயம்
மூச்சின் வீதி முனையில் நின்றாயம்
ஆனால் தடங்கள் எங்கே
தேடுகிறேன்

ஜன்னல் வழி தெரியும் முழுநிலவை
இந்த விழித்திரைமேல் விழுத்த
கண்ணாடித் தசை ஒன்று
கடின உழைப்பாற்றுகிறதாம்

கொண்டு வந்து சேர்க்க உனை நெஞ்சின் நடு
எண்ணி எண்ணித் தீர்த்தேன் நாள் முழுதும்
உன் சுந்தரத்தை

பகல்வெளியில் பார்த்த மலர் மீது
நிலவொளி வீழும் போது மட்டும்
அழகு எங்கிருந்து வருகிறது
அதே மலர்
அதே இதழ்
முற்கள் கூட உதிரவில்லை
சொன்னால் சற்று முதிர்ச்சி தழுவிய மலர்
ஆனால் நிலவொளியின் சுகந்தத்தில்
சுந்தரம் அடைகிறது
அதுபோல் நெஞ்சும்
உன் ஒளியில்
தன்னிலை மறக்கிறது
ஆயிரம் கதவுகள் திறக்கிறது



**எழுத்து முஸம்மில் கமர்தீன்**

## மாறாத மானிடர் மனம்

அடங்கிப்போகும் வாழ்க்கையிது
அதிலே விடாது மனமும்
ஆயிரம் குணங்கள் மானிடருக்கு!

அற்ப வாழ்வில் இன்பம் தேடும்
அகங்காரம் எனும்
அழுக்கையும் விடாது மனம்!

அடுத்தவனை நோக்கி தீங்கையும்
அடுத்தடுத்தே தேடும் குணம்
ஆனாலும் விடாது அவன் மனம்!

அகந்தை கொள்ளும் உள்ளம்
ஆனாலும் மானிடரின் எண்ணம்
ஆணவத்தை கொல்லாது!

அசுர குணத்தில் உள்ளம்
அதில் கோபம் பேராசை என்றும்
அதன்படி மாறாது!

அகம்பாவத்தின் கர்ப்பத்தில்
அவதரிக்கும் பொய் பொறாமை
அற்ப குணங்களை விடாது மனம்!

ஆசைகள் கோடி ஆபாசம் தேடி
அலைபாயும் குணம்
அரக்கனின் மனமும் விடாது!

அடக்கம் பணிவு கருனை
அகிலம் சிறக்க வழிபிறக்கும்
ஆனாலும் மறுக்கும் மனம்!

அன்பும் பாசமும் உறவில்
அழகிய குணம் வளர்த்தாலும்
அதுவே பகையாக்கும் மனம்!

அடுத்தவர் செய்த தீங்கினை
அதை மன்னிக்கும் உணர்வை மனம்
அழகிய பண்பென்று உணராது!

அழகிய வெண்மை முகமென்று
அகத்தில் நயவஞ்சகம் வல்லவராய்
அக்குணமும் மாற்றாது மனம்!

அறிவுக்கும் எட்டும் அவனிடத்தில்
அன்பு வழியும் ஒன்றே உறவென்று
ஆனாலும் ஒட்டாது மனம்!

அகமும் நல்லவர்போல் அரங்கேறும்
அகிலமும் வியக்கும் அதுவும் மாறாது
அதுவே மானிடர் மனமே!!

## காரிகையை போற்றிடுவோம்

**ஸபியா பின்த் நாஸிர்
(தர்கா நகர்)**

வார்த்தைக்குள் வடிக்க
முடியா வைகையவள்
அன்பென்ற வார்த்தைக்கு அகராதியவள்

அதிகாலை பொழுதையே எழுப்பிவிடும்
அதிசயமவள்
ஓயாது உழைக்கின்ற
ஒற்றை இயந்திரமவள்

கட்டி வைத்த ஒற்றை
தாலிக்காய் ஓராயிரம்
முறை உடைந்து போனவள்
காற்றாட்டு ஆசை எல்லாம் வேரோடு
புதைத்தவள்

வெற்றுப் புன்னகைக்குள்
பெருந்துயர் போக்குபவள்
ஆணென்ற அவனுக்காய் ஆறாத் துயர்
எல்லாம் ஆண்டாண்டாய்
பொறுத்தவள்

பெற்றெடுத்த பிள்ளைக்காய்
பாராங்கல் சுமப்பவள்
இரவெல்லாம் பகலாக்கி
இரத்தத்தை அமுதாக்கி
அவனுக்காய் அளிப்பவள்

கனவனுக்கு மனைவியாய்
பிள்ளைக்குத் தாயாய்
வீட்டுக்கு வேலைக்காரியாய்
மாமிக்கு மருமகளாய்
மகா பாத்திரம் சுமப்பவள்

ஓட்டைக் கூறையிலே
ஒற்றைச் சேலையோடும்
ஒரு சோடிச் செருப்போடும்
ஓடாய்த் தேய்பவள்
தேயாத முழுமதியவள்

புகழுக்கு ஏங்காத பெண்ணவள்
இன்பமோ துன்பமோ
இளையாத இரும்பவள்
புன்னகை பூவளிக்கும் பூவையவள்

கடைசியாய் கண் மூடும்
வரைக்கும்_கரைசேர
உழைக்கின்ற கலங்கரை
விளக்கவள்

ஆலமுல்ல காலமெல்லாம்
காரிகையை போற்றிடுவோம்
மங்கையரின் மான்போங்க
மனதார வாழ்திடுவோம்




**ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றசீம்
கிழக்குப்பல்கலைக்கழகம்**

புன்னகைக்கும் வதனங்களில்
பளபளக்கும் பற்களோடு
ஒட்டியிருக்கும்
ஊத்தைப் பற்களைப்போல,

மனிதக்காடுகள் நிறைந்த
வெளியில்
மனக்கறைகளோடு
பருவம் பார்த்துப் பேசும்
தந்திர நரிகள்

இணைந்து இருக்கும்
இதயங்களை நிர்வாணப்படுத்தி
எரிநெருப்பின் குழம்புகளை
எப்படியோ
பருகிடக் கொடுத்துவிட்டு
பாதிகளாக்கி விடத் துடிக்கும்
பச்சோந்திக் கூட்டங்கள்

உயர்பவனை போற்றி
வலுக்கட்டாயச் சிலுவையில்
ஏற்றி
கீறல்களால் பயமுறுத்தி
ஆழக்குளிக்குள் புதைக்கும்
அர்த்தமில்லாத நடத்தைகள்

இளம் பிஞ்சுகளைக் கிள்ளிக்
காய்கனிகள் தரமுடியாத
பட்ட மரங்களாக்கி விட்டு
சேற்றினுள் சமாதிகட்டி
சேறு பூசி விடும்
பலியெடுக்கும் பாம்புகள்

பூக்களை முகர்ந்தபடியே
மணத்தினில் விருப்புற்று
அவைகளை உதிர்த்து
பாலியல் பைகளுக்குள்
கசக்கி விடும்
தோட்டத்துக் காவலாளிகள்

இருள் சூழ்ந்திருந்த
கருமுகில் வானில்,
மழையென அறிகுறிகள்
தெரிந்திருந்தும்
பார்வையற்ற குருடனை
நனைத்து விட வேண்டுமென்று
பார்த்தபடி நிற்கும் கழுகுகள்

மருத நிலத்தினில்
கிளை விட்ட மரங்களில்
தொங்கிக் கொண்டிருக்கும்
தூக்கணங் குருவிக் கூடுகளை
கழட்டி எடுத்துத்
துவம்சம் செய்யத் துடிக்கும்
மார்பு தட்டும் விவசாயிகள்

ஒளியில் ஒழிந்திருந்து
கும்மிருட்டு வேண்டி
அலறலொலியால் குரலெழுப்பும்
ஆந்தைகளை
வெளிச்சத்திற்கு கொண்டு வந்து
வேடிக்கை பார்க்கும்
பாவிகள்

மனிதாபிமானக் கோட்பாடென
வெண்ணிற மச்சுகங்களாய்
நின்று விட்டு
தக்கதொரு தருணமதில்
மீன்களைக் கொத்தும்
இவர்கள் யார்?

மனிதர்கள் தானோ?
இல்லையேல்
மனிதச் சாயலில் மந்தைகளா?
இல்லையெனில்
யார் இவர்கள்?

## பெற்றோல் - பெற்றோர்

**இணுவில் வாகீசன்**

இரண்டும் பெறுமதியானது
இருக்கும் போது அருமை தெரியாது
இல்லை என்றால் அருமை புரியும்
இரண்டையும் பேண வேண்டும்
புதுப்பிக்க முடியாத வளங்கள்
பெற்றோல் இல்லை என்றால்
வண்டி ஓடாது
பெற்றோர் இல்லை என்றால்
வாழ்க்கை ஓடாது

## மௌனம்

**என். பாரத்,
மானிப்பாய்**

உன்
மௌனங்கள்
கலைந்திட
மறுஜென்மம்
காத்திருந்தேன்
உன் திருவாய்
மலர்ந்து
உன்பெயரை
சொல்லிவிட
அன்பே



## இந்தியாவின் அர்ப்பணிப்புகளை... (06ஆம் பக்கத் தொடர்)

இந்தியா தனது அயல்நாடுகளைப் பொறுத்த வரை இலங்கையை மிக நெருங்கிய நண்பனாகவே எப்போதும் கருதி வந்துள்ளது.

அன்றைய காலம் தொடக்கம் இலங்கைக்கு நெருக்கடி ஏற்பட்ட வேளைகளிலெல்லாம் விரைந்து ஓடோடி வந்து துயர்துடைக்கின்ற முதல் நாடாக இந்தியா உள்ளது. வரலாற்று ரீதியாக நோக்குகின்ற போது இதற்கான உதாரணங்களாக பல சம்பவங்களைக் கூற முடியும்.

2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொவிட் பெருந்தொற்று இலங்கையில் தீவிரமடைந்திருந்த போது இந்தியா துரிதமாகச் செயற்பட்டு தடுப்பூசி மருந்துகளை அனுப்பி வைத்தது. கொவிட் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்குவதில் இந்தியா முதன் முதலாக உதவி புரிந்த நாடு இலங்கை ஆகுமென்பது குறிப்பிடத்தக்கது. 'அயல்நாட்டுக்கே முன்னுரிமை' என்பதுதான் இந்தியாவின் கொள்கையாக இருந்து வருகின்றது. அந்த நிலைப்பாட்டில் இருந்து ஒருபோதுமே தவறியதில்லை.

அதன் பின்னர் இலங்கை பொருளாதார நெருக்கடியினால் கலங்கி நின்ற போது இந்தியா வழங்கிய உதவிகளை எக்காலமும் மறந்து விட முடியாது. எரிபொருள், உணவு, மருந்துகள், இரசாயனப் பசளை உட்பட பலவிதமான உதவிப் பொருட்களை இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கி வருகின்றது.

இந்தியா தனது உதவிகளில் ஒருபோதுமே நிபந்தனைகளை இலங்கைக்கு விதித்ததில்லை. இலங்கையின் இன்றைய துயரைத் துடைப்பதிலேயே இந்தியா கண்ணுங்கருத்துமாக இருந்து வருகின்றது. சர்வதேச நிதி அமைப்புகளிடமிருந்து இலங்கைக்கு நிதியுதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் இந்தியா அக்கறை செலுத்தி வருகின்றது.

இவ்வாறெல்லாம் இருக்கையில், கச்சதீவை மீட்டுக் கொள்வதற்கு இந்தியா முற்படுவதாக அரசியல்வாதிகள் புரளிகளைக் கிளப்பி விடுவது உண்மையிலேயே வேதனைக்குரியதாகும். எமது நாட்டின் துயர்துடைப்பதில் கவனம் செலுத்துகின்ற அயல்நாட்டின் நோக்கத்தில் களங்கம் கற்பிக்கும் வகையில் இவ்வாறு கருத்துகளை வெளியிடுவது நன்றிக்குரிய செயலல்ல என்பதுதான் விடயமறிந்தோரின் கருத்தாகும்.

## இது உள்ளூர் சிறு உற்பத்தி... (08ஆம் பக்கத் தொடர்)

படாடோபமான விளம்பரங்களின் மூலமே ஒரு பொருளின் தகுதி நிர்ணயம் செய்யப்படுவதாகவே நாம் நம்புகிறோம். அல்லது அவ்வாறு பழக்கப் படுத்தபட்டுள்ளோம். நியாயமான, நேர்மையான சிறு உற்பத்தியாளர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறோம். உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு நாம் இடம் அளிக்க முன்வர வேண்டும். அதேசமயம் அவர்களும் தமது தயாரிப்பின் தரம் என்றைக்கும் சிறப்பாக விளங்குவதை உறுதி செய்ய வேண்டும். நுவரெலியாவில் நடந்த சம்பவம் ஒரு ஊக்குவிப்பு அல்ல. ஒரு தொழில் முயற்சியை நசுக்கும் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். இச் சம்பவத்தை இரண்டு விதமாகப் பார்க்க வேண்டும். பாதையோரமாக மருந்துகளை விற்றவர்கள் தம்முடன் சகல நிரூபிக்கத்தக்க ஆவணங்களையும் வைத்திருக்க வேண்டும்.

## அறியாமை... (15ஆம் பக்கத் தொடர்)

எல்லாவற்றையும் விட அந்த பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர ஊருக்கு அறிமுகம் செஞ்சவரே அவர்தான். இவருக்குப் போய் இப்படி கதைத்தால் அல்லாஹ்வுக்கே பொறுக்காதே என்றெல்லாம் நான் மனதால் புலம்பிக் கொண்டிருந்த போது ரீச்சரே மீண்டும் பேச்சை ஆரம்பித்தார். 'இப்ப பழசெல்லாம் பேசி ஒன்னும் ஆகப்போறதில்ல காசிம்.. இருந்தாலும் ஒன்னு மட்டும் உறுதி என்றைக்கு செக்கரெட்டரி அப்படி அப்துள்ளா சேர் மேல பழிய போட்டாரோ அன்னையில இருந்துதான் இந்த ஸ்கூல் குழம்பி போச்சு.

நல்லவங்கட மனச உடைக்கிறது லேசான காரியமில்ல காசிம்... இத போய் சமூகத்துல சொல்லி பிராயசித்தம் தேட சொல்லு..' எந்த சலனமும் இல்லாமல் தீர்க்கமாய் சொன்ன ஆமினா ரீச்சரிடம் மேற்கொண்டும் எதையுமே என்னால் பேச முடியவில்லை. ஆரம்ப சந்தோஷங்கள் காணாமலாகி இதயம் லேசாக வலிக்கத் தொடங்கியது. தொடர்ந்து இங்கு இருந்தால் இந்த நன்றி கெட்ட சமூகத்தின் மீது வெறுப்புதான் அதிகரிக்கும் என்பதை தெளிவாகப் புரிந்து கொண்டேன். ஆமினா ரீச்சர் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார். 'ரீச்சர் நீங்க இப்பவே பென்ஷன் போக கூடாது ரீச்சர்.. உங்கட சேவ எங்களுக்கு இன்னும் தேவ ரீச்சர்.. இந்த ஸ்கூல முந்தி மாதிரி மாத்தி காட்டுவோம் ரீச்சர்.. அப்துள்ளா சேர்கிட்ட நான் போரன் ரீச்சர்.. அவரு ஒரு நாளும் இந்த ஸ்கூல கீழ போட நெனக்கவே மாட்டாரு.. இது எனக்கு நல்லாவே தெரியும் ரீச்சர்..' என்னை அறியாமலே வார்த்தைகள் கொட்டின. அந்த கால ஆமினா ரீச்சராய் அதை ரசித்துக் கொண்டே என் தோளில் தட்டிக்கொடுத்தார்.

'போ காசிம் போ எல்லாரையும் சேர்த்துக்கிட்டு ஓன்ட ஸ்கூல காப்பாத்த போராடு' அன்று போலவே இன்றும் எனக்கு தைரியமூட்டி வழியனுப்பும் ஆமினா ரீச்சரை பிரிய மனமின்றி பிரிகிறேன். வெறுமையான மனதுடன் பாடசாலை வளவுக்குள் நுழைந்த நான் பல வேதனைகளோடு விலகிச் செல்கிறேன். என்னதான் ஆமினா ரீச்சரிடம் வீறாப்பு பேசினாலும் உள்ளம் தணலாய் கொதித்தது. அப்துள்ளா சேருக்கு யாரோ ஒருத்தர் சொன்ன ஒரு சொல் எனக்கே இவ்வளவு கஷ்டமாக இருக்கும் பொழுது அது அப்துள்ளா சேரின் இதயத்தை துளைத்திருக்குமே. அவர் ஒரு நாளும் சாபமிட்டிருக்க மாட்டார். ஆனால் அவரின் மனக்கஷ்டமே இந்த பாடசாலைக்கு சாபமாக மாறி இருக்குமே என்றெல்லாம் என் சிந்தனை நொந்தது. அப்போதுதான் ஒரு மூத்த கல்விமான் சொன்னது என் ஞாபகத்தில் வருகிறது. அதாவது 'ஒரு காலத்தில் எங்கள் சமூகத்தில் நிறைய தரமான பாடசாலைகள் இருந்தன. இன்று அவையெல்லாம் சரிந்து சீரழிந்து விட்டன.

பல புத்தி ஜீவிகள் இணைந்து பாடுபட்டும் முன்னேற்றமின்றி தவிக்கிறது. முன்னெப்போதும் இல்லாத விதத்தில் கோடிக்கணக்கான பணத்தை வாரி இறைத்தும் பயனின்றி தவிக்கின்றோம். இதற்கு எல்லாம் ஒரே காரணம், முன்பு அந்த பாடசாலைகளுக்காக தியாகத்துடன் உழைத்து, சொல்லாலும், செயலாலும் அடிவாங்கியவர்களின் மன உளைச்சல்தான் என்றால் அதில் மிகையில்லை.

அந்த உத்தமர்களின் உள்ளங்களைக் காயப்படுத்தியதால்தான் சமூகம் அவர்களின் சாபங்களுக்கு பலியாகி சீரழிகிறது'. இந்த வார்த்தைகளின் அர்த்தம் இன்றுதான் எனக்குப் புரிகிறது. 'ஒரு முஸ்லிமின் உள்ளத்தை உடைப்பது புனித கஃபாவை இடிப்பதற்கு சமன்' என்று உலமாக்கள் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அதனால் பல நல்ல உள்ளங்களை உடைத்து சாபங்களை சூடிக்கொண்ட பாடசாலைகளை நினைத்துப் பார்க்கிறேன். என்னையறியாமல் உஷ்ணப் பெருமூச்சொன்று தோன்றி மறைகிறது.

## இன்றைய பொருளாதார... (03ஆம் பக்கத் தொடர்)

மக்கள் சுமை தாங்க முடியாத நிலையை எட்டிய போது, அதைக் குறைக்க வரிகள் குறைக்கப்பட்டன என்பதை இப்போது அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.வரிகளை அதிகரிக்க வேண்டியிருக்கும் என்பதால் அரசின் வருவாய் வெகுவாகக் குறைந்துள்ளது. எனினும், நிதியமைச்சர் 2019ஆம் ஆண்டு சதவீதத்தை விட குறைவான வரிகளை அதிகரித்துள்ளார். வற் வரி தற்போது 12 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வேறு வழியில்லாததால், மக்களின் சுமையை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையை விமர்சிப்பவர்களில் சிலர் மாற்று வழியை சமர்ப்பிக்கத் தவறி விட்டனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் மாத வருமானம் ஏறக்குறைய 150 முதல் 300 அமெரிக்க டொலர்களாகும். ஒரு மில்லியன் இலங்கையர்கள் ஒவ்வொருவரும் 50 அமெரிக்க டொலர்களை மாதாந்தம் தமது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பினால் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களையே எம்மால் பெற முடியும். இந்தப் பணம் ஒரு கப்பலில் எரிபொருள் கொண்டு வருவதற்குக் கூட போதாது. மேலும் இரத்தினக்கற்களை ஏற்றுமதி செய்தால், எரிபொருள் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்ய அந்நிய செலாவணியை ஈட்ட முடியும் என்றும் சிலர் நினைக்கலாம். எவ்வாறாயினும், இரத்தினக்கற்கள் ஏற்றுமதி மற்றும் ஏனைய கனிமப் பொருட்கள் ஏற்றுமதி மூலம் கடந்த வருடம் நாம் பெற்ற மொத்த வருமானம் 44 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

**கே: அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முன்னர் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. இது பற்றிக் கூற முடியுமா?**

பதில்: உத்தேச 21 ஆவது திருத்தம் தொடர்பில் 225 எம்.பி.க்கள் மத்தியில் ஒரேயொரு கருத்து இருக்க முடியாது. இது குறித்து மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையினர் இதை செயல்படுத்த ஒப்புக் கொள்ள வேண்டும்.

**கே: அரசியலமைப்பின் உத்தேச 21 ஆவது திருத்தம் நாட்டில் அரசியல் ஸ்திரமற்ற தன்மையை இல்லாதொழிக்க வழிவகுக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை இல்லை. சில முன்னாள் அரசாங்கங்கள் ஒற்றை வாக்கு பெரும்பான்மையுடன் தொடர்ந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. எங்களிடம் 113 எம்பிக்கள் இருந்தால், ஆட்சியில் ஸ்திரமின்மை என்ன? பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் முந்திய தேர்தல்களில் நாங்கள் தோற்கடிக்கப்பட்டிருப்போம்.


திகதி 09.06.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4781
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,537,890.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 0 3 6 9 9 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,589,674.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 811
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,205,320.00
வெற்றி இலக்கினம் V வெற்றி இலக்கங்கள் 02 20 40 57
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,822,740.40

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0090
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,996,220.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 24 28 29 37
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,762,494.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 1259
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,774,800.00
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 2 7 9 1 7 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,704,543.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3023
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,153,680.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 46 50 60 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,581,352.96

கோடி 25+ Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1129
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,974,060.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 255,444,618.00
S 14 48 54 72 74
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



சுகாதார அமைச்சு

இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் SPMC

**Empty Hard Gelatin Capsules இற்கான முன் தகைமைக்கான புதிய வழங்குநர்கள்**

**REF: SPMC/RM/EHGC/2022/01**

Empty Hard Gelatin Capsules இற்கான ஓர் வழங்குநராக முன் தகைமைக்காக தகுதியும் தகைமையும் கொண்ட வழங்குநர்களிடமிருந்து இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் விண்ணப்பங்களை அழைக்கின்றது.

2. பொறியிடப்பட்ட முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல. 11 இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், பெறுகைக் குழுத் தலைவருக்கு முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த இல. 11 அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு நேரில் கையளிக்கலாம்.

3. கீழ்க்காணும் தகவுத் திறன்களை வழங்குநர்களால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- இயந்திர பரீட்சார்த்த ஓட்டத்திற்காக actual box/வழங்குநர்களின் Pack Size இல் சாம்பிள்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
- 100,000 எண்ணிக்கையான Casules களுக்கு குறையாது சாம்பிள்கள் இருத்தல் வேண்டும்.
- Machine rejection rate 0.05% இற்கு மேற்படாது இருத்தல்
- Disintegration Should be not more than 15 mts.
- Moisture ($105^0$C for 13-16 hrs) (13%-16%)
- பொருட்களின் மாதிரிகள் பின்வருமாறு
  - ✦ Empty Hard Gelatin Self Locking Capsules shells IP for High Speed autometic filling machine (Vacuum Separation) Size 1
  - ✦ Letters 'SPMC' on the body & 'SPMC Logo' Mark on the Cap Printed circular rectified in double Colour (Black edible ink for body & white edible ink for cap)
  - ✦ `Empty Hard Gelation capsules' இற்கு மேற்படி மாதிரிக்கான capsulas கள் கட்டாயமாக உறுதி செய்தல் வேண்டும்.
- நிறங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.
  1. Body: Beige Opeque, Cap: Dark blue Opeque
  2. Body Bright Orange Opeque, Cap: Black opeque
- சுய ஆயுட்காலம் பின்வருமாறு அமையும்
- இலங்கைக்கு கிடைக்கும் வேளையில் குறைந்தபட்சம் 2/3 உள்ளக ஆயுட்காலம் (residual shelf) (குறைந்தபட்சம் 4 வருடங்களுக்குரியது)
- தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்கள் மதிப்பீட்டிற்காக கீழ்க்காண்பவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
  - கடந்த 3 ஆண்டுகளின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட கணக்கின் மூலம் வழங்குநர்களின் நிதி நிலைப்பாடு
  - இயந்திர கொள்ளளவு
  - மருந்தாக்கல் சார்ந்த சான்றிதழ்கள்
  - தற்போதைய பாவனையாளர் பிரதான பட்டியல்

4. பின்வரும் ஆவணங்களையும் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்
   i. பகுப்பாய்வுச் சான்றிதழ்
   ii. சிறந்த உற்பத்தி நடைமுறை (GMP) சான்றிதழ்

5. விண்ணப்பங்கள் தரப்பட்டுள்ள முகரிக்கு 2022.06.27ம் திகதி 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு விநியோகிக்கப்படல் வேண்டும். அத்துடன் தாமதமான விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'Pre Qualifying new suppliers for E/H Gelatin Capsules for machine samples and REF: SPMC/RM/EHGC/2022/01' என்று எழுதப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும்போது வழங்குநர்கள் சமுகமளிக்க முடியும்.

6. ஆர்வமுள்ள மற்றும் தகைமையான வழங்குநர்கள் மேலதிக தகவல்களை பிரதிப் பொது முகாமையாளர் திட்டமிடல் மற்றும் பெறுகை SPMC (தொ.பே. 011-2623298) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

7. SPMC இன் இணையதளம் (www.spmclanka.lk) இலிருந்து பார்வையிட முடியும்.

**தலைவர்,
பெறுகைக் குழு,
அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்
இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, கந்தவல எஸ்டேட்,
இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி (00)94-11-2635353/(00)94-11-2637574/ (00)94-11-2623298
மின்னஞ்சல்: spmclanka@sltnet.lk
இணையதளம்: www.spmclanka.lk
பெக்ஸ்: (00)94-11-2634771, 2626621**



# வாகனங்கள் விற்பனைக்கு

## MAHARA VEHICLE YARD

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAA-83XX | AAS-35XX | ABO-04XX | QL-21XX | QT-33XX | QZ-10XX | YY-04XX |
| AAB-50XX | AAS-89XX | QB-50XX | QM-14XX | QT-98XX | QZ-32XX | YY-24XX |
| AAB-54XX | AAU-15XX | QC-24XX | QN-46XX | QU-03XX | YA-35XX | YY-80XX |
| AAG-28XX | AAV-77XX | QE-48XX | QN-68XX | QU-99XX | YM-55XX | YZ-72XX |
| AAG-56XX | AAX-11XX | QE-56XX | QN-79XX | QW-85XX | YM-99XX | YZ-90XX |
| AAI-81XX | ABC-44XX | QG-13XX | QO-22XX | QW-98XX | YT-50XX | QJ-05XX |
| AAJ-27XX | ABF-35XX | QJ-81XX | QO-59XX | QX-46XX | YU-10XX | |
| AAO-79XX | ABG-55XX | QK-38XX | QR-17XX | QX-68XX | YW-92XX | |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| 30-15XX | ISUZU | MOTOR VAN | BIE-18XX | TVS | MOTOR CYCLE |
| LO-04XX | MAHINDRA | MOTOR LORRY | BIH-27XX | HERO | MOTOR CYCLE |
| BHG-67XX | HERO | MOTOR CYCLE | BIH-67XX | TVS | MOTOR CYCLE |
| BHX-15XX | YAMAHA | MOTOR CYCLE | BIK-61XX | TVS | MOTOR CYCLE |
| BHZ-43XX | BAJAJ | MOTOR CYCLE | BIM-20XX | HERO | MOTOR CYCLE |
| BIB-66XX | TVS | MOTOR CYCLE | BIM-70XX | HERO | MOTOR CYCLE |
| BIB-80XX | HONDA | MOTOR CYCLE | BIV-65XX | HERO | MOTOR CYCLE |
| BIC-18XX | HERO | MOTOR CYCLE | BIX-52XX | HERO | MOTOR CYCLE |
| BID-42XX | HERO | MOTOR CYCLE | CAX-99XX | MAZDA | MOTOR CAR |
| BID-43XX | HERO | MOTOR CYCLE | JK-90XX | MARUTI | MOTOR CAR |
| BID-99XX | TVS | MOTOR CYCLE | PS-02XX | MAHINDRA | MINI TRUCK |

## HORANA VEHICLE YARD

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAG-05XX | ABB-03XX | QL-36XX | QR-09XX | QV-19XX | YH-61XX | YX-54XX |
| AAG-20XX | QA-49XX | QN-93XX | QR-51XX | QX-45XX | YK-59XX | YX-64XX |
| AAG-75XX | QA-70XX | QO-29XX | QS-52XX | QZ-19XX | YQ-00XX | YY-42XX |
| AAQ-63XX | QE-06XX | QO-46XX | QS-76XX | QZ-88XX | YX-46XX | |
| AAW-56XX | QK-63XX | QQ-20XX | QU-04XX | QZ-89XX | YX-53XX | |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| PC-08XX | MICRO | Motor Van | BIJ-95XX | HERO | MOTOR CYCLE |
| BFL-44XX | BAJAJ | MOTOR CYCLE | BIL-13XX | TVS | MOTOR CYCLE |
| BGH-82XX | TVS | MOTOR CYCLE | BIL-95XX | HERO | MOTOR CYCLE |
| BGK-37XX | TVS | MOTOR CYCLE | BIN-98XX | TVS | MOTOR CYCLE |
| BHW-82XX | HERO | MOTOR CYCLE | BIO-05XX | HERO | MOTOR CYCLE |
| BIA-92XX | HONDA | MOTOR CYCLE | BIS-92XX | HERO | MOTOR CYCLE |
| BIC-06XX | TVS | MOTOR CYCLE | BIT-86XX | HERO | MOTOR CYCLE |
| BIC-17XX | HERO | MOTOR CYCLE | 14 SRI 60XX | TOYOTA | MOTOR CAR |
| BIC-40XX | YAMAHA | MOTOR CYCLE | CAO-85XX | SUZUKI | MOTOR CAR |
| BIC-58XX | TVS | MOTOR CYCLE | | | |

## NITTAMBUWA VEHICLE YARD

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAA-74XX | AAN-57XX | QK-65XX | QS-24XX | QT-75XX | YE-66XX | YO-73XX |
| AAC-03XX | AAS-89XX | QL-53XX | QS-40XX | QU-71XX | YJ-50XX | YQ-57XX |
| AAC-30XX | AAT-96XX | QL-59XX | QS-42XX | QU-78XX | YK-19XX | YR-29XX |
| AAF-10XX | AAZ-78XX | QM-41XX | QS-54XX | QW-71XX | YL-13XX | YS-08XX |
| AAG-34XX | ABA-46XX | QN-93XX | QS-84XX | QX-42XX | YL-86XX | YZ-90XX |
| AAH-22XX | QF-25XX | QO-13XX | QT-29XX | QX-74XX | YM-60XX | |
| AAH-75XX | QI-89XX | QQ-91XX | QT-45XX | QZ-01XX | YN-03XX | |
| AAI-79XX | QJ-35XX | QR-12XX | QT-73XX | YE-52XX | YO-50XX | |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| 56-33XX | TOYOTA | MOTOR VAN | KC-40XX | VOLVO | MOTOR CAR |
| 56-48XX | MAZDA | MOTOR VAN | KI-00XX | TOYOTA | MOTOR CAR |
| 60-12XX | TOYOTA | MOTOR VAN | LC-28XX | MAHINDRA | MINI TRUCK |
| 60-75XX | ISUZU | MOTOR VAN | PU-97XX | DFSK | MINI TRUCK |
| LF-28XX | LANKA ASHOK LEYLAND | MOTOR LORRY | PY-54XX | TATA | MINI TRUCK |
| CAD-66XX | HONDA | MOTOR CAR | RD-97XX | MAHINDRA | TRACTOR |
| HR-32XX | KIA | MOTOR CAR | | | |

## KULIYAPITIYA VEHICLE YARD

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAI-39XX | QL-44XX | QT-45XX | QV-17XX | QX-42XX | YG-16XX | YO-31XX |
| AAP-39XX | QL-93XX | QU-71XX | QW-52XX | QZ-42XX | YH-90XX | |
| AAR-66XX | QR-78XX | | | | | |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| LA-40XX | LANKA ASHOK LEYLAND | MOTOR LORRY | BIH-00XX | SUZUKI | MOTOR CYCLE |
| BHA-68XX | TVS | MOTOR CYCLE | BIP-77XX | TVS | MOTOR CYCLE |
| BIB-87XX | HONDA | MOTOR CYCLE | KT-33XX | HONDA | MOTOR CAR |
| BIF-63XX | HERO | MOTOR CYCLE | RE-77XX | NEW HOLLAND | TRACTOR |
| BIG-49XX | HERO | MOTOR CYCLE | | | |

## ANURADHAPURA VEHICLE YARD

### THREE WHEELERS

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| AAL-91XX | AAX-80XX | ABN-63XX | QK-57XX | QT-35XX | QX-12XX | YM-15XX |
| AAO-39XX | ABE-49XX | ABQ-11XX | QM-02XX | QV-01XX | QX-72XX | YN-91XX |
| AAU-63XX | ABF-19XX | QJ-27XX | QO-32XX | QW-16XX | YI-44XX | YP-55XX |

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| BGB-64XX | HERO | MOTOR CYCLE | 15-37XX | Nissan | MOTOR CAR |
| BGR-42XX | SUZUKI | MOTOR CYCLE | 18-70XX | DAEWOO | MOTOR CAR |
| BGT-78XX | TVS | MOTOR CYCLE | CAX-03XX | TOYOTA | MOTOR CAR |
| BHS-60XX | TVS | MOTOR CYCLE | CAY-48XX | SUZUKI | MOTOR CAR |
| BIB-69XX | TVS | MOTOR CYCLE | RE-63XX | SONALIKA | Tractor |
| BIL-83XX | HERO | MOTOR CYCLE | | | |

## THALAWATHUGODA VEHICLE YARD

### OTHER VEHICLES

| VEHICLE NO | MODEL | MAKE | VEHICLE NO | MODEL | MAKE |
|---|---|---|---|---|---|
| PC-12XX | MAZDA | MOTOR VAN | CBC-28XX | HONDA | MOTOR CAR |
| NF-73XX | HINO | MOTOR COACH | KK-71XX | MICRO | MOTOR CAR |
| CAH-33XX | NISSAN | MOTOR CAR | PD-12XX | NISSAN | DUAL PURPOSE VEHICLE |

2022 ஜூன் 13, 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை மேலுள்ள முகவரியில் பரீட்சிக்க முடியும். ஜூன் 17ஆம் திகதி பி.ப. 4.00க்கு கேள்விமனு ஆவணம் ஏற்பது நிறைவு செய்யப்படும்.

கேள்விமனு ஆவணங்கள் மீளளிக்கப்படாத 250.00 ரூபாவை செலுத்தி ஹொரண, அநுராதபுரம், நிட்டம்புவ, குளியாப்பிட்டி, மஹர மற்றும் தலவத்துகொட கிளைகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் வாகனங்களை அந்த நேரத்தில் காணப்படும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுவார்கள். அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் வாகனத்தின் முழுக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டு செல்ல வேண்டும்.

தேர்வு செய்யப்பட்ட வாகனங்களில் சில வாகனங்கள் லீசின் வசதியின் கீழ் மாத்திரம் விற்பனை செய்யப்படும்.

மேலும் வாகனங்களில் நிலுவையாக உள்ள அரசாங்க வரி மற்றும் வருமான வரி என்பவற்றை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

வாகனபரி சோதனை

**Mahara Vehicle Yard:** No. 377/2, Mahara, Kadawatha
**Horana Vehicle Yard:** No. 166, Aguruwathota Road, horana.
**Anudharapura Vehicle Yard:** Ala 05, Rathmale, Shrawasthipura.
**Nittabmuwa Vehicle Yard:** No. 655, Jayasuriya Mawatha, Nittabmuwa.
**Kuliyapitiya Vehicle Yard:** No. 259, Madampe Road, Kuliyapitiya.
**Thalawathugoda Vehicle Yard:** No. 175, School Lane, Thalawathugoda

Do Ads

* முன் அறிவித்தலின்றி வாகனத்தை மீளபெறும் உரிமை நிறுவனத்துக்குண்டு.

**CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC**
No. 377/2, Mahara, Kadawatha
Tel: 0112 925 044 / 034- 22 66 244 / 025-205 26 32

# அறியாமை

இதமான காலைப் பொழுது. அந்த அகன்ற பாதையின் இருமருங்கிலும் அமைந்திருந்த பசுமையான புற்தரையில் பனித்தூறல்கள் படர்ந்து புத்தொளி பரப்பிக்கொண்டிருந்தது. பெரியவர்களும், சிறியவர்களும் சுறுசுறுப்பாக தத்தமது பணிகளில் ஈடுபட்டிருந்தனர். வெள்ளைச் சீருடையில் வெண்ணிற ரோஜாக்களாக இதழ் விரித்துச் செல்லும் மாணவர்களை காணும் போது எனக்கு பொறாமையாக இருந்தது. புத்தகச் சுமைகளை சுமக்க முடியாமல் வெறுப்புடன் நடக்கும் சின்னஞ் சிறுசுகளை அவதானிக்கின்றேன். 'இந்த சுமைகளுக்கே இவ்வளவு தள்ளாடும் இவர்கள் நாளக்கி வாழ்க்கைச் சுமைகளை எப்படி தாங்க போறாங்களோ தெரியல.' எனக்குள் நானே நினைத்துக் கொண்ட போது 'கிரீச்..' என்ற சத்தத்துடன் என்னை உரசிச் செல்லும் அளவுக்கு ஒரு ஆட்டோ வந்து நின்றது. நான் ஒரு கணம் பதறி போய் விட்டேன். வீல் சாரதி வெளியே தலையை நீட்டி 'என்னா காசீம் காக்கா மகள ஸ்கூலுக்கு கூட்டிட்டு போறங்க போல. இதுல ஏத்திவுடுங்க நான் கூட்டிட்டு போறன்' என்றதும் கொஞ்சம் சுதாகரித்துக் கொண்டேன். 'இல்ல தம்பி நீங்க போங்க. நான் இவட ரீச்சர் கூட கொஞ்சம் கதைக்க இருக்கு. அதனால நானே கூட்டிட்டு போறன். நீங்க கவனமா போங்க.' நான் சொல்லி முடிப்பதற்குள் மீண்டும் அதே வேகத்தில் பறந்தது அந்த ஆட்டோ. அதற்குள் சுமார் எட்டு பிள்ளைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்த போது மனசுக்குள் 'திக்' என்றது. அந்த பிள்ளைகளைப் பற்றி அந்த ஆட்டோக் காரருக்கு எந்தவித கவலையும் இல்லை. வருமானமே அவருக்கு முக்கியமானதாக இருந்தது. அந்த சிறுசுகளை பெற்றவர்களும் அது பற்றி கண்டு கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. முன்பு என்றால் அப்துள்ளா சேர் இது பற்றி அடிக்கடி பெற்றார் கூட்டம் போட்டு பேசுவார். அப்போது ஒரு கட்டுப்பாடு இருந்தது. பிள்ளைகள் கூட பாதையின் வலது புறமாக அழகாக நடந்து செல்வார்கள்.

பாடசாலை ஒழுங்கைக்குள் எந்தவொரு ஆட்டோவும் செல்ல முடியாது. பாடசாலைக் குள்ளேயும் வெளியேயும் கடமை, கட்டுப்பாடு, கௌரவம், ஒழுக்கம் அனைத்தும் பேணப்பட்டன. ஆனால் இன்று எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. 'தடி எடுத்தவரெல்லாம் வேட்டைக் காரர்' என நினைத்துக் கொண்டு செயற்படுகிறார்கள். எந்தவொரு ஒழுங்கு விதியும் இல்லை. இருந்தாலும் அதை பின்பற்றுவதற்கும் யாரும் தயாராகவும் இல்லை. இதை எல்லாம் எண்ணிப் பார்க்கின்றபோது தலை சுற்றியது. பெருமூச்சொன்றை ஆழமாக விட்டவனாக பாடசாலை வளவுக்குள் பாதங்களைப் பதிக்கிறேன். பிள்ளைகள் அங்குமிங்குமாக சிதறிக் கிடக்கின்றனர். ஆசிரியர்கள் மரத்தடிகளில் கூடி கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஓரிருவர் அதிகார தொனியில் கர்ஜித்துக் கொண்டிருந்தார்கள். சுற்றுப்புரத்தைப் பார்த்துக்கொண்டே காரியாலய வாசலுக்கு வந்துவிட்டேன். ஒரு நாய் கூட என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. 'நீங்க யாரு? ஏன் வந்தீங்க?' என்று கேட்பதற்கு கூட யாருக்கும் நாதியில்லை. மெதுவாக தலையை உயர்த்தி காரியாலயத்திற்கு உள்ளே பார்வையை செலுத்துகிறேன். இதில் யார் அதிபர் என்று அடையாளம் காண முடியாத அளவுக்கு நான்கு பேர் சரி சமமாக அமர்ந்து அரசியல் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அதிபர் காரியாலயம் என்பதால் கச்சிதமாக இருந்தது. அழகான சோபாவும், அதற்கே உரிய தளபாடங்களும் பளபளத்துக்கொண்டிருந்தன. காபட் போட்ட தரையில் கால் வைக்கவும் கூச்சமாக இருந்தது. இத்தனைக்கும் நடுவே காரியாலய சுவரில் மாட்டியிருந்த அந்த பெரிய கடிகாரத்தின் மீது என் பார்வை படர்கிறது. அது சரியாக காலை ஏழு ஐம்பது மணியைக் காட்டிக்கொண்டிருந்தது. என் கைக் கடிகாரத்தையும் ஒரு முறை சரிபார்த்துக் கொண்டேன். இரண்டுமே சரியாகத்தான் இருந்தன. ஆனால் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு விட்டதா, இல்லையா என்பதை என்னால் ஊகித்துக்கொள்ள முடியவில்லை. தலையை சொறிந்த வண்ணம் என் வலது கையை இறுக்கிப்பிடித்துக் கொண்டிருந்த மகளைப் பார்க்கிறேன். அவள் இந்த உலகத்தில் இல்லை என்பதை புரிந்து கொண்டு காரியாலயத்திற்குள் நுழைய எத்தனிக்கிறேன். அப்போது பாடசலையின் ஆரம்ப பிரிவின் பக்கமிருந்து ஒரு ரீச்சர் ஓடி வருவதை கண்டு என் பாதங்களை நகர்த்திக்கொண்டேன். அவர் என்னை நோக்கித்தான் வருகிறார் என்பதை நான் உணர்ந்து கொள்வதற்குள் 'வாப்பா...வாப்பா.. அந்தா எங்கட ரீச்சர் வாரா என்ன விடுங்க நான் போரன்.' என் கைகளை உதறிவிட்டு ஓடும் மகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்போதுதான் அது ஆமினா ரீச்சர் என்பதை நான் தெரிந்து கொண்டேன். முன்பெல்லாம் ஒரு ஆசிரியரை சந்திப்பதென்றால் அதற்கு ஒரு தினத்தை ஒதுக்கி இருப்பார்கள். இல்லாவிட்டால் அதிபரிடம் முன்னனுமதி பெற்றதன் பின்புதான் குறித்த ஆசிரியரை சந்திக்க வேண்டும். ஆனால் ஆமினா ஆசிரியரை கண்டதும் இதையெல்லாம் நான் மறந்துவிட்டேன். என் மகளைப் போல் ஓடிச்சென்று அவரின் கைகளைப் பற்றிக்கொள்ள வேண்டும் போலிருந்தது. இருந்தாலும் மனதை அடக்கிக்கொண்டு அவர் வருகின்ற திசையை நோக்கி வேகமாக நடக்கிறேன்.

அதற்குள் அவர் என்னருகில் வந்துவிட்டார். நான் அவரிடம் சென்று மரியாதையாக 'அஸ்ஸலாமு அலைக்கும் ரீச்சர்' என்கிறேன். 'வஅலைக்கும் ஸலாம். வாங்க ராஜா இப்பதான் இந்த ரீச்சரயும், ஸ்கூலயும் பார்க்க தோணிச்சு போல?' அதே பழைய பாணியில் மலர்ந்த முகத்தோடு பேசினார் ரீச்சர். 'இல்ல ரீச்சர் இப்ப நான் கொழும்புல கட செய்றன். அதனால அடிக்கடி வர முடியல. ஆனா மகள் எப்பவும் உங்கள பத்திதான் கதப்பா. இன்னக்கி கூட என்னய லீவு போட வச்சு அவதான் அடம்புடிச்சி உங்ககிட்ட கூட்டி வந்திருக்கா.' மூச்சி விடாமல் கூறி முடித்த என்னை செல்லமாக கோபித்தார் ஆமினா ரீச்சர். 'அப்ப இன்னிக்கும் தொரயா நெனச்சி வரல்ல. மகள் கூப்பிட்டான்னு வந்திருக்கீங்க. சரி சரி வாங்க கிளாஸ்ல போய் பேசுவம்.'

கூறிக்கொண்டே ரீச்சர் முன்னே நடக்க, பெட்டிப் பாம்பாக அவரை பின்தொடர்ந்த எனக்குள் சிந்தனை வட்டமிட்டது. ஆமாம் நானும் இப்பாடசாலையின் பழைய மாணவர்களுள் ஒருவன்தான். நான் முதலாம் வகுப்புக்கு சேர்க்கப்பட்ட போது முதன் முதலாக என்னை தாங்கிக்கொண்ட எனது இரண்டாவது தாய்தான் இந்த ஆமினா ரீச்சர். அன்று அவர் எனக்குச் சொல்லிக்கொடுத்த அகரமும், அவர் காட்டிய அன்பும், அரவணைப்பும்தான் என்னையொரு வணிகத்துறை பட்டதாரியாக உருவாக்கி இருக்கிறது என்றால் அதில் மிகையில்லை. இன்று தனியொரு வியாபாரத்ததை ஆரம்பித்து நடாத்துகின்ற மன வலிமையைக் கொடுத்தது நான் பெற்ற பட்டம் என்பதைவிட ஆமினா ரீச்சர் போன்றவர்கள் காட்டிய வழிதான் என்பதை நினைக்கும் போது எனக்கே ஆச்சரியமாக இருக்கும். எனக்கு ஆரம்ப கல்வியை ஊட்டிய அதே ஆசிரியர் இன்று எனது மகளுக்கு இரண்டாம் தரத்திலே கற்பித்துக் கொண்டிருக்கிறார் என்பதில் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அன்று நான் பார்த்த ஆமினா ரீச்சர் இளமையாகவும், துடிதுடிப்பாகவும், கலகலப்பாகவும் இருந்தார். ஆனால் இன்று அவரிடம் அந்த சுறுசுறுப்பை காணவில்லை.

எதையோ இழந்த மாதிரியான ஒரு சோகம் அவர் முகத்திலே இழையோடிப் போயிருந்தது. இது முதுமையினால் ஏற்பட்டதா அல்லது பாடசாலை மீதுள்ள வெறுப்பினால் ஏற்பட்டதா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஆசிரியர் தொழிலில் அர்ப்பணிப்போடு செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவருக்கு தொழில் சலிப்பு ஏற்பட்டிருக்கலாம் என எனக்குள் நானே நினைத்துக் கொண்ட போது, 'ஆ..காசிம் நீ போய் அந்த வெயிட்டிங் ரூம்ல உட்காரு. நான் புள்ளைகளுக்கு முதல் பாடத்த முடிச்சு அதுல ஏதாச்சும் வேல கொடுத்துட்டு வாரன். இன்னக்கி உன்னோட நிறைய கதைக்க இருக்கு. ப்ளீஸ் பண்ணி எனக்காக கொஞ்சம் வெயிட் பண்ணு.' என்ற ரீச்சரின் குரல் என்னை சுய நினைவுக்கு கொண்டு வந்தது. 'பரவாயில்ல ரீச்சர் நீங்க பாடத்த முடிச்சிட்டே வாங்க எவ்வளவு நேரம்னாலும் நான் வெயிட் பண்றன்.' எனச் சொல்லிக் கொண்டே அந்த ரூமுக்குள் நுழைகிறேன்.

நல்ல வேளை அங்கு யாரும் இருக்கவில்லை. பாடசாலையின் வெளியில் பார்வை படும் விதத்தில் வாசலோரமாக இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டேன். என்னைத் தாண்டி எத்தனையோ பேர் சென்று விட்டார்கள் யாரும் எதுவும் கேட்கவில்லை. பாடசாலை ஆரம்பித்து முப்பது நிமிடங்களையும் தாண்டி விட்டது. ஆரம்ப பாடவேளையில் இருக்க வேண்டிய அமைதி இதுவரையும் ஏற்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. மாணவர்களின் ஆரவாரம் காலை நேரத்தின் புனிதத்தை புதைத்துக் கொண்டிருந்தது. ஆசிரியர்கள் ஆங்காங்கே கூடிக் குலாவிக் கொண்டிருந்தார்கள். வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்ற சிந்தனை அவர்களிடம் காணப்படவில்லை. இந்த நேரம் ஆமினா ரீச்சரை நினைக்கும் போது எனக்கு பெருமையாக இருந்தது.

ஏனெனில் ஒரு சைக்கிள் இடைவெளி கிடைத்தால் கூட வகுப்புக்குச் சென்று கற்பிப்பதை தவிர்த்துக் கொள்ளும் புதிய தலைமுறை ஆசிரியர்களோடு ஒப்பிடுகின்ற போது முப்பத்தைந்து வருட அனுபவத்தைக் கொண்ட பழைய முதுமைகள் இன்னும் கற்பித்தலுக்கு முன்னுரிமை கொடுப்பதை காணும்போது கண்களில் நீர் கசிகிறது. கைக் குட்டையை எடுத்து கண்களை துடைத்துக்கொள்கிறேன். 'என்ன ஸ்கூல பார்த்தா தொரக்கி அழுக வருதோ?' கேட்டுக் கொண்டே ஆமினா ரீச்சர் அந்த ரூமுக்குள் நுழைவதைக் கண்டு அவசரமாக எழுந்து நின்று கொண்டேன். 'என்ன காசிம்..மிச்ச நேரமா காக்க வச்சிட்டேனா? சொரிப்பா என்னால காலையிலேயே படிப்பிக்காம இருக்க ஏலா. எங்கள நம்பி வார இந்த சிறுசுகள ஏமாத்தினா அன்னக்கி தூக்கமே வராது அதனாலதான்.....' ரீச்சர் சரியாக முடிக்கவுமில்லை இடையில் நான் குறுக்கிட்டேன்.

'இல்ல ரீச்சர் இல்ல எனக்கு எந்த பிரச்சினையும் இல்ல. இந்த வயசுலயும் கடமையில ஆர்வமா இருக்குற உங்கள பார்த்தா எனக்கு புல்லரிக்குது ரீச்சர்' என எனது பாணியில் நான் சொல்ல, 'அப்ப எனக்கு வயசு போயிருச்சி நான் கிழவியாகிட்டன்னுதானே சொல்ல வார..?' என அவர் கிண்டலடிக்க இருவரும் கலகலவென சிரித்துக்கொண்டோம். எனக்கு பாலர் வயதிற்கே சென்று விட்டதைப் போன்று மனசெல்லாம் நிறைந்திருந்தது. ரீச்சரின் முகத்திலும் பௌர்ணமி பளிச்சிட்டது. இருவரும் அமர்ந்து நீண்ட நேரம் பேசினோம்.

முதலில் ரீச்சர் என்னைப்பற்றியும், எனது குடும்பத்தைப் பற்றியும், என்னுடைய வகுப்புத் தோழர்கள் பற்றியும் ஒவ்வொருவராக விசாரிக்கின்றார். பதிலுக்கு நானும் ரீச்சரை பற்றியும், அவரது குடும்பம், பிள்ளைகள் பற்றியும் விசாரித்து தெரிந்து கொண்டேன். சுக விசாரிப்பகளைத் தொடர்ந்து கொஞ்ச நேரம் இருவருமாக பழைய ஞாபகங்களை மீட்டிக் கொண்டோம். இருவர் முகத்திலும் புன்னகையின் ரேகைகள் படர்ந்திருந்தது. ஒரு கணம் ரீச்சரின் கண்களில் நீர் கசிய, எனது கண்களும் இலேசாக ஈரமாகியது. இந்த ஈர நினைவுகளை வேறு திசையில் திருப்ப நினைத்து, 'அதெல்லாம் சரி ரீச்சர் இப்ப எங்கட ஸ்கூல் எப்படி போகுது'? என மெதுவாக பேச்சை ஆரம்பித்தேன்.

'அத ஏன் கேக்குற காசிம்... எல்லாம் முடிஞ்சி போச்சி.. ஒரு காலத்துல ஆஹா ஓ,,ஹோன்னு இருந்த இந்த ஸ்கூல் இப்ப குட்டிச் சுவரா போச்சு... இதுக்கு மேல என்னால முடியலடா... அதனால காலத்துக்கு முன்னமே பென்சன் போரதா முடிவெடுத்துட்டன். மாணிக்கமா பார்த்த ஸ்கூல மண்ணாங்கட்டியா பார்க்க முடியலடா..' பெருமூச்சுடன் ரீச்சர் பேசி முடிக்க ஒருகணம் தொண்டை அடைத்தது. இருந்தாலும் என்னை கட்டுப்படுத்திக் கொண்டே, 'யே ரீச்சர் அப்துள்ளா சேர் பிரின்ஸிபெல்லா இருந்த நேரம் இந்த ஸ்கூல் நல்லாதானே இருந்திச்சு.. அப்பரிசல்ட்டும் நல்லா இருந்திச்சு..ஒழுக்கமும் நல்லா இருந்திச்சு... அவர் போய் ஏழு வருசம் இருக்கும்னு நெனக்கிறன்..அதுக்குள்ள இவ்வளவு வீழ்ச்சியா...? என்னால தாங்க முடியல ரீச்சர்..' என என் ஆதங்கத்தை வெளிப்படுத்தினேன். 'எல்லாம் அந்த மனுசனோட போச்சி காசிம்... அவர்ட காலத்துல வெளி இடங்கள்ற இருந்தும் பெரிய பெரிய ஸ்கூல்ற இருந்தும் பிள்ளைகள் இங்க வந்தாங்க.. இன்னக்கி எல்லாரும் இங்க இருந்து வேற ஸ்கூலுக்குப் போறாங்க. அவருக்குப் பின்னால மூணு பிரின்ஸிபெல் வந்தாச்சு... ஒண்ணும் உருபடியில்ல.. செய்றான்களும் இல்ல...செய்ய விடுறான்களும் இல்ல... இன்னொன்னு உனக்கு தெரியுமா...? இப்ப இங்க நாலு பிரின்சிபெல்டா... இது எல்லாத்துக்கும் உங்கட எஸ்டீசீ, ஓல்ட் போயிஸ் எல்லாரும் பதில் சொல்லி ஆகணும் காசிம்..' ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து இறுதியாக ரீச்சர் லேசாக என்னையும் கடிப்பதைப் போல் இருந்தது. நான் கொஞ்சம் உசாராகினேன். 'எனக்கு தெரிஞ்ச வர இந்த எஸ்டீசீ, ஓல்ட் போயிஸ் எல்லாரும் ஸ்கூல முன்னேத்தனும்னு நல்லா கஷ்டப்பட்றாங்க ரீச்சர் ஆனா ஸ்கூல் நிர்வாகம் அத சரியா பயன் படுத்தலன்னு எனக்கு தோணுது ரீச்சர்' என கொஞ்சம் அழுத்திச் சொன்னேன்.

'முயற்சி செஞ்சா மட்டும் போதா காசிம்.. ஒருத்தர ஒருத்தர் மதிக்கனும்.. விட்டுக்கொடுக்கணும்.. ஒரு நாளும் ஸ்கூல் நிர்வாகத்துல தல போடாம இருக்கணும்.. நன்றி மறக்காம இருக்கணும்.. தன்ன பெரிய ஆளா காட்டிக்க நெனக்கக் கூடாது.. ஸ்கூலுக்காக எதையும் செய்ய தயாரா இருக்கனும்...' ஆமினா ரீச்சர் அடுக்கிக் கொண்டே போனார் என்னால் எதுவும் பேச முடியாது வாயடைத்துப் போனேன். அதுக்காக ஆமினா ரீச்சர் பக்கச் சார்பாக பேசவும் இல்லை. நடுநிலையாக பேசினார். பாடசாலை நிர்வாகத்தின் குறைபாடுகளையும், ஆசிரியர்களின் கற்பித்தல் குறைபாடுகளையும் விலாவாரியாக விளக்கினார்.

அப்துள்ளா அதிபரின் அளப்பரிய அர்ப்பணிப்புகளை நன்றியோடு நினைவு கூர்ந்தார். அவருடைய காலத்தில்தான் அனைவரும் மகிழ்ச்சியாக வேலை செய்தோம் என்பதை ஒப்புக்கொண்டார். எஸ்டீசீக்கும் அப்துள்ளா சேருக்குமிடையில் இருந்த உறவை மெச்சினார். அனைவரும் சந்தோசமாக வேலை செய்து நல்லதையே அறுவடை செய்தோம். அது மாதிரியான ஒரு காலம் இனி வரப்போவதில்லை எனச் சொல்லி கண்ணீர் விட்டழுதார்.


அனைத்தையும் உள்வாங்கிக் கொண்ட நான் மெதுவாக கேட்டேன். 'ரீச்சர் நீங்க அப்துள்ளா சேரப்பத்தி இவ்வளவு பெருமையா பேசுறீங்களே.. ஆனா அவருதான் போர நேரம் இந்த ஸ்கூல குழப்பிட்டு போனார்னு யாரோ ஒருத்தர் சொல்லி இருக்காரே..?' இதை கேட்ட ஆமினா ரீச்சர் கொஞ்சம் ஆவேசப்பட்டார். 'இத கேட்குற நேரம் எனக்கே நெஞ்சு பத்துது காசிம்.. இத சொன்னது யாருமில்ல அப்துள்ளா சேர் தூக்கி வச்சிருந்த அப்போதைய எஸ்டீசீ செக்கரெட்டரிதான் ஒரு கமிட்டி மீட்டிங்ல வச்சு சொன்னாரு.. அதுல நானும் இருந்தன். இன்னும் நிறையப் பேர் இருந்தாங்க.. யாருமே இதுக்கு எதிர்த்து பேசல..நான் கூட மௌனமா இருந்தத நெனச்சா வெக்கமா இருக்கு காசிம்..' சொல்லிக் கொண்டே சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டார் ஆமினா ரீச்சர். எனக்கு அப்துள்ளா சேரப்பற்றி நல்லா தெரியும். இந்த பாடசாலையை தன் உயிரா நினைத்து கஷ்டப்பட்டவர். இரவு பகல் பாராது பாடசாலைக்காக உழைத்தவர். தன் கரங்களால் செங்கற்கள் இறக்கியவர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

வரக்காமுறையூர் ராசிக் ...



## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 27



திரு/திருமதி.செல்வி ........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ........................................

........................................

........................................

........................ ........................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 26
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 27

**இடமிருந்து வலம்**

(01) அழகு.
(05) இதுவும் நினைவுச் சின்னம்தான். (திரும்பியுள்ளது)
(06) ஆரோக்கியம்.
(08) பாதுகாப்பு மேலுறை. (குழம்பியுள்ளது)
(09) அறிவுத்தன்மை குழம்பிவிட்டது.
(10) அழகானவர்களை இப்படியும் சொல்வர். (குழம்பியுள்ளது)
(13) செருக்கு. (குழம்பியுள்ளது)
(15) எப்போதும்.
(16) சாதுவான காட்டு விலங்கு.
(17) இலங்கையிலுள்ள மாவட்டங்களில் ஒன்று.
(18) குரங்கு.
(20) தாயாரையும் ஒருவகை நோயையும் குறிக்கும்.
(21) இறைவனை அல்லது மகான் ஒருவரை பக்தி உணர்வுடன் காணுதல். (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(01) தானாக தோன்றுவது.
(02) முதல்வன்.
(03) கலை, இலக்கிய, விளையாட்டு விஷயங்களை சுவைக்கும் அபிமானி.
(04) தாவரங்களில் இலை, காய்களை தாங்கிநிற்கும் மெல்லிய தண்டுப்பகுதி.
(06) தூய்மை.
(07) தென்னிலங்கையிலுள்ள ஒரு இந்து ஆலயம். (குழம்பியுள்ளது)
(11) புதல்வன்.
(12) பரபரப்பு அல்லது அவசரம் இல்லாத இயல்புநிலை.
(14) பலம்.
(15) குதிரை, யானை போன்ற விலங்குகளில் அமர்ந்து செல்லும் பயணம்.
(16) ஒருவருடைய நடத்தை மற்றும் செயல்களால் ஏற்படும் மதிப்பும் கௌரவமும். (குழம்பியுள்ளது)
(19) கணிதத்தில் வரும் பெருக்கல் குறி. (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 26

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) அதிசயம் (03) சுவை (05) கசை
(07) வாவி (09) சாட்சி (11) ஆலம்
(13) உபகாரம் (15) பசு (17) திரவியம்
(18) ரணம் (19) அதிரடி (21) பம்பரம்

**மேலிருந்து கீழ்**

(01) அகழி (02) திசை (04) வைகாசி
(06) ஆசாமி (08) விரயம் (10) ஆபரணம்
(12) அம்பலம் (13) உதிரம் (14) விகாரம்
(16) சுட்டி (20) ரதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 25

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
பி. நிரோஷன்,
இல. 357,பொதுஜய மாவத்தை,
அங்குலான, மொறட்டுவை.

**இரண்டாம் பரிசு**
ஜி. துவாரகன்,
33A, சர்வோதய வீதி,
பெரியநீலாவணை 01A.

**மூன்றாம் பரிசு**
M.T.H. மிஹ்றியா,
390, ஏ.கே.எம். வீதி,
ஏறாவூர் 03.

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். சத்தியவதனி,**
பிரதான வீதி,
பாலமுனை, மண்டூர்.

**2. T. சிவபாக்கியவதி,**
3ம் குறுக்குத்தெரு,
பூம்புகார்,
மட்டக்களப்பு.

**3. கெ. சித்திரவேலாயுதன்,**
57, ஹஸ்கிசன் வீதி,
திருகோணமலை.

**4. எம்.என்.எப். நிப்லா,**
இல. 273, பொல்கஹயாய,
நாரம்மலை.

**5. பி. குணசேகரன்,**
வன்னியா வீதி,
களுதாவளை,
களுவாஞ்சிக்குடி.

**6. சி. பவித்ரா யாழினி,**
241/15, ரொக்ஹில்,
பதுளை.

**7. T. சக்யாநூரி,**
174/1, அல் முனவ்வறா வீதி,
அக்கரைப்பற்று 04.

**8. எம். பாஹிர்,**
21/2A, நுவரெலியா வீதி,
ஹாலி எல.

★ ★ ★

# ZTE Blade A5 2020 ஸ்மார்ட்போன் சிங்கர் விற்பனை நிலையங்களில்

ZTE நிறுவனத்தினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியான ZTE Blade A5 2020 இப்போது இலங்கையில் உள்ள சிங்கர் காட்சியறைகளில் கிடைக்கப்பெறுகின்றது. 2 ஜிபி RAM கொண்ட 6,088 அங்குல display கொண்ட இந்த கையடக்கத் தொலைபேசியானது வாடிக்கையாளர்களுக்கு ஒரு சிறந்த மற்றும் தனித்துவமான அனுபவத்தை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளரை ஈர்க்கும் வகையில் கடும் பச்சை, நீலம் மற்றும் கறுப்பு ஆகிய மிகவும் கவர்ச்சிகரமான நிறங்களில் கிடைக்கிறது. அது மட்டுமல்லாது, இலங்கையின் சந்தையில் காணப்படும் ஏனைய ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளை விட வாடிக்கையாளர்களை ஈர்க்கக்கூடிய பல்வேறு அம்சங்களையும் கொண்டுள்ளது.

மேலும், தள்ளுபடி விலை வரம்பில் பிரயோஜனமான மற்றும் கவர்ச்சிகரமான ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை கொள்வனவு செய்ய விரும்பும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ZTE Blade A5 2020 ஆனது ஒரு சிறந்த தீர்வாக இருக்கும் என்பது உறுதி.




ZTE Blade A5 2020 தொலைபேசியானது 2GB RAM க்கு மேலதிகமாக 32GB ROM மற்றும் 3200mAh பேட்டரியுடன் கிடைக்கப்பெறுகின்றது. மேலும், Android R Go இயங்குதளம் கொண்ட இந்த கையடக்க தொலைபேசியில் 1.6 OctaCore CPU ஒன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பின்புற கேமரா அமைப்பில் இரண்டு 13 MP மற்றும் 8MP கேமராக்கள் இணைக்கப்பட்டுள்ளதோடு முன்பக்க (செல்பி) கேமரா 8MP அளவிலான தெளிவான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வழங்கும் திறன் கொண்டது. இது 32 ஜிபி உள் சேமிப்பிடத்தைக் கொண்டுள்ளமையால் வீடியோ சேமிப்பகத்தைத் தனிப்பயனாக்க உங்களை அனுமதிக்கிறது.

# சிறந்த தொழில் முயற்சிக்கான தங்க விருதை வென்ற Ceylon Facet

மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் துறையில் முதன்மை நிறுவனமான Ceylon Facet தனியார் நிறுவனம் கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஏற்பாடு செய்த சிறந்த கைத்தொழில்களுக்கான விருது விழாவில் மாணிக்கக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் பிரிவின் மத்திய அளவிலான பிரிவின் தங்க விருதை வென்றுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஹோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற இவ்விருது விழாவில் Ceylon Facet நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சஞ்சீவ பொன்சேக்கா இவ்விருதை பெற்றுக் கொண்டார்.




30 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றை கொண்ட Ceylon Facet நிறுவனம் கலைநயமிக்க முறையில் மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் தொடர்பாக உள்நாட்டில் மாத்திரமல்ல உலக அரங்கிலும் புகழ்பெற்று விளங்குகிறது. நியுசிலாந்து, ஹொங்கொங், ஜப்பான், சீனா, தாய்லாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து கிடைக்கும் மாணிக்கக் கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் மற்றும் அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பா உள்ளிட்ட உலகெங்கிலும் பலநாடுகளுக்கு அரிந்து பட்டைத் தீட்டிய மாணிக்கக் கற்களை ஏற்றுமதி செய்யும் Ceylon Facet நிறுவனம் தற்பொழுது சுமார் 100 நேரடி தொழில் வாய்ப்புகளையும் 25 மறைமுக தொழில் வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது. சமூகப்பணியாக கருதி மாற்றுத் திறனாளிகள் சிலருக்கும் தொழில்வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

மாணிக்கக் கற்கள் இலங்கையின் பெயரை உலகுக்கு கொண்டு செல்லும் தனித்துவமானதொரு வளமாகும். மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் மூலம் அந்த வளத்துக்கு மேலும் பெறுமதிசேர்க்க முடியும்.

மாணிக்கக்கல் அரிதல் மற்றும் பட்டைத் தீட்டுதல் ஆக்கத்திறனுடனும் துல்லியமாகவும் செய்யவேண்டியதொரு கலை என்பதோடு விஞ்ஞான ரீதியானதொரு செயன்முறையும் ஆகும்.

# உலக சூழல் தினத்தை முன்னிட்டு மீள்வனச் செய்கையை முன்னெடுக்கும் பிரண்டிக்ஸ்



உலக சூழல் தினம் 2022 ஐ முன்னிட்டு பிரண்டிக்ஸ் இனால் ரம்புக்கனையில் 10 ஏக்கர் பகுதி மீள் வனாந்தரச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் (UNDP) மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஒன்றரை தசாப்தங்களுக்கும் மேலாக அதன் வணிக நடவடிக்கைகளின் கட்டமைப்பிற்குள் பின்னப்பட்ட நமது கிரகத்தின் மீதான அக்கறையுடன், புவிப் பாதுகாப்பு தொடர்பில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் பிரண்டிக்ஸ், தனது நிலைபேறாண்மை செயற்பாடுகளின் பிரகாரம் ரம்புக்கனையில் அமைந்துள்ள Brandix Essentials தொழிற்சாலைக்கு அண்மித்த காணிப் பகுதியில் 3000 காயா மரங்களை நாட்டியிருந்தது. இந்த நிகழ்வில் நிஷாந்த எதிரிசிங்க வன பாதுகாவலர், வன பாதுகாப்பு திணைக்களம், சம்பத் ரணசிங்க, UNDP இன் திட்ட ஒருங்கிணைப்பாளர் (எரிசக்தி மற்றும் கழிவு) மற்றும் பிரண்டிக்ஸ் இன் குழும பொறியியல் தலைவர், அஹமட் இல்திமாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வியாபாரம் மற்றும் அதன் பங்காளர்களுக்கு நீண்ட கால வளர்ச்சி மற்றும் பெறுமதி உருவாக்கத்தின் பிரகாரம், நிறுவனத்தின் நிலைபேறாண்மை கட்டமைப்பு என்பது அதன் அரண்களான வளி,நீர் மற்றும் புவி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. மக்கள், சமூகங்கள் போன்றவற்றில் அக்கறை கொண்டுள்ள நிறுவனம் எனும் வகையில், தனது சகல செயற்பாடுகளிலும் புவியின் நலன் தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், நிலைபேறாண்மையை பேணும் நோக்குடன் பிரண்டிக்ஸ் இயங்குகின்றது.

நிலைபேறாண்மை தொடர்பில் பிரண்டிக்ஸ் உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்ததுடன், மட்டக்களப்பில் அமைந்துள்ள தொழிற்சாலை, உலகின் முதலாவது Net Zero Carbon ஆடை உற்பத்திப் பகுதியாக 2019 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

# பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்களில் ஒன்றாக அலியானஸ் லங்கா தெரிவு

முன்னணி காப்புறுதி சேவைகள் வழங்குநரான அலியான்ஸ் லங்கா, இலங்கையில் காணப்படும் சிறந்த 3 பொதுக் காப்புறுதி சேவைகள் வழங்குநர்களில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒட்டு மொத்த காப்புறுதி சேவைகள் வழங்குநர்களில் சிறந்த 10 நிறுவனங்களில் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது. பிரான்ட் ஃபினான்ஸ் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு LMD இனால் வெளியிடப்பட்டிருந்த இலங்கையின் சிறந்த 100 பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்கள் 2022 வரிசையில் அலியான்ஸ் லங்கா இவ்வாறு தரப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2019 ஆம் ஆண்டு முதல் இந்த தரப்படுத்தல்களில் அலியான்ஸ் லங்கா அடிக்கடி தரப்படுத்தப்படுவதுடன், இதனூடாக நிறுவனத்தின் வலிமை மற்றும் சந்தை நிலை ஆகியன பிரதிபலிக்கப்பட்டிருந்தன. மேலும், வாழ்க்கையில் மிகவும் பெறுமதி வாய்ந்த அம்சங்களை பாதுகாப்பதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பை உறுதி செய்வதாகவும் இந்த தரப்படுத்தல் அமைந்துள்ளது. இலங்கையின் நுகர்வோர் வர்த்தக நாம கட்டமைப்பு தொடர்பில் இந்த தரப்படுத்தல்கள் பரிபூரண ஆய்வை மேற்கொள்வதுடன், பகுப்பாய்வு செய்து தரப்படுத்துவதாக அமைந்துள்ளது. இறுதித் தரப்படுத்தல்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்காக ஆழமான சந்தை ஆய்வு மற்றும் பொதுவில் கிடைக்கும் நிதித் தகவல்களுடன், நுகர்வோர்களின் உள்ளார்ந்த தகவல்கள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன.

Allianz

இந்த சாதனை தொடர்பில் அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மங்கள பண்டார கருத்துத் தெரிவிக்கையில், “இந்தத் தரப்படுத்தல்களில் நாம் உள்வாங்கப்பட்டுள்ளமை தொடர்பில் நாம் மிகவும் பெருமை கொள்வதுடன், மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கையின் சிறந்த 100 பெறுமதி வாய்ந்த நுகர்வோர் வர்த்தக நாமங்கள் வரிசையில் அலியான்ஸ் லங்கா தரப்படுத்தப்பட்டுள்ளமையினூடாக, எமது வாடிக்கையாளர்களின் மீது நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் சிறப்புக்கான எமது கடின உழைப்பு போன்றன பிரதிபலிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் பிரதான காப்புறுதி சேவை வழங்குநர்களில் ஒன்றாக, டிஜிட்டல் மயமாக்கம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருவதுடன், ஒப்பற்ற வாடிக்கையாளர் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் கவனம் செலுத்துகின்றோம். இதனூடாக பிரத்தியேக வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடியதாக உள்ளது. எனவே, இலங்கையின் மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமங்களில் ஒன்றாக நாம் கௌரவிக்கப்பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.” என்றார்.

# சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் SDB வங்கி கைகோர்ப்பு

இலங்கையின் தெரிவு செய்யப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் பத்திரங்களை (LoC) ஆரம்பித்துக்கொள்ள உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் SDB வங்கி அண்மையில் கைகோர்த்திருந்தது.

சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு புத்தாக்கமான நிதித்திட்டங்களை கட்டியெழுப்புவதற்கு தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள், ஏற்றுமதிசார் துறைவிருத்தி மற்றும் இலங்கையில் பெண்தொழில் முயற்சியாண்மை சூழல் கட்டமைப்பை கட்டியெழுப்புவது போன்றன இந்தத் திட்டத்தில் அடங்கியிருந்தன.

சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்கள், ஏற்றுமதிசார் வியாபாரங்கள் மற்றும் பெண்களைத் தலைமையாகக் கொண்ட வியாபாரங்கள் போன்றவற்றுக்கு ஆதரவளிப்பதில் SDB வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றன. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கடன்கள், தொழில்நுட்ப உதவி, மானியம் மற்றும் பங்குசார் முதலீடுகள் போன்றவற்றை ஊக்குவிப்பதில் ஆசிய அபிவிருத்தி வங்கி முக்கிய பங்களிப்பை வழங்குவதுடன், 2030 ஆம் ஆண்டளவில் சுபீட்சமான, உள்ளடக்கமான, மீண்டெழக்கூடிய மற்றும் நிலைபேறான பிராந்தியத்தைக் கட்டியெழுப்பும் தந்திரோபாயத்திலும் கவனம் செலுத்துகின்றது. வறுமை ஒழிப்பு தொடர்பான முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றது.



இலங்கையின் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை மற்றும் நுண், சிறு நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை ஆகியவற்றை ஊக்குவிப்பதனூடாக. கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் கடந்த 25 வருடங்களாக SDB வங்கி ஆதரவளித்த வண்ணமுள்ளது. பிராந்தியத்தில் பிரதான தந்திரோபாய பங்காளராக ஆசிய அபிவிருத்தி வங்கியை SDB வங்கி கருதுகின்றது.

# தலைமைத்துவ கருத்தரங்கை நடத்திய Edith Cowan University – Sri Lanka Campus



இலங்கையில் முழுமையான பட்டப்படிப்புகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த அவுஸ்திரேலியக் கல்வியை வழங்கும், Edith Cowan University (ECU) Sri Lanka, நாட்டிலுள்ள முதன்மையான கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும். மாற்றத்திற்கான சூழலை வளர்ப்பதற்கும், எதிர்காலத் தலைவர்களை தேசத்தை அதன் தற்போதைய சூழ்நிலையிலிருந்து வெளிவருவதற்கு வழிநடத்த சரியான திறன்களுடன் தயார்படுத்துவதற்கும், ECU Sri Lanka ஆனது “காலத்தின் தேவை: சமகால நிறுவன தலைமைத்துவ பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆராய்தல்” என்ற தலைப்பில் 2022 மே 27 ஆம் திகதி BMICH இன் Lavender Room இல் பி.ப 6.00 மணி முதல் பி.ப 7.30 மணி வரை நிறுவன தலைமைத்துவ கருத்தரங்கொன்றை நடாத்தியது.

இந்நிகழ்வில் ஹேமாஸ் நுகர்வோர் வர்த்தகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், ஹேமாஸ் குழுமத்தின் பணிப்பாளருமான ஸ்ரீயான் டி சில்வா விஜயரத்ன மற்றும் CBL குழுமத்தின் மனிதவள பணிப்பாளர் குமுதினி வெல்மில்லகே ஆகியோர் பேச்சாளர்களாக கலந்து கொண்டனர். வணிக ஆலோசகரும், நிறுவன பணிப்பாளரும் மற்றும் ECU Sri Lanka இன் வருகை விரிவுரையாளருமான கலாநிதி நுவன் விமலான நிகழ்வை தொகுத்து வழங்கியிருந்தார்.

இந்த முயற்சி தொடர்பில் ECU Sri Lanka இன் பொது முகாமையாளரான டேவிட் மத்தியூஸ் கருத்து வெளியிடுகையில், “மாணவர்களை அறிவுடன் மட்டுமல்லாமல், வாழ்க்கை மற்றும் தலைமைத்துவ திறன்களுடன் தயார்படுத்துவதற்காக, மாணவர்கள் மீது கவனம் செலுத்தும், நேரடி மற்றும் யதார்த்தமான கல்வி முறைமை மீது நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். தொழில்துறை வல்லுநர்கள் தலைமையிலான அமர்வுகள், நன்மதிப்புமிக்க வர்த்தக நிறுவன தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களிடமிருந்து மாணவர்கள் நுண்ணறிவுகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கின்றன.

# Microsoft Imagine Cup World Championship போட்டியில் இலங்கை மாணவர்களுக்கு இரண்டாம் இடம்

Microsoft Imagine Cup போட்டியின் 20ஆவது பதிப்பில் 160க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான அணிகளுடன் போட்டியிட்டயேயெ Shibaஅணி உலகின் முதல் மூன்று இடங்களில் உள்ளது




வாஷிங்டனில் உள்ள சியாட்டிலில் இடம்பெற்ற 2022 Imagine Cup World Championship போட்டியில் V Bionic அணி மற்றும் Melodic அணிக்கு எதிரான கடுமையான இறுதிப் போட்டியில் Nana Shiba அணி இரண்டாம் இடத்தைப் பிடித்ததாக மைக்ரோசொப்ட் நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது. இலங்கையைச் சேர்ந்த அணி 10,000 அமெரிக்க டொலர் பணப் பரிசை வென்றுள்ளதுடன், இந்தவெற்றியின் மூலம் இலங்கை தொழில்நுட்பம் உலகளாவிய போட்டியில் சிறந்த மூன்று புதுமையான தீர்வுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

Microsoft Imagine Cup போட்டியானது, உலகின் மிகப்பாரிய சமூக,சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார சவால்களை எதிர்கொள்ளும் புத்தாக்கமான தீர்வுகளை உருவாக்க,தொழில்நுட்பத்தின் மீதான அவர்களின் கற்பனை மற்றும் ஆர்வத்தைப் பயன்படுத்த மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'எமது Imagine Cup போட்டி சாத்தியங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு' என்று மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான ச த்யா நடெல்லா கூறினார். '20 ஆண்டுகளாக, உலகின் சவால்களைத் தீர்க்க உதவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு மாணவர்கள் ஒன்றிணைந்தால் எவையெல்லாம் சாத்தியம் என்பதை எங்களுக்குக் காண்பித்துள்ளனர்,' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 9

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆழத் தடம்பதித்த எஸ்.பொன்னுத்துரை

எஸ்.பொ. என எழுத்துலகில் பிரபல்யம் பெற்றிருந்த எஸ். பொன்னுத்துரை தடம்பதிக்காத இலக்கியத் துறைகள் எதுவுமே இல்லை. சிறுகதை, நாவல், நாடகம், வானொலி நாடகம், கட்டுரை, உருவகக் கதை, கவிதை, Creative essays, ஆய்வு, மொழிபெயர்ப்பு, பத்தி எழுத்து, விமர்சனம், பதிப்பு முயற்சிகள் என இவர் சகலதுறைகளிலும் தடம் பதித்துள்ளார்.


இவர், ஞானம் சஞ்சிகைக்கு ஒரு நீண்ட தொடர் நேர்காணலை வழங்கியுள்ளார். அந்த நேர்காணலில் தனது எழுத்துலக ஆரம்பம் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: '1948இல் தமிழகத்திலிருந்து ப. ஜீவானந்தம் என்ற கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் முதன்முதலில் யாழ்ப்பாணத்திற்கு வந்தவர். அவர்தான் முதன்முதலில் யதார்த்த இலக்கியம் பற்றியும் மக்கள் இலக்கியம் பற்றியும் முற்போக்கு இலக்கியம் பற்றியும் பேசினார். அவருடைய வழிநடத்தலின் காரணமாகவும் பின்னர் தமிழ்நாட்டில் மாணவனாக இருந்த பொழுது கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயலாற்றியதினாலும் அங்கே புடம்போடப்பட்டு எழுத்தாளனாக இலங்கைக்கு வந்தேன். இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் இந்தியப் பத்திரிகையிலும் எழுதினேன். எனது அங்கீகாரம் பெற்ற எழுத்துக்கள் 1955இன் பின்னரே எழுதத் தொடங்கினேன் '

1946இல் வீரகேசரியில் வெளிவந்த மலர்கள் என்ற கவிதையுடன் இவரது இலக்கியப் பயணம் தொடங்கியது.

1961இல் வெளிவந்த தீ என்ற நாவல் அவரை ஒரு பிரச்சினைக்கு உரிய எழுத்தாளராக உலகுக்கு அறிவித்தது. இந்த நாவலை அவர் தனது 29ஆவது வயதில் எழுதினார். பாலியல் தீ யினால் கதாநாயகன் பொசுக்கப்படுவதை துலாம்பரமாக விபரிப்பது அந்த நாவல். நாயகன் அந்த வேட்கைகளையும் அவற்றைத் தீர்த்துக் கொண்ட வகைகளையும் தற்கூற்றாக விபரிக்கும் விதத்தில் படைக்கப்பட்டிருந்தது தீ நாவல். வசதிபடைத்த ஒரு இளைஞன் தன்னுடைய வாழ்வில் சந்தித்த ஆறு பெண்களுடன் கொண்ட உறவுகள் பற்றி விபரிக்கிறது இந்நாவல். தீ நாவலின் பல பகுதிகள் தனது சொந்த அனுபம் என அவர் ஞானம் சஞ்சிகைக்கு அளித்த நேர்காணலில் கூறியிருக்கிறார்.

சுதந்திரனில் எஸ்.பொ எழுதிய ஒப்பற்ற நாவல் தான் சடங்கு இலங்கை கிளறிக்கல் சேவன்ற் ஒருவன் ஒருகாலத்தில் எவ்வாறு தன் ஆசைகளையும் ஏக்கங்களையும் மறைத்து வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒருவனாய் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்வதற்கான ஒரு Social Doccument. இந்த நாவல் தமிழகத்தில் ராணிமுத்து பிரசுரமாக வெளிவந்து 145,000 பிரதிகள் விற்பனையாகின என்பதும் ஒரு சாதனையாகும்.













எஸ்.பொ.வின் வரலாற்றில் வாழ்தல் சுயசரிதை 2000 பக்கங்களில் வெளிவந்தது. இந்த நூல் எஸ். பொ.வின் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்ல இலக்கியம் தொடர்பான பன்முகப் பரிமாணங்களையும் விபரிக்கிறது.

இவரது அப்பாவும் மகனும்| காவியம் தொடங்கி மாயினி நாவல்வரை சிங்கள பௌத்தவாதத்திற்கு எதிரான எழுத்துக்கள். மாயினி நாவல் ஈழத்து அரசியல் சார்பான இனவாத அரசியலின் வரலாற்றை மிக விஸ்தாரமாக பரந்த தளத்தில் பேசுகிறது. இந்த நாவலில் நடமாடும் பாத்திரங்களாக வாசுதேவ நாணயக்காரா, சிறிமா பண்டாரநாயக்க, எஸ். ஜே. வி. செல்வநாயகம், அனுரா பண்டாரநாயக்கா, பிரேமதாசா, சந்திரிகா, அன்ரன் பாலசிங்கம், மகாத்மா காந்தி, எம். ஜீ. ஆர், ராஜிவ்காந்தி, முதலாம் விமலதர்ம சூரியன், ஹிட்லர் ஆகிய பாத்திரங்களைக் காணமுடியும்.

1992இல் நனைவிடை தோய்தல் வெளியானது. ஐம்பதுகளில் இருந்த யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைப்பையும் கலாசாரத்தையும் புரிந்து கொள்ள நனவிடை தோய்தல் தவிர வேறு எந்தப் படைப்பும் தமிழில் தோன்றவில்லை. எஸ்.பொ. தனது இளமைக் காலத்தில் காணப்பட்ட பல்வேறு விடயங்களையும் சுவாரஸ்யமாகச் சொல்வதில் வெற்றிகண்டுள்ளார்.

சிக்கலான இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு முறையே அவா, வீடு, நியமம், இத்தா ஆகிய சிறுகதைகளை எழுதிய துணிச்சல் மிக்க எழுத்தாளர் இவர்.

எஸ்.பொ. அங்கதச் சுவையில் அரச உயர்மட்டத்தில் இடம்பெறும் லஞ்ச லாவண்ணியங்களை பந்தநூல் எனப்படும் வினாக்குறியின் தலைப்புடன் 1972இல் வெளியிட்டார். இந்த நூல் நச்சாதார்க்கும் இனியர் உரையுடன் கூடியதாக யாத்திரை செய்யும் பிரமிப்பைக் கொடுக்கும்.

மட்டக்களப்பு மாப்பிள்ளை என்ற நாடகம் எஸ். பொ.வினால் எழுதப்பட்டு இலங்கை வானொலியில் சானாவினால் ஒலிபரப்பப்பட்டது. இதில் யாழ்ப்பாண வட்டாரப் பேச்சு வழக்கு, மட்டக்களப்புத் தமிழ், மட்டக்களப்பில் வாழும் முஸ்லிம்களின் தமிழ், பறங்கியர் பேசும் தமிழ், பரம்பரையாக வாழ்ந்து வரும் சிங்களவர் பேசும் தமிழ் என அனைத்து மொழி வழக்குகளையும் அந்த நாடகத்தில் புகுத்தியிருந்தார். இதனைவிட இவரது பல ஓரங்க நாடகங்களும் உரைச்சித்திரங்களும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டன.

கோஷ் என்ற கதை யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. விலை என்ற கதை மட்டக்களப்பில் நடைபெறுகிறது. வேலி என்ற கதை திருக்கோணமலையில் நடைபெறுகிறது. அந்தந்தப் பிரதேசத்துக்குரிய பேச்சு மொழியில் அக்கதைகளை எழுதியுள்ளார்.

ஆண்மை என்ற 15 கதைகள் அடங்கிய 400 பக்கங்கள் கொண்ட தொகுதியில் இவரது சொல்லாட்சியின் முழுத்துவத்தைக் காணலாம். எல்லாக் கதைகளுக்கும் ஒரே தலைப்பு ஆண்மைதான். இப்படியாக ஒரே தலைப்பில் 15 வெவ்வேறு கதைகள் அடங்கியிருப்பது புதுமை. உலகத்திலே இப்படியாக வரும் முதல்தொகுதி இதுதான் எனக் குறிப்பிட்டுள்ளார் அ. முத்துலிங்கம்.

எஸ். பொ. ஆபிரிக்க இலக்கியங்கள் சிலவற்றை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

புதியசொற்களை உருவாக்குவதற்கு எழுத்தாளனுக்கு உரிமை உண்டு என்று குறிப்பிடும் எஸ். பொ. மிலேனியம் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு அதன் பொருள் விளங்குமாறு புத்தாயிரம் என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர். அதே போன்று புலம்பெயர் இலக்கியம் என்ற சொல்லையும் அவர் அறிமுகப்படுத்தினார். மற்றும் முன்னீடு, சுவைஞன் பறப்பு, கதைஞன் போன்ற இன்னும் பல சொற்களை அவர் உருவாக்கினார்.

இவரது எழுத்துநடை சிறப்பு வாய்ந்தது. சொற்களைச் செதுக்கியும் புதுக்கியும் வீரியம் ஏற்றும் வல்லாளர் இவர். அறுபதுகளில் முற்போக்கு அணியினருடன் முரண்பட்டு இவர் முன்வைத்த 'நற்போக்கு' இலக்கியக் கோட்பாடு பெருஞ் சர்ச்சைக்கு உள்ளாகியது.

'நற்போக்கின் பிரதான அம்சம் என்பது தமிழ்த்துவம். தமிழ்த்துவம் என்பது மரபு ரீதியான தமிழ் இலக்கியங்களுடைய வேரிலிருந்து உறிஞ்சப்பட்டு புதிய இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியத்தின் தனித்துவங்களும் பேணப்பட வேண்டும். தமிழ்த் தேசிய உணர்வும் தமிழ்த் தேசியத்தை வளம்படுத்துவதற்கான சுதந்திர சுயாதீனமுள்ள தமிழ் மண்ணும் இருக்கவேண்டும்' என ஞானம் நேர்காணலில் விளங்கப்படுத்தியுள்ளார்.

1998ஆம் ஆண்டு இவரது மித்ர பதிப்பகம் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மித்ர பதிப்பகத்தின் உருவாக்கம் உலகத்தமிழ் இலக்கிம் என ஒன்றை உருவாக்குவதாக அமைந்தது.

யாழ்ப்பாணம் நல்லூரில் சண்முகம், அம்மாக்குட்டி தம்பதிக்கு 24.05.1932இல் மகனாகப் பிறந்த பொன்னுத்துரை, தனது ஆரம்பக் கல்வியை யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ் பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் பெற்றவர். உயர்கல்வியை சென்னை கிறித்தவக்கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பெற்று பி.ஏ. பட்டம் பெற்றவர். தமிழ் ஆசிரியராக யாழ்ப்பாணம், மலைநாடு, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் ஆங்கில ஆசிரியராக நைஜீரியாவிலும் பணியாற்றியவர்.

இவரது மனைவி பெயர் திருமதி ஈஸ்வரம். பிள்ளைகள், டாக்டர் அனுர, புத்ர, மித்ர, இந்திரா, மேகலா ஆகியோராவர்.

இவர் பத்துக்கும் மேற்பட்ட புனைபெயர்களில் எழுதியுள்ளார். இவரது நாவல்களாக (1) தீ, (2) சடங்கு, (3) மத்தாப்பு, (கூட்டு முயற்சி), (4) தேடல், (5) மணிமகுடம், (6) மாயினி என்பனவும் சிறுகதைத் தொகுதிகளாக, (1) வீ, (2) சதுரங்கம் (கூட்டுமுயற்சி), (3) அவா, (4) ஆண்மை, (5) கீதை நிழலில், (6) பூ, (7) எஸ்.பொ. கதைகள், (8) உறவுகள் ஆகியனவும் வெளிவந்துள்ளன. கட்டுரைத் தொகுதிகளாக,(1) இஸ்லாமும் தமிழும், (2) காந்திய தரிசனம், (காந்திய கதைகள், (4) ? அங்கத நூல்கள், (5) எஸ்.பொ. அறிக்கை, (6) நனவிடை தோய்தல், (7) நீலாவணன் நினைவுகள், (8) பெருங்காப்பியம் பத்து, (9) பனிக்குள் நெருப்பு, (10) தீதும் நன்றும், (11) முன்னீடு, (12) இனி (இனியொருவிதி செய்வோம்) ஆகியனவும், கவிதைத் தொகுதிகளாக (1) அப்பையா, அப்பாவும் மகனும் ஆகியனவும் நாடக நூல்களாக (1) வலை, (2) முறுகல், (3) ஈடு, (4) சாவு, (5) முதல்முழக்கம், (6) அனாதைகள் (6) அந்தநாள் (7) கூண்டுக்கு வெளியே என்பனவும் வெளியாகியுள்ளன.

இவரது பணிகளைப் பாராட்டி கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வாழ்நாள் சாதனை இயல்விருது 2010இல் வழங்கப்பட்டது. ஞானம் சஞ்சிகை தனது 115ஆவது இதழை எஸ். பொ. சிறப்பிதழாக வெளியிட்டது. எஸ்.பொ. 26.11. 2014இல் அமரரானார்.




## 31 கொலைகாரனைக் கண்டுபிடிப்பது கஷ்டமாகிறதே எல்லாருமே கொலை காரணாகத் தெரிகிறதே!

தீபனைப் பற்றி சொல்லத்தொடங்கினாள் பிரியதர்சினி.

"தீபன் எனக்கு நிறையவே உதவி செய்திருக்கிறான் அக்கா? நான் கெம்பசுக்கு வந்த நாளில் இருந்தே எனக்குத் தேவையான, புஸ்தகங்கள், துணிமணிகள் போன்றவற்றை எல்லாம் வாங்கிக் கொடுப்பான். ஆனாலும் அவன் என்னிடம் காதல் பற்றிக் கூறவில்லை. என்னுடன் தப்பான எண்ணத்துடனும் பழகவில்லை. பள்ளிக்குச் செல்லும் காலத்தில் இருந்தே தீபிகா என்ற ஒரு பெண்ணைக் காதலிப்பதாக என்னிடம் சொன்னான். தீபிகாவிற்கும் என்னுடைய வயதுதான் இருக்குமென்று சொன்னான். தீபிகா தீபனின் ஊர்க்கார பொண்ணு, ஆனாலும் அவர்களின் தொடர்புக்கு இருவீட்டாரும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். இதைப்பற்றி அடிக்கடி தீபன் என்னிடம் சொல்லி கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். இருவரும் சேர்ந்து வாழவே முடியாது என்பதை தீபன் நன்றாகவே புரிந்து கொண்டிருந்தான். தீபன் மிகவும் புத்திசாலி என்பதால் எல்லோவற்றையும் மனதிற்குள்ளேயே பூட்டி வைத்திருந்தான்!"

"தீபன் புத்திசாலியாக இருந்தால் ஏன் இப்படி ஒரு காரியத்தில் சிக்கிக் கொண்டான்?"

"என்ன மாதிரியான காரியம்? அக்கா?"

"பாதாளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளப் போனானே அதைப் பற்றித்தான் சென்னேன்!"

"அதைத்தான் அக்கா என்னாலும் நம்ப முடியாதுள்ளது. ஆனாலும் விஷயம் இப்படித்தான் நடத்திருக்கிறது. இருவரது தொடர்புக்கும் இருவீட்டாரும் எதிர்ப்பு என்பதால் அவர்களை பயமுறுத்துவதற்காக தீபிகா ஒரு கடிதம் எழுனாள். கடிதத்தை அவளுடைய கண்ணுக்குத்தான் எழுதியிருக்கிறாள். இத்தினையாம் திகதி வட்டவல வளைவில் உள்ள பாதாளத்தில் இருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளப்போகிறோம் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாள். இதைப்பற்றி தீபனிடமும் கூறியிருக்கிறாள். இந்தக் கதை உண்மை தான் என்று நிரூபிப்பதற்காக இருவரும் வட்டவல வளைவில் இருக்கும் பாதாளத்தின் அருகில் சென்றிருக்கிறார்கள். சிகப்பு தீந்தையினால் அங்கே இருந்த ஒரு பாறையிலும் '2013 ஜூன் 12 அதிகாலை 5 மணிக்கு தீபிகா தீபனின் காதல் கதை நிறைவுபெறுகிறது' என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இப்படித்தான் அந்த சம்பவம் நடந்திருக்கிறது!"

நீண்ட நேரமாக பேசிய பிரியதர்சனி,

சிறிது நேரம் விழிகளை மூடிக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

அதேநேரம்,சரண்யாவும் அவள் சொன்னதைப் பற்றி சிந்தித்தாள்!

"தீபனும் தீபிகாவும் அந்தக் கல்லில் எழுதி வைத்து விட்டு திரும்பிவரும் முடிவுடன் வட்டவலைக்கு சென்றிருந்தால்,

அவர்கள் இருவரும்

அதை எழுதி விட்டு,

அங்கிருந்து திரும்பி வந்திருக்க வேண்டும்!

ஆனால்,

அது அப்படி நடக்கவில்லை!

பிரசாந்தினி சொல்லுவதைப் பார்த்தால்,

தீபன் தீபிகா இருவருடன்,

இன்னும் யாரோ சென்றிருக்க வேண்டும்!

அநேகமாக,

அப்படி அவர்களுடன் போனவன் அல்லது போனவள் தான்,

கொலையின் சூத்திரதாரியாக இருக்க வேண்டும்!

"பிரசாந்தினியின் முடிவின் படி தீபனுக்கோ தீபிகாவிற்கோ தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்ற நோக்கம் இருக்கவில்லை அல்லவா?"

"கண்டிப்பா இல்லை ஊர்வசி அக்கா... அவர்கள் இருவரும் அந்த முட்டாள்தனமான காரியத்தை செய்திருக்கவே மாட்டாங்கள். அவர்களின் பெற்றோர்களை பயமுறுத்துவது ஒன்றுதான் அவர்களின் நோக்கமாக இருந்திருக்கிறது. அதனால் தான் தீபிகா இப்படி ஒரு காரியத்தைப் பண்ணி இருக்கிறாள்!?

"இதனால் அவர்கள் எதை எதிர் பார்த்திருக்கிறார்கள் என்று நீங்க நினைக்கிறீங்க?"

"பாறையில் அந்த வாசகத்தை எழுதி வைப்பதற்காகத்தான் அவர்கள் இருவரும் அங்கே போயிருக்கிறார்கள்.

அதேநேரம் தீபிகாவின் அண்ணன் கஜனுக்குக் கடிதம் கிடைக்கும். காலையில் ஊடகங்களிலெல்லாம் இருவரும் தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற தகவல் வரும். பெற்றோர்கள் பதறிப் போவார்கள். அதன்பிறகு இருவரும் உயிரோடு இருக்கிறார்கள் என்ற தகவல் வெளிவரும். இதைத் தெரிந்த கொண்டபிறகு பெற்றோர்களின் ஆசீர்வாதத்துடன் இருவருக்கும் திருமணம் நடக்கும் என்று தீபனும் தீபாவும் நினைத்தார்கள். இப்படித்தான் அக்கா இந்த தற்கொலை நாடகம் அரங்கேறி இருக்கவேண்டும். ஆனாலும் அவர் எதிர் பார்த்தது நடக்கவில்லை. அதுதான் கவலையான விஷயம்!"

"நீங்கள் சொல்லவதெல்லாம் சரிதான் பிரியதர்சனி... ஆனால் இதில் எனக்கு புடிபடாத விஷயம் ஒன்று இருக்கிறது?"

"அது என்ன அக்கா?"

"தீபிகா எழுதிய இந்தக் கடிதத்தைப் பற்றி யாருக்குத் தெரியும்?" ... தீபிகாவையும் தீபனையும் பாதாளத்தில் தள்ளிவிட்ட பிறகு அந்தக் கடிதத்தை தபாலில் போட்டது யார்?"

"ம்... இந்த இரண்டு கேள்விகளுக்கும்தான் பொலிஸாராலும் பதில் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கிறது. இல்லையா, ஊர்வசி அக்கா?

"ஆமாம் நீங்கள் சொல்வது சரிதான். இது சம்பந்தமாக உங்களுக்கு இருக்கும் பிரச்சினை என்ன? என்னுடைய ஆலோசனைகள் தேவை என்று ஏன் கேட்டீர்கள்? தீபனைப் பற்றி நீங்கள் உண்மையிலேயே கவலைப்படுகிறீங்களா?"

என்னுடைய வாழ்க்கையே தீபன் தான். இதனால் அவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசையில் நான் இருந்ததாக தவறாக நினைத்து விடாதீர்கள். ஒரு அப்பாவைப்போல் என்னைக் கவனித்துக்கொண்டது தீபன்தான். அப்படிப் பட்ட ஒருவரின் உயிரைக் காப்பாற்ற என்னால் முடியாமல் போய் விட்டது அக்கா! அதனால் அவர்கள் இருவரையும் கொலை செய்தவர்களை கண்டுபிடிக்க பொலிஸாருக்கு உதவி செய்ய கிடைத்தால் அதுவே எனக்கு ஆத்ம திருப்தியாக இருக்கும்...!"

வியப்புடன் அவளைப் பார்த்தாள் சரண்யா..

**(இளமை வளரும்)**

### கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.

ஆமாம்,

இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:
**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு10.



# படித்ததும் பகர்வதும் 98



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### சுற்றுச்சூழலை பாதுகாப்போம்!

மனிதன் தான் வாழும் சூழலை சிறப்பாக பாதுகாக்க வேண்டிய பொறுப்புடையவனாக இருக்கின்றான். சுற்றுச் சூழல் சுத்தமானதாக, மாசற்றதாக இருக்கும்போதுதான் வாழும் உயிரினங்களின் நலம் நல்லதாக பேணப்படும்.

உலகில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும், மக்கள் தொகை, பெருகிவரும் தொழிற்சாலைக் கழிவுகள், வாகனங்களிலிருந்து வெளியாகும், புகை, குளிரூட்டிகள் போன்ற மின்சாரப் உபகரணங்களிருந்து உண்டாகும் இரசாயன கழிவுகள் போன்றவற்றினால் ஏற்படும் இத்தகைய தீங்குகளிலிருந்து சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.



ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டிருக்கும் வெயிலின் தாக்கம், திடீரென்று பெய்கின்ற பெருமழை, அதனால் விளையும் பெருவெள்ளம், மண் சரிவுகள், சுழன்றடிக்கும் சூறாவளி, எதிர்பாராது எச்சரிக்கின்ற நிலநடுக்கங்கள் போன்ற ஒழுங்கற்று வரும் இயற்கையின் நிகழ்வுகளும்கூட சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதில் வெகுவாக பங்களிப்பு செய்கின்றன.

உலக சனத்தொகை, அளவுக்கு அதிகமாகப் பெருகியதன் விளைவாக தொழிற்சாலைகள், வாகனங்கள், இயந்திரங்கள் என்பனவும் இயல்பாகவே பெருகின. இவற்றின் செயற்பாடுகளினால் அதிகரித்த கழிவுகள் காற்றுமண்டலத்திலும், நிலத்திலும், ஆறு, குளம், கடல்களிலும் கலந்து சுற்றுச் சூழலை அன்றாடம் மாசடையச் செய்கின்றன. இவற்றின் மோசமான தாக்கத்திலிருந்து சுற்றுச்சூழலைக் காப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகுகிறது.

சுற்றுச்சூழல், மனிதர்களுக்கு மட்டுமன்றி, இந்த உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்துக்கும் பொதுவானவை. இதனை மனிதர்கள் அனைவரும் பரந்த கண்ணோட்டத்தோடு பார்த்து, புரிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டுதான் ஐக்கிய நாடுகள் சபை வருடத்தின் ஜூன் மாதம் 5ம் திகதியை 'உலக சுற்றுச்சூழல் தினம்' (World Environment Day) என பிரகடனப்படுத்தி, சூழல் பாதுகாப்பு நடவைக்கைகளில் செயல்படத் தூண்டியுள்ளது.

ஒரு தகவலின்படி பார்க்கும்போது, உலகில் 175க்கும் அதிகமான பயிரினங்கள் உள்ளன. மேலும் அவற்றில் பல்வேறு இனங்கள், வகைகள், ரகங்கள், மாற்றீடுகள் என்றும் இருக்கின்றன. உதாரணமாக நெற்பயிரில் மட்டும் 50,000 இனங்கள், சோளத்தில் 5000 ரகங்கள், மிளகுப் பயிரில் 500 வகைகள், மாமரத்தில் 1000 வகைகள் என ஒவ்வொன்றிலும் இருக்கின்றன. இதேபோன்றுதான் விலங்கினங்களிலும். வெள்ளாட்டில் 20 , செம்மறியில் 42, எருமையில் 15, கால்நடையில் 30, கோழியில் 18 என அறியப்படுகின்றன.

இறைவனின் அருளினால், இயற்கையின் அமைப்பினால் இவை பரிணமித்து உலகில் ஆங்காங்கு வாழ்கின்றன. இந்த உயிரினங்களில் மனிதன் கோடியில் ஒரு துளிதான். இத்தனை உயிரினங்களும் இவ்வுலகில் வாழும் உரிமையும், சுதந்திரமும் பெற்றவை என்பதையும் மனிதனால் மறுக்க முடியாது. இவை நலமாக வாழ சுற்றுச் சூழல் சுத்தம் இன்றியமையாதது.

ஒவ்வொரு மனிதரும், இவற்றை சரியாக தெரிந்து, புரிந்து, உணர்ந்து, சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் தமது பொறுப்புகளை முறையாக நிறைவேற்ற முன்வரவேண்டும். குப்பைக் கூளங்களை முறையாக அகற்றுதல் தொடங்கி, மரக்கன்று ஒன்றை நடுவது வரையில் சிறிய அளவிளேனும் ஏதேனும் ஒரு முறையில், சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு பங்களிக்க உளப்பூர்வமாக முன்வர வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

வாழும் நாட்கள் நலமாய் சிறக்க
சூழல் தூய்மைப் பேணல் கடமை
நாளும் உலகம் மகிழ்வில் சிரிக்க
நன்றேசெய்தால் சுகமே உடமை

## பிரிந்தார் பெருமை

### முற்போக்கு எழுத்தாளர் தெணியான்

இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர்களில் தனியிடம் பிடித்த பிரபல எழுத்தாளர் தெணியான், கடந்த மே மாதம் 22ம் திகதி (22.05.2022) தனது 80வது வயதில் இலக்கிய உலகிலிருந்து விடைபெற்றார். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்த தெணியான், முற்போக்கு சிந்தனையுடன் பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக தொடர்ச்சியாக எழுதியும், போராடியும், செயற்பட்டும் வந்தார்.



சாதிய ஏற்றத்தாழ்வுக்கு எதிரான போராட்டங்களில் பங்கு கொண்ட ஒரு சமூக விடுதலைப்போராளி இவர். ஏற்றத்தாழ்வற்ற சமத்துவமான சமுதாயமே இவரது இலட்சியமாக இருந்தது. எத்தகைய பிரச்சனைகள் வந்த போதும் சற்றும் மனம் தளராது, தனது கொள்கையை விட்டுக்கொடுக்காது, அவற்றுக்கு முகங்கொடுத்து, போராடிய, எழுதிய போராட்ட வீரர்.

1942.01.06ல் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பொலிகண்டியில் பிறந்த இவர் தொழில் ரீதியாக ஆசிரியராகப் பணியாற்றினார். "பிணைப்பு" என்ற இவரது சிறுகதை முதல் ஆக்கமாக 'விவேகி'யில் பிரசுரமாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து எழுத்துத் துறையில் தீவிரமாக ஈடுபட்ட தெணியான், சுமார் 150 சிறுகதைகள்,பத்து நாவல்கள், மூன்று குறுநாவல்கள், ஐந்து வானொலி நாடகங்கள், நூற்றுக்கு மேலான கட்டுரைகள், விமர்சனங்கள் என பல பரிணாமங்களில் ஏராளமாக இலக்கியம் படைத்துள்ளார்.

சொத்து, மாத்து வேட்டி, இன்னொரு புதிய கோணம், ஒடுக்கப்பட்டவர்கள் மற்றும், தெணியானின் ஜீவ நதி சிறுகதைகள் என்பன இவரது சிறுகதை தொகுதிகளாக வெளிவந்துள்ளன. விடிவை நோக்கி, கழுகுகள், பொற்சிறையில் வாழும் புனிதர்கள், மரக்கொக்கு, காத்திருப்பு, கானலில் மான், தவறிப் போனவன் கதை என்பன இவரது புதினங்கள். சிதைவுகள், பனையின் நிழல் எனும் குறும் புதினங்களையும் வெளியிட்டுள்ளார். இவற்றோடு, நெஞ்சில் பதித்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, இன்னும் சொல்லாதவை, என்பன தெணியானின் கட்டுரைத் தொகுதிகளாக உள்ளன.

கொடகே விருது, சின்னப்ப பாரதி அருட்கொடை விருது, வடமாகாண ஆளுனர் விருது, அரசாங்கத்தின் சாகித்யரத்னா விருது, கலாபூஷண விருது என பல்வேறு விருதுகளை பெற்றுள்ள தெணியான் இலங்கை சாகித்திய மண்டல பரிசு உட்பட பல்வேறு பரிசில்களையும் தனது ஆக்கங்களுக்காகப் பெற்றுள்ளார். இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளரான தெணியானின் இழப்பு ஒரு பாரிய இடைவெளியை தமிழ் இலக்கிய உலகில் ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல.

## புது வரவு

### 'புத்தொளிக் கவிதைகள்'

மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன் தொகுத்து, புத்தொளி வெளியீடாக வெளிவந்துள்ளது 'புத்தொளிக் கவிதைகள்'. இக்கவிதைத் தொகுதி பற்றி தமிழ்நெஞ்சம் அமின் தனது அணிந்துரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

"முகநூல் குழுமங்களும், தமிழ்ச்சங்கங்களும் பல்வேறு அமைப்புகளும் பலவிதமான கவிதைப் போட்டிகளை நடத்தி பல்லாயிரக்கணக்கான கவிஞர்களைப் பட்டை தீட்டி வருவது பாராட்டுக்குரியதே! அந்த வகையில் கவிதாயினி நஸீரா எஸ் ஆப்தீன் தனது முகநூல் குழுமமான 'புத்தொளி' இலக்கிய பண்பாட்டு குழுமம் வாயிலாகப் 'புத்தொளிக் கவிதைகள், கூம்புக் கவிதைகளென அறிமுகப் படுத்தி போட்டிகளை நடத்தி வெற்றியும் கண்டு, அவற்றை இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளார்."



இந்நூலுக்கு நயவுரை வழங்கியுள்ள கலாபூஷணம் நூறுல் அயின் நஜ்முல் ஹுசைன், பின்வருமாறு தெரிவிக்கிறார்:

"தற்போது தமிழ் மீது பற்று வைத்திருக்கும் பலரும் மிகவும் நம்பிக்கையோடு கவிதைத் துறையில் கால் வைத்துள்ளனர். நாம் அன்றாடம் அவ்வாறான பல கவிஞர்களைப் பத்திரிகை, சஞ்சிகை, முகநூல் வாயிலாக சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். அவ்வாறு எழுதப் புகுந்தவர்கள் பலரின் கவிதைகள் மிகவும் அற்புதமாக இருக்கின்றன. எமது சிந்தையைக் கவர்கின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை. அவ்வாறான சிறந்த கவிஞர்களை இனங்கண்டு இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கோடு "புத்தொளிக் கவிதைகள்" எனும் இக்கவிதைத் தொகுப்பைத் தவழ விட்டுள்ளார் மணிக்கூ கவி சகோதரி நஸீரா எஸ் ஆப்தீன்"

இக்கவிதைத் தொகுதியின் முதல் 26 பக்கங்களில் பல்வேறு பிரபலங்களின் அணிந்துரை, நயவுரை, ஆசியுரை, மகிழ்ந்துரை, வாழ்த்துரை, என்னுரை போன்றன இடம் பிடித்துள்ளன. கவிதைப் பிரியர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தைத் தரும் கவிதைத் தொகுதி இது.

நூல்: **புத்தொளிக் கவிதைகள்,** ஆசிரியர்: **மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன்,** வெளியீடு: **புத்தொளி, ஏறாவூர்** முதற்பதிப்பு: **ஒக்டோபர் 2021,** பக்கங்கள்: **180,** விலை: **ரூபா. 600.00,** தொடர்புகளுக்கு:**0771962247**

## பேசும் படம்



## நலமே வாழ்வோம்

### பழமொழிகளில் உணவு

- சீரகம் இல்லா உணவு சிறக்காது.
- தன் காயம் காக்க வெங்காயம் போதும்.
- வாழை வாழ வைக்கும்.
- அவசர சோறு ஆபத்து.
- இரைப்பை புண்ணுக்கு எலுமிச்சை சாறு.
- இரத்த கொதிப்புக்கு அகத்திக் கீரை.
- இருமலை போக்கும் வெந்தயக்கீரை.
- உண்ணா நோன்பு ஆயுளைக் கூட்டும்.
- உஷ்ணம் தவிர்க்க கம்பங்களி.
- கல்லீரல் பலம் பெற கொய்யா பழம்.
- சித்தம் தெளிய வில்வம்.
- கொலஸ்ட்ரால் குறைக்க பன்னிர் திராட்சை.
- சிறுநீர் கடுப்புக்கு அண்ணாசி.
- சூட்டைத் தணிக்க கருணைக்கிழங்கு.
- ஜீரண சக்திக்கு சுண்டைக்காய்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# வேலைகளை முடித்தல் (Completion of Tasks)

## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 10



கே. பத்மானந்தன்



**பொதுவாக ஒரு நிறுவனத்தில் செய்யப்படும் வேலைகள் இருவகைப்படும் அவையாவன உடனடியாகச் செய்ய வேண்டிய எக்காரணங்களாலும் ஒத்திப்போட முடியாத அவசர வேலைகள்** (Nonpostponable Works i.e.Urgent Works) **மற்றையது நேரம் எடுத்து அல்லது காலம் தாழ்த்திச் செய்யக்கூடிய அவசரமற்ற வேலைகள்** (Postponable Works) **ஆகும். எனவே ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் என்பவர் தனது நிறுவனத்தில் அவசரமாகச் செய்யப்பட வேண்டிய வேலைகள் யாவை ஆறுதலாகச் செய்யப்பட வேண்டிய வேலைகள் யாவை என்ற தெளிவினைக் கொண்டிருக்க வேண்டும். அத்தெளிவின் அடிப்படையில் வேலைகளை முன்னுரிமை** (Priority) **அடிப்படையில் செய்துமுடிக்க முயல வேண்டும். இக் கருத்துகளை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.**

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.
(குறள் 672)

காலந்தாழ்த்திச் செய்யத் கூடியவற்றை காலந்தாழ்த்தியே செய்யவேண்டும் அதேபோல் காலந்தாழ்த்தாமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களைச் செய்யக் காலந்தாழ்த்தக்கூடாது என்கிறார் திருவள்ளுவர். அதாவது முகாமையாளர் நிதானமாகச் செய்ய வேண்டிய காரியங்களைத் தாமதித்துச் செய்யலாம் அதனால் அவரது நிறுவனத்திற்கு பெரிய பாதகமில்லை ஆனால் விரைவாகச் செய்ய வேண்டிய காரியங்களில் தாமதம் கூடாது அதனால் அவரது நிறுவனத்திற்கு விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும் என்கிறார் திருவள்ளுவர்.

அரசாங்கத்தில் இருந்து பல செயல்திட்டங்களை பொறுப்பெடுத்த நிறுவனங்கள் காலதாமதமின்றிச் செய்யவேண்டிய பலவேலைகளை நேரகாலத்துடன் செய்து முடிக்காமல் போனதனால் அரசாங்கத்தினால் கறுப்புப் பட்டியலில் உள்வாங்கப்பட்டதை நாங்கள் காண்கிறோம். இதனால் அரசாங்கத்தின் செயல் திட்டங்களை எடுக்க முடியாமல் அந்த நிறுவனங்கள் நட்டமடைந்து மூடப்பட்ட சமபவங்கள் எல்லாம் நடந்துள்ளன. எனவே ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் என்பவர் அவசரமாகச் செய்ய வேண்டிய வேலைகளை ஆறப்போடாது உடனடியாகச் செய்ய வேண்டும் அதே வேளை அவசரமற்ற வேலைகளைச் செய்வதற்கு அவசரம் காட்டாது நிதானமாகச் செயல்பட வேண்டும்.

இதேபோன்று வெள்ளம், புயல், காட்டுத்தீ, எரிமலை, சுனாமி, போன்ற அனர்த்த வேளைகளில் வழக்கமாகச் செய்யக் கூடிய கட்டுமானப் பணிகளைச் செய்ய முடியாது அவற்றில் தாமதம் ஏற்படும். ஆனால் இந்த அனர்த்த வேளைகளில் செய்யப்பட வேண்டிய நிவாரண வேலைகளை முகாமையாளர் முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டும். இந்த வேலைகளில் ஏற்படும் காலதாமதங்களால் மக்களுக்கும் நிறுவனத்திற்கும் ஏன் நாட்டிற்குமே ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைத் தவிர்க்கமுடியாது போய்விடும். இதே போன்றுதான் வைத்தியசாலைகளில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அவசர நோயாரக்ளுக்கு முன்னுரிமை கொடுத்து சிகிச்சைகள் செய்யப்படுவதால் உயிராபத்துகள் தவிர்க்கப்படுகின்றன. எனவே முகாமையாளர் என்பவர் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் வேலைகளை முன்னுரிமைப்படுத்தி செய்கின்ற ஒருவராக இருக்க வேண்டும்.



பொதுவாக நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் அந்நிறுவனத்தில் வேலைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். தொடங்கிய வேலைகளை முடித்தல் (Completion of work), தொடங்கிய வேலைகள் முடிந்ததை உறுதிப்படுத்தல் (Confirmation of Completion of work),தொடங்கிய வேலைகள் முடிவடையாமல் போவதற்கு வாய்ப்புகள் உள்ளதா என்பதை ஆராய்தல் (Analyze the possibilities for incompletion of work), வேலைகள் முடிவடையாமல் போகும் சந்தர்ப்பங்களில் அதற்கான காரணகாரியங்களை ஆராய்தல் (Analyze the causes for incompletion of work), இக்காரண காரியங்களின் அடிப்படையில் முடிவடையாத வேலைகளை முடித்து வைத்தல் (complete the incomplete work). இக் கருத்துகளை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

ஒல்லும்வா யெல்லாம்
வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.
(குறள் 673)

அதாவது இயலும் போதெல்லாம் இயலுமிடத்திலெல்லாம் இயலக்கூடிய சந்தர்ப்பங்களில் எல்லாம் எடுத்த வேலைகளைச் செய்து முடித்தல் நல்லது. அவ்வாறு செய்ய இயலவில்லையானால் அவ் வேலைகளையைச் செய்யக்கூடிய வழி வகைகளை அறிந்து அந்த வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

எனவே முகாமைத்துவமானது எடுத்த வேலைகளை எவ்வாறு முடிக்கலாமென ஆராய்ந்து அவ் வேலையை எவ்வாறாயினும் குறித்த காலப்பகுதியில் முடிக்க முயல வேண்டும்.

அதேபோன்று ஒரு முகாமையாளர் தன்னால் செய்யப்படமுடியும் என்று கருதுகிற எந்த ஒரு வேலையையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் காரணத்திற்காகவும் தள்ளிப்போடாமல் கைவிடாமல் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். இதனைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில்

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"
(குறள் 33)

என்று கூறுகிறார் . அதாவது முகாமையாளர்செய்யக்கூடிய வேலைகளை எந்த வகையிலும் எக்காரணத்தாலும் கைவிடாமல் செல்லுமிடமெல்லாம் செய்ய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

அதேபோன்று ஒரு நிறுவனத்தி னுடைய முகாமையாளர் தனக்குப் பொருத்தமான தன்னால் செய்யக்கூடிய வேலையே மட்டுமே செய்ய வேண்டும். அப்படித் தன்னால் செய்யப்படக்கூடிய வேலைகளைச் செய்வதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றையும் அவ்வேலை தொடர்பாக அறிய வேண்டிய எல்லாவற்றையும் தேடி அறிந்து கொள்ள வேண்டும் .அப்படி முயற்சி செய்கின்ற முகாமையாளர் ஒருவரால் முடியாத காரியம் என்று எதுவும் இல்லை. இதனைத் திருவள்ளுவர்

"ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்".
(குறள் 472)

என்ற ஈரடியில் தெளிவாகச் சொல்கிறார் . அதாவது தனக்குப் பொருந்தக்கூடிய வேலையையும், அந்த வேலையைச் செய்வதற்கு அறிய வேண்டியதையும் அறிந்து முயல்கின்ற முகாமையாளர் ஒருவருக்கு முடியாதது ஒன்றும் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

பொதுவாக சமூக பொருளாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் போது செயற்றிட்டப் பணிப்பாளர் அல்லது செயற்றிட்ட முகாமையாளர் என்பவர் திட்டமிட்ட வேலைகளை அதாவது செய்யவேண்டிய வேலைகளை தேர்ந்தெடுத்த இடங்களில் குறிப்பிட்ட காலத்தில் சரியான முறையில் அமுல்படுத்தவேண்டும் அல்லது திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் அல்லது சவால்களை இனம் கண்டு மாற்று நடவடிக்கைகளை எடுத்து அவற்றை அமுல்படுத்த வேண்டும். அல்லாவிட்டால் வீண் கால,பொருள், நிதி விரயங்கள் ஏற்படுவதோடு அத்திட்டமானது தோல்வி அடையக்கூடும்.

இக்கருத்தினை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் தெளிவாக விளக்குகிறார்.

"செய்தக்க அல்ல
செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"
(குறள் 466)

அதாவது ஒருமுகாமையாளர் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல் செய்யத் தேவையில்லாத வேலைகளைச் செய்வாராயின் அவர் தோற்றுப்போய்விடுவார். அதேபோன்று செய்யத்தகுந்த வேலைகளை செய்யாது விடுவதானாலும் அவர் தோற்றுப்போய்விடுவார் என்கிறார் திருவள்ளுவர். இவ்வாறு செயல்களைச் செய்யும் போது அதனால் பெறப்படும் முடிவுகள் ஏற்படக்கூடிய இடைஞ்சல்கள் இடையூறுகள் அத்தோடு நிறுவனத்திற்கு கிடைக்ககூடிய இலாபம் என்பவற்றை முகாமையாளர் கருத்தில் கொள்ள வேண்டும். அப்போதுதான் வேலைகளைச் சிறப்பாக செய்துமுடிக்கலாம். இதனைத் திருவள்ளுவர்

"முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்" (குறள் 676)

என்ற ஈரடியில் தெளிவாகக் குறிப்பிடுள்ளார் .அதாவது ஒரு வேலையைச் செய்வதால் வரும் முடிவு (Final outcome) வரக்கூடிய இடையூறு(Hinderances)முடிந்தபோது கிடைக்கும் பெரும்பயன் (Benefit or profit) ஆகியவற்றை ஆராய்ந்து முகாமையாளர் செயற்படவேண்டும் என்கிறார்.


எனவே ஒரு நிறுவனத்தில் திட்டமிடப்பட்டு ஒழுங்கான முறையில் நிறைவடையாமல் போகும் வேலைகள் நிறுவனத்திற்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும் என்பதால் முகாமையாளர் முடிக்கப்படாத வேலைகள் தொடர்பாக விசாரிக்க வேண்டும் அல்லது ஆராய வேண்டும்(Analyze cusses and consequences of uncompleted works), அவ்வாறு ஆராய்ந்த பின் அவ் வேலைகளை முடிக்கத்தக்க நட வடிக்கைகளை எடுக்க வேண்டும் (Take remedial actions to compete the works).

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845






















கொழும்பு-07
விஜேராம மாவத்தையில்

05 படுக்கையறைகளுடனான புதிய ஆடம்பர வீடு நவீன வசதிகளுடன் பணியாளருக்கு தனியான தங்குமிடம். 3500 ச.அடி. குத்தகைக்கு.

தொடர்பு இலக்கம் - 0777 252 511




LOOKING FOR A
UNCOVERED LORRY
16½' OR 20'
LONG TERM RENT
0716 814 625

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

## ஆசைகளைச்சுருக்கும் அரசியலமைப்பு...

09ஆம் பக்க தொடர்...

ஊழல்வாதிகள் தப்பிச்செல்வதற்கு இடமளிக்கும் வகையில், இந்த இரட்டைப் பிரஜாவுரிமை இருப்பதாகச் சொல்லப்படுவதுதான் இதற்கான பிரதானம். தனியொரு குடும்பத்தை ஆளும் வர்க்கமாக்குமளவுக்கு இந்த நிறைவேற்றதிகாரம் பாவிக்கப்பட்டதா? அல்லது இதை பயன்படுத்திய விதங்களில் தவறு ஏற்பட்டதா? என்ற கருப்பொருளிலே இன்று அரசியல் கட்சிகள் கருத்துக்களை முன்வைப்பதும் தற்செயலான ஆசைகளில் ஒன்றுதான்.

இந்த அதிகாரத்தை அடையத் துடிப்பவர்களுக்கு இப்படியென்றால், அதிகாரத்தை அனுபவிப்பவருக்கு எப்படியிருக்கும்? இதை அனுபவித்த எவரும் இடையில் இதை விட்டுக்கொடுக்காததும் இதற்குத்தானே!

நல்லாட்சியில் சற்று மட்டுப்படுத்தியதாகக் கூறப்பட்டது. ஆனால், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட இடைவெளிகள் மற்றும் பாதுகாப்பில் ஏற்பட்ட பலவீனங்கள் பற்றி இன்றும் பேசப்படுகிறதே! மட்டுமா? இருபத்தைந்து வீதமாகவுள்ள சிறுபான்மை சமூகங்களுக்கு, நேரடியாக ஒரு ஜனாதிபதியை தெரிவு செய்யும் அல்லது தீர்மானிக்கும் வாய்ப்பை ஒழிப்பது அறிவுக்கு ஒப்பானதா? என்றெல்லாம் பல கருத்துக்கள் களத்தை கனதியாக்கவே செய்கிறது.

இதுகுறித்து அண்மையில் கருத்து வெளியிட்ட முஸ்லிம் சிறுபான்மை தலைமையொன்று, நிறைவேற்றதிகார ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பும் வழிகள் இலகுவாக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறது. இதன் மறுவடிவம் என்ன வகையிலும் இவ்வதிகாரமே சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. நம்பிக்கையிழந்தால் அவரை அனுப்பும் வழிகள் இலகுவாக இருக்குமிடத்து, எப்படியும் பொறுப்பின்றி இவர் செயற்படமாட்டார் என்ற மறுபதமும் இதிலுள்ளது. அனுப்பும் வழிகள் எல்லா வகையிலும் கடினமாக இருக்கையில், ஐந்தாண்டுகளுக்கு அசைக்க முடியாதென்ற ஆணவம் ஏற்படாமலா இருக்கும்? எனவே, அனுப்பும் வழிகள் இலகுவாக்கப்படுவது சிறிய கடிவாளம் இடுவதற்கு ஒப்பானதாக இருக்கலாம்.

இவற்றையெல்லாம் விட இளைஞர்களின் மாற்றத்துக்கான பாதையும், பயணமும் தெளிவாக இருப்பதை அவதானிக்கையில், அதிகாரத்துக்கு ஆசைபடும் எவரும் ஆத்திரமடையாமல் இருக்கப்போவதில்லை.

## 03 ஆண்டுகளின் பின்னர்...

11ஆம் பக்க தொடர்...

ஆம் கோடி அற்புதர் புனித அந்தோனியாரையும் சோதித்த தருணமது. உயிர்த்த ஞாயிறு தினத்தில் அல்லேலூயா புகழ் பாடிய மக்களை அன்றைய தினம் ஆலயத்தில் அல்லுற செய்துவிட்டார்கள். பல மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. பலர் உடல் சிதறி கிடந்தார்கள். இன்னும் சிலர் அவயவங்களை இழந்தார்கள். குண்டு வெடிப்பின் அதிர்வுகளால் தேவாலயத்தின் வெளிப்புறம், உட்புறம், சுவர்கள், கூரைப் பகுதிகள் சேதமடைந்தன. இதனையடுத்து ஆலயம் மூடப்பட்டு திருப்பலிகள், ஆராதனைகள் நிறுத்தப்பட்டன. எனினும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை எந்த பயங்கரவாத படுபாதக செயல்களினாலும் அழிக்க முடியவில்லை.

பாரிய அழிவு ஒன்றின் சாட்சியமாக வேதனை தரும் வரலாற்றுச் சின்னமாக இந்த இடம் மாற்றம் பெறுகின்றது. மேலும் ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து ஆலய வளாகம் விஸ்தரிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பும் போடப்பட்டது.

அந்த ஆண்டு புனித அந்தோனியாரின் திருவிழா கொண்டாடங்கள் மிக அமைதியான முறையில் எத்தகைய ஆடம்பர நிகழ்வுகளும் இன்றி திருப்பலி மட்டுமே நடைபெற்றது.

இந்நிலையில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியான சூழலுக்கு மத்தியிலும் மக்கள் புனித அந்தோனியாரின் பெரு விழாவை கொண்டாட காத்திருக்கின்றார்கள்.

(தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

### பெறுகை அறிவித்தல்

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக உத்தியோகபூர்வ இணையதளத்தை அபிவிருத்தி செய்தல்

மேலே குறிப்பிட்டுள்ள பெறுகைக்காக 2022.07.05 ஆம் திகதியன்று பி.ப. 1 மணி வரையும் பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 234 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களில் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு அவர்களின் நிதியிடல் முன்மொழிவு மற்றும் அனைத்து ஏனைய தகவல் (விலைமனுப்பிணை, தகுதித்தன்மை, அனுபவம், மூலவளங்கள் மற்றும் வர்த்தகரீதியிலான தேவைப்படுத்தல்கள் போன்றவை, இன்னும் பலவும்) ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

2022.06.13 ஆம் திகதியிலிருந்து 2022.07.04 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் விலைமனுக்கோரல் நிறுவனத்தின் வியாபார பதிவு சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்றுடன் விலைமனுக்கோரல் நிறுவனத்திலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கையின் அடிப்படையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் 50,000 ரூபா பெறுமதியானதும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 104 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமானதும் நிபந்தனையற்றதும் உடனடியாக மாற்றக்கூடிய உத்தரவாதத்திலமைந்த பாங்கிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் வழங்கப்படல் வேண்டுமென்பதுடன் சித்திகரமான விலைமனுதாரர் மொத்த விலைமனுவின் பெறுமதியில் 10% இற்கு சமனான செயற்பாட்டு உத்தரவாதமும் வழங்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணை மற்றும் செயற்பாட்டு உத்தரவாதம் ஆகிய இரண்டும் இலங்கையில் செயலாற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதும் ‘இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தலைவரின்’ பெயரில் வழங்கப்பட்டதாகவுமிருத்தல் வேண்டும்.

நிதியிடல் முன்மொழிவு மற்றும் ஏனைய சான்று பகரும் ஆவணங்கள் அடங்கலானவை தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் **“Development of SLBFE Official Website”** என குறிப்பிடப்பட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக 2 ஆம் மாடியின் பிரதி பொது முகாமையாளரின் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்களின் தாமதமான சமர்ப்பித்தல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பெற்றுக் கொண்ட அனைத்து விலைமனுக்கோரல்களும் கேள்வியை மூடிய பின்னர் அதே முகவரியில் திறக்கப்படுமென்பதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் திறத்தலில் பங்கு பெறலாம்.

2022.06.24ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு பணிப்பாளர் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பெறுகைக் குழுவானது எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் எந்தவொரு விலைமனு ஆவணம் தொடர்பாக நேரடியாக அல்லது நேரடியாக ஏற்படும் தயாரித்தல் அல்லது எந்தவொரு விலைமனு ஆவணத்தின் தயாரித்தலில் ஏற்படும் எந்தவொரு செலவினத்தையும் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது.

இது தொடர்பாக பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர் / பெறுகைக் குழு,
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,
இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்ல**

**தொலைபேசி / தொலைநகல்: 011-2880550/ 2880564/2887585**
**மின்னஞ்சல்: mgr-procuremend@slbfe.lk**

அக்கரையில் மான்புற இக்கரையில் கைகோர்ப்போம்

## ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்

### கேள்வி அறிவித்தல்

ஓரளவு சேதமடைந்த வாகனங்களை (கார்கள், ஜீப் வண்டிகள், டபல் கெப், லாரி வண்டிகள், மினி வேன், முச்சக்கர வண்டி மோட்டார் சைக்கிள்கள்) சேதமைடைந்த லாரி கேபின்கள், உறைவிப்பான் சரக்கூந்து கவசம், மோட்டார் காப்புக்கள், பதிவு ரத்து செய்யப்பட்ட கார்கள், முச்சக்கர வண்டிகள், மினி வேன், சிங்கிள் கெப், SLIC பயன்படுத்திய வாகனங்கள் (மோட்டார் சைக்கிள்கள், கார்கள், டபல் கெப், முச்சக்கர வண்டிகள், வேன், மின் மற்றும் மின்னனு பொருட்கள், பல இதர பொருட்கள் ஆகியவற்றை அகற்றுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

### அமைவிடம்

1. ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ், இல. 54, மொடல் டவுன் வீதி, (இரத்மலானை), கட்டுபெத்த.
2. ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ், இல 288, யுனியன் பிலேஸ், கொழும்பு 02 (வாகன உதிரிப் பாகங்கள் மாத்திரம்)

### நிபந்தனைகள்

- 2022/06/13 முதல் 2022/06/20 வரை காலை 9.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை மேற்கூறப்பட்ட எமது வளாகத்தினுள் சென்று பொருட்களை பார்வையிட உங்களுக்கு அனுமதி வழங்கப்படும். (போயா, சனி மற்றும் ஞாயிறு தினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன)
- ஏதேனும் ஒரு பொருளை வாங்குவதற்கு ஆர்வமாக இருந்தால், மீளளிக்கப்படாத பணம் ரூ. 1500.00 செலுத்தி விலைமனு கோரல் விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம். அதனை காப்பு பிரிவு (Salvage Department), இல. 54, மொடல் டவுன் வீதி, (இரத்மலானை), கட்டுபெத்த எனும் முகவரிக்கு விலை குறிப்பிட்டு முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தை மூடி முத்திரையிட்டு பதிவுத் தபாலில் 2022.06.20 திகதியன்று பி.ப 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் அனுப்பி வைக்கவும் அல்லது ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் காப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியில் வைப்பிலிடவும். (ஒவ்வொரு பொருளுக்கும் தனியான விலைமனு கோரப்பட வேண்டும்.)
- லொட் (Lot) இல.69 சம்பந்தமான விலைமனு கோரல் விண்ணப்பத்திற்கு ரூ. 100,000.00 மற்றும் ஏனைய விலைமனு கோரல்களுக்கு ரூ.20,000.00 மீளப்பெறக்கூடிய வைப்புக்கள் செய்யப்பட வேண்டும்.
- குறித்த திகதிக்குப் பினனர் கிடைக்கப் பெறும் எந்த கோரல்களும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. கோரல் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “ SLIC Quotation for Salvage Tender No 61” என குறிப்பிட வேண்டும்.
- எந்த கோரலையும் விளக்கம் அளிக்காமல் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க SLIC உரிமை கொண்டுள்ளது.

**விசாரணைகளுக்கு : 011-2607396**

முகாமையாளர்
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
காப்புப் பிரிவு (Salvage Department)
54, மொடல் டவுன் வீதி,
கட்டுபெத்த

Company Registration Number : PB - 289

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கண்டி குண்டசாலை 80 பேர்ச் சதுர வடிவ காணி கென்டோஸ் சொக்ளட் தொழிற்சாலைக்கு முன்னால் 180 அடி அகலமான கார்பட் பிரதான வீதியில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால், 21730 சதுர அடி காணி. காணியைச் சுற்றி 15 அடி உயர பாதுகாப்பு சுவர் இரும்பு கேட்டுடன் வர்த்தக வங்கிகள், BOI, பல்லேகெலே விளையாட்டரங்கு, அரச அதிகார சபைகள் மற்றும் ரிஜென்ட் ஹோட்டலுக்கு அருகில். நடைதூரம் ஐந்து நிமிடம் காணியில் இருந்து டொக்டர்களுக்கு பொருத்தமானது. மின்சாரம், நீர் உண்டு. பெறுமதி ரூ. 85 மில்லியன். 0777438169, 0777282147 031616



0777 43816 9 அபிவிருத்தி செய்யப்பட்ட பல தோட்டங்கள் A9 வீதி தம்புள்ள மாத்தளை, மத்தளபிட்டிய வீதி, தெங்கு, கித்துல், இடைப்பயிர் 12 மில்லியன், பதம்பிட்டிய 6 1/2 ஏக்கர், தெங்கு, மா, வயல், குடியிருப்புக்கு வீடு. 25 மில்லியன், பொக்காவல 20 ஏக்கர் பலா, தெங்கு, இடைப்பயிர் ஓர்கல் ( 2 ஏக்கர்) 35 மில்லியன் உல்பத் மடவல 16 ஏக்கா் தேக்கு 4000 மிளகு கொடிகள் 2000, வயலுடன் வீடு 80 மில்லியன், கலகெதர காபட் பாதைக்கு முகப்பாக 350 மீட்டர் 16 ஏக்கா் இறப்பா் தோட்டம் 1400 மில். 0777 282147. 036041



### 208 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு/குத்தகைக்கு

தெஹிவளையில் கொன்கோட் ஹோட்டலுக்கு அடுத்ததாக 1ஆம் மாடியில் 700 ச.அடி வாடகைக்கு. காலி வீதிக்கு முகப்பானது. தொடர்பு இல. 0777517940. 034723

### வேலைவாய்ப்பு

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

நிட்டம்புவ வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் 30, 000/ அழையுங்கள். 071 24444 88, 077 6198879. 035953

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

பிலியந்தலை ACL கேபிள் உணவகத்திற்கு சகல ஊழியா்களும் தேவை. சம்பளம் ஒரு நாளைக்கு 1500/ 077 5138624. 035950

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

ஐந்து ஏக்கர் தென்னங் காணியில் தங்கி வேலை செய்வதற்கு ஊழியர் தேவை. கம்பஹா வெலிவேரிய. 033 2259143, 0763279169 035893

### 325 தொழில்துறை பொது

சொப்பிங் பேக் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பேக்கட்டிங், ஸ்குடர் ஒபரேட்டர் மற்றும் ஹெல்பர் தேவை. சர்பெக் இன்டஸ்ரிஸ், இல. 9, 3 ஆம் லேன், மாளிகாவ வீதி, இரத்மலானை. 0773030558, 0112625634 035828

071 8 6 53781, 07 1 8653778 நட்சத்திர தர ஹோட்ட லிற்கு சி வில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். உணவு இலவசம். (12 மணி நேரம்) இற்கு 1750/ 1450/. கொழும்பு 071 8653780 அலுவலகம் 070 6655331. 036079

### சொந்த விடயம்

### 501 பழங்காலப் பொருட்கள் சேகரிப்புகள்

உங்கள் வீட்டில் ஆடம்பரத்தை காட்டும் தளபாடங்களின் சேர்க்கை இலகுவாக தேடிக்கொள்ள முடியாத புராதனப் பொருட்களின் சேர்க்கை எம்மிடம். பரிசு வழங்கவும் ஏற்றது. வாருங்கள் கடந்தகால கம்பீர அழகை காணுங்கள். ஜயசங்க என்டிக் சம்பத் வங்கிக்கு அருகில். ராகம. இசுரு ADZ 036066

### காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு 08, பொரளை நகரத்திற்கு அருகில் 1 1/4 பேர்சஸ், இரு மாடி வீடு விற்பனைக்கு. 2 அறைகள் மண்டபம், சமையலறை, ஒரு குளியலறை. 0712186853 035566

பொரலஸ்கமுவ 03 மாடி வீடு 9.5 பேர்ச். 05 படுக்கையறைகள் 12 அடி உயர பாதுகாப்பு சுவர் சமையலறையுடன் வேலையாள் கழிப்பறை. 02 X பெரிய ஓய்வு பிரதேசங்கள். 03 வாகன நிறுத்துமிட வசதிகள். ரூப் டொப் உடன் ரம்மியமான சூழல். பெல்லன்வில நடைபாதைக்கு 10 நிமிட நடைதூரம். 20 அடி வீதியுடன் அதிகூடிய பாதுகாப்பு. 49 மில்லியன். தொடர்பு 070 4644640, 0778510282 035751

வீடு விற்பனைக்கு கொழும்பு ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள 1.75P இனாலான வீடு வர்த்தக இடமாக அல்லது வீடாக பாவிக்கலாம். தொடர்புகளுக்கு விலை பேசித் தீர்மானிக்கலாம். 0785428998 035527

ஹோமாகம மாகம்மன தொலேகடே சந்தியில் கார்கில்ஸ் புட்சிடி அருகில் 18 பேர்ச் பிரதான பஸ் பாதைக்கு 20m ஹோமாகம நகரத்திற்கு 2 1/2km தரகர்கள் வேண்டாம். 077 0469912, 074 2890672 036037

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கடவத்த மாவரமண்டிய நகரிற்கு 200m 03 அறைகள், இருமாடி முழுமையான வீட்டுடன் 13 பேர்ச் காணி விற்பனைக்கு. 0716677385, 074 0317007. 036023







தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

வேலை செய்யும் முஸ்லிம் ஆண்களுக்கு/ சகல வசதிகளுடன் கூடிய தங்கும் இடம் (SHAR ING ACCOMMO-DATIO N) கொழும்பில்13 உள்ளது. மாத வாடகை ஒரு வருக்கு 2000/ ரூபா 075 7978449, 0761961469 035937

வாரமஞ்சரி திருமண சேவைகள்

### மணமகள்

இரத்தினபுரியில் 37 வயதான இளம் தோற்றமுள்ள முஸ்லிம் பெண் ஒரு முக்கியமான வேலை செய்யும் மணமகனைத் தேடுகிறார். B181826

இஸ்லாமிய மணமகளுக்கு நற்குணமுள்ள மார்க்கப்பற்றுள்ள மணமகன் தேவை. 0741711316, 0114906065. B180714



# I. விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு – நிதி அமைச்சு

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## 80 எண்ணிக்கையான வளிச்சீராக்கல் இயந்திரங்களின் சேவை பராமரிப்பு

1. பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கு 80 எண்ணிக்கையான வளிச்சீராக்கல் இயந்திரங்களின் சேவை பராமரிப்பிற்காக அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் சார்பாக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.
2. தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட பெறுகை வழிகாட்டிகளில் திட்டவட்டமாக குறிக்கப்பட்ட "சுயவிருப்பமற்ற ''சித்தி/சித்தியின்மை'' தகவுத்திறனைப் பாவித்து பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைகளினூடாக நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மனித வளங்கள் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் இற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று சனிக்கிழமைகள், ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் வங்கி விடுமுறைகள் நீங்கலாக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணமாக ஐந்தாயிரம் ரூபாவைச் (5,000 ரூபா) செலுத்திய பின்னர், 2022 ஜூன் 12 ஆம் திகதியன்று கீழேயுள்ள முகவரியிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கையேற்கப்படலாம்.
5. 2022 ஜூன் 27 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் எந்தவொரு ஏற்கத்தக்க படிவங்களில் அத்துடன் 25,000 இலங்கை ரூபாவிலமைந்ததான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. 2022 ஜூன் 27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-03, காலி வீதி, 269 ஆம் இலக்கத்திலுள்ள அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 4 ஆம் மாடியின் லொஜிஸ்டிக்ஸ் பிரிவில் விலைமனுக்களின் திறத்தல் இடம்பெறும். கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டையும் அதனால் சுமத்தாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும், விலைமனுக்கோரல் செயற்பாட்டை ஒழிப்பதற்கும் அத்துடன் அனைத்து விலைமனுக்களையும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எவ்வேளையிலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
8. மேலதிக தகவலுக்காக தயவு செய்து கீழேயுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**4 ஆம் மாடி – லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி,**
**269, காலி வீதி,**
**கொழும்பு-03.**
**தொலைபேசி: 011-7722879**
**தொலைநகல்: 011-2573346**


**தலைவர், பெறுகைக் குழு,**
**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.
Replies sent under registered cover will not be accepted.

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.
Dinamina Daily News Thinakaran
VISIT apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
AVAILABLE AT
LAKE HOUSE

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி
# SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, உயர் தரமான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்த வகையில் சேவைகளை வழங்கும் நோக்குடன் வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் உள்ளது. அதற்காக பின்வரும் பதவிகளுக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதில் முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து நாம் விண்ணப்பங்களை கோருகிறோம்.

## தலைமை அகநிலைக் கணக்காய்வாளர்

வங்கியின் இலக்கு மற்றும் நோக்கை அடைவதை நோக்கி சிறந்த கூட்டிணைவை ஊக்குவிப்பதற்கு அகநிலை கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமைகளின் திறன் மற்றும்/ அல்லது செயல்திறனை மேம்படுத்துவது மற்றும் மதிப்பீட்டுக்கு தேர்வுசெய்யப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் திட்டமிடல் மற்றும் தொழில்நுட்பத்தை மேற்கொள்ளல், நடவடிக்கை, நிதி மற்றும் compliance audits இனை வழிநடத்துவது மற்றும் தலைமை வகிப்பது இந்த வேலையின் முழு நோக்கமாகும்.

**முக்கிய பொறுப்புகள்**

- பரிவர்த்தனைகளின் வரலாற்றை மதிப்பீடு செய்தல், போக்குகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் வங்கியின் பரிவர்த்தனை செலவுகளை குறைப்பதற்கு செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு பரிந்துரைகளை வழங்கல்
- கொள்கையை உறுதி செய்யும் பொருட்டு முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் செயற்பாட்டு முடிவுகளை சரியாக செயற்படுத்தல்
- நிறுவன ரீதியான முறைமைகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய கணக்காய்வுகளை அடிப்படையாகக் கொண்ட திறன் மற்றும் செயல்திறன் கொண்ட தொடர்பாடல் முறைமையை நிறுவுவதை உறுதி செய்தல்
- கணக்காய்வு நோக்கிற்கு உட்பட்டு வருடாந்த/ மாதாந்த கணக்காய்வு திட்டத்தின்படி வங்கி செயற்பாடுகளில் வழக்கமான கணக்காய்வை மேற்பார்வை செய்தல்
- கொள்கைகள், நடைமுறைகள், அங்கீகரிக்கப்பட்ட பாதீடு, முக்கிய முகாமைத்துவ முடிவுகள், உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் அனைத்து ஏனைய ஒழுங்குமுறை தேவைகளுடன் வங்கியின் வர்த்தக பரிவர்த்தனைகளின் இணக்கத்தை சரிபார்த்தல் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பித்தல்
- நிதி மோசடிகள் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்கு உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்தல்
- வங்கிச் செயற்பாடுகளில் கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரங்களை நிறுவுதல் மற்றும் பேணுதல்
- வங்கிக்குள் கணக்கியல் மற்றும் ஏனைய மேம்படுத்தப்பட்ட தரவின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல்
- கணக்கியல் பயன்பாடுகள், நிதி மற்றும் செயற்பாட்டு கட்டுப்பாடுகளின் போதுமான தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

இலங்கை பட்டய கணக்காளர்களின் நிறுவனத்தின் அங்கத்துவம் மற்றும் கணக்காய்வில் பத்து (10) ஆண்டுகள் அனுபவம். அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் அனுபவம். வங்கி/ நிதி நிறுவனத்தில் கணக்காய்வு அனுபவம் தகைமை ஒன்றாக சேர்க்கப்படும்.

**ஊதியம்**

சம்பள அளவு – வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதாந்தம் ரூபா 203,930 – 6,120 x 12 – 277,370 (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவு மற்றும் வாடகைக் கொடுப்பனவு).

வயது – 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் அரச துறை நிறுவனம் ஒன்றில் ஏற்கனவே ஊழியராக இருப்பவருக்கு இந்த வயது எல்லை பொருந்தாது)

**பொது நிபந்தனைகள்**

தேர்வு முறை – வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின்படி விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவர்.

நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு இடம்பெறும்.

**ஏனைய நன்மைகள்**

- சேமலாப நிதிய பங்களிப்பாக தொழில் வழங்குநர் மூலம் 15% மற்றும் ஊழியர் மூலம் 10% அளிக்கப்படும். வங்கி மூலம் ETF பங்களிப்பு மேற்கொள்ளப்படும்.
- வருடாந்த மிகையூதியம் இரு மாதங்களின் மொத்த சம்பளம்.
- சேவையை உறுதி செய்த பின்னர் சலுகை விகிதங்களில் வீட்டுக் கடன்கள்.
- வங்கியின் மருத்துவ திட்டத்தின் கீழான நன்மைகள்.
- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்புகளின் பணமாக்கல்.

**விண்ணப்ப இறுதித் திகதி - 2022.06.27**

**எவ்வாறு விண்ணப்பிப்பது**

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் மற்றும் தமது கல்வி/ தொழில்முறை பதிவுகளின் பிரதிகள் மற்றும் தமது சுயவிபரக் கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். அனைத்து விண்ணப்பங்களினதும் இரகசியம் கண்டிப்பாக பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகைமை இழப்பாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தேர்வு மேற்கொள்ளல், ஒத்திவைத்தல் அல்லது ஆட்சேர்ப்பை ரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தேர்வு அளவுகோல்களில் மாற்றங்களை செய்யும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி மற்றும் முடிவானது.

**விண்ணப்பங்கள் careers@amib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.**

The easiest & convenient way to send your Marriage Proposal Ads, classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
for 15 Words - Rs. 800/- Easy way to make your payment > 000000377 Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## பாதுகாப்பு அமைச்சு

# இலங்கை இராணுவம்

## ஒப்பந்த அடையாள இலக்கம்: MOD/SLA/01/2022

## 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணிகளுக்கான பெறுகை - 550,000 மீற்றர்கள்

1. இலங்கை இராணுவத்திற்கு 550,000 மீற்றர் 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணிகளைக் கொள்வனவு செய்வதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை இராணுவத்தின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC) தலைவர் அழைக்கின்றார்.
2. பின்வரும் தொகுதிகளுக்காக (Lots) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன என்பதுடன் விலைமனுதாரர் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளுக்கு விலை கோரலாம்.

| தொகுதி இல. | விபரம் | அளவு (மீற்றர்கள்) | விலைக் கோரல் உத்தரவாதத்தின் பெறுமதி (இல. ரூபா) |
|---|---|---|---|
| A | 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணி | 110,000 | 1,320,000.00 |
| B | 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணி | 110,000 | 1,320,000.00 |
| C | 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணி | 110,000 | 1,320,000.00 |
| D | 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணி | 110,000 | 1,320,000.00 |
| E | 60" வெள்ளை படுக்கை விரிப்பு துணி | 110,000 | 1,320,000.00 |

3. விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
4. தகுதிவாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் முதன்மை பொதுக் கட்டளை பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com மற்றும் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் (இலவசமாக) பரீட்சித்துப் பார்க்கலாம்.

   பெறுகைக் கிளை,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
   ஸ்ரீ ஜயவர்தனபுர,
   கோட்டே,
   இலங்கை.

   தொ.பே. 011-2390719

   தொலைநகல்: 011-2390720

   2022-06-13ஆம் திகதி முதல் 2022-07-05ஆம் திகதி வரையான சகல வேலை நாட்களிலும் 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை

5. இயைபானால், விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் திடமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
6. விலைமனுக்கள் 2022-10-05ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   பிரதான நிதியியல் அதிகாரி,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
   ஸ்ரீ ஜயவர்தனபுர,
   கோட்டே,
   இலங்கை.
   மின்னஞ்சல்: procurement@defence.lk

   மற்றும்

   பாதுகாப்பு அமைச்சுக்கு மீளளிக்கப்படும் கட்டணமாக நாற்பத்தியிரண்டாயிரம் இல. ரூபாவை (42,000.00 இல. ரூபா) ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

8. விலைமனுக்களை MOD/SLA/01/2022 எனும் குறிப்பீட்டிலக்கத்தைக் குறித்து பின்வரும் முகவரிக்கு 2022-07-06ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

   பிரதான நிதியியல் அதிகாரியின் அலுவலகம்,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
   ஸ்ரீ ஜயவர்தனபுர,
   கோட்டே,
   இலங்கை.

9. பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விருப்பத்தின் பேரில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
10. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற, கோரிக்கை மீதான விலைக்கோரல் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்) விலைக்கோரல் பிணைத் தொகையானது:

| தொகுதி இல. | விலைக் கோரல் உத்தரவாதத்தின் பெறுமதி (இல. ரூபா) |
|---|---|
| A | 1,320,000.00 |
| B | 1,320,000.00 |
| C | 1,320,000.00 |
| D | 1,320,000.00 |
| E | 1,320,000.00 |

   விலைக்கோரல் உத்தரவாதமானது 2022-11-03ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

11. பின்வரும் முகவரியில் 2022-06-23ஆம் திகதி 0900 மணித்தியாலயத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

   இராணுவ கட்டிடம்,
   இல. 167/30, அவிசாவளை வீதி,
   ஒருகொடவத்தை.

12. தொடர்பு விபரங்கள்

   இலங்கை இராணுவ முதன்மை பொதுக் கட்டளைப் பிரிவு, பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையலுவலகக் கட்டிடத்தொகுதி,
   ஸ்ரீ ஜயவர்தனபுர,
   கோட்டே,
   இலங்கை.

   தொலைபேசி: 011-2432135 / 0764797556
   தொலைநகல்: 011-2432135
   மின்னஞ்சல்: mgobranchemail@gmail.com

   பிரதான நிதியியல் அதிகாரி,
   பாதுகாப்பு அமைச்சு,
   தொலைபேசி: 011-2439381
   தொலைநகல்: 011-2390720
   மின்னஞ்சல்: procurement@defence.lk

13. விலைமனுக்களை திறப்பதற்கு ஆகக்குறைந்தது மூன்று (03) வேலை நாட்களுக்கு முன்னராக, விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் பங்குபெறும் தனிநபரின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நிதியியல் அதிகாரிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்குமாறு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

**மின்னஞ்சல் : procurement@defence.lk**
**தொலைநகல் : 011-2390720**
**தொடர்பு : 011-2390719**

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு.** **2022-06-12.**

# வாழ்வாதாரமா சேதாரமா 226



தமிழ்க் கவி பேசுகின்றார்

கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்யப் புறப்பட்டிருக்கிறோம்.. விவசாய முயற்சி என்பது அவ்வளவு சுலபமானதல்ல. குழந்தைகளை பெற்று வளர்ப்போர் சொல்வார்கள் 'பிள்ளை பிறந்திட்டுது இனி அது நோய்க்குப் பேய்க்குத் தப்பி வளர வேணுமே' என்று இதே போலதான் விவசாய முயற்சிகளும்.

நிலத்தைக்கொத்தி பண்படுத்தி அதற்னமும் நவீனமயமாகாமல் நாட்டினங்களே இருப்பதால் அவை சந்தையில் நல்ல விலைக்குப் போவதில்லை. சொன்னால் நம்புங்கள் வடபகுதிச் சந்தைகளில் கதலி வாழைக்குலைகள் கிலோ இருபது ரூபாதான் விற்க முடியும். அதாவது நட்டு ஒரு வருடம் கடந்த பின் ஒரு வாழையிலிருந்து சுமார் நூற்றி எண்பது இருநூறு ரூபாதான் கிடைக்கும். அதே பரம்பலில் நான்கு கத்தரிக்கன்று நட்டிருந்தால் அது ஆயிரம் ரூபாவரை தந்திருக்கும். கப்பல் வாழைக்குலை கிலோ நூறுரூபாதான். இது எல்லாம் விவசாயிக்கு அதாவது உற்பத்தியாளருக்கு கிடைக்கும் விலை. இதே நூற்றி எண்பது ரூபாவை சந்தை வியாபாரி இப்படி வாங்கி அப்படி நுகர்வோனுக்கு ஐநூறு ரூபாவுக்கு மேல் விற்றுவிடுவான்.

இனி பழமரங்களைப் பார்ப்போம். மா, பலா வாழை, மாதுளை, என என்ன மரத்தை நட்டாலும் அமோக விளைச்சலை பெறக்கூடிய மண் எங்களுடையது. சடைத்து பூத்து. நிரம்ப பிஞ்சுவிட்டு காய்கள் முற்ற முன்னமே குரங்குகள் படைபடையாக வரத் தொடங்குகின்றன. சிறியான் எனப் படும் செங்குரங்குகள் ஒருபுறம், மந்திக்கூட்டம் மறுபுறம் இவை பெரும் படையாக தோட்டங்களில் புகுந்து பேரழிவை தந்து கொண்டிருக்கின்றன. கத்தரி, வெள்ளரி, பூசணி, பயற்றை போன்ற மரக்கறிகளையும் பப்பாசி மரத்தின் இலைகளைக்கூட விடாது. அதிகாரம் விவசாயிகளுக்கும், அவர்களுடைய பயிர்களுக்கும் உழைப்புக்கும் என்ன உத்தரவாதத்தை கொடுத்திருக்கிறது.காட்டு விலங்குகளின் உணவை காட்டில் கொண்டுபோய் விநியோகிக்கிறதா என்ன?

காட்டு மயில்கள் நகரத்துச் சூழலில் உள்ள என் வீட்டு முற்றத்தில் நான் கோழிகளுக்குப் போடும் நெல்லை மேய வருகிறது. அது மட்டுமல்ல தின்ற குஷியில் முற்றத்திலேயே நடனமாடுகிறது. கூடவே தன் மனைவியரையும் அழைத்து வருகிறது. ஒரு விடிகாலைப்பொழுதில் வன்னிப்பக்கத்து அல்லது கிழக்குமாகாணம் நோக்கி ஒரு பயணம் செய்பவர்கள் கூட்டங் கூட்டமாக இவற்றை வீதியிலேயே எதிர் கொள்ளலாம். மக்களின் விவசாயப்பயிர்களுக்கு இவை செய்யும் அழிவு மிக அதிகம். விதைத்த வயலில் கருமுகில் கூட்டம் போல இவை பறந்து வந்து இறங்கும் காட்சி அற்புதந்தான். விதைத்தவனுக்கு அது கொலை மிரட்டல் அவனது வயல் நாசம்.

வருடாந்தம் பார ஊர்திகளில் தலைநகருக்கு பயணம் செய்த கறுத்தக் கொழும்பான் மாம்பழங்களும், செலன் வெள்ளைக் கொழும்பான் விலாட். இன்னும் பெயரில்லாத ஏராளமான மாம்பழங்களை , பலாப்பழங்களை, அன்னாசிப்பழங்களை குவியலாக லொறிக்கணக்கில் கொட்டியிருந்து விற்ற வியாபாரிகள் இப்போது மாம்பழங்களை தோட்டம்

# விவசாயிகளின் கைகளைக் கட்டிவிட்டு உற்பத்தியை பெருக்குவது சாத்தியமா?



குத் தேவையான பசளை வகைளை போட்டு நீர் பாச்சி விதைகளை ஊன்றி விட்டால் அவை குறித்த காலத்தில் முளைக்க வேண்டுமே என்ற கவலையில் விவசாயிக்கு தூக்கம் போய்விடும். சேற்றில் விசுக்கிய விதை முளைப்பதற்கு முன்பே அவற்றை புறா, கிளி, சிட்டுக்குருவி போன்றவை பகலிலும் சிறகை போன்ற நீர்ப்பறவைகள் இரவிலும் பொறுக்கி உண்டுவிடும். அவற்றுக்கு காவல் போட்டே ஆக வேண்டும். இரவில் சூள் கொழுத்தி வரம்புகளில் நாட்டியும், பகலில் நேரடியாக விரட்டியும் காவல்காத்து அது முளைவந்து இரு இலைப் பயிராவதுவரை காப்பது வழக்கம். அதில்லாமல் விதைத்த காலம் மழை பொழிந்தாலும் முளை அழுகியோ வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டோ சேதமாகிவிடும். அப்படிக் காத்த பின் பயிரானதும் பீடைகள் ஒன்றன்பின் ஒன்றாக தாக்கத்தொடங்கும். அவற்றுக்கும் வைத்தியம் செய்ய வேண்டும்.

அப்படியே ஆடு மாடுகள் காட்டு விலங்குகள் மேயாமல் வேலியும் போட்டு காவல் இருக்க வேண்டும். நேரா நேரத்துக்கு தண்ணீர் பாய்ச்சிகளை எடுத்து பாதுகாத்து அறுவடை வரும்வரை இயற்கை அழிவுகளையும் வந்துவிடாமல் நேர்த்தி செய்து அரும்பாடுபட்டு அறுவடையை பெற வெண்டும். இதெல்லாம் நெற்பயிருக்கும் சிறுதானியங்களுக்கும் மட்டும் தான்.

நிலக்கடலை மரவள்ளி கரட் பீற்றுட், கரணை, வற்றாளை போன்ற கிழங்குப் பயிர்களுக்கு அழிவு வேறு வகையில் வரும். அவற்றை தோண்டி அழிக்க அகிழான், எலி, மயில் போன்றவை துரத்தி நிற்கும். அவற்றுக்கு மருந்தே கிடையாது. அதைவிட காட்டுப்பன்றிகளும் தோட்டங்களுக்குள் புகுந்து நாசம் பண்ணும். வனாந்தரங்களுக்கு அருகானால் யானைகளும் பயிரை மேயும்.

சிலர் வாழ வாழைத்தோட்டம் போடுவார்கள். இயற்கை அழிவுகளால் முக்கியமாக பாதிக்கப்படுவது இந்த வாழைகள்தான். லேசாக ஒரு சுழிக்காற்று வீசினாலே குலைகளுடன் வாழை முறிந்து விழுந்துவிடும். அதைவிட இந்த வாழையினங்கள் இன் வாழை முற்றியதுமே கடிக்க ஆரம்பிக்கும். மாம்பழங்கள் செங்காயாக ,ருக்கும்போது மரத்திலேயே வைத்து சுரண்டிப்பார்த்து ஒவ்வொரு கடி கடித்துவிட்டு தூக்கி எறிகின்றன. என்ன செய்தும் விரட்ட முடியாது வவுனியா மன்னார் முல்லைத்திவு கிளிநொச்சி போன்ற பிரதேசங்களின் பழமரங்கள் அனைத்தும் நாசமாக்கப்படுகின்றன. இந்த குரங்குகளை விரட்ட முடியாமல் பழமரங்களை அவற்றுக்கே விட்டுவிட்டனர் மக்கள்.

அடுத்து காட்டுப்பன்றிகள். இந்தப்பன்றிகளின் மீது அரசாங்கம் வைத்த கருணை மிக மோசமானது பாண்டியன்குளம் பிரதேச சபைக்கருகிலேயே வந்து மரவள்ளித் தோட்டங்களை அழித்துவிடுகிறது. கிளிநொச்சியின் பல பாகங்களிலும் கந்தபுரம் வன்னேரி, முறிப்பு போன்ற ஏராளமான கிராம விவசாயிகள் காட்டுப்பன்றிகளிடம் தமது பயிர்களை காவு கொடுக்கின்றனர். பன்றிகளைக் கொல்லக்கூடாது. இந்தப்பன்றி ஒரு தடவைக்கு பதினாறு குட்டிகள் போடும். கொல்லும் அனுமதி இருந்தபோதே பகிரங்கமாக சந்தையில் மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக் கடை அருகிலேயே பன்றிஇறைச்சிக் கடையும் இருந்தது. இப்போது அந்த வன விலங்கு உணவுகள் மக்களிட மிருந்து பறிக்கப்பட்டுவிட்டதுடன். அந்த விலங்குகள் மக்களின் உணவை பறித்துண்ண அனுமதிக்கப்பட்டுள்ளது. காட்டு விலங்குகளை கொல்லக்கூடாது என்ற சட்டம் போட்ட அரசாங்கம் அல்லது வனபாரிபாலன தோட்டமாக தேடி அலைய காய்த்த மரங்களின் கீழே அரைகுறையாக கடித்தெறியப்பட்ட பழங்கள் குவிந்து கிடக்கின்றன.

மன்னராட்சி நடைபெற்ற காலத்தில், மக்களின் விவசாயப் பயிர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் கடமை அரசனுக்கே இருந்தது. (ஙா.... இப்பவும் அப்படித்தான்) அரசன் தன் பரிவாரங்களுடன் சென்று வேட்டையாடி விலங்குகளை பெருங் காடுகளுக்கு விரட்டியும், கொன்றும் மக்களின் பயிர்களுக்கு பாதுகாப்பளிப்பான். இந்த வழமையே இன்றும் கோவில்களிலும் வேட்டைத்திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இன்னும் இதற்கு ஆதாரமாக துஷ்யந்தன் வேட்டைக்குப்போனபோது சகுந்தலையை சந்தித்ததும், ராமர் வேட்டைக்கு போனதும், தசரதன் வேட்டையாடப்போய் முனிவரைக் கொன்றதும் இன்னும் ஏராளமான உபகதைகளும் ஆதாரமாக வழக்கிலுள்ளன.

தேவநம்பிய தீசன்கூட வேட்டைக்குப் போன போதுதான் மிகிந்தலையில் மகிந்தரை சந்தித்ததாக வரலாறு சொல்கிறது. எங்களுடைய அரசாங்கம் விவசாய முயற்சிகளை உடனடியாக முன்னெடுக்கும் படி அறிவுறுத்தியுள்ளது. இந்த பெருமுயற்சிக்காக பசளைகளையும் மருந்துகளையும் உடனடியாக தருவிப்பதாகவும் பிரசித்தம் பண்ணியுள்ளது. நல்ல விடயம்தான் ஆனால் விவசாயிகளின் கைகளைக் கட்டி வைத்துவிட்டு விலங்குகளை அவிழ்த்து மேயவிட்டுவிட்டு உற்பத்தி பெருக வேண்டும் என்றால் எப்படி?

# கல்முனை கடற்கரை கண்ணகி அம்மன் ஆலய கும்பாபிஷேகமும் திருக்குளிர்த்தியும்



சித்தர்களால் சிவபூமி என அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டின் கிழக்குக்கரையில் கல்முனை பதியில் கடற்கரையை அண்டிய ரம்மியமான சூழலில் அன்னை கண்ணகித் தாய் கோயில் கொண்டு, அண்டிவரும் அடியவர்களுக்கு அருள்மழை பொழிந்து அருளாட்சி நடாத்திக்கொண்டிருக்கின்றார். வைகாசி பிறந்துவிட்டாலே, கிழக்கு மாகாண இந்து மக்கள் மத்தியில் கண்ணகி அம்மன் வழிபாட்டிற்கான தெய்வீக வாசனை பரவத் தொடங்கிவிடும்.

அந்தவகையில், வரலாற்றுச் சிறப்பு மிக்க எமது கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்திலும் இம்முறை பக்திமணம் பரவத்தக்க பல நல்லவிடங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாலயம், ஒரு கட்டுக்கோப்பான சமூகத்தினரால் உருவாக்கப்பட்டு பன்னெடுங் காலமாக மரபுகள் மாறாத வண்ணம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சடங்கு முறையிலான வழிபாட்டு அம்சங்களைக் கொண்ட இவ்வாலயத்தினை நிர்வகிப்பதற்கு இவ்வாலயத்திற்கு சொந்தமான பொதுமக்கள் எட்டு குடிகளாக வகுக்கப்பட்டு குடிக்கொருவராக எட்டு பேர் தேர்ந்தெடுக்கப்படுவதோடு வருடாந்த பொதுக்கூட்டமொன்றில் பொதுச்சபையில் ஒருவருமாக ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை அமைக்கப்படும். இந் நிர்வாக சபையின் ஆயுட்காலம் மூன்று வருடங்களாக அமையும். தேவையேற்படின் அந்த குடியினரது ஒப்புதலோடு நிர்வாக சபை அங்கத்தவர்களில் பொதுக்கூட்டமொன்றில் மாற்றம் கொண்டுவர முடியும். ஊரில் நடக்கின்ற நன்மை தீமைகளில் நிர்வாக சபை பங்கெடுத்துக் கொள்வதோடு சிறுபிணக்குகளை பஞ்சாயத்து முறையில் அணுகி அவற்றுக்கான தீர்வுகளையும் வழங்கி வருகின்றது.



கல்முனை மாநகரில் அமைந்திருக்கின்ற அருள்மிகு ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயமும்,இதே நிர்வாக சபையின் ஆளுகையின் கீழ் பரிபாலனம் செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இயற்கையின் சீற்றம், இனக் குரோதம் போன்ற காரணங்களினால் எமது கண்ணகி அம்மன் ஆலயம் சிதைக்கப்பட்டாலும் மீண்டும் மீண்டும் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து காட்சி தருவது எமது கண்ணகி தாயின் அருட் கடாட்சத்திற்கு ஆதாரமாக அமைந்துவிடுகின்றது.

எங்கள் குலதெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் மிளிர்கின்ற கண்ணகி தாயாரின் அருளால் அன்னையை ' நாற்பத்திரண்டு அங்குல உயரமும், இருபத்துநான்கு அங்குல அகலமும் 'உடைய பெரியதொரு தாம்பூல விக்கிரகத்தில் காணக்கூடிய பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஊர்மக்களின் பெரும் நிதிப்பங்களிப்புடன் இந்தியாவில் செய்யப்பட்ட அன்னையின் திருவுருவச்சிலையினை எமது ஆலயத்திற்கு கொண்டு சேர்ப்பதில் கல்முனை 3 ஐச் சேர்ந்த தர்ஷன் பிரெளவியா குடும்பத்தினர் அளப்பரிய பங்களிப்பினை ஆற்றியிருந்தார்கள் என்பதனை நாம் நன்றியோடு நினைவு கூறுகின்றோம்.

பலநூறு ஆண்டு பழமை வாய்ந்த இந்த ஆலயத்தில் இவ்வாண்டு புதிய அம்மன் சிலை பிரதிஷ்டையுடன் கூடிய புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்வதற்கு கண்ணகி தாயார் அருள்பாலித்திருந்தார். அதன்படி, 01.06.2022 முதல் 03.06.2022 வரையான மூன்று தினங்கள் நடந்தேறின.

இந்த கும்பாபிஷேக நிகழ்வுகள் சிவஸ்ரீ. சண்முக மஹேஸ்வர குருக்கள்(பிரதம குருதிருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம், காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்) தலைமையில் ஆலயத்தில் சிறப்பாகவும் பக்திபூர்வமாகவும் இடம்பெற்றன.

முதல் நாள் நிகழ்வாக அருள்மிகு ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த பரிவாரத் தெய்வ சிலைகளுடன் புதிதாக கொண்டுவரப்பட்ட அம்மன் சிலையானது பக்தர்கள் புடைசூழ, அண்மைக் கிராமங்களான பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு போன்ற ஊர்களுக்கு அடியவர்களின் தரிசனத்திற்காக நகர்வலமாகச் சென்று பிற்பகல் 2.00 மணியளவில் கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்தை அடைந்து புதிய சிலைக்கு உரிய பூசை முறைகள் செய்யப்பட்டு, புதிய அம்மன்சிலை பிரதிஷ்டை செய்யப் பட்டது.

இரண்டாவது தினத்தில் அருள்மிகு ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பெருந்திரளான அடியவர்கள் பாற்குடம் சுமந்து, பக்திபூர்வமாக பாற்குட பவனியில் கலந்து கண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடைந்து புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்மனுக்கு பால்காப்பு சாத்தி அன்னையின் பெருங்கருணையினை பெற்றுக்கொண்டனர்.

மூன்றாம் நாள் காலை 6.42 மணிமுதல் 7.40 மணி வரையுள்ள மிதுன லக்கின சுபவேளையில் சிவாச்சாரியார்களின் வேத மந்திர உச்சாடனங்களோடு சங்கு, நாதஸ்வர ஓசை ஒலிக்க திருக்குடமுழுக்கு பக்தர்களின் அரோகரா ஓசையோடு பக்தி பூர்வமாக இனிதே நிறைவுபெற்றது. அன்றைய தினம் ஆலயத்தில் இந்து இளைஞர் மன்றத்தினரின் அனுசரணையோடு அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படடு திருக்கதவு மூடப்பட்டது.

மீண்டும் வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவத்திற்காக,06.06.2022 இல் திருக்கதவு திறக்கப்பட்டது, வழமைபோல் எட்டு நாட்கள் சடங்கு முறையிலான பூசைகளை எட்டு குடியினரும் தனித்தனியே பொறுப்பேற்று சிறப்புக்குன்றாது நடாத்தி வருவது வழக்கம். இந்த பூசைநாட்களில் ஆலயத்தில் கூட்டுப்பிராத்தனைகளுடன் நற்சிந்தனைகளும் இடம்பெறுவதோடு நேர்த்திக்காக பக்தர்கள் காவடி எடுத்தல், கற்பூரச்சட்டி ஏற்றுதல், அங்கப்பிரதட்சை செய்தல் போன்ற பக்தி பூர்வமான நிகழ்வுகள் ஆலயத்தில் இடம்பெறுவது, அங்கு வரும் பக்தர்களை பரவசமடையச்செய்யும். உற்சவத்தின் இறுதிநாளான வைகாசித் திங்கள் தினத்தன்று அம்மனுக்கு திருக்குளிர்த்தி பாடல் பாடப்பட்டு திருக்கதவு பூட்டப்படும். அன்றைய தினம் ஆலயத்திலே அன்னதான நிகழ்வுகளும் இடம்பெறுவது வழக்கம்.

தொடர்ந்து ஆலயத்தில் பரிவார தெய்வங்களுக்கான மூன்றாம் சடங்கு மற்றும் எட்டாம் சடங்கு பூசைகளும் நடைபெற்று வருடாந்த உற்சவம் பூரணப்படுத்தப்படும்.

இந்நிகழ்வுகளை சிறப்பாகச் செய்து முடிப்பதற்கு ஆலய பரிபாலன சபையினருக்கு எட்டுக்குடித் தலைவர்கள், சிரேஸ்ட பிரஜைகள், இந்து இளைஞர் மன்றத்தினர் மற்றும் ஏனைய இளைஞர் அமைப்புக்களுடன் பொதுமக்களும் தங்களது பூரண ஆதரவினை வழங்கி வருவது சிறப்பு அம்சமாகும்.

கி.கிருபைராஜா ...

செயலாளர், ஸ்ரீ தரவைச்சித்தி விநாயகர், கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயங்களின் பரிபாலன சபை, கல்முனை

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் கடந்த 2017/18 ஆம் ஆண்டிற்கான இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு, இன்று ஞாயிற்றுக்கிழமை 12ஆம் திகதி, காலை 9.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட குறித்த பயிற்சிநெறியானது, ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் மற்றும் கொரோனா நோய்த் தொற்று காரணமாக சில வருடங்கள் காலதாமதமானதுடன், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் இதற்கான இறுதிப் பரீட்சை இடம்பெற்றிருந்தது. இதில் 41 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், அந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வே இவ்வாறு இடம்பெறவுள்ளது.

மேலும், இந்த நிகழ்வினை நடாத்துவதன் நோக்கமானது, எமது பல்கலைக்கழகத்தில் கற்று சிறந்த ஊடகக் கலாசாரம் ஒன்றினை உருவாக்க முன்வந்துள்ள இம் மாணவர்களின் திறமையைப் பெரிதும் பாராட்டுவதுடன், ஒரு ஒழுக்கமான ஊடக கலாசாரம் ஒன்றினை இந்நாட்டிலும், வெளிநாட்டிலும் தோற்றுவிப்பதற்கு இவ்வாறான பயிற்சி நெறிகள் மிகவும் பெறுமதியானவையாகும்.

எனவே, இவ்வாறான பயிற்சி நெறிகளை இனிவரும் காலங்களில் பல்கலைக் கழகத்தில் தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு தான் திட்டமிட்டுள்ளதாகவும், பயிற்சி நெறியின் பின்னர், நாட்டிலும் சர்வதேசத்திலும் ஊடக தர்மத்தினைப் பேணக்கூடிய நல்ல

நிந்தவூர் குறாப் நிருபர்...

ஊடகவியலாளர்கள் உருவாக வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திற்காகவுமே இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை இந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தகைசார் விரிவுரையாளரும், பேராசிரியருமான கலாநிதி ஏ. சண்முகதாஸ் கலந்து கொண்டு பிரதான உரை நிகழ்த்தவுள்ளதுடன், பல்கலைக்கழகத்தின் மொழித்துறைத் தலைவரும், இப்பயிற்சி நெறியின் இணைப்பாளருமான பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் தலைமைப் பேராசிரியரும், வெளிவாரி கற்கைகள் நிலையத்தின் பணிப்பாளருமான பேராசிரியர் எம்.எச் தௌபீக் உள்ளிட்ட இப்பயிற்சி நெறியின் அனைத்து வளவாளர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக உபவேந்தர் மேலும் தெரிவித்தார்.



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | 07 | | 08 | | 09 |
| 10 | | 11 | 12 | 13 | |
| 14 | 15 | 16 | | 17 | |
| | 18 | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | | |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

............................. .............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) குளம், தடாகம் போன்ற நன்னீர் நிலைகளில் வளருகின்ற தாவரம். செந்நிறத்திலும், வெண்ணிறத்திலும் மலர்கள் பூக்கின்ற இருவேறு இனங்கள் இத்தாவரத்தில் உள்ளன.

(04) தன்மை, ஒருமை பெயர்ச்சொல். (தலைகீழான சொல்)

(06) கடல், ஆறு, குளம் போன்றவற்றில் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற உபகரணம்.

(11) இப்பழத்தைப் பிளந்தால் உள்ளே, முத்துக்கள் போன்ற தோற்றம். அவை ஒவ்வொன்றும் இனிப்பும் புளிப்பும் கலந்த சுவைதரும் முத்துக்கள்.

(14) எமது உடலில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் தோன்றுகின்ற உணர்வு இது. நீர் அருந்தினால் அது தீர்ந்து விடும். (தலைகீழான சொல்)

(19) இந்தக்குணம் எவருக்குமே நல்லதல்ல. இக்குணம் தோன்றினால் மற்றவர் மீது பகைமையும், பழி தீர்க்கும் எண்ணமும் தோன்றிவிடும். எனவே இந்த உணர்வை அடக்கிக் கொள்ளப் பழகிவிட வேண்டும்.

(22) அவிக்காமல், பச்சையாகவே சம்பல் செய்து உண்ணக்கூடிய கீரை.

**மேலிருந்து கீழ்**

(01) இதுவும் உயிரங்கிதான். ஆனால் மனிதனைப் போன்றும், பிராணிகளைப் போலவும் இதற்கு இடப்பெயர்ச்சி கிடையாது. ஆனால் சுவாசம், இனப்பெருக்கம் போன்றவை உள்ளன. தற்போசணி அங்கி.

(02) எமது நாட்டின் மலையகத்தில் இவற்றைக் காணலாம்.

(05) இன்றைய தினத்தின் மறுதினம்.

(08) ஒலியை உணரும் புலனங்கம்.

(11) அன்னையின் ஒத்தபொருள் சொல்.

(13) மலையகத்தின் மாவட்டங்களில் ஒன்று இது. (தலைகீழான சொல்)

(15) புவியின் மேற்பரப்பில் சுமார் முக்காற்பங்கு இதுதான்.

(19) புல் இனம் ஒன்றின் பெயர். நிலத்தின் கீழாக நீண்ட தூரத்துக்கு வேர் பரப்பி படர்ந்து காணப்படும். நிலக்கீழ் தண்டு கொண்ட தாவரம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 14

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) கிராமம் (08) கடை (10) வலை (12) மைனா
(14) பாகன் (19) வதனம் (23) முல்லை

**மேலிருந்து கீழ்**

(01) வங்கி (03) மழை (05) விடை (08) கனா
(11) பாலை (12) தன்மை (15) கவலை (17) தம்பி
(18) முள்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 13

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**சு. யகஸ்வினி,**
08A, தி/கலைமகள் வித்தியாலயம்,
975, அம்பாள் வீதி, அன்புவழிபுரம், திருகோணமலை.

**இரண்டாம் பரிசு**

**ச. வகிஷ்னா,**
தரம் 06, மட்/வின்சன் மகளிர் பாடசாலை,
435/36, 2ம் குறுக்கு,
பூம்புகார், மட்டக்களப்பு.

**மூன்றாம் பரிசு**

**றுமைஸ் பாத்திமா எதிஸ்,**
தரம் 05, சது/அமீர்அலிபுரம் வித்தியாலயம்,
இறக்காமம்.

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எஸ்.எப். மயீஸா,**
தரம் 09A, கைரியா மகளிர் கல்லூரி,
17/13, திஸ்ஸவத்த, மகாபுத்கமுவ,
கொட்டிகாவத்தை.
2. **தமீம் உஸ்மான் ஹாமித்,**
தரம் 06, அக்/அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று.
3. **எம்.என்.முன்சிப்,**
தரம் 06, ப/சி.சி.தமிழ் மகா வித்தியாலயம்,
இல. 80, பெட்டிகல வீதி,
பலாங்கொடை.
4. **எம்.எம்.எம். அஜ்மல்,**
தரம் 06, சாஹிரா தேசிய பாடசாலை,
இல. 37, கண்டி வீதி,
வரக்காமுற, உக்குவளை.
5. **கு. மதுஷாகர்,**
தரம் 05 R, இராமகிருஷ்ண வித்தியாலயம்,
பிரதான வீதி, பாலமுனை. மண்டூர்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 15
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

*சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்*
*பெற்றத்தால் பெற்ற பயன்.*

***தெளிவுரை :***
*சுற்றத்தாரால் சுற்றப்படும்படியாக அவர்களைத் தழுவி அன்பாக வாழ்தல் ஒருவன் செல்வத்தைப் பெற்றதனால் பெற்ற பயனாகும்.*

## தீக்கோழி

வாழும் பறவைகளுள் மிகப்பெரியது தீக்கோழியாகும். இது 2.5 மீட்டர் (8 அடி) வரை வளரக்கூடியது. தீக்கோழிகள் நீண்ட கழுத்தையும், கால்களையும் கொண்டவை. 70 கி.மீ/மணி வேகத்தில் ஓடக்கூடியவை. தீக்கோழிகள் இயற்கையில், ஆபிரிக்காவின் பூமத்திய ரேகைக் காட்டு வலயங்களில், வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளிலுமுள்ள சவான்னாக்கள், அரைப் பாலை வனங்களில் காணப்படுகின்றன..

தீக்கோழிகளின் இறகுகள் பெண்களின் தொப்பிகளை அலங்கரிப்பதற்காக உபயோகப்பட்டு வந்தன. சிறிய உடலமைப்புள்ள மனிதர்கள் சவாரிசெய்யக்கூடிய அளவுக்குத் தீக்கோழிகள் பெரியவையாகும். இதனால் வட ஆபிரிக்கா மற்றும் அரேபியாவின் சில பகுதிகளில் இவை ஓட்டப் பந்தயங்களில் பயன்படுத்தப்பட்டன.

தீக்கோழிகள் அனைத்துண்ணிகளாகும். தாவரங்களின் வேர்கள், பூக்கள், புழு, பூச்சிகள், பல்லி முதலானவற்றை உணவாக்கிக் கொள்ளும். தீக்கோழிகளுக்கு பற்கள் இல்லை. எனவே உணவை அரைத்து உண்பதற்காகவே கூடவே கற்களையும் விழுங்குகிறது.

தீக்கோழிகளில் கூட்டுக் கூடமைப்பு அவதானிக்கப்பட்டுள்ளது. பல பெண் தீக்கோழிகள் தங்கள் முட்டைகளை ஒரே கூட்டில் இடுகின்றன. இம் முட்டைகள் பகலில் பெண் தீக்கோழிகளாலும் இரவில் ஆண்களாலும் அடைகாக்கப் படுகின்றன.

இவை பெரும்பாலும் குழுக்களாகவே வாழ்கின்றன. அதிகபட்சமாக ஒரு குழுவில் ஆண், பெண் பறவைகள், சிறிய குஞ்சுகள் என 12 பறவைகள் வரை இருக்கும். பெண் பறவை ஒரு சமயத்தில் 11 முட்டைகள் வரை



இடும், தீக்கோழிகளின் முட்டைகளே உலகில் பெரிய முட்டைகளாகும். அடைக்காக்கப்பட்ட முட்டைகள் 40 நாட்களில் குஞ்சு பொறிக்கும் நெருப்புக்கோழியின் மூளை அதன் கண்களைவிட சிறியது.

ஆண் பறவைகள் கருமையான இயற்கைகளுடனும், உருவத்தில் பெரியதாகவும் இருக்கும். பெண் பறவைகள் சாம்பல் நிற இறக்கைகளுடன் சற்று சிறியதாக காணப்படும்.

**நி. லுஷாந்தினி,**
டிக்கோயா.



இவ்வார மழலை

**லதுசினி,**

திலிப்குமார் / கோகிலவாணி, ,
தியத்தலாவ.

## நீல் ஆம்ஸ்ட்ரோங்

நீல் ஆர்ம்ஸ்ட்ராங் 1930ம் ஆண்டில் ஒகஸ்ட் 5ஆம் திகதி பிறந்தார். அவரது தந்தை ஒடிட்டராக பணி புரிந்தார். தனது ஆறாவது வயதில் தந்தையுடன் முதல் வான் வெளி பயணத்தை மேற்கொண்டார். 1950ம் ஆண்டு கொரியாவுடனான யுத்தத்தின்போது அமெரிக்க கடற்படை ஜெட் வீரராக கடமை புரிந்தார். 1962ம் ஆண்டு நாசாவுடன் இணைந்தார்.

1969ம் ஆண்டு ஜுலை மாதம் 20ம் திகதி நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின், மைக்கேல் கொலின்ஸ் ஆகியோருடன் சென்ற அமெரிக்காவின் அப்பல்லோ விண்கலம் சந்திரனுக்கு மறுபக்கத்தில் இருக்கும்போது, 'ஈகிள்' என்ற சந்திரக் கூறு, கொலம்பியாவிலிருந்து பிரிந்தது. கொலின்ஸ் கொலம்பியாவிலேயே இருக்க, ஆம்ஸ்ட்ராங்கையும், ஆல்ட்ரினையும் சுமந்து கொண்டு ஈகிள் நிலாவின் மேற்பரப்பை நோக்கி இறங்கியது. நீல் ஆம்ஸ்ட்ராங் (நியூயோர்க் நேரப்படி) இரவு 10.50 மணிக்கு சந்திரனில் இறங்கினார். நிலவில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதன் என்ற பெருமையை நீல் ஆம்ஸ்ட்ராங் பெற்றார்.



அவரது சக விண்வெளி ஆராய்ச்சியாளர் எட்வின் ஆல்ட்ரினும் 2 மணிநேரம் 31 நிமிடங்கள் சந்திரனில் நடந்து, மாதிரி உருவங்களை சேகரித்தல், சில படிவ ஆராய்ச்சிகள் செய்தல் என்பவற்றுடன் தம்மை புகைப்படங்களும் எடுத்துக் கொண்டனர். சந்திரனில் நீல் ஆம்ஸ்ட்ராங் கூறிய கூற்று ஒரு மனிதனைப் பொறுத்த அளவில் இது ஒரு சிறிய காலடி, மனித இனத்துக்கு ஒரு பாரிய பாய்ச்சல். அப்பல்லோ 11 பயணத் திட்டமே சந்திரனிலிறங்கிய முதல் ஆளேற்றிய இறக்கமாகும்.

இது அப்பல்லோ திட்டத்தில் 5வது ஆளேற்றிய பயணத் திட்டம். ஜான் எப். கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசு மேற்கொண்ட இந்த வியப்புக்குரிய பயணம் அமெரிக்கர்களை விண்வெளித்துறையில் தனியிடத்தில் அமர வைத்தது. அறிவியல் துறையின் வளர்ச்சியி்ல் சாதனைக்குரிய மைல் கல் இந்த நிகழ்ச்சி என்றாலும் கூட, சோவியத் யூனியனுக்குப் போட்டியாக உருவானதே நிலவுப் பயணம் என்பதே நிஜம். இது ஒரு வரலாற்று நிகழ்வாக காணப்பட்டாலும் கூட இந்த நிகழ்வு பற்றியும் பல்வேறு விமர்சனங்களும், சந்தேகங்களும் வெளிவரத்தான் செய்தன.

அப்பல்லோ திட்டம் என்பது 19611972 வரை, ஐக்கிய அமெரிக்காவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட, ஒரு தொடரான மனித விண்வெளித் திட்டமாகும். இது, 1960களுக்குள் ஒரு மனிதனைச் சந்திரனில் இறக்கிப் பாதுகாப்பாகப் பூமிக்குத் திருப்பிக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1969ல் அப்பல்லோ 11 திட்டத்தின் மூலம், இந்த நோக்கம் நிறைவேறியது. சந்திரனில், பாதம் பதித்த முதல் மனிதனால் மேற்கொள்ளப்பட்ட அறிவியல் ஆய்வுகளை தொடர்வதற்காக இத்திட்டம், 1970களின் முற்பகுதி வரை நீட்டிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அப்பல்லோ திட்டத்தில் சில சறுக்கல்கள் ஏற்பட்டன. 3 விண்வெளி வீரர்கள் உயிரிழந்தனர். இதனால் நாசா இத்திட்டம் குறித்து மறு பரிசீலனை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஆனால் அப்பல்லோ 11 விண்கலம், 1969ம் ஆண்டு ஜுலை 16ம் தேதி 39ஏ ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டு நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின், மைக்கேல் கொலின்ஸ் ஆகிய மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களுடன் பயணத்தைத் தொடங்கியது. சந்திரனை அடைந்த அப்பல்லோவின் கட்டுப்பாட்டு ஓடத்தில் மைக்கேல் கொலின்ஸ் தங்கிக் கொள்ள, முதலி்ல் நிலவில் காலடி எடுத்து வைத்தார் நீல் ஆம்ஸ்ட்ரோங். அவரைத் தொடர்ந்து 19 நிமிடங்கள் கழித்து நிலவில் இறங்கினார் எட்வின் ஆல்ட்ரின். நான்கு நாள் நிலவுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு பெருமை பொங்க பூமிக்குத் திரும்பியது அப்பல்லோ. உலகமே வியந்து போய் நின்ற நேரம் அது. அந்த தருணம் குறித்து எட்வின் ஆல்ட்ரின் கூறுகையில், மிகப் பெரிய நிகழ்வு அது. பெருமைக்குரிய தருணம் அது என்றார். நிலவுப் பயணத்தை முடித்துக் கொண்டு ஜுலை 20, 1969 திரும்புவதற்கு முன்பு நிலவில் எட்வின் ஆல்ட்ரினும், நீல் ஆம்ஸ்ட்ராங்கும் அமெரிக்க கொடியை நாட்டினர். அப்போது அவரது சாதனையை உலகம் முழுவதிலும் இருந்து 5 கோடியே 28 லட்சம் மக்கள் கண்டுகளித்து பரவசம் அடைந்தனர்.

நீல் ஆம்ஸ்ட்ராங் "நாசா" விண்வெளி மையத்தில் அதிகாரியாக பணி புரிந்து வந்தார். சின்சினாட்டி பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராக இருந்தார். கடந்த நவம்பர் மாதம் அமெரிக்காவின் மிக உயரிய சிவிலியன் விருதான காங்கிரஸின் தங்க பதக்கத்தை பெற்றார். சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதர் எனும் பெருமைக்குரிய உலகப் புகழ்பெற்ற விண்வெளி வீரர் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் 82 வயதில் 25.08.2012 அன்று காலமானார்.

**என். வினோமதிவதனி,**
லுனுகலை பஸார்






**பி. சதுர்ஷன்,**
தரம் 07,
மொ/ஸ்ரீ சண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.



**எஸ். டிலானி குமாரி,**
தரம் 07,
மொ/ஸ்ரீ சண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.



**ஷைனி நிரஞ்சன்,**
தரம் 01B, கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்,
கொழும்பு 06.



**ஷிபா,**
பாலர் பாடசாலை, வடுவேகம.

## கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்களின் கண்காட்சி









கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோக கண்காட்சி கடந்த 7 ஆம் திகதியன்று கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் எஸ். சந்தியாகு தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் B.ஹிகானா அலீப், உதவிக்கல்விப் பணிப்பாளர் (விஞ்ஞானம்) எம்.எஸ் சாதுல் அமீன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ் சரவணமுத்து, இளம் கண்டுபிடிப்பாளர் சோ.வினோஜ்குமார் மற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். கல்லூரியில் பயிலும் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான சுமார் 250க்கு மேற்பட்ட மாணவர்களின் படைப்புக்கள் பிரயோக ரீதியாக கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஜூன் 12 ஞாயிற்றுக்கிழமை

# பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# துண்டிக்கப்பட்ட கால்களின் மர்மம்



2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20 ஆம் திகதி பிரிட்டிஷ் கொலொம்பியாவின் ஜெடெடியா தீவு கடற்கரையில் நடந்து கொண்டிருந்த 12 வயது சிறுமி நீலம் மற்றும் வெள்ளை நிகரத்தில் பாதணி ஒன்றை கண்டார். உள்ளே பார்த்தால் காலுறை இருந்தது. காலுறைக்குள் பார்த்தால், கால்! உண்மையான மனிதக் கால்!

ஆறு நாட்கள் கழித்து அருகில் இருக்கும் காப்ரியொல் தீவின் கடற்கரைப் பக்கம் உலாவித் திரிந்த ஜோடிக்கு வெள்ளை மற்றும் கறுப்பு நிற ரீபொக் பாதணி ஒன்று கிடைத்தது. அதற்குள்ளும் மற்றொரு துண்டிக்கப்பட்டல் கால். அதுவும் 12 அளவுடையது. ஆனால் ஒருவருடையதல்ல. பாதணிகள் மாத்திரம் வித்தியாசமாக இருக்கவில்லை, இரண்டுமே வலது காலுடையது.

பொலிஸார் அதிர்ச்சி அடைந்தார்கள். 'இத்தனை குறுகிய காலத்திற்குள் இந்த இரண்டு பாதணிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது' என்கிறார் ரோயல் கனேடிய மௌன்டன் பொலிஸைச் சேர்ந்த கர்ரி கொக்ஸ்.

'ஒரு கால் மாத்திரம் கண்டுபிடிக்கப்படுவது மில்லியனில் ஒன்று என்று கருதலாம். ஆனால் இவ்வாறு இரண்டு கண்டுபிடிக்கப்படுவது நம்ப முடியாதது. இரண்டு இடது கால்களைக் கொண்ட நடனக் கலைஞர் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனாலும் நம்புவது கடினம்' என்கிறார் அவர். இந்தக் கதை இத்தோடு முடியவில்லை. அடுத்த ஆண்டு கனேடிய கடற்கரைகளில் மேலும் ஐந்து கால்கள் வெளிப்பட்டன. இந்த செய்திகள் பொதுமக்கள் இடையே அச்சத்தை ஏற்படுத்த ஆரம்பித்தது. தொடர் கொலையாளியின் வேலையாக இருக்குமோ? ஒருவேளை வேற்றுக்கிரகவாசிகள்? என்று ஆளுக்கொரு பூச்சாண்டிக் கதை சொல்ல ஆரம்பித்தார்கள்.

ஆனால் அந்தக் கதை முடிந்தபாடில்லை, அடுத்த 12 ஆண்டுகளில் இவ்வாறாக மொத்தம் 15 துண்டிக்கப்பட்ட கால்கள் கடற்கரைக்கு அடித்துவரப்பட்டிருந்தன. சில கால்களுக்கு சொந்தக்காரர்கள் அடையாளம் காணப்பட்டார்கள். அவர்கள் காணாமல்போனவர்களாக தேடப்பட்டு வந்தவர்கள்.

என்றாலும் இவ்வாறு ஒரே மாதிரியான நிகழ்வுக்கு யாராலும் விளக்கம் அளிக்க முடியவில்லை. குற்றவியல் நிபுணர்களிடம் இருந்து இதற்கு விடை கிடைக்கவில்லை. விஞ்ஞானிகளும் இது பற்றி ஆய்வு செய்து விளக்கங்களை அளிக்கிறார்கள். என்றாலும் இந்த நிகழ்வு இன்று வரை மர்மமாகவே இருக்கிறது.



# உண்மையான நச்சுப் பெண்

**31 வயதான கிளோரியா ரமிரஸ் கர்ப்பப்பை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் 1994 பெப்ரவரி 19 ஆம் திகதி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இருக்கும் ரிவர்சைட் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். அவர் இறப்பதற்கு முன்னர் மர்ம நச்சு வாயு உடலில் இருந்து வெளியானது. அதனால் மருத்துவமனையில் இருந்த ஊழியர்கள் பலர் மயக்கம்போட்டு விழுந்தார்கள். ஐந்து பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டது. மோசமாக பாதிக்கப்பட்ட ஒருவர் இரண்டு வாரங்கள் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற வேண்டி ஏற்பட்டது.**

**இதனால் அவர் 'நச்சுப் பெண்' என்று பிரபலமானார். ஆனால் இந்த நச்சு வாயு வெளியாவதற்கு காரணம் என்ன என்பது இன்றுவரை மர்மமாகவே இருக்கிறது. அவரது உடல் அடையாளம் வெளியிடப்பாமல் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.**

# எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்

1979 செப்டெம்பர் 22 ஆம் திகதி அதிகாலையில் இந்திய பெருங்கடலில் திடீரென்று இரு முறை மிகப் பிரகாசமான ஒளி வந்து மறைந்தது. அமெரிக்கன் வேலா ஹோட்டல் செய்மதி இந்த ஒளியை பதிவு செய்தது.

அன்று தொடக்கம் இந்த சம்பவம் வேலா நிகழ்வு என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இன்று வரை இது மர்மமாகவே இருக்கிறது. விண்கல் மோதி இருக்கலாம் என்று சிலர் பொத்தாம் பொதுவாக விளக்குகிறார்கள். ஆனால் அப்போதைய அரசியல் சூழல் இதனை ஏற்க மறுக்கிறது.

ஏனென்றால் இதற்கு முன்னர் இந்த செய்மதியில் இதே போன்று 41 இரட்டை ஒளியை ஏற்படுத்திய நிகழ்வுகள் பதிவாகி இருக்கின்றன. அவை அனைத்துக்கும் காரணம் அணு ஆயுத சோதனை.

எனவே இந்த வெளிச்சத்திற்கான காரணம் உலக மகா ரகசியமாக இருந்தாலும், அது எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாக மாறிவிட்டது. அப்போது தென்னாபிரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டாக மேற்கொண்ட அணு ஆயுத சோதனையே இந்த வெளிச்சம் எழக் காரணம் என்பது பொதுவான நம்பிக்கை.



# கடைசி பார்பரி சிங்கம்!



இது தான் காட்டில் இருக்கும் பார்பரி சிங்கத்தின் கடைசி புகைப்படம். 1925 ஆம் ஆண்டு மொரோக்கோவின் டார் அல் பைதா நகரில் இருந்து செனகல் தலைநகர் டக்காரை நோக்கி பயணித்த விமானத்தில் இருந்த பிரான்ஸ் இராணுவத்தின் புகைப்படப்பிடிப்பாளர் மார்சலின் பிளன்ட்ரின் இந்தப் படத்தை எடுத்திருந்தார். அட்லஸ் மலைகளில் இந்தப் படம் பிடிக்கப்பட்டது.

இதில் இருக்கும் பார்பரி சிங்க இனம் இப்போது உலகில் இல்லை. இதனை வட ஆபிரிக்க சிங்கம் என்றும் அழைக்கிறார்கள். மொரோக்கோவில் இருந்து எகிப்து வரை வட ஆபிரிக்காவின் பார்பரி கடற்கரையின் மலைப் பிரதேசங்கள் மற்றும் பாலைவனங்களில் இந்த சிங்கங்கள் வாழ்ந்தன.

# பிரான்ஸுக்கு பிரேசில் அண்டை நாடு

பிரான்ஸ் நாட்டுடன் மிக நீளமான எல்லையை பகிர்ந்திருக்கும் நாடு எது என்ற பொது அறிவுக் கேள்விக்கு பிரேசில் என்று பதில் அளித்தால் சாதாரண பொதுப் புத்திக்கு புரியாது. பிரான்ஸ் எங்கே இருக்கிறது, பிரேசில் எங்கே இருக்கிறது என்று பொது அறிவு தெரிந்தவர்கள் கேள்வி எழுப்புவார்கள்.

உண்மையில் பிரான்ஸ் இருப்பது ஐரோப்பாவில், பிரேசில் இருப்பதோடு தென் அமெரிக்காவில் என்று பூகோளம் தெரிந்தவர்கள் வாதிடலாம். ஆனால் அந்த பதில் சரியானது. பிரான்ஸுடன் நீண்ட எல்லையை பகிர்ந்து கொள்வது பிரேசில் தான்.

அதாவது காலனித்துவ காலத்தில் தென் அமெரிக்காவில் பிரான்ஸ் ஆக்கரமித்த கயான பிராந்தியத்தை அது இன்னும் விட்டுக் கொடுக்கவில்லை. அது இன்றும் முழுமையாக பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியாகவே உள்ளது.

அந்த கயானா பிராந்தியத்துடன் பிரேசில் 730 கிலோமீற்றர் எல்லையை பகிர்ந்து கொள்கிறது. எனவே, பிரேசிலில் இருப்பவர்கள் பிரான்ஸ் போவதற்கோ, பிரான்ஸில் இருப்பவர்கள் பிரேசிலுக்கு போவதற்கோ விமானம் பிடிக்கத் தேவை இல்லை என்பது தான் உண்மை.
















முத்தமிழ் அறிஞர் மு. கருணாநிதியின் 99வது ஜென்ம தின நினைவேந்தலும், அல்லலுறும் இலங்கை மக்களுக்கு உதவி அளித்து வரும் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவையாளரும் தொழிலதிபருமான (யுனிமெக்ஸ்) சிவன் தில்லைநாதன் ஜேபி கலைஞரின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் பி. பி தேவராஜ், பேராசிரியர் அ. சர்வேஸ்வரன், திருமதி உமா சந்திரபிரகாஷ், கே. ரி குருசாமி, வைத்தியகலாநிதி அனுஷந்தன் சிவப்பிரகாசம், சிரேஷ்ட ஊடகவியலாளர் என். எம். அமீன், கவிதாயினி சீமரா அலி, கவிஞர் காத்தான்குடி பவுஸ், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், தம்பிராசா ஈஸ்வரராஜ உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

படம்: எம்.நசார், ஏ.கே.விஜேபாலன்

# இந்தியாவின் "செந்தமிழ்ச்சுடர் கலைஞர் விருது" பெற்ற மாவடிப்பள்ளியைச் சேர்ந்த யூ.எல்.யூ. மஜினா

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 03ஆம் திகதியை முன்னிட்டு திண்டுக்கல் பசுமை வாசல் பவுண்டேஷன், தமிழ்நாடு பனை மரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம் சேலம் ஸ்ரீ சரஸ்வதி வித்யாலயா அறக்கட்டளை மற்றும் சேலம் அக்ஷய் டிரஸ்ட் ஆகிய 4 அமைப்புகள் இணைந்து நடாத்திய பல்துறை சாதனையாளர்களுக்கான முத்தமிழ் கலைஞர் பெருந்சுடர் விருதுகள் வழங்கும் நிகழ்வில் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக, இலங்கையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தில் மாவடிப்பள்ளி எனும் ஊரைச் சேர்ந்த எழுத்தாளரான உமறு லெவ்வை உம்மு மஜினா "செந்தமிழ்ச் சுடர் கலைஞர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.










*Prashandhanee Devamoorthy. Namunukula Tannakumbara*

செல்ஃபி உலா

*Tiktok superstar Actress Gayathri Shan & Actress Shanthi Banusha*

# நாசா, விண்வெளியில் 'நரகத்தை' கண்டுபிடித்ததா? நெருப்பு மழை.. தொடர்ந்து எரியும் சூப்பர் ஹாட் கிரகம்..




மனித வாழ்க்கையில் நன்மை செய்யும் நல்லவர்கள் அனைவரும் இறந்த பின் சொர்க்கத்திற்கு அனுப்பப்படுவார்கள் என்று காலம் காலமாக, பல நூற்றாண்டுகளாகக் கூறப்பட்டு வருகிறது. அதேபோல், தீமை விளைவிக்கும் மனிதர்கள் இறந்த பின் நரகத்திற்கு அனுப்பப்படுவார்கள் என்று நீண்ட காலமாகக் கூறப்பட்டு வருகிறது. உலகத்தில் உள்ள அனைத்து மதங்களும் இந்த கருத்தை நம்புகின்றன. நம்முடைய பூமி கிரகத்தை நாம் சொர்க்கம் என்று எடுத்துக்கொள்ளலாம். அப்படியானால், நரகத்தைப் பிரதிபலிக்கும் ஒரு கிரகம் நம்முடைய பிரபஞ்சத்தில் இருக்குகிறதா?

நாசாவின் புதிய கண்டுபிடிப்பு இந்த கேள்விக்கான மிக நெருக்கமான பதிலை நமக்கு இப்போது வழங்கியுள்ளது. ஆம், நமக்குத் தெரிந்த நரகத்திற்கு நெருக்கமான ஒரு கிரகம், நரகத்தைப் பிரதிபலிக்கும் தன்மையோடு இருப்பதை நாசா சமீபத்தில் கண்டறிந்துள்ளது. அழகான மற்றும் அமைதியான சோலைவனம் போன்ற ஒரு இடம் தான் சொர்க்கமாகச் சித்தரிக்கப்படுகிறது. அதேபோல், தீப்பிழம்புகளுக்கு மத்தியில் தீயவர்களை வாட்டி எடுக்கும் ஒரு நெருப்பு உலகமாக நரகம் சித்தரிக்கப்படுகிறது.

நாசா கண்டுபிடித்த எக்ஸோபிளானெட்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மனிதர்கள் இறந்த பின் இந்த இரண்டு இடங்களில் எதோ ஒரு இடத்திற்குச் செல்வார்கள் என்பதே ஐதீகம். எது எப்படியாக இருந்தாலும் நரகம் போன்ற ஒரு கிரகத்தை நாசா நமக்கு நெருங்கிய பிரபஞ்சத்தில் கண்டுபிடித்துள்ளது ஆச்சரியம். தெரியாதவர்களுக்கு, நாசா இதுவரை 3500க்கும் மேற்பட்ட புதிய எக்ஸோபிளானட் கிரகங்களைக் கண்டுபிடித்து, அதற்குப் பெயரிட்டுள்ளது.

அதேபோல், நாசாவின் பட்டியலில் இன்னும் 2000திற்கும் மேலான எக்ஸோபிளானட் விபரங்கள் பெயரிடப்படாமல் இருக்கிறது.

55 Cancri e என்பது நரகத்திற்கு நிகரான ஒரு விசித்திரமான கிரகம் ஆக மொத்தம், நாசா இதுவரை விண்வெளியில் மொத்தம் 5000திற்கு அதிகமான கிரகங்களைக் கண்டறிந்துள்ளது. இந்த வரிசையில், நாசா இப்போது, 55 Cancri e என்று அழைக்கப்படும் ஒரு விசித்திரமான கிரகத்தைக் கண்டறிந்துள்ளது. இந்த கிரகம் அதன் சூரியனைப் போன்ற நட்சத்திரத்திற்கு மிக அருகில் உள்ளது. இந்த புதிய கிரகத்தின் நிலைகள், டான்டேயின் இன்ஃபெர்னோவில் இருந்து வரும் நரகத்திற்கு ஒத்திருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. ஆம், அதில் சித்தரிக்கப்படும் இயல்புகளுடன் நரகத்துடன் இது ஒத்துப்போகிறது.



## 2,400 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் இயங்கும் கிரகம்



நாசா வெப்பின் வலைத்தளத்தின்படி, இந்த கிரகம் அதன் மைய நட்சத்திரத்தை வெறும் 0.015 வானியல் அலகுகளில் சுற்றி வருகிறது. வானியல் அலகுகளில் என்பது 1 அஸ்ட்ரோனாமிகள் யூனிட்டை (astronomical unit) குறிக்கிறது. இது, அதன் நட்சத்திர மிகவும் நெருக்கமாகச் சுற்றி வருவதனால், இந்த கிரகம் முழுமையாக அதிக வெப்பமாக இருக்கிறது. பகல் நேரத்தில், இந்த கிரகத்தின் வெப்பநிலை 2,400 டிகிரி செல்சியஸைத் தொடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இது நமக்குத் தெரிந்த மெல்டிங் பாயிண்ட்கும் அதிகமாக இருக்கிறது.

இந்த வெப்பமான 55 Cancrie கிரகம் எதனால் ஆனது? முந்தைய மதிப்பீடுகளின் படி, இந்த கிரகம் ஆக்ஸிஜன் மற்றும் நைட்ரஜனால் ஆன வளிமண்டலத்தைக் கொண்டிருக்கலாம் அல்லது சிலிக்கான் ஆக்சைடு போன்ற கனிம நீராவியால் ஆன மிக மெல்லிய வளிமண்டலத்தைக் கொண்டிருக்கலாம் என்று நாசா வெளிப்படுத்தியது. இந்த கிரகம் நமது சந்திரனைப் போல அலையுடன் பூட்டப்பட்டிருந்தால், நட்சத்திரத்தை எதிர்கொள்ளும் அதன் மேற்பரப்பு நிரந்தரமாக உருகக்கூடும். இல்லையெனில், கிரகம் பூமியைப் போலவே பகல்இரவு சுழற்சிகளை அனுபவிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.







**ராஜா** வாழ்க்கையைப் பத்தி சிம்பிளா ஒரு கருத்து சொல்றேன் கேட்டுக்கோ
**ரமேஸ்** எங்க சொல்லு
**ராஜா** நம்ம உடம்புல ஆயிரக்கணக்கான "செல்" இருக்கு.. ஆனால் ஒரு செல்லில் கூட "சிம்" கார்டைப் போட முடியாது.. போட்டுப் பேசவும் முடியாது.. இதுதான் வாழ்க்கை!



**டீச்சர்:** "கண்ணகி மதுரையை எரித்தாள் " இது என்ன காலம்?
**மாணவர்:** "FIRE SERVICE" இல்லாத காலம் Sir !
**டீச்சர்:** ????



**நோயாளி** ஏன் டாக்டர், இதைக் கொடுத்தபோது சுகர் மாத்திரைன்னுதானே சொன்னீங்க
**டாக்டர்** ஆமா.. சொன்னேன்.. அதுக்கென்ன இப்போ
**நோயாளி** இல்ல டாக்டர்.. வீட்டுக்குப் போய் சாப்பிட்டு பார்த்தேன்.. இனிப்பாவே இல்லையே.. கசந்துச்சே.. அதான் வந்தேன்.
**டாக்டர்** !!!!



# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



**கோபி :** மாப்பிள்ளைக்கு ரொம்ப குறும்பு?
**ரமேஷ் :** ஏன்.. என்னாச்சு? **கோபி :** அறுபதாம் கல்யாணத்துலயும் அதே பொண்ணுக்குத்தான் தாலி கட்டணுமான்னு கேக்குறாரு!
**ரமேஷ் :** அடக் கொடுமையே!



**மனைவி:** அழகான மனைவியுடன் இருப்பவன் அதிர்ஷ்டசாலியா. அல்லது அறிவான மனைவியுடன் இருப்பவன் அதிர்ஷ்டசாலியான்னு பட்டிமன்றம் நடந்துச்சே.. எந்த அணிங்க ஜெயிச்சுது?
**கணவன்:** அதுவா.. திருமணம் ஆகாதவனே பெரும் அதிர்ஷ்டசாலின்னு நடுவர் தீர்ப்பைக் கொடுத்துட்டு போயிட்டார்.



உங்களுக்கு பிடிச்ச ஊர் எது..?
சுவிட்சர்லாந்து..
எங்கே Spelling சொல்லுங்க..
ஐயையோ.. அப்படின்னா " கோவா



**ஆசிரியர் :** உன்கிட்ட 3 பிஸ்கெட் இருக்கு... அப்போ உன்ன பாக்க உன் friends 3 பேர் வராங்க... நீ என்ன பண்ணுவ...?
**மாணவன் :** பிஸ்கெட்ட மறைச்சு வெச்சுருவேன் சார்...
**ஆசிரியர் :** அடேய் டேய்!



**தினேஷ் :** வித்தியாசமா இருக்கட்டுமேன்னு, போர்டுக்கு பதிலா டீசர்ட்ல 'டு லெட்"னு எழுதி வாசல்ல தொங்கவிட்டது தப்பா போச்சு... **ரவி :** ஏன், என்னாச்சு?
**தினேஷ் :** எவனோ ஒருத்தன் அந்த டீசர்ட்டை எடுத்துக்கிட்டு, அதுக்கு பதிலா அவனோட அழுக்கு பனியன்ல 'thanks"னு எழுதி மாட்டிட்டு போயிட்டான்.
**ரவி :** அடப் பிக்காளிப் பயலே!



**டாக்டர்:** வாங்க உட்காருங்க.. கையை நீட்டுங்க.. நாக்கை நீட்டுங்க.. ஆ..ன்னு சத்தம் கொடுங்க.. நல்லா இழுத்து மூச்சு விடுங்க.. திரும்புங்க.. இப்ப சொல்லுங்க என்ன செய்யுது.
**டாக்டரிடம் வந்தவர்:** ஒன்னும் இல்லை டாக்டர்.. மகளுக்கு கல்யாணம் பத்திரிகை கொடுக்க வந்தேன்.. இந்தாங்க. வரட்டா!

# கலைகளும் கலைஞர்களும் போற்றப்பட வேண்டும்

## எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பா.மோகனதாஸுடனான நேர்காணல்




**கலைகளும் கலைஞர்களும் போற்றப்பட வேண்டும். படைப்பாளர்கள் வெளியிடும் நூல்கள் மற்றும் படைப்புகள் சமூகத்திற்குத் தேவையானதாக இருக்க வேண்டும். இவ்வாறு எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பா.மோகனதாஸ் தெரிவித்தார். இவர் இவ்வுலகை விட்டு பிரிவதற்கு சில நாட்களுக்கு முன் அளித்த பேட்டியை இங்கே தருகின்றோம்.**

**கலை இலக்கியத்தின் பல துறைகளிலும் உங்களுக்கு ஒரு அனுபவம் இருக்கின்றது. பல துறைகளிலும் நீங்கள் தடம் பதித்திருக்கின்றீர்கள். உங்களது ஆரம்ப காலம் எழுத்துத் துறையாகத்தான் இருந்திருக்கின்றது. அந்தவகையில் எழுத்துத் துறைக்குள் எப்படி வந்தீர்கள்?**

நான் கிழக்கிலங்கையின் மீன் பாடும் தேனாடு, கலைகளின் களஞ்சியம் எனப் போற்றப்படும் மட்டக்களப்பு மாநகரின் தென் எல்லைக் கிராமமான துறைநீலாவணையை பிறப்பிடமாகக் கொண்டவன். தரம் ஒன்று தொடக்கம் உயர் தர கலைப் பிரிவு வரை துறைநீலாவணை மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்று உயர் தரத்தில் தேறி, கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்திற்கு தெரிவாகியிருந்தேன்.

அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நான்கு வருட நுண்கலைமாணி, நாடகமும் அரங்கக் கலையினையும் கற்று நுண்கலைமாணி சிறப்பு பட்டத்தினைப் பூர்த்தி செய்து, தற்போது சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) அரங்கற்கலை பாடத்திற்காக நியமனம் பெற்று ஆசிரியராக கடமையாற்றி வருகின்றேன்.

பாடசாலையில் படிக்கும் காலங்களில் தமிழ் மீது கொண்ட அதீத ஆர்வத்தினால் நிறைய புத்தகங்களை வாசித்து அலசி ஆராய்வதை நான் எனது பழக்கமாகக் கொண்டிருந்தேன். அதுவே என் எழுத்துத் துறைக்கு வித்திட்டது.

படிக்கும் காலங்களிலேயே சமூக சிந்தனை சார் செயற்பாடுகளில் இயல்பூக்கம் ஏற்பட்டது. சமூகம் சார்ந்த சிந்தனை என் குருதியோடு இரண்டறக் கலந்ததாக எண்ணத் தோன்றுகின்றது. எழுத்துத் துறை மிகவும் பிடித்த துறையாகவும் சுதந்திரமானதும் உண்மையானதும் பொதுமக்களுக்காக இயங்கும் துறையாகவும் சமூகத்துடன் சமூகம் சார்ந்து செயற்படக்கூடிய துறையாகவும் இருந்து கொண்டிருக்கின்றது.

**உங்களுடைய குடும்பப் பின்னணியில், எழுத்துத் துறை சார்ந்து வேறு யாரும் இருக்கின்றார்களா?**

இல்லை. எனது தந்தை ஏழு ஆண்டுகள் வரையுமே கல்வி கற்றவர். எனது தாய் சாதாரண தரம் வரை கல்வி கற்றவர். எனது அம்மப்பா தங்கராசா என்பவர் விச வைத்தியத் துறையில் சிறந்து விளங்கியவர். தான் எழுத்துத் துறையில் இயங்குவதற்கு ஏதுவாக இருந்தவை சமூகம் சார் எண்ணப்பாடும், வீட்டில் கிடைத்த பூரண சுதந்திரமும் இயல்பூக்கமுமேயாகும்.

வீட்டில் மூத்த ஆண் பிள்ளையாக தாலாட்டி சீராட்டி பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் செல்லப் பிள்ளையாகவே வளர்க்கப்பட்டேன். காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டால் வீடு வந்து சேர இரவுப் பொழுதாகும். கலையிலக்கிய நிகழ்வுகள், இலக்கிய சந்திப்புகள், பாரம்பரிய ஆற்றுகைகளை கண்டுகளித்தல், இளைஞர் கழக பயிற்சிப் பட்டறைகள், கலை நிகழ்வுகள், ஊடகப் பயணங்கள் இவ்வாறு பல மணித்தியாலங்கள் வெளியிலேயே கடந்து செல்லும். சில வேளைகளில் இவற்றுக்காக வெளியில் தங்கி நிற்க வேண்டிய தேவையும் ஏற்படும்.

எனது வாழ்நாளில் முழுமையான நேரத்தை வாசிப்பதற்காகவும் எழுதுவதற்காகவும் ஊடகத்துக்காகவும் மற்றும் கலையிலக்கிய பயணங்களுக்காகவுமே செலவிட்டுள்ளேன். வீட்டில் இருக்கும் நேரத்தைவிட களத்தில், எழுத்தில் இருக்கும் நேரமே என்னை தொடர்ச்சியாக எழுதத் தூண்டியது.

**எழுத்துத் துறை என்று பார்க்கின்ற போது எப்படியான, என்ன வகையான இலக்கியத் துறையில் அதிக நாட்டம் செலுத்தினீர்கள்?**

கட்டுரைகள், திறனாய்வுகள், நேர்காணல்கள், மேடை நாடகங்கள், கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றை எழுதியுள்ளேன்.

சமூகம், சமூக இலக்கியம், பாரம்பரியக் கலையிலக்கிய கலையாற்றுகைகள், ஆளுமையாளர்கள் சார்ந்த விடயங்களையே பெரும்பாலும் எழுதியுள்ளேன். விளிம்பு நிலை பாரம்பரியக் கலையிலக்கியங்கள் சமூக மட்டத்தில் எவ்வாறு உள்ளது, அதன் இருப்புகள், முக்கியத்துவம், அதனை மேம்படுத்தல், எவ்வாறு தக்க வைத்துக்கொள்வது, விளிம்பு நிலை கலைஞர்களின் தேவைப்பாடுகள் அவர்களது சவால்கள் ஆகிய விடயங்களையே எனது கட்டுரைகள் பேசுவதாகவுள்ளது.

**திறனாய்வு, நேர்காணல், கட்டுரை என எழுத்திலக்கியத் துறை சார்ந்து எழுதும் நீங்கள் முதன் முதலாக எத்துறையினை தேர்ந்தெடுத்தீர்கள்?**

பாரம்பரிய கலையின் இன்றைய நிலை, பாரம்பரியக் கட்டியக்காரன், இலக்கிய அரங்கப் பாரம்பரியம் ஆகிய மூன்று கட்டுரைகளை முறையே தினக்குரல், சுடர்ஒளி மற்றும் தினகரன் ஆகிய மூன்று செய்தித்தாள்களுக்கும் பா. தாஸன் (சஞ்சயன்) எனும் பெயரில் தபால் மூலம் அனுப்பி வைத்தேன். அனுப்பி ஒரு வாரங்களின் பின்னர் மூன்று பத்திரிகைகளிலும் பிரசுரமாகியது.

செய்தித் தாள்களில் பிரசுரமான கட்டுரைகளைப் பார்க்கும் போது எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தேன். எனது கட்டுரைக்கு கொடுக்கப்பட்ட முதல் வரவேற்பும் ஆதரவுமாக அப்பிரசுரங்கள் அமைந்திருந்தது. தினக்குரலில் பணி புரியும் பாரதி இராஜநாயகம், ந. லெப்ரின்ராஜ் மற்றும் சுடர்ஒளி, தினகரன் பத்திரிகை குழுமத்தினர் என்றும் மறக்க முடியாதவர்கள். என்னை முதன் முதலாக ஊக்கப்படுத்தியவர்கள் பத்திரிகை ஆசிரியர்களே, அவர்கள் இப்பொழுதும் என்னை ஊக்கப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள்.

பிரசுரமான கட்டுரைகளை எனது பெற்றோரிடமும் உறவினர்களிடமும் நண்பர்களிடமும் காட்டி மகிழ்ந்தேன். அக்கட்டுரைகள் எனக்கு ஆத்ம திருப்தியை தந்தது. அதன் பின்னரே செய்தித் தாள்களுக்கு மேன்மேலும் கட்டுரைகள் எழுத வேண்டும், எனது கட்டுரைகள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் பிரசுரமாக வேண்டும் என்ற சிந்தனை மேலேழுந்தது. நிறைய கட்டுரைகள் எழுதுவதற்கு என்னை ஊக்கப்படுத்தியவை பத்திரிகைகள்தான். ஒவ்வொரு கட்டுரைப் படைப்பும் எனக்கு ஒரு பிரசவமாகவே இருந்தது. பிரசுரமான கட்டுரைகளின் ஒவ்வொரு விடயங்களையும் பார்க்கும்போது பிஞ்சுக் குழந்தைகளைப் பார்ப்பது போன்று இருக்கும். இன்றுவரை கட்டுரைகளை ஆத்ம திருப்திக்காகவும் சமூகத்துக்காகவுமே எழுதி வருகின்றேன்.

**ஊடகத்துறைக்குள் எப்பொழுது வந்தீர்கள், ஊடகத்துறையில் இருந்து எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

சமூகம் சார்ந்த சிந்தனை செயற்பாடே ஊடகத் துறைக்குள் என்னை தற்செயலாக இழுத்துவிட்டது. சமூகத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள், தேவைகள், உரிமைகள் மறுக்கப்படும் போது பொதுமக்களின் சவால்களை வெளிக்கொணர்வதற்கு ஊடகமே மிகச்சரியான ஆயுதமாக எனக்குப்பட்டது.

சமூகத்தின் உண்மையான பிரதிநிதிகளாக கலைஞர்களும் படைப்பாளர்களும் ஊடகவியலாளர்களுமே செயற்படுகின்றனர். சமூகத்தின் பிரதிநிதிகள், சமூகத்தின் பிரச்சினைகளை, சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை, அவர்களது உரிமைகளை, எழுத்தின் ஊடாக தட்டிக் கேட்பவர்களாக, பெற்றுக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும்.

கடந்த ஏழு வருட காலத்துக்கும்

> **“ எனது வாழ்நாளில் முழுமையான நேரத்தை வாசிப்பதற்காகவும் எழுதுவதற்காகவும் ஊடகத்துக்காகவும் மற்றும் கலையிலக்கிய பயணங்களுக்காகவுமே செலவிட்டுள்ளேன். ”**














மேலாக பத்திரிகைகளுக்கு கலையிலக்கிய, சமூக வரலாறு சார்ந்த கட்டுரைகளை எழுதிக்கொண்டிருக்கும் போது எழுத்தாற்றலினால் ஊடகத் துறைக்குள் நேர்மையான பாதையில் நுழைய முடிந்தது. எப்பொழுதும் நேர்மையாக பயணிப்பது சந்தோசமாகவே இருக்கும். அப்போது தான் மக்களின் பிரச்சினைகளை தைரியமாக எவருக்கும் பீதியடையாமல் வெளிப்படுத்த முடியும். மற்றவர்களின் தயவுடன் பயணிப்போமாக இருந்தால் சுதந்திரமாகவோ நேர்மையாகவோ செயற்பட முடியாது. மக்களுடன் வாழ்ந்து, மக்களது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதென்பது ஒருவித அனுபவம். ஊடகம் என்பது ஒரு தொழில் அல்ல. எம்மை நம்பியிருக்கும் மக்களுக்கு இருபத்திநான்கு மணி நேரமும் களத்தினின்று, ஒரு தியாக உணர்வோடு, சேவை செய்ய வேண்டிய சமூக சேவையாகும்.

**உங்களுடைய பெரும்பாலான எழுத்துக்களை பத்திரிகைகளின் வாயிலாகத்தான் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. அதையும் தாண்டி அண்மையில் வெளியிட்ட "படைப்பாக்க ஆளுமைகள்" நூல் பற்றி விசேடமாக என்ன குறிப்பிடுவீர்கள்?**

எனது எழுத்துக்கள் கடந்த ஏழு வருட காலங்களுக்கும் மேலாக செய்தித் தாள்களில் பிரசுரமாகிக் கொண்டிருக்கின்றன. வாசகர்கள் செய்தித் தாள்களில் எனது படைப்புகளைப் பார்த்து, படைப்புகளுக்கான வரவேற்பையும் ஊக்கப்படுத்தலையும் தந்து கொண்டிருக்கின்றார்கள். எனது கட்டுரை, திறனாய்வு படைப்பு ஆகியவற்றினை தேவையேற்படின் என்னிடமிருந்தோ, என் உறவினர்களிடமிருந்தோ செய்தித் தாள்களில் பிரசுரமானவற்றைப் பெற்றுக்கொண்டு நூலுருவாக்க முடியும். சமூகத்திற்கு தேவையான நிறைய கட்டுரைகள் எழுத வேண்டுமே தவிர நூலுருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அப்போதுகளில் என்னிடம் பெரிதாக இருக்கவில்லை. இதற்கு விசேடமான காரணம் படைப்புகளை நூலுருவாக்கம் செய்ய பாரிய நிதி வசதி தேவை என்பதேயாகும்.

இருந்தாலும் நான் நேர்காணல் செய்து, செய்தித் தாள்களில் பிரசுரமான ஆளுமையாளர்களின் நேர்காணல்களில் சிலவற்றைத் தொகுத்து, "படைப்பாக்க ஆளுமைகள்" எனும் நூலினை பிரசுரம் செய்து அண்மையில் வெளியிட்டுள்ளேன். இந்த நூல் வெளியீட்டுக்குத் தலைமை தாங்கியவர் நீங்களும் எழுதலாம் சஞ்சிகை ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம்.

நூலைப் பொருத்தவரை இந்த நூலுக்கான ஆசியுரையை மட்டு. அம்பாறை மறை மாவட்ட ஆயர் பேரருட் தந்தை ஜோசப் பொன்னையா ஆண்டகை வழங்கியுள்ளார். அவசியமானதொரு புதுவரவு என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் செ. யோகராசா சிறப்பானதொரு குறிப்பை வழங்கியிருக்கிறார். அத்துடன் என்னைப் பற்றிய குறிப்புக்களை சபா. மதனும் நூலுக்கான வாழ்த்துரையை கவிஞர், எழுத்தாளர், பாடலாசிரியர், மற்றும் பதிப்பாசிரியர் என்ற பல்வகை ஆற்றல்களை தன்னகத்தே கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த அண்ணா வித்யாசாகரும் வழங்கி நூலுக்கு சிறப்புச் செய்துள்ளார்கள். 73 ஆளுமைகளுடன் நான் செய்த நேர்காணல்களைத் தொகுத்து, 426 பக்கங்களை உள்ளடக்கியதாக மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு காந்தன் அச்சகம் இந்தப் புத்தகத்தை அச்சிட்டுத் தந்தது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுத்துறை சார்ந்த தங்களின் ஈடுபாட்டைக் கூற முடியுமா?**

யாழ்ப்பாண திருநெல்வேலியைச் சேர்ந்த முதுபெரும் நாடகாசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் அன்னையிட்ட தீ மற்றும் எந்தையும் தாயும் ஆகிய இரு நாடகங்களை அடிப்படையாக வைத்து “போர்க்கால உளவியல் நாடகங்கள்” எனும் பல்கலைக்கழக ஆய்வை முன்னெடுத்திருந்தேன். போர்க்காலத்திற்குள் யுத்தத்தினால் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கிய துன்ப துயர சவால்கள், போர்ச் சூழலுக்குள் எவ்வாறு வாழ்ந்தார்கள், அவர்கள் ஒவ்வொருவரினதும் உள்ளக் குமுறல்களை நாடகாசிரியர் எவ்விதம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை எனது ஆய்வு ஆராய்வதாக உள்ளது.

சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகத்துறை சார்ந்து படிக்கும் காலங்களில் கூத்துக் கலைஞர் வேலாட்சி வல்லிபுரத்தின் கலையிலக்கிய ஆளுமையினை களத்திற்கு சென்று நேர்காணல் செய்து ஒரு தொகுப்பாக சமர்ப்பித்திருந்தேன். எனது ஒவ்வொரு கலை இலக்கிய கட்டுரைகளும் ஆய்வாகவே இருக்கும்.

**எழுத்துத் துறையில் இருந்த உங்களுக்கு எப்படி மேடை நாடகக் கலைஞராக, மேடை நாடகத்தில் நடிக்கும் ஆர்வம் ஏற்பட்டது?**

உயர் தரம் படிக்கும் காலங்களில், நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களையே கலையிலக்கிய நிகழ்வுகளில் மேடையேற்ற வைத்துவிடுவார்கள். ஏனையவர்கள் அதுபற்றித் தெரியாது நடிக்க வராது என்று தப்பித்துக் கொள்வார்கள். பாடசாலைக் காலங்களில் பதினைந்துக்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளேன். நிறைய விடயங்களை மனப்பாடம் செய்யும் முறைமையினை அரங்கியற் பாடமே கற்றுத் தந்தது.

உயர் தர கலைத் துறையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் ஏ தர சித்தியுடன் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்து தென்கிழக்கு பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம் ஆகிய இரு பல்கலைக்கும் தெரிவாகியிருந்தேன். நாடகத் துறையின் மீது கொண்ட நாட்டத்தினால் தென்கிழக்கு பல்கலை செல்லாமல் அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நான்கு வருட கற்கை நெறியை மேற்கொள்ளும் காலங்களில் நாடகச் செயற்பாட்டில் தானும் ஒருவனுமாக செயற்பாடு நாடகக் கொள்கைகள் சார்ந்து நிறைய விடயங்களை அறிந்து கொண்டேன். பல்கலை பரீட்சைக்காக தனியனாக நாடகங்களை எழுதி தயாரித்து நடித்து மேடையேற்றியுள்ளேன். அங்கு படித்த ஒவ்வொரு மாணவர்களும் இச்செயற்பாட்டில் ஈடுபட்டனர். ஒவ்வொரு மேடையேற்ற நாடகங்களும் ஒவ்வொரு அனுபவத்தையும் படிப்பினையையும் கற்றுத் தந்தது.

**வளர்ந்து வருகின்ற எழுத்தாளர்களைப் பொறுத்தவரை ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆளுமையாளர்களை முன்மாதிரியாகக் கொள்வார்கள். அவர்களுடைய சாயல், பாணி அவர்களது எழுத்துக்களில் இருக்கும்.**




**உங்களது எழுத்துக்களுக்கு ஏதாவது தனி அடையாயங்கள் இருக்கின்றனவா இல்லாவிட்டால் வேறு யாரும் எழுத்தாளர்களினுடைய சாயலை பின்பற்றுகின்றீர்களா?**

தனியடையாளங்கள் இருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். சமூகத்தில் கவனிக்கப்பட வேண்டிய ஆனால் பிறரால் கவனிக்கப்படாத விடயங்களையே எனது எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. விளிம்பு நிலை கலை வடிவங்களின் தேவை, முக்கியத்துவ இருப்பு, சமூகப் பண்பாடு, பன்மைத்துவம் போன்ற விடயங்களை எனது கட்டுரைகளுக்கூடாக ஆராய்ந்துள்ளேன்.

சாதாரண சமூகங்கள் வாழ்கின்ற இடங்களுக்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடி கலையிலக்கிய பண்பாட்டு மரபுகளை, சவால்களை, ஆதங்கங்களை கேட்டறிந்து அவர்களுக்கூடாகவே அல்லது அவர்களது விடயங்களுக்கூடாகவே ஒவ்வொரு ஆய்வு கட்டுரைகளும் என்னால் வெளிக்கொண்டு வரப்படுகின்றது.

**நீங்கள் புத்தகங்கள் இதுவரை வெளியிடவில்லை. பத்திரிகைகள் ஊடாகத்தான் உங்களது படைப்புக்களை வெளியிட்டு வருகின்றீர்கள். உங்களது படைப்புகள் உங்களது பெயரிலா இல்லை புனைப்பெயரிலா வெளிவருகின்றது?**

ஆரம்பகால கட்டுரைகள் பா. தாஸன் (சஞ்சயன்) எனும் பெயரில் பிரசுரமாகியிருந்தது. அதன் பிற்பாடு துறையூர் தாஸன், பாக்கியராஜா தாஸன் எனும் பெயரிலும் பிரசுரமாகியது. எழுதத் தொடங்கி மூன்று மாத காலம் கடந்ததும் அனைத்துக் கட்டுரைகளும் பாக்கியராஜா மோகனதாஸ் எனும் எனது முழுப்பெயரிலேயே வந்தது. இப்பொழுதும் அவ்வாறே வந்துகொண்டிருக்கின்றது.

**வருங்கால இளந்தலைமுறையினருக்கு கூற விரும்புவது?**

தமிழ்மொழியினை நேசியுங்கள், பரந்தளவில் ஆழமாக தேடியறிந்து கற்றுக் கொள்ளுங்கள். சாதிப்பவர்களாக தடம் பதிப்பவர்களாக நாளை வரலாற்றில் பேசப்படுபவர்களாக உருவாக வேண்டும். ஒவ்வொரு விடயங்களையும் வெகு ஆழமாக கற்க வேண்டும். தமிழர்களாகிய நாங்கள் தாய்மொழியாகிய தமிழ் பாடங்களுள் கவிதை, கட்டுரை, திறனாய்வு, நாடகம், நாவல், அழகியல், இலக்கியம் எனும் பல்வேறு விடயங்களை கற்கிறோம். கற்கும் காலத்திலயே அதுபற்றி ஆழ அகலமாக தேடுவதனுடன், ஆக்க இலக்கியப் படைப்புகளை பாடசாலைக் காலத்திலிருந்து படைக்க வேண்டும்.

அழகியற் பாடங்களை கற்கச் செய்வதற்கு, ஆக்க இலக்கிய படைப்புகளை உருவாக்குவதற்கு பாடசாலையில் ஆசிரியர்களும் வீட்டில் பெற்றோர்களும் துறைசார் பயிற்சியினை கற்பதற்கான பாதையினை மாணவர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும். ஒரு மாணவரை மருத்துவராகவும் படைப்பாளராகவும் உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமுமே காணப்படுகின்றது.

கலைகளும் கலைஞர்களும் போற்றப்பட வேண்டும். படைப்பாளர்கள் வெளியிடும் நூல்கள் மற்றும் படைப்புகள் சமூகத்திற்குத் தேவையானதாக இருக்க வேண்டும். கலைஞர்கள் படைப்பாளர்கள் சமூகத்தின் பிரதிநிதிகளாக செயற்பட்டு பக்கச் சார்பற்றவர்களாக தமது படைப்புகளை படைக்க வேண்டும்.

**தங்களுக்கு கிடைத்த விருதுகள் தொடர்பாக கூற விழைவது?**

லக்ஸ்டோ, ஆர்.கே. ஊடக வலையமைப்பு மற்றும் இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் இணைந்து நடாத்திய பல்துறை சார்ந்தோருக்கான திறமைக்கான தேடல் விருது விழாவில் "கலைச்சுடர் விருது" (2019) வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட, கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் பல்துறைக்கான "இளங்கலைஞர் விருது" (2018) கிடைக்கப் பெற்றது.

மலையக கலை கலாசார சங்கத்தினால் ‘தேசபிமானி விஸ்வகீர்த்தி’ (2019) எனும் தேசிய மட்ட கௌரவத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளேன்.

நேர்கண்டவர்: வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்



**ஆர்.எஸ்.சுதாகர்.**
**வத்தளை.**

**கேள்வி:நடிகர் திலகத்தின் வாரிசுக ளில் இப்போதும் திரையுலகில் இருப் பவர்கள் யார்? புதிதாக யாராவது நடிக்க வந்திருக்கிறார்களா?**

**பதில்:** நடிகர் சிவாஜி கனேசனின் வாரிசான ராம்குமார் மற்றும் பிரபு இரு வரும் நடிகர்க ளாக அறிமு கமானார்கள். இவர்களைத் தொடர்ந்து இவர்க ளின் வாரிசுகளான துஷ்யந், சிவாஜி தேவ், விக்ரம் பிரபு ஆகியோர் நடிகர்களாக அறிமுகமாகி ரசிகர்களின் வரவேற் பைப் பெற்றிருக்கிறார்கள். இந்நிலை யில் நடிகர் ராம்குமாரின் வாரிசும், நடிகர் துஷ்யந்தின் இளைய சகோதர ருமான தர்ஷன் கணேசன் விரைவில் தமிழ் திரை உலகில் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இவர் புனேவில் உள்ள திரைப்பட பயிற்சி கல்லூரியில் நடிப்புக்காக பயிற்சி பெற்று தமிழ், இந்தி, ஆங்கில மொழியில் தயாரான வீதியோர நாடகங்களில் தன் பங்க ளிப்பை வழங்கி இருக்கிறார். நட்சத் திர வாரிசுகளுக்கு வாய்ப்பு கிடைப் பது எளிதாக இருந்தாலும், அவர்கள் ரசிகர்களை வசீகரிப்பதற்கு தங்களி டம் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் நடிப்புத் திறமையை வளர்த்துக் கொண்டுள்ள தர்ஷன் கணேசன் ரசிகர்களைக் கவரக் கூடுமென திரையுலக வணிகர் கள் அவதானிக்கிறார்கள்!

**எம் மாகிரட்**
**எலபடகம.**

**கேள்வி: உலக நாயகன் கமலின் 'விக்ரம்2' கலக்குகிறதாமே....வசூல் எப் படியாம்?**

**பதில்:** வருகின்ற விமர்சனங்கள் எல்லாம் அப்படித்தான் சொல்லு கின்றன. வெளியான ஒரு வாரத்திலே 100கோடி ரூபாய் வசூலை அநாயாச மாக கடக்கும் என திரையுலக வணிகர் கள் அவதானித்திருக் கிறார்கள். ஆனாலும் இப்போது அதையும் மீறும் என எதிர்பார்க்கிறார்கள்.




அண்மையில் சென்னையில் நடை பெற்ற விளம்பர நிகழ்வுகளில் பங்கு பற்றி கமலஹாசன் பேசுகையில் "விக்ரம்' படத்தில் கூட நான் இவ்வளவு கடினமாக உழைத் ததில்லை. ஆனால் படத்தை விளம்பரப் படுத்துத்துவதற்காக சுழன்று சுழன்று பணியாற்றி வருகிறேன். ரசிகர்களுக்கு பிடிக்கும் வகையில் விக்ரம் மேஜிக்கை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் நிகழ்த் தியிருக்கிறார். அதனால் 'விக்ரம் 'படத் தின் அடுத்த பாகத்தையும் அவரே இயக்குவார்." என்று உற்சாகமாக தெரி வித்திருக்கிறார் உலக நாயகன் கமல் ஹாசன்.

**எம்.பி.பி கணேஷ்.**
**தாண்டியடி.**

**கேள்வி: இசை அமைப்பாளரும் நடிகருமான அனிருத்தின் காட்டில் நல்ல மழையாமே...இப்போது தொகுப் பாளரும் ஆகிவிட்டாராமே?**

**பதில்:** இன்றைய தமிழ் திரையிசை உலகில் அசைக்க முடியாத இளம் சாதனையாளராக வலம் வருகிறார் இசை அமைப்பாளர் அனிருத். இசை அமைப்பதுடன் சொந்தக்குரலில் பின்னணி பாடி பாடகராக வும் நடிகராகவும் இவர் வலம் வரு கிறார். இதனு டன் தற்போது 'ஆஹா' டிஜிட் டல் தளத்தில் இசை தொடர் பான நிகழ்ச்சி ஒன்றின் தொகுப்பாளராகவும் பணி யாற்ற ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்நிகழ்வில் அவர் 'வை திஸ் கொல வெறிடா' பாடலின் உருவாக்கம், பின்னணி, இது குறித்து இதுவரை வெளிவராத தகவல்களை பகிர்ந்து கொள்ளவிருக்கிறார். அனிருத் தற்போது 'தலைவர் 169, 'ஏகே 62' உள்ளிட்ட பல படங்களுக்கு இசை அமைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



**எம்.எம்.பீர் முகமது**
**கல்முனை.**

**கேள்வி: 'பிருத்விராஜ்' என்ற ஒரு படத்தைப் பற்றிய விளம்பரங்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வருகிறதே... இது யார் நடித்த படம் என்று கூறமுடியுமா.. எல்லோரும் புதிய முகங்களாகவே இருக்கி றதே.. அதுதான் கேட்டேன்..?**

பதில்: பொலிவூட் சூப்பர் ஸ்டார் அக்ஷய்குமார் நடித்திருக்கும் படம்தான் 'பிரித்விராஜ்' இவருக்கு ஜோடியாக முன்னாள் உலக அழகி மனுஷி சில்லார் அறிமுகமாகியிருக் கிறார். இந்தப் படத்திற்காக அவர் இதுவரையில் எந்த ஒரு புதுமுக நடிகை யும் வாங்கியிராத ஊதி யத்தை பெற்றிருக் கிறார். இந்திய மதிப் பில் ஒரு கோடி ரூபாய் சம்ப ளமாக பெற் றிருக்கும் இவரை 'கோடியில் ஒருத்தி' என சக நடிகைக ளும், திரையுலகின ரும் வியப்போடு பார்க்கிறார்கள்.இந்தப் படத்தை தமிழில் டப் செய்திருக்கிறார் கள்தொலைகாட்சியில் ஒளிபரப்பாகப் போகிறது.



**எம்.மலர் ராணி.**
**கொழும்பு 13.**


**கேள்வி: நடிகர் பரத் இப்போது படங்களில் நடிப்பதில்லையா...?**

**பதில்:** உண்மை சம்பவங்களை மையப்படுத்தி திரைக்கதை வடிவ மைத்து வெற்றி பெறுவதில் தமிழ் திரையுலக படைப்பாளிகள் அசாத் தியமானவர்கள். அந்த வரிசையில் அறிமுக இயக்குநர் சக்திவேல் இயக் கத்தில் தயாராகி இருக்கும் 'மிரள்', தமிழ் திரையுலகில் 'ஸ்லாஷர் திரில்லர்' என்ன புதிய வகை ஜேனரில் தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தில் நடிகர் பரத் மற்றும் வாணி போஜன் நாயகன் நாயகியாக நடித்திருக்கிறார்கள். படத் தைப்பற்றி நடிகர் பரத் பேசுகை யில், "ஹரி என்ற கட்டிட பொறியியலா ளர் வேடத் தில் நடிக் கிறேன். நெடுஞ்சா லையை ஒட்டி இருக் கும் காற்றாலை பண்ணை ஒன்றில் குடும்ப உறுப் பினர்களுடன் பயணம் மேற்கொள் ளும் போது ஏற்படும் எதிர்பாராத பரபரப்பான சம்பவங்கள்தான் படத் தின் கதை. இயக்குநர் இதை விவ ரிக்கும் போது ஆர்வத்துடன் கதையை கேட்டேன். அதை பிசகாமல் எடுத்து பார்வையாளர்களை மிரள வைத்திருக் கிறார்" என்றார் 'மிரள்' நாயகன் பரத்.



**எஸ்.கோபால்**
**மன்னார்.**

**கேள்வி:"ஆண்டவன் ஒருநாள் கடை விரித்தான்... அதில் ஆயிரம் ஆயிரம் பொருள் படைத்தான்" என்று ஆரம்பிக்கும் தத்துவப் பாடல் இடம் பெற்ற திரைப்படம் எது?**




**பதில்:** 'டில்லி மாப்பிள்ளை' என்ற படத்தில் டி.எம்.சௌந்தரராஜன் பாடிய பாடல் அது. காட்சியில் ரவிச்சந்திரன் நடித்திருப்பார். பொருள் பதிந்த தத்து வப் பாடல்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

# கமல்ஹாசன் நடிக்க இருக்கும் அடுத்த படத்தின் இயக்குநர்



விக்ரம் படத்தைத் தொடர்ந்து கமல்ஹாசன் நடிக்க இருக்கும் அடுத்த படத்தின் இயக்குநர் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல்ஹாசன் கதாநாயகனாக நடித்திருக்கும் படம் 'விக்ரம்'. ராஜ்கமல் பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

கிரிஷ் கங்காதரன் இதற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தில் விஜய் சேதுபதி, பகத் பாசில், நரேன், அர்ஜுன் தாஸ், காளிதாஸ் ஜெயராம் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இதில் சூர்யா கவுரவ வேடத்தில் நடித்துள்ளார்.

பெரிய எதிர்பார்ப்புகளிடையே திரையரங்குகளில் வெளியான இப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. சமீபத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய கமல், 'விக்ரம்' படத்திற்கு பிறகு அவர் நடிக்கும் அடுத்த படத்தின் வெளியீடு பற்றி குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், கமல்ஹாசன், மலையாள இயக்குனரான மகேஷ் நாராயணன் இயக்கத்தில் நடிக்க இருப்பதை உறுதி செய்துள்ளார். இந்த அறிவிப்பு ரசிகர் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இயக்குநர் மகேஷ் நாராயணன் விஸ்பரூபம் 2 படத்தின் எடிட்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேபிக்காக சூப்பர் ஸ்டாருக்கு 'நோ' சொன்ன சமந்தா!



பேபிக்காக சூப்பர் ஸ்டாருக்கு சமந்தா நோ சொல்லியதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

தமிழ், தெலுங்கு படங்களில் நடித்து வரும் சமந்தாவுக்கு பாலிவுட் செல்லும் ஆசை இருக்கிறது. இந்நிலையில் தான் சமந்தாவின் நண்பரான அட்லி பாலிவுட் சென்றார்.

பாலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கானை வைத்து படம் இயக்கி வருகிறார் அட்லி. அந்த படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நயன்தாரா நடித்து வருகிறார். ஜவான் என்று தலைப்பு வைக்கப்பட்டிருக்கும் அந்த படத்தில் ஹீரோயினாக நடிக்குமாறு சமந்தாவிடம் தான் முதலில் கேட்டாராம் அட்லி.

2019ம் ஆண்டு சமந்தாவிடம் கேட்டிருக்கிறார். ஆனால் அப்பொழுது தாயாகும் முடிவில் இருந்தார் சமந்தா. அட்லி படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டால் தாயாவதை தள்ளிப்போட வேண்டுமே என்று அவருக்கு நோ சொல்லிவிட்டாராம்.

அதன் பிறகே அந்த வாய்ப்பு நயன்தாராவுக்கு சென்றிருக்கிறது. தாயாகும் முடிவில் இருந்த சமந்தா தன்னை தேடி வந்த பட வாய்ப்புகளை ஏற்காமல் இருந்தார். இந்நிலையில் தான் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் தேதி தன் கணவர் நாக சைதன்யாவை பிரிவதாக சமூக வலைதளத்தில் அறிவித்தார் சமந்தா.

காதல் கணவரான நாக சைதன்யாவை பிரிந்த பிறகு மீண்டும் படங்களில் பிசியாகிவிட்டார். சைதன்யாவை பிரிந்த கையோடு புஷ்பா படத்தில் சமந்தா போட்ட குத்தாட்டம் பிரபலமானது.

இதையடுத்து விக்னேஷ் சிவன் இயக்கத்தில் விஜய் சேதுபதி, நயன்தாராவுடன் சேர்ந்து சமந்தா நடித்த காத்து வாக்குல ரெண்டு காதல் படம் வெளியானது. படம் பார்த்த அனைவரையும் சமந்தா தான் கவர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் படங்களில் நடிக்க மீரா ஜாஸ்மின் ஆர்வம்



மீரா ஜாஸ்மின் தமிழ் சினிமாவில் மீண்டும் களமிறங்க முடிவு செய்திருக்கிறார். குண்டு கண்கள், துறுதுறு பேச்சு, குடும்ப பாங்கான முகத்தால் ரசிகர்களை கவர்ந்தவர் மீரா ஜாஸ்மின். 'ரன்', 'புதிய கீதை', 'ஆஞ்சநேயா', 'ஆயுத எழுத்து', 'சண்டக்கோழி', 'திருமகன்', 'நேபாளி', 'மரியாதை', 'மம்பட்டியான்' உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். 2014ம் ஆண்டு 'விஞ்ஞானி' என்ற படத்துக்கு பிறகு அவர் தமிழில் நடிக்கவில்லை. ஒரு சில மலையாள படங்களில் மட்டுமே சிறப்பு தோற்றங்களில் நடித்து வந்தார். 40 வயதாகும் மீரா ஜாஸ்மின், தமிழ் சினிமாவில் மீண்டும் களமிறங்க முடிவு செய்திருக்கிறார். இதற்காக அவர் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார். தனது கலக்கல் புகைப்படங்களை அவர் வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன.

# இசை அமைப்பாளரின் காதலியான நடிகரின் முன்னாள் மனைவி

சிறுத்தை, வீரம், விஸ்வாசம், படங்களை இயக்கிய சிவாவின் தம்பி பாலா. தமிழில் அறிமுகமாகி சில படங்களில் நடித்த பாலா மலையாளத்தில் முன்னணி நடிகராகி ஏராளமான படங்களில் நடித்தார். கடந்த 2010ம் ஆண்டு அம்ரிதா சுரேஷ் என்கிற மலையாள பாடகியை காதலித்து திருமணம் செய்துகொண்டார். இந்த தம்பதிக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது.

கருத்து வேறுபாடு காரணமாக கடந்த ஆண்டு பரஸ்பரம் விவாகரத்து செய்து கொண்டு பிரிந்தனர். இதன்பிறகு பாலா மறுமணம் செய்து கொண்டார். அம்ரிதா சுரேஷ் தற்போது இசையமைப்பாளர் கோபி சுந்தரை காதலிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இருவரும் நெருக்கமாக இருக்கும் படங்களும் வெளியாகி உள்ளன. கோபிசுந்தர் ஏற்கெனவே திருமணமாகி விவாகரத்து பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.





# பெண் எழுத்தாளர்

31

**எல்லலமுல்ல ஸஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தில் (தரம் I) அதிபராக கடமையாற்றுபவர். சிறந்த ஆளுமை, நிர்வாகத்திறன், மும்மொழித் தேர்ச்சியினையும் பெற்று சேவையாற்றி வரும் பாத்திமா இஸ்மத் பானகமுவ ஓய்வு பெற்ற அதிபர், சமாதான நீதிவான் அல்ஹாஜ் ஏ.ஸீ செய்து அஹமது மற்றும் மர்ஹுமா ஹாஜியானி கே.ரீ.ரஹுமா உம்மா ஆகியோருக்கு பிறந்த 07வது பிள்ளைகளில் 06வது பிள்ளையாவார்.**

## எஸ்.ஏ. இஸ்மத் பாத்திமா பஸ்யால



இவர் பஸ்யாலயைச் சேர்ந்த தர்காநகர் ஆசிரியர். வாண்மை அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளரான ஜனாப் எம்.ஏ.எம். றிப்தியின் துணைவியாரும், பாபுஸ்ஸலாம் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் தரம் 08 ல் கல்வி கற்கும் எம்.ஆர்.அகீல் அஹ்மதுவின் தாயுமாவார்.

இவர் அதிபராக மட்டுமன்றி இலக்கியத்துறையிலும் பயணித்துக்கொண்டிருக்கிறார். இவரின் இலக்கியப்பயணம் சிறுபராயத்திலேயே உருவானது. தனது தந்தை நிறைய கதை, கவிதை, பாட்டு, கட்டுரைப் புத்தகங்களை வாங்கித் தருவதாலும், கவிதைகளை சத்தமாக ரசித்து வாசிப்பதனாலும் எழுதும் ஆவல் இவருக்கு உருவானது . வீட்டில் இருக்கும் போது சிறு சிறு கவிதைகள் எழுதி சேகரித்து வைப்பதோடு ஓய்வு நேரங்களில் அவற்றை வாசித்து இலக்கியத்தின்பால் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட இவர், பாடசாலை காலத்திலேயே பல போட்டிகளிலும் ஆர்வமாக பங்குபற்றியுள்ளார் .

கல்விக் கல்லூரியில் படிக்கும் காலங்களிலும் தனக்குள் ஊற்றாய் ஊறும் கவிதைகளை ஒரு அப்பியாசக் கொப்பியில் எழுதி வந்தார் . இவை இன்னும் தன்னிடம் பாதுகாப்பாக உள்ளன எனக் கூறினார்.

இவர் கல்விப் பணிக்காக இலங்கை முஸ்லிம் சேவையில் மாணவர்களதும், ஆசிரியர்களதும், பெற்றோர்களதும் நன்மை கருதி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட உரைகளை வானொலியில் ஆற்றி வருகின்றார்.

இவர் இலக்கிய ரீதியாக மட்டுமன்றி தொழில் ( அதிபர்) சேவைகள் ரீதியாகவும் பல கௌரவிப்புகள், சான்றிதழ்கள், விருதுகள், பணப்பரிசில்கள் பெற்றுள்ளார்.

சிறு பிராயத்தில் பாடசாலையில் மும்மொழிகளிலும் பேச்சு, கவிதை பாடுதல், கட்டுரை எழுதுதல் என பல போட்டிகளிலும் பங்கு கொண்டு பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் வரை விருதுகளை தனதாக்கிக் கொண்டுள்ளார்.

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் 2018 ல் நடைபெற்ற அதிபர்களுக்கான விழாவில் பதக்கம் அணிவித்து, கௌரவிப்பு, சான்றிதழ், வெண்கல விருதும் பெற்றுள்ளார்.

2018 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தேசிய இலக்கிய விழாவின் போது " சிறுவர் கதை" எழுதுவதில் இரண்டாம் இடத்திற்கான சான்றிதழ், வெள்ளிப் பதக்கம், பணப்பரிசு ரூ.7500) பெற்றுள்ளார்.

அதே ஆண்டு கோட்ட மட்டத்தில் தமிழ் பாட்டு, தமிழ் சிறுவர் கதை, ஆங்கில கவிதை, ஆங்கில சிறுவர் கதை போன்ற போட்டிகளில் (4) முதலிடங்களைப் பெற்றுக் கொண்டார்.

மாவட்ட மட்டத்தில் தமிழ் சிறுவர் கதையில் முதலாம் இடத்தையும், தமிழ் பாட்டு, ஆங்கில சிறுவர் கதை, ஆங்கில பாடல் போன்றவற்றிலும் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

2019ல் அரச இலக்கிய பிரதேச மட்டத்தில் ஆங்கிலம் தமிழ் இரு மொழிகளிலும் 9 போட்டிகளில் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றுள்ளார் .



அதே ஆண்டில் அரச இலக்கிய மாவட்ட மட்டத்தில் 8 முதலிடங்கள் ஒரு மூன்றாம் இடமும் கிடைத்தது.


2019 ஆம் ஆண்டு நடைபெற்ற கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்திய தேசிய இலக்கிய விழாவின் போது " இலக்கிய விவரணம் எழுதுதல் (தமிழ்) " எழுதுவதில் மூன்றாம் இடத்தினையும், இலக்கிய விவரணம் எழுதுதல் (ஆங்கிலம்) " எழுதுவதில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார் . கொரோனா காரணமாக இந்த நிகழ்விற்கு விழாக்கள் நடைபெறாததனால் தபால் மூலம் சான்றிதழ் பணப்பரிசு என்பனவற்றைப் பெற்றுக் கொண்டார் .


2020 ல் அரச இலக்கிய பிரதேச மட்டத்தில் 8 போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றார். ( ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் சேர்த்து). இதன் போது சான்றிதழ்களும் புத்தகங்களும் பரிசாகக் கிடைத்தன.

அதே ஆண்டு மாவட்ட ரீதியில் நடைபெற்ற அரச இலக்கிய மாவட்ட போட்டிகளில் 04 முதலிடங்கள், 03 இரண்டாமிடங்கள், 01 மூன்றாவது இடம் என தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான போட்டிகளில் வெற்றி கிட்டியது.

மேலும் 2021 ஆம் ஆண்டில் அரச இலக்கிய பிரதேச மட்டத்தில் 3 போட்டிகளில் முதலிடங்களையும் ஒரு இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார் ( ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் சேர்த்து). இதன் போது சான்றிதழ்களும் புத்தகங்களும் பரிசாகக் கிடைத்தன.

மேலும் 2019 ல் வெளியிடப்பட்ட இவரது நூல் " புதையல் தேடி" கலாசார பண்பாட்டு அலுவலக திணைக்களத்தினால் முதல் மூன்று சிறந்த கவிதை நூல் விருதின் பரிந்துரைப்புக்கு தெரிவாகியுள்ளமை மேலும் மகிழ்வைத் தருகிறது எனக் கூறினார்








இவர் இதுவரை இரண்டு கவிதைத் தொகுதிகளையும் ஒரு சிறுவர் கதைப் புத்தகத்தையும் வெளியிட்டுள்ளார்.

1. இரண்டும் ஒன்று 2017 (கவிதை நூல்)
2. புதையல் தேடி 2019 ( கவிதை நூல்)
3. சரியான வெற்றி 2021 ( சிறுவர் கதை)

முதல் இரண்டு புத்தகங்களும் கொரோனா காலத்திற்கு முன்பே வெளியிடும் சந்தர்ப்பம் கிடைத்தமையால் வெளியீட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றதாக மகிழ்வுடன் கூறினார்.

கிண்ணியா கவிதாபுரி வட்டத்தினால் "கவியரசி" என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்தி கவி வாழ்த்துப் பாடி கேடயம், சான்றிதழ் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்த இடத்தில் இலக்கிய வித்தகர் கலாபூஷணம் பீ.ரீ.அஸீஸை நினைவு கூர்கிறார்.

கவிதைகள் பற்றி இவர் குறிப்பிடுகையில் கவிதை என்பது வெறும் சொற்களின் கோர்வையல்ல. அது ஆழ்மனது எண்ணங்களின் வெளிப்பாடு. அது வாசிக்கும் போது சுவையாக இருக்க வேண்டும். எழுத்தாளரின் மனதைப் பாதித்து கவிதையாக உருவெடுத்த இலக்கியம் வாசகர்கள் உள்ளத்தில் நல்ல கருத்துக்களை விதைத்து சமூகத்திற்கு பயனுள்ளதாக இருக்க வேண்டும். சொற் சுருக்கம், எதுகை, மோனை, நயப்பு, வியப்பு எல்லாம் கவிதையின் பண்புகளாக இருக்க, வாசிப்பவருக்கு அடுத்து என்ன வரப்போகிறது என்ற தெவிட்டாத தேடல் இருக்க வேண்டும். பாடும் போதும் உள்ளத்தை தொடுவதாக இருக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு பட்ட செரிமானம் நிறைந்ததாக கவிதை அமைய வேண்டும். ஒரு எழுத்தாளனின் எழுத்து எப்போது வாசகனது உள்ளத்தைக் கவர்கிறதோ மனது கருத்துக்களை நுகர்கிறதோ அப்போது அந்த எழுத்துக்கள் வெற்றி பெற்றன என்று சொல்லலாம். அத்தோடு எழுதப்படும் கவிதை பாமர மக்களுக்கும் கருத்து சென்றடையும் வகையில் மிகவும் எளிமையான நடைமுறையினைக் கொண்டு அன்றாடம் பாவனையில் உள்ள சொற்களாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் எழுத்தாளன் சமூகத்திற்கு எடுத்துக் கூறும் கருத்து சமூகத்திற்கு எந்த வலுவுமின்றி எந்த தாமதமுமின்றிப் போய்ச் சேரும். அனைத்து தரப்பினருக்கும் வாசித்து விளங்கிக் கருத்தை உள்வாங்கக் கூடியதாக இருக்கும். அத்தோடு எழுதி முன்வைக்கப்படும் கருத்துக்கள் யதார்த்தமானவையாக இருத்தல் வேண்டும். தமது அன்றாட வாழ்க்கை அனுபவங்களில் இருந்து எழுதப்படும் போது அது மக்களிடம் வெகு விரைவாகப் போய்ச் சேருகிறது. மக்கள் பயன்பெறும் விதமாக அமைகிறது என்று சொல்வதில் மாற்றுக் கருத்தில்லை எனக் கூறுகிறார்

எமக்கு சவால்கள் வருகின்றன என்றால் நாம் முன்னேறிச் செல்கிறோம் என்று பொருள். அந்த வகையில் சில நேரங்களில் சவால்களைக் கண்டும் காணாதது போல் கடந்து சென்றிடுவேன். ஏனெனில் மூடர்களுடன் அல்லது முட்டாள்களோடு வாதிட்டு என்னுடைய நேரத்தை வீணடிக்க நான் விரும்புவதில்லை. அதே நேரம் அப்படியானவர்களோடு வாதிடுவதில் எமக்கு மன உளைச்சல் ஏற்படும். அதே நேரம் எமக்கு எமது இலக்குகளை அடைவதில் தாமதம் ஏற்படும்.

எழுத்து என்பது ஒரு ஆயுதம். இது எல்லோருக்கும் அமைவதில்லை. ஆதலால் எழுத்தால் போராட வேண்டிய இடங்களில் எழுதத் தான் வேண்டும். பல நேரங்களில் உண்மையை நாம் எடுத்துரைக்கும் போது பலருக்கும் மனக்கசப்புகள், எதிர்ப்புகள் ஏற்படத் தான் செய்யும். அதற்காக உண்மைக்குப் புறம்பாக ஒரு பொழுதும் இயங்கக் கூடாது. ஏனெனில் எழுத்தறிவித்தவன் இறைவன். அந்த எழுத்தை நாம் சரியாக பயன்படுத்தாது போனால் இறைவன் எம்மைத் தண்டித்துவிடுவான்.





**மஜீனா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி.**

# மழலசால்

முல்லை முஸ்ரிபா



## பத்தியெழுத்து

எழுத்தின் வெளிப்பாட்டு வடிவங்கள் வழி கலை, இலக்கிய, அரசியல், பொருளாதார, அறிவியல், வரலாற்றுத்துறைகள் பற்றிய வெளிப்பாடுகள் தமிழிலும் வந்து கொண்டுதானிருக்கின்றன. அத்தகைய வடிவங்களில் 'பத்தி' முக்கியமானதொன்று எனலாம்.

ஆக்க முறைமையிலிருந்து சற்று வேறுபட்ட யதார்த்த நிலை கொண்ட பத்திக்கு, பத்திரிகைத் துறையில் தனியான இடமுண்டு. '*column writing*' எனப்படுகிற ஆங்கில வழி வந்த பத்தியெழுத்துக்கான வடிவம், அதன் மொழியமைப்பு, சொல்முறை, ஈர்ப்பு, முரணழகு என்பன கவனிப்புக்குரியன. தமிழில் பத்திரிகை, சஞ்சிகை, இதழ்கள் வழி நீண்ட வரலாறுடையது பத்தி. 1920களில் பத்தியெழுத்து முறை தோன்றி விட்டது. ஊடக உலகின் முக்கியமான அரசியல் சமூகக்களம் இது. '*columnist*' எனப்படுகிற பத்திக்காரர் பல் வகையினர் உள்ளர். *Critic* எனப்படுகிற கலை, இலக்கிய விமர்சகர் இந்த வகையினராவர்.

இன்று பத்தி வடிவம் வளர்ந்துள்ளது. அரசியலாளர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாசிரியர்கள் எனப் பத்தியெழுதுகின்றனர். பத்திரிகைகளில் மட்டுமன்றி வானொலி, தொலைக் காட்சிகளிலும் பத்தி பரந்துள்ளது. *Blog, Facebook* என்பவற்றிலும் பத்தி வடிவம் இழையோடி நிற்கிறது.

குறிப்பிட்ட விடயம் பரப்பில் தொடராக எழுதப்படும் பத்தி வடிவ எழுத்துக்கள் அளவு, எளிமை, தெளிவு, தனித்துவம் எனப் பண்பு நிலை கொண்டது.

'ஒரு புதிய பத்தி ஒரு அற்புதமான விஷயம். அது அமைதியாக நாமத்தை மாற்ற உதவுவது. அது ஒரு வித்தியாசமான அம்சத்திலிருந்து அதே நிலப்பரப்பைக் காட்டும் மின்னலின் ஓர் ஒளியைப் போல் இருக்க முடியும்' என்பார் ஜன் பாபேல். சுருக்கமாக, சுவாரசியமாகச் சொல்லும் பத்தியெழுத்தின் தலைப்பு கவித்துவமாக அமையும்.

பத்தியெழுத்துக்கென்றே தனித்துவமான பத்தியாளர்கள் இருக்கிறார்கள். தொடராக எழுதப்படும் இதன் வழி இலக்கிய அழகை ரசித்து இன்புறலாம்.

# மனம் ததும்பும் ஹைக்கூ 10

ஒரு சத்தியத் தேடல். சுற்றுப் புறத்தில் மீதெழும் அர்த்தப்பார்வை. எல்லையற்று விரியும் கருத்துச் சேர்வை. அது வெறும் கவிதையல்ல, ஒரு வாழ்வியல் முறையாகும்.

மூன்று வரிகளில் பதினேழு அட்சரங்கள் கொண்டது.

ஃபுரு இதே யா
கலா தோழி கோமு ஸூ மனிஷா நொ
ஓதோ
ப – ழை – ய – கு – ளம்
த – வ – ளை – கு – திக் – கை – யில்
த –ண்ணீ – ரில் – சப் – தம்

ஹைக்கூவில் முக்கியமானது வெட்டு வார்த்தை. அதாவது 17 அசைகளிலும் முதல் 12 அசைகளும் முதல் இரண்டு வரிகளில் அமையும். இதில் இரண்டாவது வரியில் ஒரு வெட்டு, ஒரு தயக்கம், ஒருவித முடிவு இருக்கும். அதன் பின் இன்னொரு வெட்டு மூன்றாவது – இறுதி வரியில் இருக்கும். இதில் கருத்துத் திருப்பம், ஓர் ஆச்சர்யம், ஓர் அதிர்வு, ஓர் இழுவிசை இருக்கும்.

எனவே ஹைக்கூவில் இரண்டு பகுதி – படிமம் உண்டு. மேலோட்டமாக இவற்றிற்கிடையில் தொடர்பிருப்பதாகத் தோன்றாவிடினும், ஆழமாக நோக்கினால் இரு படிமங்களுக்கிடையிலும் ஓர் அந்தரங்க உறவு இருக்கும். அதுதான் ஹைக்கூவின் காந்த பரவசத்தையும் ஊட்டவல்லது.

ஒரு ஹைக்கூவைப் படிக்கும் போது மூன்று வரிகளையும் ஒரேயடியாகத் தண்ணீரை மடக்கு மடக்கென்று குடித்து முடிப்பதைப் போல வாசித்து விழுங்கி விடக்கூடாது. முதல் இரண்டு வரியையும் – இரண்டு படிமத்தையும் வாசித்து நிறுத்த வேண்டும். மீண்டுமொரு தடவை முதலிரண்டு வரியையும் வாசித்து நிறுத்திய பின் மூன்றாவது வரியை – இரண்டாவது படிமத்தை வாசிக்க வேண்டும். அப்போதுதான் ஹைக்கூவின் உயிர்ப்பை உணர முடியும் என்கிறார்கள் ஹைக்கூ அறிஞர்கள்.

*1) உதிர்ந்து வீழ்ந்த மலர் கிளைக்குத்*
*திரும்புகிறது*
*2) ஓ வண்ணத்துப்பூச்சி*

மோரிடாகேயின் இந்தக் ஹைக்கூ கவிக்கோ அப்துல்ரகுமானின் தமிழ்ப்படுத்துகை. இதன் பொருளாலும், சொல் முறையாலும், ஏற்படுத்தும் அதிர்வுகள் வியப்புக்குரியது, வியாபகமானது.

செர்ரி மரத்திலிருந்து பூக்கள் மெதுமெதுவாக உதிர்ந்து கொண்டிருக்கின்றன. திடீரென்று ஒரு பூ தரையிலிருந்து கிளையை நோக்கிப் பறக்கிறது. என்ன இது? பூ பறக்கிறது? வியப்பு விரிகிறது, ஆச்சர்யம் மேலிடுகிறது.

செர்ரிப் பூக்கள் வசந்தத்தின் சின்னம். இயற்கையின் அழகுக் குறியீடு. இந்தச் சின்ன அழகுகள் உதிர்ந்து வாடி விடுகின்றன. எனினுமென்ன? இயற்கை இன்னொரு அழகினை வண்ணத்துப்பூச்சியை அந்த இடத்தில் கொண்டு வந்து இழப்பை ஈடு செய்கின்றது. வண்ணத்துப்பூச்சி ஏன் பூவாகத் தெரிந்தது. தோற்ற மயக்கம் இரண்டும் ஒன்று போலானது. பார்வை மயக்கம், மாயம், போலிமை, சட்டென்றொரு மறு நிம்மதி எல்லாம் இருக்கின்றன. 'அழகானவை அழிந்துவிடும். ஆனால் அழகு அழியாது'' என்பதே இதிலுள்ள தத்துவார்த்தம். ஹைக்கூ மனம் ததும்பச் செய்கிறதல்லவா? ஹைக்கு மனசின் உள்ளடுக்குகளில் உணர்வு ததும்புறச் செய்யும் அற்புதம்.

# ஔவன் கவிதை

## சாம்பலிலைக் காலம்

சாம்பலிலை உதிர்ந்த காற்றிலசைகிறது
பாழ் மௌனம்
எவர் செவியுமேற்றிடாச் சொற்களின்
சீழிதழில் பொங்கிற்றுக் காலம்
பொத்திப் பொத்திப் பின்னொரு யாழ்
நரம்பென அதிர்கிறது மௌனம்
எவர் வசமுமுறையா நீதத்தின் சொற்
கலவையொன்று மேற்பரப்பிலெழுகை
யில் வெண்குளிர்த்தித் திங்களென மன
சுறைகிறது பின் உயிருருகிறது சாம்பலி
லையின் பொருக்குதிர்ந்த சாளரத்தின்
மீதடரும் வதனத்தில் மீள்கிறதொரு துளி
ரத்தம்...
கண்ணீர்......
வேர்வை......... எச்சிலென பொழுது
சாம்பலிலை நரம்புகளிலுன் உணர்த
லின் துடிப்பு
கண்டேன் காலமே.

# புழுதி பறந்த பூமியை எழுதிய பொன்னெழுத்து; சோலைக்கிளி

ஈழத்தின் ஒரு காலகட்டக் கவிதையின் ஊற்று சோலைக்கிளி அதீக். கவிதைக்கான மொழியும், மொழியூடு வெளிப்படும் பொருளுமெனத் தனித்துவமாக நின்றவர் சோலைக்கிளி. 'நானும் ஒரு பூனை' யில் தொடங்கிய இவரது கவிதைப் பனுவல்களுக்கிடையில் 'பொன்னாலே புழுதி பறந்த பூமி' பத்திக்கைப் பனுவல் இவருடைய எழுத்தின் இன்னொரு பரிமாணம்.

துலாவில் பத்திக்கைப் பிடித்து நீரை அள்ளியிறைப்பது மாதிரி அள்ளி இறைப்பதே சோலைக்கிளியின் பத்திக்கைத்தொடர். அதன் பனுவல் வடிவமே பொன்னாலே புழுதி பறந்த பூமி. தன் வாழ்வியல் அனுபவங்களின் நினைவு மீட்டலாக மண்ணினதும் மனிதர்களதும் கதைகளின் உயிர்த்துடிப்பாக சோலைக்கிளியின் எழுத்துக்கள் நிகழ்த்தும் அற்புதம் அல்லது மண்ணின் அற்புதம் நிகழ்த்தும். சோலைக்கிளியின் எழுத்துக்கள் என பனுவலெங்கும் பொன்னாலே புழுதி பறக்கிறது.

இவரது பத்தியின் தலைப்புகளே ஈர்ப்பானது. 'எனது ஊர் என்ற கொய்யா மரம்', 'காலம் சுட்டுத்தின்ற கடற்கரைக்கு நாடு', 'என் தொண்டைக்குள் அவள் கொண்டை மயிர்' என சோலைக்கிளியின் பத்திக்கைத் தலைப்புகளே கதை சொல்லும். கவிஞனாக மாத்திரம் இதுவரை அறியப்பட்ட சோலைக்கிளியின் இன்னொரு பரிணாமம் குறித்து உமா வரதராஜன் அணிந்துரைக்கும் இப்பனுவல் புழுதி நீக்கிய பொன்னெழுத்தின் திரட்சியின் பெறுமானம்.



## வழிகாட்டுங்கள்




## நிறம் தீட்டுங்கள்



## கூட்டல்

| | | | | |
|---|---|---|---|---|
| 123 | 785 | 458 | 778 | 321 |
| + 456 | + 472 | + 258 | + 112 | + 654 |
| ............. | ............. | ............. | ............. | ............. |
| ............. | ............. | ............. | ............. | ............. |

## HELP THE WITCH CHOOSE THE CORRECT NUMBER




## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# இலக்கியத் துறைக்காக " இளம் கலைஞர் விருது " பெற்றவர்

## கவிச்சுடர் ஏ.எம். கஸ்புள்ளா

**ரஹ்மானியா நகரைப் பிறப்பிடமாகவும், கட்டையாறு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கவிச்சுடர் ஏ.எம். கஸ்புள்ளா 1974.09.20 ம் திகதி சின்னக் கிண்ணியாவில் பிறந்தார். கே.எம். அப்துமனபு எம்.எஸ். பாத்துமா வீவி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரான இவர் ஆரம்ப கல்வி தொடக்கம் அல்அக்ஸா கல்லூரியில் கற்றார். படிக்கின்ற காலத்தில் மாணவர் மன்ற நிகழ்வுகளில் கவிதை வாசித்தல், நாடகம் நடித்தல் போன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி தனது எழுத்தார்வத்தை வளர்த்துக் கொண்டார்.**

1990 இல் தினகரன் பத்திரிகையில் எழுதிய கவிதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானார். அதே ஆண்டில் 'புயல் தொட்ட புஸ்பங்கள்' என்ற கவிதை நூலுக்கான விமர்சனமும் தினகரனில் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமானது.

அல்அக்ஸா கல்லூரியில் வெளியான "விசாலம்" சஞ்சிகையிலும் ஆக்கங்கள் இவரால் எழுதப்பட்டன. கவிதைகளுக்கான முதல் பாராட்டுக் கடிதம் தினகரனில் வெளிவந்தது. இவர் எழுதிய பனை மரம் பற்றிய கவிதைக்காக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் க.நடராஜ்ஜினால் 1990 ஆம் ஆண்டில் இது எழுதப்பட்டது.

1993 இல் கிண்ணியாக் கல்விக் கோட்டம், மாவட்டம், வடகிழக்கு மாகாணம் ஆகியவற்றில் கவிதை எழுதுதலில் முதலிடமும் தேசிய மட்டத்தில் மூன்றாமிடமும் இவருக்குக் கிடைத்தது. இது கிண்ணியா வரலாற்றில் முதல் நிகழ்வாகவும் பதியப்பட்டது.தேசிய இளைஞர் சேவை மன்ற கலாசார விழா, சுதந்திர தின விழா, பிரதேச இலக்கிய விழா, மாவட்ட இலக்கிய விழா போட்டிகளில் பங்குபற்றி சான்றிதழ்கள், பரிசுகள் பெற்றுள்ளார்.

2016 இல் கொழும்பில் நடைபெற்ற உலக





இஸ்லாமிய பொன் விழா மாநாட்டில் இவரது இலக்கிய சேவைக்காக பொன்னாடை கௌரவம் அளிக்கப்பட்டது. கிண்ணியா பிரதேச செயலகமும் கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடாத்திய பிரதேச சாஹித்ய விழா 2018 நிகழ்வில் இவருக்கு 'கவிச்சுடர்' பட்டம் மற்றும் கௌரவமும் அளிக்கப்பட்டன.

முதல் இலக்கிய வெளியீடாக 'அண்ணல்' எனும் இருமாத சஞ்சிகையும் கற்க கசடற சிறுவர் கட்டுரைகள் 2014,'நெஞ்சினிலே' கவிதைகள்,2015 'அணில் சொல்லிய பாடம்" சிறுவர் பாடல்கள் 2019,'விடியும் பொழுதும் விலகிடும் இருளும்' கிராமியக் கவிதைகள் 2016, மர்ஹூம் அல்ஹாஜ் முத்தலிபு முகம்மது யூசுப் மௌலவியின் "வாழ்வும் பணிகளும்" என ஐந்து நூல்களை எழுதியுள்ளார்.

சமூக சேவையில் ஈடுபாடு கொண்ட இவர் 1996 இல் அல் புரூனி இளைஞர் கழகத் தலைவராகவும் மாவட்ட சம்மேளன உபதலைவராகவும் இருந்துள்ளார். ஆரம்ப காலத்தில் ரஹ்மானியா RDS சங்க உறுப்பினராகவும் பைனியர்ஸ் விளையாட்டு கழக உதைப்பந்தாட்ட வீரராகவும் அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்க பேரவை, சின்னக் கிண்ணியா கிளைக்கான செயலாளராகவும் இருந்துள்ளார்.

இவ்வாறான இவரது ஆளுமைக்காக மலையக கலை, கலாசார சங்கம் இவருக்கு 'தேசாபி மானி' பட்டத்தை 2016 இல் வழங்கி கௌரவமளித்தது.

இவர் எழுதிய இரண்டு நூல்களை இலங்கை கல்வி அமைச்சு பாடசாலை நூலகங்களுக்குப் பொருத்தமான நூலாக அங்கீகரித்துள்ளது. இது நமது மண்ணுக்கு கிடைத்த கௌரவமாகக் கொள்ளலாம். கிண்ணியாவின் பாரம்பரிய கலையான சீனடியை முகநூலில் 'மண்ணில் சிறந்த சீனடி அண்ணாவிகள்' என்ற தலைப்பில் எழுதி வருவதோடு அதனை ஆவணப்படுத்தும் முயற்சியிலும் செயல்பட்டு வருகிறார். தீவு முழுவதிற்குமான சமாதான நீதவானாக இருந்து வரும் இவருக்கு இலக்கியத் துறைக்காக 2021 இற்கான கிழக்கு மாகாண "இளம் கலைஞர் விருது" அண்மையில் வழங்கப்பட்டது.

**கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸ்,**
**தலைவர்**
**முன்னோர்கள் கலை இலக்கிய வட்டம்**
**கிண்ணியா**







தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# பெற்றோர், குழந்தைகளிடையே தகவல் தொடர்பு அவசியம்

பல பெற்றோர் குழந்தைகள் 100 சதவீதம் தங்கள் பேச்சைக் கேட்க வேண்டும், என்று எதிர்பார்க்கின்றனர். இதைத் தவிர்க்க வேண்டும். பெற்றோர் குழந்தைகளிடம் பேசும் நேரத்தில், குழந்தைகளுக்கும் பேசும் வாய்ப்பை அளிக்க வேண்டும். இது குடும்பத்தின் தகவல் தொடர்பை அதிகப்படுத்துவதற்கான சிறந்த வழி. பரபரப்பாக சுழலும் வாழ்க்கையில், குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்காக பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்ல வேண்டியது கட்டாயமாகிவிட்டது. இதனால், இருவருக்கும் இடையேயான நெருக்கமும், தொடர்பும் குறைந்துகொண்டே வருகிறது. இந்த இடைவெளி, கணவன்மனைவி உறவை மட்டுமில்லாமல், பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் இடையிலான உறவையும் பாதிக்கிறது. குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே உள்ள தொடர்பும், நெருக்கமும்தான், ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கைக்கான அடித்தளம் என்று உளவியல் வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள்.

## முன்னுதாரணம்:

குழந்தைகள் பெற்றோரின் பிம்பங்களாக இருக்கிறார்கள். பெற்றோரின் செயல்



எப்படி உள்ளதோ, அதைப் பொறுத்தே குழந்தைகளின் செயல்பாடுகளும் வெளிப்படும். பெற்றோருக்கிடையே கருத்து வேறுபாடு இருந்தாலும், அதை குழந்தைகள் முன்னால் காண்பிக்கக்கூடாது. நமக்கு இருக்கும் வேலைப்பளுவை சிறிது நேரம் ஒதுக்கி வைத்துவிட்டு, குழந்தைகளுடன் பொழுதுபோக்கான விஷயங்களில் ஈடுபடலாம். இது அவர்களின் மனநிலையைச் சீராக்கும்.

## மனம்விட்டு பேசுதல்:

பெற்றோர் மற்றும் குழந்தைகள் இடையே, தகவல் பரிமாற்றம் இயல்பானதாக இருக்க வேண்டும். இதற்கு மனம் விட்டுப் பேசுதல் முக்கியமானது. குழந்தைகள் நமது பேச்சை கவனிப்பதற்கு ஏற்றவாறு, நாம் பேசும் முறையைச் சற்று மாற்றிக் கொள்ள வேண்டும். எப்போதும் வார்த்தையை விட, உடல் மொழியைத்தான் குழந்தைகள் அதிகமாக கவனிப்பார்கள். உளவியல் வல்லுனர்களின் கூற்றுப்படி, குழந்தைகளிடம் பேசும்போது வார்த்தை 7 சதவீதமும், உடல்மொழி 55 சதவீதமும், குரலின் சத்தம் 38 சதவீதமும் இருக்க வேண்டும்.

## குழந்தைகளை பேச வைத்தல்:

பல பெற்றோர் குழந்தைகள் 100 சதவீதம் தங்கள் பேச்சைக் கேட்க வேண்டும், என்று எதிர்பார்க்கின்றனர். இதைத் தவிர்க்க வேண்டும். பெற்றோர் குழந்தைகளிடம் பேசும் நேரத்தில், குழந்தைகளுக்கும் பேசும் வாய்ப்பை அளிக்க வேண்டும். இது குடும்பத்தின் தகவல் தொடர்பை அதிகப்படுத்துவதற்கான சிறந்த வழி.

## நேரத்தைத் திட்டமிடுதல்:

ஒரு நாளில், சில மணி நேரத்தைக் குடும்பத்திற்காக மட்டும் ஒதுக்குங்கள். இந்த நேரத்தில், வெளி வேலைகள், அலுவலக வேலைகள் மற்றும் தேவையற்ற விஷயங்களை ஒதுக்கி வையுங்கள். குழந்தைகளும் இதைத்தான் பெற்றோரிடம் எதிர்பார்ப்பார்கள். தினமும் ஒரு வேளையாவது, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுங்கள். இந்த நேரத்தை அனைவரும் வெளிப்படையாகவும், தெளிவாகவும், மனம் விட்டுப் பேசும் வாய்ப்பாக மாற்றுங்கள்.

# button Top



பிளவுஸ், சுடிதார், குர்த்தி, கிராப் டொப், லாங் டொப் என அனைத்து வகையான ஆடைகளுக்கும், பட்டன் டிசைன் பொருத்தமாக இருக்கும். குறிப்பாக பருத்தித் துணிகளுக்கு பட்டன் டிசைன் தனி சிறப்பைத் தரும். இளம் பெண்கள் ஸ்மார்ட்டாக தெரிவதற்காக, பெரும்பாலும் பயன்படுத்தும் ஆடை வகைதான் 'பட்டன் டொப்'. பிளவுஸ், சுடிதார், குர்த்தி, கிராப் டொப், லாங் டொப் என அனைத்து வகையான ஆடைகளுக்கும், பட்டன் டிசைன் பொருத்தமாக இருக்கும். குறிப்பாக பருத்தித் துணிகளுக்கு பட்டன் டிசைன் தனி சிறப்பைத் தரும். அடர்ந்த வண்ணம் கொண்ட ஆடைகளுக்கு வெளிர் நிற பட்டன்களும், வெளிர் நிற ஆடைகளுக்கு அடர் நிற பட்டன்களும் பயன்படுத்துவது நம்மை தனித்துவமாகக் காட்டும். இவற்றுடன் நூல் கொத்தைக் கூட பயன்படுத்தலாம்.

# பாலுக்கு வெள்ளை நிறத்தை கொடுப்பது எது?



பாலில் நிறைந்துள்ள கொழுப்பு மற்றும் புரத மூலக்கூறுகள், நீரில் மிதக்கும் போது ஏற்படும் ஒளிச்சிதறலின் பிரதிபலிப்பே, பாலுக்கு வெள்ளை நிறத்தைக் கொடுக்கிறது.

உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கும் மேலாக, பால் அனைவராலும் அருந்தப்பட்டு வருகிறது. அதிலும் பசு, எருமை, ஆடு மற்றும் கழுதைப்பால் அன்று முதல் இன்று வரை உணவாகவும், மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு கப் பாலில் (சுமார் 250 கிராம் அளவு) உள்ள சத்துக்கள் வருமாறு: கலோரி122, கொழுப்பு4.8 கிராம், சோடியம்115 மில்லி கிராம், கார்போஹைட்ரேட் 12 கிராம், சர்க்கரை12 கிராம், புரோட்டீன்8.1 கிராம் அளவில் உள்ளது. சதவீத அடிப்படையில் 100 மில்லி லிட்டர் அளவு உள்ள பாலில் 26 சதவீதம் புரோட்டீன், 39 சதவீதம் கார்போஹைட்ரேட், 35 சதவீதம் கொழுப்பு சத்துக்கள் உள்ளன.

பாலில் நிறைந்துள்ள கொழுப்பு மற்றும் புரத மூலக்கூறுகள், நீரில் மிதக்கும் போது ஏற்படும் ஒளிச்சிதறலின் பிரதிபலிப்பே, பாலுக்கு வெள்ளை நிறத்தைக் கொடுக்கிறது.

# 'மேக் அப்' நுணுக்கங்கள்

அழகுக்கு அழகு சேர்ப்பதுதான் 'மேக்அப்'. இதில் பல நுணுக்கங்கள் இருக்கின்றன. ஆனாலும், 'மேக்அப்' என்றதும் பவுண்டேஷன் போட்டு, அதற்கு மேல் ரோஸ் பவுடர் போடுவது என்ற தவறான கருத்து பலரிடம் இருக்கிறது. மேக்அப் என்பது ஒரு படிப்படியான செய்முறை.

முதலில் மேக்அப் செட்டிங் ஸ்பிரே அடித்து, சருமத்தை மேக்அப்பிற்குத் தயார் செய்ய வேண்டும்.

அடுத்ததாக மேக்அப்பின் அடிப்படையாக செயல்படும், பிரைமரை (primer) சருமத்தில் பூச வேண்டும். எண்ணெய்பசை கொண்ட சருமத்திற்கு, ஜெல் வடிவிலான பிரைமரையும், உலர்ந்த சருமத்திற்கு, கிரீம் வடிவிலுள்ள பிரைமரையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதைத் தொடர்ந்து முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள், திட்டுகள் உள்ள இடத்தில் கலர் கரெக்டரை பூசி, அதை சருமத்துடன் ஒன்றுமாறு செய்ய வேண்டும்.

பின்பு, கண்ணுக்குக் கீழே உள்ள கருவளையங்கள் மற்றும் உதட்டை சுற்றியுள்ள கருமை நிறத்தை மறைக்க, கன்சீலரைப் (concealer) பயன்படுத்த வேண்டும். இதையும் பிளண்டர் வைத்து பிளண்ட் செய்வது அவசியம்.

உங்கள் சரும நிறத்திற்கு ஏற்ற பவுண்டேஷனைத் தேர்வு செய்ய வேண்டும். அதை முகத்தில் புள்ளி புள்ளியாக ஆங்காங்கே வைத்து பூச வேண்டும். முகத்தோடு சேர்த்துக் கழுத்திலும் பூசுவது அவசியம். அப்பொழுதுதான் முகம் தனியாக வித்தியாசமாகத் தெரியாமல் இருக்கும். பவுண்டேஷனைக் கீழ் நோக்கி தடவும் முறையே சரியானது.

இதற்கு அடுத்து, காம்பேக்ட் பவுடரை முகத்தில் பூச வேண்டும். முகத்திலுள்ள சிறுசிறு குழிகள், கோடுகளை மறைக்கவும், சரி செய்து சமன்படுத்தவும் இது உதவும்.

இப்பொழுது கண்களுக்கான மேக்அப்பில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் உடைக்கு ஏற்ற நிறத்தில் 'ஐ ஷேடோ'வைத் தேர்ந்தெடுத்து, அதனுடன் ஒரு தங்க நிற நிறமியைக் கலந்து பூசினால், கண்கள் பளிச்சென இருக்கும்.

காஜலை கண்களுக்குக் கீழேயும், ஐலைனரை கண்களுக்கு மேலேயும், கவனமானத் தடவ வேண்டும். அது கரைந்து போகாத மற்றும் வாட்டர் ப்ரூப் ஐலைனராக இருந்தால் சிறந்தது.

செயற்கையாக விற்கும் கண் இமை முடிகளை, அதன் பசையுடன் சேர்த்து ஒட்டிக் கொண்டால், கண்களை மேலும் அழகாகக் காட்ட முடியும். இல்லையெனில், மஸ்காரா தடவி இமை முடிகளை அடர்த்தியாக காட்டலாம்.

புருவத்திற்கென தனியாக ஸ்பூலி பிரஷ் (spoolie brush) கிடைக்கிறது. முதலில் அதன் ஒரு பக்கம் இருக்கும் மையை பயன்படுத்தி, புருவத்தின் பார்டரை வரைந்துவிட்டு, மறுபக்கம் உள்ள பிரஷின் மூலம், புருவ முடிகளை ஒழுங்குபடுத்தி பிளண்ட் செய்துகொள்ள வேண்டும்.



முகத்தில் பிளஷ்ஷிற்கு (blush) பதிலாக ஹைலைட்டரை தேவைப்படும் இடங்களில் பூசி மெருகேற்ற வேண்டும்.

கடைசியாக மேக்அப் பிக்ஸர் ஸ்ப்ரே (fixer spray) அடிக்க வேண்டும். இதன் மூலம் பல மணி நேரங்கள் வரை மேக்அப் கலையாமல் பாதுகாக்கலாம்.

# தமிழக சினிமா வரலாற்றில் மென்மை

தமிழக சினிமா வரலாற்றில் மென்மை நிறைந்த கலைஞர் நடிகர் ஜெய்சங்கரின் 22வது நினைவஞ்சலி தினம் 03.06.2022 ஆகும்.

ஜெய்சங்கர் 12 ஜூலை 1938இல் பிறந்தார். 3 ஜூன் 2000இல் தனது 62 வது அகவையில் அமரரானார். இவர் புகழ் பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகர் ஆவார். சங்கர் என்ற இயற்பெயர் கொண்ட இவருக்கு இவரது முதல் திரைப்படமான "இரவும் பகலும்"இயக்குனர் ஜோசப் தளியத், ஜெய் என்ற பெயர்ச் சேர்க்கையை அளித்து "ஜெய்சங்கர்" ஆக்கினார். சுப்பிரமணியம் சங்கர் என்பதே இவரது இயற்பெயர்.

பட்டதாரியான இவர், 1965இல் இரவும் பகலும் என்ற திரைப்படத்தில் அறிமுகமானார். இதைத் தொடர்ந்து 200இக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்ஜியார், ஜெமினி கணேசன் போன்ற உச்ச நட்சத்திரங்களின் மத்தியில் ஜெய்சங்கர் நடித்த பல படங்களுக்கு அமோக வரவேற்பு பெற்றது. யாருடைய பாணியையும் பின் பற்றாது தன் சொந்த ஸ்டைலில் நடித்து பிரிகாசித்தவர் ஜெய்சங்கர். இறக்கும் வரை தன்னாலான உதவிகளை ஏழை எளிய மக்களுக்கும், சக நண்பர்களுக்கும் வழங்கிய நல் மனது கொண்டவ கலைஞர் ஜெய்சங்கர்.

அதனால் தான் ரசிகர்கள் இவரை "மக்கள் கலைஞர் "என பொருத்தமான பட்டம் வைத்து அழைத்தனர். சில தயாரிப்பாளர்களிடம் பணம் வாங்காமலே படங்களில் நடித்து கொடுத்தார். சம்பள பாக்கியை கேட்டு வாங்கும் வழக்கம் இல்லாதவர்.அவர்கள் கொடுத்தால் மட்டுமே வாங்கிக் கொள்வார்.

திரையுலகில் பலருக்கு ஏணியாய் இருந்தவர் ஜெய்சங்கர். எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் முதலியோர் நடித்த அதே



கால கட்டத்தில் நடித்தாலும், இவருக்கென ரசிகர்கள் இருந்தார்கள். இவரது சமகால நடிகர்களான முத்துராமன், ரவிச்சந்திரன் போன்றோருடனும் இவர் பல படங்களில் இணைந்து நடித்துள்ளார்.100இக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்த பிறகு, ரஜினிகாந்த் நடித்த முரட்டுக்காளையில் வில்லனாகப் புதிய பரிமாணத்தில் தோன்றி பாராட்டுகளைப் பெற்றார். அதன்பிறகு, பல படங்களிலும் வில்லனாகவும், குணச்சித்திர நடிகராகவும் பரிமளித்தார். இவருக்கு ரசிகர்கள் அளித்த பட்டங்கள்: ஜெய்சங்கர் சண்டைப் படங்களில் அதிகம் நடித்திருந்தாலும், குடும்பக்கதைகளிலும் அதிகம் நடித்து பெயர் வாங்கினார். பல திரைப்படங்களில் துப்பறிபவராகவும், காவலராகவும் வேடம் ஏற்று நடித்ததால் இவரை "தென்னகத்து ஜேம்ஸ் போண்ட் "எனவும் : தென்னிந்திய ஜேம்ஸ் போண்ட் எனவும் ரசிகர்கள் அழைத்தனர். இவர் பற்பல திரைப்படங்களில் குறைந்த இடைவெளிகளில் தொடர்ந்து நடித்ததால், இவரது படங்கள் வாரம் ஒன்றென வெளிவந்த வண்ணம் இருந்ததன் காரணமாக இவர் 'Friday hero' "வெள்ளிக்கிழமை நாயகன்" எனவும் அழைக்கப்பட்டார்.இவருக்கு தமிழக அரசு கலைமாமணி விருது வழங்கி கௌரவம் செய்தது. 2000ஆம் ஆண்டு ஜூன் 3ஆம் திகதி, சென்னையில் ஒரு தனியார் மருத்துவமனையில், தனது 62ஆம் வயதில் ஜெய்சங்கர் மாரடைப்பால் காலமானார்.

இவரது மறைவிற்கு பின்னர் இவரது மகன் டொக்டர் விஜய் சங்கர், தனது தந்தையின் பெயரில் அறக்கட்டளை



ஒன்றைத் துவங்கினார்."ரத்தத்தின் ரத்தமே" படப்பிடிப்பிற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட ஜெய்சங்கரை கொழும்பு பிறைட்டன் ஹோட்டலில் நேரில் பார்தத பசுமையான நினைவுகளை இங்கே பகிர்கின்றேன். இவர் கடைசியாக நடித்த படம் "பூவாசம்".

"தமிழ் சினிமா வரலாற்றில் ரசிகர்கள் மனதில் என்றும் நீங்காத நினைவில் வாழும் நடிகர் மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் ஆவார்".



**ஆக்கம்:எஸ். கணேசன்**
**ஆச்சாரி சதீஷ் கம்பளை**

---

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து



நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்தூரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீர்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.



காலித்
மிசார்த்மும்தாஜ்
கெலிஓயா
19.06.2019



Fatima Raeyana
2018. 06. 24



V. பிரகதீஸ்வரன் மே 27,
7வது பிறந்த தினம்

---

## நல்ல கருத்துக்களை சுவாசிக்க வாசிப்பை நேசிப்போம்

வாசிப்பு எந்த அளவுக்கு ஒரு மனிதனுக்குத் தேவை என்பதை பல அறிஞர்கள் கூறியுள்ளனர்.வாசிப்பு புதிய கருத்துக்களை அறிமுகப்படுத்துகின்றது. புதிய சிந்தனையை உருவாக்கிறது.நம்மை நாமே உணர்ந்து கொள்ள, எண்ணங்களை மெருகேற்றிக்கொள்ள வாசிப்பு உதவுகிறது. மற்றவர்களின் வாழ்க்கை வரலாற்றினைப் படிக்கும்போது.நமக்கு அதிலிருந்து அனுபவம் நம் வாழ்வினை செம்மையாக்க உதவுகிறது. வாசிப்பு நமக்கு மற்றவர்களிடம் உரையாடும் பயிற்சியைத் தருகிறது. நம்முடைய கற்பனைகளையை உயர்த்துகின்றது. நல்ல நூல்களைத் தேடி தேடி வாசியுங்கள். உடலுக்கு எப்படி நாம் உடற்பயிற்சி செய்கின்றமோ அதுபோல, மனதிற்கு சிறந்த பயிற்சி, நல்ல நூல்களை வாசிப்பது மட்டுமே.

நல்ல புத்தகம் நல்ல நண்பன் என்பார்கள். வாசிப்பு மட்டுமே மனிதனின் அறிவை விரிவாக்கும்,குழம்பிய மனிதனை தெளிவாக்கும். ஒரு நிலைப்படுத்தும். மனிதனைப் போலத்தான் புத்தகமும் ஒரு வாழ்வின் தோற்றமாகும். அதற்கு உயிர் உண்டு ,அதுவும் பேசும். மனிதன் இதுவரை படைத்த இன்றைக்கும் படைத்து வருகின்ற மற்ற பொருட்கள் போன்ற அளவுக்கு அது ஒரு "பொருள்"மட்டும் அல்ல என்றார் புகழ் பெற்ற "தாய்"காவியம் இயற்றிய மாக்சிம் கார்க்கி. ஒரு எழுத்தாளனின் கூர்மையான எழுத்துக்கள், அடிமையாக இருக்கும் ஒரு சமூகத்தை தட்டி எழுப்பவல்லது. அதனால்தான் 'புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே என்றார் லெனின்.



நூல்கள் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்த வல்லவை. குறைந்தது ஒரு மணி நேரமாவது ஒதுக்கி ஒரு புத்தகத்தை படியுங்கள்.

ஒரு புத்தகத்தை எப்படி படிக்க வேண்டும் என்று ஆங்கில தத்துவ ஆசிரியர், எழுத்தாளர் பிரான்சிஸ் பேக்கன்(francis Bacon) கூறும் போது 'some books are to he tasted, others to be swallowed, and some few to be chewed and digested" என்பார் அதாவது சில புத்தகங்களை சுவைப்போம், சிலவற்றை அப்படியே விழுங்குவோம் ...சில புத்தகங்களை மென்று செரிமானம் செய்வோம்!"

எவ்வளவு ஆழமான கருத்து என்று சிந்தித்துப் பாருங்கள். சில நேரங்களில் நம் மனது நொந்து போகும் என்ன வாழ்க்கை இது என்று கூட எதிர்மறை எண்ணங்கள் தோன்றும், அப்போதெல்லாம் ஒரு புதிய நூலினை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள் என்கிறார் இங்கர்சால். குறிப்பாக ஒரு நல்ல எழுத்தாளராக இருக்க நிறைய வாசிக்க வேண்டும். வாசிப்பு இல்லாமல் எழுத முடியாது என்பது தான் உண்மை.

இந்த உலகில் பெரிய அறிஞர்கள், தத்துவ ஞானிகள் என்று அறியப்பட்டவர்கள் அனைவரும் சிறந்த நூல்களைப் படித்தனர். அதனால் சிறந்த நூல்களைப் படைத்தனர்.கிரேக்க நாட்டின் அறிஞர் சாக்ரடீஸ் தன்னை நஞ்சைக் கொடுத்து கொல்லும் நிலையிலும் சிறைச்சாலையில் இறுதி மூச்சு அடங்கும் வரை படித்தார். லிபியா நாட்டின் உமர் முக்கர் தூக்குக் கயிறு அவர் கழுத்தை இறுக்கும் வரை படித்துக் கொண்டிருந்தார்.

1969 இல் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக காத்திருந்த அண்ணாவிடம் மருத்துவர் "நாளை உங்களுக்கு அறுவை சிகிச்சை என்று கூறிய போது, இரண்டு நாட்கள் அறுவை சிகிச்சையை தள்ளி வைக்கவும் என்றார். ஏன் என்று கேட்டதற்கு நான் ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருக்கின்றேன் அது படித்து முடிந்தவுடன் அறுவை சிகிச்சை செய்து கொள்கிறேன் என்றார். எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கின்றதோ, அந்த வீட்டில்தான் ஒளிவிளக்கு இருக்கின்றது என்றார் பிளாட்டோ. அந்த வகையில் குழந்தைகளுக்கு சிறு வயதில் இருந்தே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். நல்ல நூல்களைப் படிக்க ஊக்கப்படுத்துங்கள். பாட நூல்களை தாண்டி நல்ல கதைகள், கட்டுரைகள்,அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இவற்றை படிக்கச் சொல்லுங்கள்.குழந்தைகள் நுண்ணறிவு கொண்டும், பொது அறிவு கொண்டும் வளர்வார்கள் என்பதில் ஐயமில்லை. புத்தகத்தை நேசித்து வாசித்தால், அதன் கருத்துக்கள் உன் மூலம் சுவாசிக்கும் !"

**ச.உதயசாந்தன்**
**பொறுப்பாசிரியர், கணபதி**
**அறநெறிப் பாடசாலை**




# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சர்வதேச மகளிர் தினம் –2022

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய மகளிர் தின நிகழ்வு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் "நானும் ஒரு பெண்" என்ற கருப்பொருளில் சாதனைப் படைத்த பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். மலையகத்தின் முதல் நிதிபதியான ஜீவராணி கருப்பையா, மாங்குளத்தைச் சேர்ந்த குத்துச்சண்டை வீராங்கனை (சர்வதேச மட்டம் 2022) இந்துகாதேவி கணேஸ், பதுளையைச் சேர்ந்த வணிக முகாமைத்துவ பீட முதல் மலையக பேராசிரியர் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி ராஜலக்ஷ்மி சேனாதிராஜா, சங்கீத கலா வித்தகர் கலாபூஷணம் திருமதி ராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆகியோர் இங்கு கௌரவிக்கப்பட்டனர். இவர்களுடன் பிரதம விருந்தினரான சிரேஷ்ட சட்டத்தரணி மாலா சபாரட்ணம், நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி ஜெயந்தி வினோதன் ஆகியோர் படத்தில் இருக்கின்றனர். (படம்: ஏ.கே. விஜயபாலன்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.